2991

T.N.L.A. Debates

Official Report

Vol 44 No 3

11th November 1987

©

D
211,31 N87
N87.44.3
136531

## உள்ளடக்கம்

**11—11—1987**


| | பக்கங்கள் |
|---|---|
| 1, வினாக்கள்—விடைகள்— .. | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 293—346 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 346—425 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) இலங்கை பிரச்சினை குறித்து .. .. | 425—430 |
| (ஆ) ஜவஹர்லால் நேரு அவர்களின் நூற்றாண்டு விழா .. .. .. .. | 430—431 |
| (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கைகள் குறித்து .. .. | 431—432, 435, 436—437 |
| 3. அறிவிப்புகள்— | |
| (அ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1987 .. | 432 |
| (ஆ) 1987-88 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கை .. | 514 |
| 4. அரசினர் சட்டமுன் வடிவு. | |
| தமிழ்நாடு மருத்துவ பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன் வடிவு, 1987 | 422—435 |
| 5, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987–88ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1986–87 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி .. | 435—436, 437—514 |
| திரு. டி. ஆர். வேங்கடரமணன் .. .. | 435—436, 436—449 |
| டாக்டர் கே. சமரசம் .. .. .. | 449—457 |
| திரு. எஸ். ரெத்தினராஜ் .. .. .. | 458—466 |
| திரு. மு. ஆறுமுகம் .. .. .. | 466—475 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. | 475—490 |
| *திரு. மா. சின்னராசு .. .. .. | 491—501 |
| *திரு. கே. சுப்பராயன் .. .. .. | 501—511 |
| திரு. ஆர். எஸ். ஆறுமுகம் .. .. .. | 511—513 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 514—515 |


டி2[எ 195— 1

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

*1987, நவம்பர் 11, புதன்கிழமை.*

*ஐப்பசி 25, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. எச். பாண்டியன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்".

இச் செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம்; சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணியில் ஆசிரியர்கள்.**

31—(* வினா எண். 8434) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலம் முழுவதும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணியில் ஆசிரியர்களை ஈடுபடுத்தாமல் இருக்கவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1983-ஆம் ஆண்டில் வாக்காளர் கணக்கெடுப்பு நடைபெற்றபோது ஆசிரியர்களுக்கு விலக்களிக்க வேண்டுமென தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி வேண்டுகோள் விடுத்தது. ஆசிரியர்

பிரதிநிதிகள் கல்வித் துறைச் செயலாளருடன் தொடர்பு கொண்டு கலந்து பேசியபின் வாக்காளர் கணக்கெடுப்புப் பணியில் ஒத்துழைப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் சேர்க்கின்ற பணியில் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படுகிறபோது பள்ளி நாட்களையே அந்தப பணிக்கு அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மேலும் சில தவறுகள நடைபெறுவதற்குக்கூட காரணமாக இருக்கிறது. உதாரணமாக 1984-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் 21 வயதானவர்களுக்கு மட்டும் வாக்களிக்கிற வாய்ப்பு அளித்த நிலையில் இந்த மாநிலத்தினுடைய மொத்த வாக்காளர்கள் 3 கோடியே ஆறாயிரம் பேர் என்ற சூழ்நிலை இருந்தது. 1986-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறறபொழுது 18 வயது வந்தவர்களுக்கும் வாக்குரிமை என்று அரசாங்கம் அளித்த பிறகும்கூட உள்ளாட்சித் துறையிலே மாநிலம் முழுவதும் வாக்காளர்களுடைய எண்ணிக்கை 2 கோடியே 60 இலட்சம்தான் என்கிற கணக்கெடுப்பைக் கொடுத்த நிலையைப் பார்க்கிறோம். எனவே, இதைப் பொறுப்புடன் எடுப்பதற்கும், வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்கும் ஏற்ற வகையில் இன்றைக்கு வேலையில்லாத பட்டதாரிகள், அதேபோல் அரசாங்கத்திடம் வேலையற்றவர்களுக்கான உதவித் தொகையைப் பெறுகிறார்களே அவர்களைப் போன்றவர்களை இந்தப் பணிக்குப் பயன்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற யோசனையைப் பரிசீலனை செய்து பார்க்கலாம்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வாக்கெடுப்பு, சட்டமன்றத் தொகுதிக்கான வாக்காளர்களைச் சேர்ப்பதற்கான பணி தொடங்க இருக்கிறது. எனது யோசனை பரிசீலிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்கள் பயன்படுத்தப்பட்டாலும் அல்லது அதேபோல பட்டதாரிகள் வேலையில்லாதவர்கள பயன்படுத்தப்பட்டாலும்கூட வாக்காளர் பட்டியலிலே தவறு ஏற்படுகிறது என்று தேர்தல் முடிந்தபிறகு கூட புகார் வந்தால் அரசுப் பணியிலே இருப்பவர்கள் என்றால அவர்களைப் பணி நீக்கம் செய்வதற்கான அதிகாரம் இருக்கிறது என்று அறிவுறுத்தப்படுகிற வகையிலேயும், அதேபோல வேலையற்றவர்கள் அதிலே ஈடுபடுத்தப்படுகின்ற பொழுதுகூட வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படுகிறபொழுது முறைகேடுகள், தவறுகள் நடைபெறுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டால் அவர்கள் அரசுப் பணியைப் பெறுகின்ற வாய்ப்பை இழந்து விடுவார்கள் என்ற முறையிலும் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா? கடந்த உள்ளாட்டித் தேர்தலில், ஏறத்தாழ 60-லேயிருந்து 70 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கின்ற வாய்ப்பைத் தமிழகத்திலே இழந்து இருக்கிறார்கள். அதிலே நடைபெற்ற முறைகேட்டைப்பற்றி விசாரிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற கருத்தையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள், கிராம நிர்வாக அதிகாரிகள் ஆகியவர்கள் பொறுப்போடு இந்த வாக்கெடுப்புப் பணியைச் செய்வார்கள் என்பதற்காகவும், அவர்களைப் பற்றி பின்னால் ஆய்வு நடத்துவதற்கும் தவறுகள் நிகழுமேயானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் வாய்ப்பிருக்கும் என்று கருதித்தான் நீண்ட பெருங்காலமாக இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. அரசு அந்தப் பணிகளிலே அவர்களை ஈடுபடுத்துமேயானால் அவர்கள் கட்டாயம் செய்தே தீர வேண்டுமென்றுதான் அரசியலமைப்புச் சட்டத்தினுடைய 324-வது பிரிவு வலியுறுத்திச் சொல்கிறது. ஆகவே, மக்களுடைய கணக்கெடுப்பு—சென்சஸ் கணக்குக்கு மக்களை ஈடுபடுத்துகின்றபோது அது எப்படிக் கட்டாய தேச சேவை என்று கருதப்படுகிறதோ அதைப்போன்றே, வாக்கெடுப்பும் தேச சேவை என்று கருதப்பட வேண்டுமென்று அந்தப் பிரிவு கூறுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதிலே பணிபுரிகின்றவர்களுடைய பணிகள் கேடு விளைவிக்கின்ற வகையில் அமைகின்ற காரணத்தினால் அவர்களை விட்டுவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரிகள், மற்றவர்களை

இதிலே பயன்படுத்தலாமா என்று கேட்டார்கள். அது பரிசீலிக்கப்படும் என்று நான் கூறினேன். அப்படி அவர்களைப் பயன்படுத்தலாம் என்கின்ற சூழ்நிலை வருகின்றபொழுது அப்படிப் பட்டவர்கள் தவறுகள் செய்யாமலிருக்க அப்பொழுது எந்தெந்த நிபந்தனையினுடைய அடிப்படையிலே அவர்களிடத்திலே இந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்ற நிலைமையையும் சேர்த்துத்தான் பரிசீலிக்க வேண்டி வரும். அப்படி ஒப்படைக்கப் படுகின்றபொழுது அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு தவறுகள் செய்வார்களேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அவர்களை அரசுப் பணிகளிலோ, பிற பணிகளிலோ இருத்தக் கூடாது என்பது போன்ற அத்தகைய நிபந்தனைகளையெல்லாம் விதிக்க வேண்டிய அவசியம் வரும். ஆனால் அதைப்பற்றி பரிசீலித்து முடிவெடுக்கின்றபொழுதுதான், நிபந்தனைகள் விதிப்பதுபற்றியெல்லாம் முடிவு எடுக்க வேண்டி வரும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று 65 இலட்சம் பேர்கள் விடப்பட்டார்களா என்பதைப் பற்றி இனி ஆராய்வதற்கான நிலைமை இல்லை. அதைப்பற்றி ஆராய்ந்து அதைக் கண்டுபிடிப்பதற்கு நேரத்தைச் செலவழிப்பதைவிட இனிமேல் நடைபெறுகின்ற தேர்தல்களில், அப்பேர்ப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படாத அளவுக்குக் கண்ணும் கருத்துமாக இருப்பதற்கு, என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்ற வகையில் அரசு தன்னுடைய நேரத்தையும் நினைப்பையும் செலவிடுவது பொருத்தமாக இருக்கும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் மிகச் சக்தி வாய்ந்த வாக்குரிமை பெற்றவர்கள் வாக்களிக்கின்ற உரிமையைக் கூட இழந்து விடுகின்ற சூழ்நிலை இப்பொழுது இருந்து வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நடைமுறையைக் கணக்கில் கொண்டு வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டுமென்று சொல்கின்ற ஒரு நிலைமை ஏற்கனவே இருந்தது. அது இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. எனவே, நகர்ப்புறங்களிலாவது அடையாள அட்டையோ அல்லது புகைப்படமோ இந்த வாக்குரிமை படைத்தவர்களுக்கு வழங்கப்படுமானால், அவர்கள் தங்களது வாக்குகளைப் பயன்படுத்த ஏதுவாக இருக்கும்.





எனவே, அந்த நடைமுறையைச் செயல்படுத்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற யோசனையை எலெக்ஷன் கமிஷன் கூட எடுத்துச் சொல்லிற்று. ஆனால், அது போன்ற வகைகளில் ஏற்படுகின்ற பெரும் செலவை மத்திய அரசு ஏற்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னோம். ஆனால், மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் ஏற்படுகின்ற பெரும் செலவை இப்பொழுதிருக்கிற சூழ்நிலையில் ஏற்பதற்கில்லை, ஆகவே இப்பொழுதிருக்கிற நிலையே நீடிக்கலாம் என்ற அளவிலேதான் எடுத்துச் சொல்லியிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலாக இருக்குமானால், அதைப் பொறுத்து ஏற்படுகின்ற முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் சேர்ந்த தேர்தலாக இருக்குமானால் அதைப் பொறுத்து ஏற்படுகின்ற பாதிச் செலவை மத்திய அரசும் பாதிச் செலவை மாநில அரசும் ஏற்றுக் கொள்கிறேன். ஆகவே, மத்திய அரசினுடைய இணக்கத்தைப் பொறுத்துத்தான் அப்படிப்பட்ட சீர்திருத்தங்களை நாம் செய்ய வேண்டிவரும்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் பட்டியல் தயாரிப்பதிலே ஆசிரியர்களை ஈடுபடுத்துவதைத் தவிர்த்து, படித்து வேலையில்லாமல் இருக்கக் கூடிய இளைஞர்களை ஈடுபடுத்துவதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது இந்த ஆண்டு வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் துவங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த நேரத்திலே அப்படிப் பணிகள் துவங்கப்படும்போது உண்மையான வாக்காளர்கள் வாக்களிப்பது விடுபட்டுப் போகாமலும் போலி வாக்காளர்கள்—கடந்த காலங்களிலே அதிகமாகச் சேர்க்கப் படுவது இருந்து வந்தது—தடுக்கப்படவும் அப்படிப் போலி வாக்காளர்கள் சேர்க்கப்படுவதற்குக் காரணமாக இருப்பவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 11

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர்கள் பட்டியலிலே உண்மையானவர்கள்தான் சேர்க்கப்பட வேண்டுமென்று ஏற்கனவே வாக்காளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விதிமுறைகள் தெள்ளத் தெளிவாக இருக்கின்றன. ஆனால் அப்படி இருக்கும்போதும் இப்படிப்பட்ட தவறுகள் ஆங்காங்கே ஏற்பட்டு விடுகின்றன. உயிரோடு இருப்பவர்கள் எல்லாம் கூட செத்து விட்டார்கள் என்று கூறுகின்ற நிலைமையும், செத்தவர்கள் எல்லாம் உயிரோடு இருக்கிறார்கள் என்று கூறுகின்ற நிலைமையும் ஆங்காங்கு ஏற்படுகின்ற அளவுக்கு அநேகமாக இருக்கின்றன. அதனுடைய சாதக பாதகங்களை அடிப்படையாக வைத்து, இந்த வாக்காளர்கள் எல்லாம் இருப்பார்களானால் தங்களுக்குச் சாதகமாக வாக்களிக்க மாட்டார்கள் என்று எண்ணி, அவர்களுடைய பெயர்களை எல்லாம் கடைசி நேரத்தில் அடித்துவிடச் சொல்லிவிட்டு வந்து விடுகிறார்கள். அப்படி ஒட்டுமொத்தமாகக் கடைசி நேரத்தில் அடித்து விட்ட பிறகு, மீண்டும் சேர்ப்பதற்கு வாய்ப்பில்லாமல் திண்டாடுகின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் நீக்குவதற்கு என்ன, என்ன வழிமுறைகளைச் செய்யலாம் என்று தேர்தல் நடத்துகின்ற துறையினர் மிகுந்த அக்கறையோடு அலசிப் பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதிலே சிறிது கூட தவறு ஏற்படாத அளவுக்கு வாக்காளர்கள் என்று வாக்குப் பதிவு செய்வதற்கு முழு உரிமையும் தகுதியும் படைத்தவர்கள் அத்தனை பேர்களும் வாக்காளர்களாக ஆக வேண்டும், யாரும் விடுபடக் கூடாது என்பதுதான் அரசினுடைய முக்கிய நோக்கம். அந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான பெரும் முயற்சியிலே இப்பொழுது ஈடுபட்டு வருகிறார்கள். அதற்கான சிலபல வகுப்புகளை எல்லாம் கூட எலெக்ஷன் கமிஷன் இப்பொழுது நடத்தி வருகிறது. அதற்குப் பல பேர்களை நாம் அனுப்பி வைத்து தகுந்த பயிற்சி பெறுவதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்தி வருகிறோம்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர்கள் விடுபடுவதைத் தடுக்கக்கூடிய வகையிலேயும் போலி வாக்காளர்கள் புகுந்து விடாமல் இருக்கக்கூடிய வகையிலேயும் ஏமாற்றங்களைத் தவிர்க்கவும் ஆள் மாறாட்டங்களைத் தடுக்கக்கூடிய வகையிலேயும் போட்டோவுடன் அவர்கள்



1987 நவம்பர் 11]

கையெழுத்து கொண்ட வாக்காளர்கள் பட்டியலை வெளியிட வேண்டுமென்ற அரசினுடைய நிலைமை எந்த அளவிலே இருக்கிறது, அதனுடைய நிலைமைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதோடு இன்றைய தினம் செய்தி வந்திருக்கிறது, நாகாலாந்திலே திமாபூர் தொகுதியிலே மொத்த மக்கள் தொகையே 19,367; ஆனால் வாக்காளர்களின் எண்ணிக்கை 31,436 என்று. அப்படிப்பட்ட நிலைமை இந்தியா முழுவதும் இருக்கிற காரணத்தினால் தமிழ்நாடு முன்னோடியாக இருப்பதற்கு, போட்டோவுடன் வாக்காளர்கள் கையொப்பம் கொண்ட வாக்காளர்கள் சீட்டுகளைத் தயாரித்துக் கொடுக்கக் கூடிய வகையிலே திட்டத்தை நடை முறைப்படுத்த அரசு ஏதேனும் திட்டம் வகுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர்களைச் சாதாரணமாக வாக்காளர் பட்டியலிலே சேர்ப்பதற்கே பல கோடி ரூபாய் செலவாகிறது. அவர்களுக்கு அட்டை கொடுப்பதென்றால் இன்னும் சில கோடி ரூபாய் செலவாகும். மேலும் போட்டோ எடுக்க சில கோடி ரூபாய் செலவாகும். மத்திய அரசு பரிசீலித்து இதனுடைய பெரும் பங்கை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்றால் செய்ய முடியும் என்று முதலில் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு விடையிறுத்தேன். மத்திய அரசு, மாநில அரசு, எலக்ஷன் கமிஷன் ஆகிய மூவரும் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, போட்டோ கொடுக்கும் நிலைமையை ஒரு குறிப்பிட்ட மாநகராட்சி மன்ற அளவிலே நடைமுறைப்படுத்தி பார்க்கலாம் என்ற அளவிற்கு யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அது எந்த அளவிற்கு இருக்க முடியும் என்பதை யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. மு. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலில் இந்த மாதிரியான தவறுகள் நடப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, எலக்ட்ரானிக்ஸ் நூற்றாண்டாகக் கருதப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டில் எலெக்ட்ரானிக்ஸ் முறையில் வாக்களிக்கும் முறையை இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழகத்தில் கொண்டுவர தமிழக அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 11

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து நல்ல கருத்து தான். அதை நடைமுறைப்படுத்தி முதலில் செய்யும்போது ஏராளமான செலவுகள் ஏற்படும். பிற மாநிலங்களில் வாக்குப் பெட்டிகள் தயாரிக்கும் அளவிற்குக் கூட இல்லாமல் நம்முடைய மாநிலத்திலிருந்து அப்பெட்டிகளை பக்கத்து மாநிலங்களுக்கு அனுப்பும் சூழ்நிலை ஏற்படுகிறது. சாதாரணமாக பெட்டிகளைத் தயாரிக்கவே பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவாகிறது. ஆகவே இந்தச் சூழ்நிலை மாறி எலக்ட்ரானிக்ஸ் முறையில் தேர்தலை நடத்துகிற அளவிற்குப் பெரும் முதலீடு செய்து அதற்கான பொறிகள், இயந்திரங்கள் வாங்கக் கூடிய சூழ்நிலை ஏற்படும்போது இது சாத்தியமாகும்.

Mr. SPEAKER: The Supreme Court has a different view on this. The Supreme Court has not upheld this electronic voting.

## புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு ஆகியவற்றை சர்வே செய்யும் திட்டம்.

32—(*வினா எண் 9391) திரு. அ. வெங்கடாசலம் மற்றும் திரு. க. சோலைராசு: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு ஆகியவற்றை சர்வே செய்யும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் பணிபுரியும் அலுவலர்களை இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கிராம நத்தத்தையும், விவசாய நிலங்கள், விவசாயமற்ற பணிகளுக்கு தற்போது உபயோகிக்கப்படும் நிலங்களையும் அளந்து பட்டா கொடுக்க வகை செய்யும் பொருட்டு நத்தம் அளவைத் திட்டங்களை நிறைவேற்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) நில உடைமை பதிவு மேம்பாட்டுத் திட்டப் பணியில் பணிபுரியும் பணியாளர்களை இத்திட்டப் பணியிலும் ஈடுபடுத்தவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.



1987 நவம்பர் 11]

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் அற்புதமான திட்டம். பல ஆண்டுக் காலமாக புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் மக்களுக்கும் பட்டா வழங்கும் வண்ணம் அந்தத் திட்டத்தை அமுல்படுத்த, நத்தம் புறம்போக்கில் இருப்பவர்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய வகையில் அந்த நிலங்களும் சர்வே செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம், மற்றும் விவசாயம் மட்டுமல்லாமல் பிற உபயோகத்தில் உள்ள நிலங்களில் நில அளவை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, அதற்கு முன்னோடியாக பரீட்சார்த்த முறையில் மூன்று இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் சைதை வட்டம், திருச்சி மாவட்டத்தில் திருச்சி வட்டம், மதுரை மாவட்டத்திலே மதுரை வட்டம் என்று பணி மேற்கொள்ளப்பட்டு மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்-செயலாளரை தலைவராகக் கொண்ட ஆய்வுக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அந்தக் குழு அறிவித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் நத்தம் நில அளவை, நகர அளவை, மற்றும் மலை கிராமங்கள், மறு நில அளவைத் திட்டம் போன்ற திட்டங்களை 1—11—1987 முதல் செயல்படுத்த அரசு அனுமதியளித்து 30—10—1987-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டப் பணியில் நில உடைமை பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிபுரிந்த அதே பணியாளர்களை ஈடுபடுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தில் எத்தனை சர்வேயர்கள், அரசுப் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்? அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக அறிவிக்கவில்லை. இனிமேலாவது நிரந்தரப் பணியாளராக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. வேலைக்குத்தான் ஆளை எடுக்க முடியுமே தவிர, ஆளுக்காக வேலைகளை உருவாக்கி வைத்துக்

[1987 நவம்பர் 11

கொண்டிருக்க முடியாது. ஆனால் நில அளவை என்பது எப்போதும் நிரந்தரமாக மற்றைய துறைகளைப் போல இருந்து வருகின்ற ஒன்று அல்ல. ஆனால் இப்போது வேலைகள் தருகின்ற அளவுக்கு நில அளவைத் துறையில் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 1-வது கட்டம், 2-வது கட்டம், 3-வது கட்டம் என்று முடிந்து, இப்போது நத்தம் போன்ற பிற இடங்களையும் அளந்து பார்க்கும் முறையில் அவர்களைப் பயன் படுத்தி வருகிறோம். அந்த வகையில் இதில் 7,500 நபர்கள் நேரடியாகவும், 20,000 நபர்கள் மறைமுகமாகவும் பணிபுரிந்து வருகிறார்கள். ஆகவே தற்காலிகமாக இருக்கிறவர்கள் என்ற வகையிலேதான் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, கிராம நத்தங்களை அளந்து, குடியிருப்புப் பட்டாக்கள் போட சர்வே செய்வோம் என்று மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதிலே ஒரு சிக்கல் இருக்கிறது. 1959 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பின்படி, எஸ்டேட்ஸ் அபாலிஷன் ஆக்டின்படி கிராம நத்தம் அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கப்படவில்லை என்ற ஒரு தீர்ப்பின்படி, ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் போடுகிறபோதெல்லாம், அங்கே ஆக்கிரமித்திருக்கிற நில உடமையாளர்கள், அரசாங்கத்திற்கு நிலம் சொந்தம் கிடையாது, எனவே எங்களைக் காலி செய்ய அரசாங்கத்திற்கு உரிமையில்லை என்று சொல்லி பல கீழ் கோர்ட்டுகளில் தடை ஆணை பெற்று விடுகிறார்கள். எனவே இந்தச் சிக்கலைப் போக்குவதற்கு எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட், செக்ஷன் 3-க்கு ஒரு அமென்ட்மென்ட் கொண்டுவர அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்று அப்படி ஒரு சூழ்நிலை இருக்குமானால் அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும். நத்தம் என்று வருகின்ற போது, ஒன்று அது அரசுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் அல்லது ஊராட்சி ஒன்றியம் அல்லது ஊராட்சி மன்றங்களுக்குத் தான் சொந்தமாக இருக்க வேண்டுமே தவிர தனிப்பட்ட முதலாளி



1987 நவம்பர் 11]

களுக்கோ, நில உடமைக்காரர்களுக்கோ சொந்தமாக இருக்க முடியாது. ஆக்கிரமிப்பாளர்கள் அது தங்களுக்குச் சொந்தம் என்று சொந்தம் கொண்டாடி, நீதி மன்றத்திற்குப் போகக்கூட வழியில்லை. ஆனால் அரசாங்கம் அதில் தலையிட இடமில்லை என்று 1959 ஆம் ஆண்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு இருக்கிறது, அது பல சங்கடங்களுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதன் காரணமாக பல வழக்குகள் நீதி மன்றத்தில் இருப்பதன் காரணமாக, ஏழை எளிய மக்களுக்கு நில ஒதுக்கீடு செய்வதில் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டதன் காரணமாக, அதை அரசு பரிசீலித்து, உள்ளபடியே அதிலே சங்கடங்கள் இருந்தால், அதற்காகத் திருத்தம் கொண்டுவருவதன் மூலம் அந்தச் சங்கடங்களைப் போக்க முடியுமானால் அதை அரசு பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற நத்தம் புறம்போக்குகளை பொது நிறுவனங்களுக்கும், பொதுக் காரியங்களுக்காகப் பணியாற்றும் பொது அறக்கட்டளைகளுக்கும் அரசு இனாமாகக் கொடுத்து வந்தது. ஆனால் அதில கொள்கை அளவில் பெரிய மாற்றம் ஏற்பட்டு, அந்த நிலங்களை நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவ தென்று அரசு முடிவு செய்திருக்கிறதென்று நான் நினைக்கிறேன். ஆனால் ஒரு அரசாங்கத் துறை, வருவாய்த் துறையிடம், எங்களுக்குக் கட்டிடம் கட்ட நிலம் வேண்டுமென்று கேட்கும் போது, அந்த நிலங்களை நீண்ட கால குத்தகைக்குத்தான் தருவோமென்று சொல்கிறார்கள். தென்காசியில் 7½ இலட்சம் ரூபாயில் வேளாண்மைத் துறை கட்டிடம் கட்ட நிலம் வேண்டு மென்று தாசில்தாரிடம் கேட்டபோது, அவர்கள் நிலத்தை நீண்ட கால குத்தகைக்குத்தான் தருவோமென்று சொல்லுகிறார்கள். ஆனால் விவசாயத் துறை, அது எங்களுடைய நிலமாக இருந்தால் தான் கட்டிடம் கட்ட முடியுமென்று பொதுப்பணித்துறை சொல்லுகிறது. ஆகவே அந்த விதிமுறைகளை உடனடியாக கவனித்து, அரசு நிர்வாகத்திற்கு அல்லது அரசுத் துறைகளுக்கு அந்தப் புறம்போக்கு நிலங்களை ஒதுக்கும்போது அவற்றை அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மாற்றிக் கொடுப்பதில் இருக்கும் பிரச்சினைகளை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 நவம்பர் 11

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு நிலை ஏற்பட்டதற்குக் காரணம், பல துறைகளும், மற்றவைகளும் தத்தம் புறம்போக்கு நிலங்களை தங்களுக்கு உரிமைப்படுத்திட வேண்டுமென்று கேட்டு, வாங்கி வைத்துவிடுகிறார்கள். நீண்டகாலமானாலும் அதைப் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். அவற்றைப் பயன்படுத்தும் போதும் பத்தில் ஒரு பங்கு அல்லது பதினைந்தில் ஒரு பங்கு மட்டும் பயன்படுத்திக்கொண்டு, மீதி இடத்தைப் பயன்படுத்தாமல் விட்டுவிடுகிறார்கள். அவர்களுக்கு உடைமையான பிறகு அதில் தலையிட முடியாது. மற்றவர்களுக்கோ, வேறு துறைகளுக்கோ அவற்றை ஒதுக்க வேண்டுமென்று கேட்டாலும்கூட, அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவேதான் 2, 3 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடுகிறோம். அவர்கள் பயன்படுத்துகிற நோக்கத்தைப் பொறுத்தும், பயன்படுத்துகிற தன்மைகளைப் பொறுத்தும் குறிப்பிட்ட இடத்தை நிலையாக அவர்களுக்கு உடைமையாக்கிவிட்டு, மீதியை அரசாங்கம் திரும்ப எடுத்துக் கொள்ளவோ அல்லது மற்றவர்களுக்கு ஒதுக்கவோ வாய்ப்பு, வசதி ஏற்படக்கூடும். குறிப்பிட்ட சிறிய அளவிலே இருந்து, நிரந்தரக் கட்டிடம் கட்டுகிறோம் என்றால் அப்படிப்பட்ட இடங்களை நேரடியாக உடைமையாக்கிவிடலாம் என்ற அளவுக்கு முடிவு எடுக்கிறோம். உதாரணமாக ஒரு சப்-ஸ்டேஷன் வைக்கிறோமென்றால் கட்டாயம் கட்டிடம் கட்டப் போகிறோம். குறுகிய இடம் என்றால் குத்தகைக்கு விட வேண்டியதில்லை. போஸ்ட் ஆபீஸ் வைக்கப் போகிறோம் என்றால், அதற்குத் தேவை குறுகிய இடம்தான், குறைந்த இடம்தான். அதில் கட்டிடம் கட்டப் போகிறார்கள் என்றால் அதை உடைமையாக்கிவிடலாம். ஆனால் பரந்த இடத்தை வைத்துக்கொண்டு, பயன்படுத்தாமல் இருந்தால் அந்தச் சூழ்நிலையைப் போக்கவும், அந்த இடத்தை யாருக்கும் கொடுக்காமல் இருக்கும் சூழ்நிலையைத் தடுக்கவும்தான் இந்த முயற்சியே தவிர, நிரந்தரமாகக் குத்தகைக்கு விட வேண்டுமென்றல்ல. அதை வேறு வகைகளிலே பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கம்தான்.



1987 நவம்பர் 11]

**குறுகிய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் கூட்டுறவு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.**

33—(*வினா எண் 14116) **திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள குறுகிய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் கூட்டுறவு நிறுவனங்களை ஒருங்கிணைப்பு செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

(முற்பகல் 10-20)

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை அளவிலே ஆம் என்று சொல்லி ஒருங்கிணைப்பு செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தெந்த குறுகிய காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் அளிக்கும் வங்கிகளை எந்தெந்த முறையிலே ஒருங்கிணைப்பு செய்வதாக அரசு தீர்மானித்துள்ளது ? அதை விளக்க முடியுமா ? அப்படி ஒருங்கிணைப்பு செய்யும்போது ஏதாவது இடங்கள் விடப்பட்டு அதனால் பாதிக்கப்படும் நிலை இருக்குமானால் அவற்றைப் பொறுத்து அரசினுடைய கொள்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30—6—1987 அன்று வெளியிட்ட ஒரு ஆணையின்படி தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியையும் மற்றும் தமிழ்நாடு மாநில நிலவள வங்கியையும் இணைக்கலாம் என்று தீர்மானித்து, அதனை அமல்படுத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரை உரிய விவரங்களை அரசின் பார்வைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள கருத்தினை ஆராய்வதற்கு குழு ஒன்றை அமைக்க ஏற்ற உறுப்பினர்களுடைய பட்டியலைத் தரும்படியாகவும், குழுவின் செயல்பாடு குறித்த வரன்முறை என்ன என்பதை வகுத்துத் தரும்படியாகவும் பதிவாளரிடத்தில் கேட்கப்பட்டிருக்கிறது. பதிவாளரிடம் இருந்து அறிக்கை

வந்ததற்குப் பிறகுதான், குழு ஆராய்ந்து முடிவு எடுத்ததற்குப் பிறகுதான், திட்டவட்டமான நிலைமைகள் ஏற்பட்டதற்குப் பிறகுதான் எதையும் செய்யமுடியுமே தவிர அவசரப்பட்டு செய்ய முடியாது: கருத்தளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நடைமுறைப்படுத்துவதற்கு இந்தப் பணிகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகுதான் முடியும்.

**திரு. பி. என். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன் வழங்குவதில், முதல் தவணை கேட்டு சென்ற கோரிக்கைதாரர்களுக்கும், மனுதாரர்களுக்கும் கடன் வழங்கியிருக்கிறார்கள். இரண்டாவது தவணை, கடன் வழங்குவதை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். அதனால் குறுவை சாகுபடி செய்வதற்கு, சம்பாவுக்கு உரம் வாங்குவதற்கு எல்லாம் விவசாயிகள் சிரமப்படுகின்றார்கள். இந்த நிலைமைகளைத் தவிர்க்கின்ற வகையில், இரண்டாவது முறையாகக் கொடுக்கும் கடனைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது தவணை கடனைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்ததற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல், நான் புரிந்துகொள்ளாமல் எந்தப் பதிலையும் இங்கே கூறுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது நிலைமையைக் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், எவ்வளவு என்று கேட்டறிந்து அதற்கு என்ன பரிகாரம் தேடுவது அல்லது என்ன பதிலைச் சொல்ல முடியும் என்பதைக் கண்டறிந்து சொல்லலாம். பரிகாரம் தேட முடிந்தால் பரிகாரம் செய்ய முடியும் அல்லது பதில் சொல்ல முடியும் என்றால் பதில் சொல்ல முடியும். இரண்டில் ஒன்றை நான் நா முடியும்

### விவசாயிகள் சாலைகளைக் களமாக உபயோகித்தல்

34—(*வினா எண் 3747) **திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் பகுதியில் விவசாயிகள் சாலைகளைக் களமாக உபயோகிப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?





(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு மாற்றுவசதி ஏதும் செய்து தரும் திட்டமுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், வேடபாளையம் கிராமத்தில் தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நெல் கதிரடிக்கும் களங்கள் அமைக்கும் பணி நடப்பாண்டிற்குள் முடிக்கப்படும்.

**திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரு களம் கட்டுவதற்காக அரசு அனுமதி அளித்திருக்கிறது. மேலும் 15 களங்களை அந்தப் பகுதியில் கட்ட அரசு முன்வருமா? ஏனென்றால் அந்தப் பகுதியில் ஏற்கெனவே இருந்த களம் அடிக்கும் நிலங்கள் எல்லாம் இப்போது ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன. ஆகவே அவற்றை அகற்ற வேண்டும். அப்படி அகற்றி 15 இடங்களில் களங்கள் கட்டுவார்களானால் பாதைகளில் நெல்களை அடிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போக்குவரத்து சீராக இருக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே 15 இடங்களில் களங்கள் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சாலைகளிலே இதுபோன்று நெல் போர் அடிக்கின்ற நிகழ்ச்சிகள் தமிழகத்தினுடைய பல மாவட்டங்களிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆகவே ஊராட்சி ஒன்றியத்திலே 10, 15 இடங்களிலே களம் அமைப்பது என்பது நிதிநிலைக்கு உகந்ததாக இல்லை. ஆகவே படிப்படியாகத்தான் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியும்.

### பட்டுக்கோட்டை நகரில் பேருந்து நிலையம்.

35—(*வினா எண். 7697) **திரு. பி. என். இராமச்சந்திரன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் கட்டப்பட்டு வரும் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் இரண்டாம் கட்டப் பணி எப்போது துவங்கும்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சியில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீடுள்ள புதிய பேருந்து நிலையத்தின் இரண்டாம் கட்டப்பணிக்காக நகர் ஊரமைப்பு இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ரூ. 10.00 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டு, நகராட்சி பொதுப்பணித் துறையிடம் பணித்தளமும், ரூ. 5.00 இலட்சமும் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையினரால் பணி துவங்கப்படவுள்ளது.

**திரு. பி. என். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சியில் கட்டப்பட்டு வருகின்ற புதிய பேருந்து நிலைய இரண்டாம் கட்ட வேலைகள் துவங்கப்பட்டிருப்பதற்காக அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பயணிகள் தங்கும் விடுதி கட்டும் திட்டமும் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கிறதா? பட்டுக்கோட்டை வளர்ந்து வரும் பகுதி. அங்கேயிருக்கின்ற விடுதிகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆகவே நகராட்சியால் சலுகையுடன் கூடிய விடுதிகள் அமைக்கப்படுமா? அத்துடன் அங்கே வியாபார நோக்குடன் கடைகள் கட்டப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது கட்டப் பணியில் 22 கடைகளும், ஒரு சைவ உணவு விடுதியும், ஒரு அசைவ உணவு விடுதியும் கட்டப்பட்டு வருகின்றன. முதல் கட்டத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிற அந்தத் திட்டத்திலே பயணிகள் தங்கும் விடுதியும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பயணிகளுக்காகத் தங்கும் விடுதிகள் அமைக்கின்ற வழிவகை இந்தத் திட்டத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### உள்ளூர் சாலை மானியம் மாற்றியமைத்தல்.

36—(*வினா எண். 8638) **திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Local Road Grants மாற்றியமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?



(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை உயர்த்த உள்ளது?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) தற்போதைய விலை ஏற்றத்திற்கு ஏற்ப உள்ளூர் சாலை மானியத்தை உயர்த்த அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சாலை பராமரிப்பு எல்லாம் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. பஸ் போக்குவரத்துகூட போதிய அளவில் இல்லை. இப்போது ஏற்பட்டிருக்கிற மழையின் காரணமாக சாலைகளுக்கு அதிக அளவில் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் சாலை போக்குவரத்து தடைபட்டிருக்கிறது. ஆகவே, கூடிய விரைவில் இந்த மாற்றத்தைப் பற்றி அறிவிக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட சாலைகள் அத்தனையையும் பழுது பார்க்க வேண்டுமென்றால் ஆண்டுக்கு சுமார் 11½ கோடி ரூபாய் தேவைப்படும் என்ற ஒரு புதிய மதிப்பீடு தரப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்பொழுது இருக்கின்ற நிதி நிலையில் அதிகப்படியாக எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியும் என்பதுதான் இப்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளுக்கான தேர்தல் நடந்ததற்குப் பிறகு இப்போது வந்திருக்கின்ற புதிய நிர்வாகத்தில் ரோடு பராமரிப்புக்குப் பணம் இல்லை [illegible] பல பிரச்சினைகள் [illegible]. உதாரணமாக சின்னவேப்பம்பட்டி [illegible] திட்டத்திற்கு [illegible] தார் ரோடு ஒன்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை ரிப்பேர் பண்ணாததால் வண்டி, வாகனங்கள் [illegible] முடியாமல் போக்குவரத்து தடைபட்டிருக்கிறது. [illegible] [illegible] பணம் இல்லை என்[illegible] [illegible]

தந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி இருக்கின்ற நிலையைத் தவிர்க்க, அரசு அவசர உணர்வோடு இதில் தலையிட்டு தேவைப்படும் முக்கியமான இடங்களுக்கு உடனடியாக அதிகப் படியான பணத்தை ஒதுக்கீடு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகள் போடுகின்ற நிதி என்பது மாநில அரசின் நிதியிலிருந்து ஒதுக்கப்படுகிறது. ஆண்டுக்கு 10, 15 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய நெருக்கடி இருக்கிறது. இப்போது 3 அல்லது 5 கோடி ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அதுவும் குறைந்த அளவிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இப்போது விலைவாசி அதிகமாக உள்ள சூழ்நிலையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அதைத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையில் சாலைகள் போடுகின்ற நேரத்திலும் சில நேரங்களில் இயற்கையின் காரணமாக போக்குவரத்துச் சாலைகள் பழுதடைகின்ற சூழ்நிலையும், சில நேரங்களில் சாலைகளை பயன்படுத்துகின்றவர்களால் பழுதடைகின்ற சூழ்நிலையும் இருப்பதால் இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்துதான் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**போளூர் நகரப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தல்.**

37—(*வினா எண். 9579) **திரு. ஜெ. ராஜாபாபு :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் நகரிலுள்ள பஸ் நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





(முற்பகல் 10-30)

**திரு. ஜெ. ராஜாபாபு :** தலைவரவர்களே, போளூரிலுள்ள பேருந்து நிலையத்திற்கு நாள் ஒன்றுக்கு 200 பஸ்கள் வருகின்றன. அங்கே இடவசதி இல்லாத காரணத்தால் வழியிலும் மரத்தடியிலும் பஸ்கள் நிற்கின்றன. அதனால் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், போளூர் பகுதி வளர்ந்து வருகிற ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகையால் அந்தப் பகுதியிலுள்ள மக்களின் குறைகளைப் போக்க ஒரு புதிய பஸ் நிலையத்தை அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் இதைப் போன்ற திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்தப் பேரூராட்சியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே கடைகள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் கட்டி முடிக்கப்பட்டுள்ள கடைகளுக்கு எல்லாம் வருவாய் வருவதற்கு உரிய வகைகளில் முறையாக ஏலம் விடப்பட்டோ அல்லது மற்ற வகையிலோ செய்ய வேண்டிய பணிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. பேருந்து நிலையம் மிகவும் முக்கியமான தேவை என்று தெரிகிறது. ஏற்கெனவே கொடுக்கப்பட்ட நிதியில் கட்டப்பட்டுள்ள கடைகளை அந்த நிர்வாகம் சரியாக மக்களுக்குப் பயன்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டு, அதற்குப் பின்னால் புதிதாக இந்தப் பேருந்து நிலையம் கட்டும் முயற்சியில் ஈடுபடுகிறபோது, இருக்கின்ற நிதிநிலைமையை ஒட்டி இதை அரசு பரிசீலிக்கும்.

**கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம்.**

38—(*வினா எண். 13804) **திரு. சி. சுப்புராயர் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[1987 நவம்பர் 11

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. கி. சுப்புராயர் :** தலைவரவர்களே, மதுரை மாவட்டம் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கூடலூரில் லோயர் கேம்ப் என்ற ஒரு கிராமம்—13-வது வார்டில் அடங்கியுள்ளது. அங்கே 2000-க்கு மேற்பட்ட கிராமப்புற மக்கள் வசிக்கிறார்கள். அந்தக் கிராமம் பேரூராட்சியில் அடங்கியிருப்பதால் கிராமப்புறங்களுக்கு வழங்கக்கூடிய அரசு சலுகைகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆகவே, லோயர் கேம்ப் கிராமத்தை கூடலூர் பேரூராட்சியிலிருந்து பிரித்து தனியாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று விரும்பினால், அதற்குள்ளே அடங்கியிருக்கிற பகுதியைப் பிரிக்கச் சொல்லக் கூடாது. அப்படி பிரித்தால் அது பேரூராட்சியாகத்தான் இருக்கும். சில நேரங்களில் பேரூராட்சி சாதாரண ஊராட்சியாக மாறிவிடவும் கூடும். ஆகவே, உறுப்பினர் அவர்கள் அதை நகராட்சியாக ஆக்கவேண்டுமென்று விரும்புகிறாரா அல்லது அவர்கள் குறிப்பிட்ட பகுதியை பேரூராட்சியிலிருந்து பிரிக்க வேண்டுமென்று விரும்புகிறாரா என்று முடிவு செய்து, தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு உரிய பதில் அளிக்கப்படும்.

**கமுதி மகப்பேறு மருத்துவமனைக்குப் பெண் மருத்துவர்.**

39—(*வினா எண் 3757) **திரு. கே. முத்துவேல் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மகப்பேறு மருத்துவமனைக்குப் பெண் மருத்துவ அதிகாரி நியமிக்கப்படவில்லையா?



1987 நவம்பர் 11]

(ஆ) ஆம் எனில், பெண் மருத்துவ அதிகாரியை நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம் கமுதி மகப்பேறு மருத்துவமனைக்கு பெண் மருத்துவ அதிகாரி ஒருவரைப் பணிய மர்த்தி 26—3—1987 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

**திரு. கே. முத்துவேல் :** தலைவரவர்களே, கமுதி மருத்துவ மனையில் நீண்ட நாட்களாக பெண் மருத்துவர் கிடையாது. அங்கே ஆறு மருத்துவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தும் ஒரே ஒரு மருத்துவர்தான் பணியாற்றுகிறார். பக்கத்தில் இருக்கிற பரமகுடியிலிருந்து பெண் மருத்துவர் ஒருவர் 'டெபுடேஷன்' முறையில் நியமிக்கப்பட்டார். அந்த மருத்துவரும் லீவில் போய்விட்டார். இதைக் கருத்திற்கொண்டு உடனடியாக அந்த மருத்துவ மனைக்கு டாக்டர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பொதுவாக நம்மிடம் டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது. அதனால் சர்வீஸ் கமிஷன் டாக்டர்களைத் தேர்வு செய்து அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். விரைவில் தேர்வு செய்து மூன்று மாதங்களுக்குள் பட்டியலைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தப் பட்டியல் கிடைத்தவுடன் மருத்துவர்கள் இல்லாத இடங்களில், ஆங்காங்கே நியமிக்கப்படுவார்கள்.

**திரு. கே. முத்துவேல் :** தலைவரவர்களே, மருத்துவர்கள் கிராமப் புறங்களில் சென்று பணியாற்ற விரும்பாமல் இருக்கிறார்கள். ஆகவே ஆரம்பச் சுகாதார நிலையங்களில் கட்டாயமாக மூன்றாண்டுகள் பணியாற்ற வேண்டும் என்று அரசு ஆணையிட்டிருப்பது போல கிராமப்புறங்களிலும் கட்டாயமாக மருத்துவர்கள் பணியாற்ற வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அரசு மருத்துவத் துறையில் மருத்துவர்களைச் சேர்க்கின்றபோதே அவர்கள் தொடக்கத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் கட்டாயம் குறிப்பிட்ட காலத்திற்குப் பணியாற்ற வேண்டுமென்று நிபந்தனை விதித்து, அவர்களும் அவ்வாறு பணியாற்றி வருகிறார்

கள். ஆகவே மருத்துவர்களை நியமிக்கின்ற இடங்களில், கிராமப் பகுதிகளில் அவர்கள் பணியாற்றத் தவறுவார்களானால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அரசுப் பணியிலிருந்து நீக்கவும் அரசாங்கம் தயங்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாலாஜா அரசு மருத்துவமனை.

40—(* வினா எண் 9556) **திரு. மா. கதிர்வேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா அரசு மருத்துவமனையில் உள்ள ஆபரேசன் தியேட்டரும் படுக்கைகளைக் கொண்ட படுக்கைக் கட்டிடமும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) இம் மருத்துவமனையில் பெண்கள் வார்டு ஒதுக்கப்பட்ட வார்டு (Isolation Word) கட்டிடங்கள் பழுதடைந்துள்ளன. ஒதுக்கப்பட்ட வார்டினை ரூ. 30,000 மதிப்பீட்டில் செப்பனிட, பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. 28—7—1987 தேதியிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அரசு ஆணை எண் 1443-ல் ரூ. 3.49 இலட்சம் மதிப்பீட்டில் 10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**திரு. மா. கதிர்வேலு :** தலைவரவர்களே, மகப்பேறு பிரிவுக்குக் கட்டடம் கட்டுவதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது 20 படுக்கைகள் கொண்ட வார்டுதான் உள்ளது. அந்தப் பகுதியிலே ஒரு நாளைக்கு ஆயிரம் வெளி நோயாளிகள் வருகிறார்கள். அது மட்டுமல்லாமல் சாலை விபத்துக்களும் அதிகமாக இருப்பதால் படுக்கைகளை அதிகப்படுத்தவும் ஒரு விபத்து வார்டு கட்டுவதற்கும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, 20 படுக்கைகள் கொண்ட கட்டடம் கட்ட இப்போதுதான் அனுமதி அளித்திருக்கிறோம். அது கட்டி முடிக்கப்பட்ட பிறகு இது குறித்து பரிசீலனை செய்யலாம்.



**திரு. மா. கதிர்வேலு :** தலைவரவர்களே, ஆப்பரேஷன் தியேட்டர் இருப்பதாலும், அடிக்கடி தொழிற்சாலை விபத்துகள் அதிகமாக நடக்கிற பகுதியாக இருப்பதாலும், வெள்ளையூரி லிருந்து வேலூர் வரையிலுள்ள என். எச். சாலையில் ஏற்படுகிற விபத்துக்குள்ளானவர்கள் அங்கேதான் வரவேண்டியிருப்பதாலும் அந்த மருத்துவமனைக்கு ஒரு 'பிளட் பேங்கும்', ஒரு ஆம்புலன்சும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விவரங்களை அரசு அறியும். அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரத்தைப் பொறுத்து அதுபற்றி முடிவு செய்யப்படும்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்ட மருத்துவ மனையில் ஆப்பரேஷன் தியேட்டர் ஒழுங்காகச் செயல்படாத காரணத்தால் அங்கே பயிலுகின்ற மாணவ மாணவியர்களுடைய கல்விப் பயிற்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது. அதை நீக்க அரசு முன்வருமா? உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு புகார் அரசுக்கு இதுவரையில் வரவில்லை. இப்படிப்பட்ட புகார் ஏதேனும் வந்தால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

41—(* வினா எண் 11162) **திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. ஆர். கோவிந்தசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயிற்சி பெறும் நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவின் அளவையும் உதவித் தொகையையும் அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

பயிற்சி பெறும் நர்சுகளுக்குக் கொடுக்கப்படும் உணவின் அளவையும் உதவித் தொகையையும் அதிகப்படுத்தல்.

[1987 நவம்பர் 11

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): செவிலியர் பயிற்சி பெறும் மாணவிகளுக்கு திங்கள் ஒன்றுக்கு வழங்கப்படும் உதவித் தொகை முதல் வருடம் ரூ. 115-ல் இருந்து 200 ஆகவும், இரண்டாவது வருடம் ரூ. 120-ல் இருந்து 220-ஆகவும், மூன்றாவது வருடம் ரூ. 125-லிருந்து 240-ஆகவும், நான்காவது வருடம் ரூ. 130 லிருந்து 260--ஆகவும் 5-12-1986-ல் உயர்த்தப்பட்டுள்ளது.

**திருத்துறைப்பூண்டி பெண்கள் அரசு மருத்துவமனை.**

42—(* வினா எண் 11638) **திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி பெண்கள் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்தி, ரத்த சேமிப்பு கிடங்கு மற்றும் அறுவை சிகிச்சை வசதி செய்துதர கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையை விரிவாக்கம் செய்ய வேண்டிய கோரிக்கைகள் வந்துள்ளன. ஆனால் திட்டமதிப்பீடு குறைக்கப் பட்ட காரணத்தால், 1987-88 ஆம் ஆண்டு பகுதி திட்டத்தில் இம்மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டும் பணியும் மற்ற பணிகளும் சேர்க்க இயலவில்லை. எனினும் இனிவரும் ஆண்டுகளில் இத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியைக் கருத்தில் கொண்டு இம்மருத்துவமனையின் விரிவாக்கம் குறித்து பரிசீலிக்கப்படும்.

**திரு. பொ. உத்திராபதி:** தலைவரவர்களே, திருத்துறைப் பூண்டி மருத்துவமனை இருக்கின்ற பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். 20 படுக்கைகள் கொண்ட பகுதியை இந்த ஆண்டில் கட்டப்போவதாகவும் மேலும் 60 படுக்கைகள் கொண்ட



1987 நவம்பர் 11]

பகுதியை கட்டிக் கொடுக்க அரசு அனுமதி வழங்கியிருப்பதாகவும் சமீபத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த இடத்தை வந்து பார்வையிட்டபோது தெரிவித்துச் சென்றார்கள். அந்த திருத்துறைப்பூண்டியில் பெண்கள் மருத்துவ மனையும் ஆண்கள் மருத்துவ மனையும் அரை கிலோ மீட்டர் தூரத்தில் ரோட்டிற்கு அப்பால் இருக்கின்றன. அதனால் நோயாளிகளும் மருத்துவர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை எல்லாம் கருத்திற் கொண்டு இந்தப் பெண்கள் மருத்துவமனையை இந்த ஆண்டிலேயே அதிகமான படுக்கை வசதிகள் கொண்டதாக அபிவிருத்தி செய்துதர அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் யாரோ பார்த்து விட்டுத் தெரிவித்ததாகக் கூறுகிறார்கள். அப்படி அரசுக்குத் தகவல்கள் இல்லை. எப்படியும் இந்த ஆண்டு இல்லை. அடுத்த நிதி ஆண்டில் நிதி ஆதாரத்தைப் பெற்றதற்குப் பிறகு அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பெண்கள் குடும்பக் கட்டுப்பாட்டுச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்றாலும் சரி, அல்லது ஆப்பரேஷன் செய்து கொள்ள வேண்டும் என்றாலும் சரி ஆண்கள் மருத்துவமனைக்குச் சென்றுதான் செய்ய வேண்டிய நெருக்கடியான சூழ்நிலை இருக்கிறது. அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு எதிர் காலத்தில் பெண்கள் மருத்துவ மனையிலேயே அறுவை சிகிச்சை செய்வதற்கான ஒரு தியேட்டரும், ரத்த சேமிப்பு கிடங்கும் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த சிக்கலை அரசு உணர்ந்து இருக்கிறது. அதைப் பற்றி அடுத்த ஆண்டு பரிசீலிக்கலாம்.

[1987 நவம்பர் 11

ஹோமியோபதி கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள்.

43—(* வினா எண் 12350) திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஹோமியோபதி கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட D.H.M.S. முதலிய பட்டங்கள் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) இல்லை எனில், அவற்றை அங்கீகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) ஓமியோபதி கவுன்சிலின் நடவடிக்கையில் உள்ளது.

வயதான சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம்.

44—(* வினா எண் 12390) டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள வயதான சித்த மருத்துவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 60 வயதிற்கு மேற்பட்ட வயது முதிர்ந்த சித்த மருத்துவர்களுக்கு கீழ்க்கண்ட தகுதி அடிப்படையில், ஓய்வூதியம் மாதம் ரூ. 150 (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) வழங்கப்படுகிறது.

1. பயனடையும் பாரம்பரை சித்த மருத்துவர்கள் ‘பி’ அல்லது ‘சி’ வகுப்பு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. வேலை செய்ய முடியாத அளவிற்கு உடல் நலம் குன்றியிருக்க வேண்டும்.

3. ஆண்டு வருமானம் ரூ. 3,600-க்கும் (ரூபாய் மூவாயிரத்து அறுநூறு) குறைவாக இருக்க வேண்டும்.



1987 நவம்பர் 11]

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், அந்த மாவட்டம் தாய் தமிழகத்தோடு இணைவதற்கு முன்பு கேரளாவுடன் இணைந்து இருந்த காரணத்தாலே, அந்த மாவட்டத்திலே இருந்த பெருவாரியான சித்த மருத்துவர்கள் கேரளாவிலே பதிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பதிவு அடிப்படையில் இங்கே மனு செய்கிற நேரத்தில், அவர்கள் கேரளாவிலே பதிவு செய்திருக்கிற காரணத்தாலே உதவித் தொகை வழங்க இயலாது என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே அந்த மாநிலத்திலே செய்திருக்கும் பதிவுகளை அங்கீகரித்து, அவர்களுக்கும் இந்தச் சலுகை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு மாநிலத்திலே பதிவு செய்தவர்களுக்கு நாம் இங்கே ஓய்வு ஊதியம் அளிப்பது என்று சொன்னால், அது வேறு மாநிலங்களிலே இருப்பவர்களுக்கு இங்கே வந்து ஓய்வு ஊதியம் பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்து விடும். எனவே தமிழ்நாட்டில் பதிவு செய்தவர்களுக்காகத்தான் ஓய்வு ஊதியம் பெறுவதற்கு சட்டம் வகுத்திருக்கிறோம். எனவே வேறு மாநிலங்களிலே பதிவு செய்திருப்பவர்களைப்பற்றி இப்போது பரிசீலிக்க இயலாது.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மற்ற மாநிலங்களிலே உள்ளவர்களைப்பற்றி பேசவில்லை. ஒரு காலத்திலே நாங்கள் கேரளாவுடன் இருந்த காரணத்தாலே அந்தப் பாவத்திலே இருந்து விடுபட்டு வந்து விட்டோம். ஆகவே நீங்கள் புண்ணியமாக தத்து எடுத்து, அங்கே பதிவு செய்திருந்தாலும் உதவி தரவேண்டும் என்று கேட்கிற நேரத்தில், வெளி மாநிலங்களிலே பதிவு செய்திருந்தால் தர முடியாது என்று ஒட்டுமொத்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லாமல் கருணை காட்டி —எங்கு பதிவு செய்திருந்தாலும் தர வேண்டும் என்று நான் சொல்லவும் இல்லை—எங்கள் மாவட்டத்திற்கு மட்டும், அதுவும் அது கேரளாவிலே இருந்து இங்கே வந்து சேர்ந்த காரணத்தாலே

அதைத் தண்டிக்கக் கூடிய விதத்தில் அமைந்து விடாமல் அங்கே பதிவு செய்தவர்களுக்கும் ஓய்வு ஊதியம் தர மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே முதலிலே இருந்தது பாவம் என்று நண்பர் சொல்லக் கூடாது. இங்கே வந்ததற்காக மகிழ்ச்சி அடைகிறோம், இணைந்ததற்காகப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். இங்கே வந்து விட்டார்கள் என்பதற்காக அரசு தண்டிக்கவும் இல்லை. இந்த மாநிலத்திலே அவர்கள் பதிவு செய்யவில்லை என்றுதான் நான் சொன்னேன். இந்த மாநிலத்திலே பதிவு செய்கிறவர்களுக்குத்தான் ஓய்வு ஊதியம் வழங்குவதற்கு அரசு வழி வகைகள் வகுத்திருக்கிறது. வெளி மாநிலத்திலே பதிவு செய்தவர்களுக்கு ஓய்வு ஊதியம் தர அரசின் விதி முறைகள் இடம் தரவில்லை என்றுதான் நான் தெரிவித்தேன்.

**தலைமைச் செயலகத்தில் இணைப்புக் கட்டிடம் கட்டுதல்.**

45—(* வினா எண் 6104) **திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைமைச் செயலகத்தில் துறைகள் விரிவாக்கப் பட்டதின் விளைவாக புதிய பலமாடிக் கட்டிடத்திற்கு இணையாக கட்டிடம் ஒன்றினைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் செயல்பட அரசாங்கம் அதற்குத் திட்ட மதிப்பீடு என்று எவ்வளவு வைத்திருக்கிறது ? எத்தனை காலத்திற்குள் இந்தப் பணியை முடிக்க அரசு எண்ணியுள்ளது என நான் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான தகவல்கள் ஏதும் தயாரிக்கப் படவில்லை. ஆனால் இப்போது கட்ட வேண்டும் என்று நாம் நினைக்கிற அந்த இடத்தை இராணுவத்திடமிருந்து பெற வேண்டியிருக்கிறது. அப்போதுதான் அந்தக் கட்டிடத்தை முறையாகக் கட்ட முடியும். எனவே அந்த இடத்தைப் பெற்றுக் கொண்டுதான் அதைப் பற்றி ஆய்வு செய்து முழுமையான விவரங்களைத் தர முடியும்.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி மாநகரத்திலே ஒவ்வொரு துறையைச் சார்ந்த அமைச்சர்களும், அவர்களுடைய சம்பந்தப்பட்ட துறைகளும் ஒரே இடத்திலே, ஒரே கட்டிடத்திலே இயங்கி வருவதைப் போல நம்முடைய தமிழ்நாட்டிலேயும் தமிழ்நாடு அமைச்சர்களும் அந்தந்தத் துறைகளும் அதன் அலுவலகங்களும் ஒரே கட்டிடத்தில் இயங்குகிறபோது சட்டமன்ற உறுப்பினர்களோ, பொது மக்களோ பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். அப்படிப் பட்ட திட்டத்தை வரும் ஆண்டிலே செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலே மின்சார வாரிய அலுவலகம் அதே மாதிரி இயங்கி வருகிறது. அந்தக் கணக்கில் வைத்து வரும் ஆண்டிலே இதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி ஒருமுறை விவாதிக்கிற போது தனித்தனிக் கட்டிடமாக இருக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு அமைச்சரும், அவருக்குப் பின்னால் செயலாளர்கள், அவர்களுக்குண்டான அலுவலர்கள் அத்தனை பேரும் இருக்கிற வகையில், கட்டிடம் அமைய வேண்டுமென்றும் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால், இப்போது நமக்கு இருக்கிற சூழ்நிலையில் அப்படிப்பட்ட அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு பல கோடி ரூபாய் செலவாகும் என்கிற காரணத்தால்தான் தனித்தனிக் கட்டடத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, இப்போது புதிய மாடிக் கட்டிடமான 10 மாடிக் கட்டிடம் கட்டியதில் ஏறத்தாழ 30 துறைகள்

இயங்கி வருகின்றன. பிரதான கட்டடமாக இருக்கிற இந்தப் பழைய கட்டடத்தில் ஏறக்குறைய 9 துறைகள் இயங்கி வருகின்றன. எனவே இடம் போதாமல் இருக்கிறது. அதற்கு இன்னும் ஒரு பல மாடிக் கட்டிடம் கட்ட வேண்டுமென்ற முயற்சியை அரசாங்கம் இப்போது எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டிடம் கட்டப்படுகிறபோது ஓரளவிற்கு இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு வசதியான இடத்தில் அதிகாரிகள் பணியாற்றுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே அரசினுடைய எண்ணம் அப்படிப்பட்டதாக இருந்தாலும், அதை நிறைவேற்றுவதற்கு போதிய பண வசதிகள் இப்போது இல்லாமல் இருக்கிற காரணத்தால் படிப்படியாக அதைச் செய்ய நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தை மாற்றி வேறு இடத்தில், புதிய திட்டங்களோடு கட்டப்படுமென்று சொல்லப்பட்டதே, அது எப்போது நடைமுறைப்படுத்தப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அது ஒரு பெரிய விவாதமாக நடந்து கொண்டிருந்த பிரச்சினை. தலைமைச் செயலகத்தை எங்கே மாற்றுவது என்பதைப் பற்றி இப்போது விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். ஒரு புதிய கூடுதல் கட்டடத்தை கட்டுவதைப் பற்றிய வினா இது. எனவே அதற்கு மட்டும்தான் பதில் சொல்ல முடியும்.

**மணிமுத்தாறு நதியில் மணலூருக்கு அருகில் தரைப்பாலம்.**

46—(*வினா எண். 11570) **திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுவம்பார் பகுதியை விருத்தாசலத்துடன் இணைக்க மணிமுத்தாறு நதியில் மணலூருக்கு அருகில் தரைப்பாலம் அமைக்கக் கோரி மனு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இப்பணியானது பகுதி-2 திட்டத்தில் எடுத்துச்செய்ய தயாரிக்கப்பட்டுள்ள பணித் தொகுப்பு பட்டியலில் (Shelf of projects) இடம் பெற்றுள்ளது.

**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை பகுதி-2 திட்டத்தில் சேர்த்திருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணியை இந்த ஆண்டே எடுத்துச் செய்வதற்குரிய வகையில் வேலைகளை ஆரம்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஏறத்தாழ மாநிலம் முழுவதும் முக்கியமாக உடனடியாக எந்தெந்தப் பணிகளை செய்யவேண்டுமென்று ஒரு பட்டியலைத் தயாரிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையில் நூற்றுக்கணக்கான பணிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு பெரிய பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணியும் அதிலே சேர்ந்திருக்கிறது. அதற்காக 30 லட்சம் ரூபாய் செலவாகும் என்ற ஒரு கணக்கைச் சொல்லி இருக்கிறார்கள். இதை இந்த ஆண்டே எடுத்துக் கொள்ள முடியுமா என்றால், அந்தப் பட்டியலைப் பார்க்கிறபோது இது எந்த இடத்திலே வருமென்று என்னால் சொல்ல முடியாது. எப்படி இருந்தாலும் பட்டியலில் சேர்ந்திருக்கிறது. எப்போதாவது அது கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

**திரு. ஆர். தியாகராசன் :** தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக அந்த நகரத்தின் மக்கள் 2 கி.மீ. தூரத்தில் நகரத்தை அடைய வேண்டியவர்கள் 14 கி.மீ. சுற்றி வருகிறார்கள். அது மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையாக இருப்பதால், இந்த ஆண்டே எடுத்துக் கொள்ள வேண்டும். இப்போது புதியதாக நிறைய வேலைகள் வந்திருந்தாலும் நீண்ட நாள் கோரிக்கையான இதற்கு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை அளிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. இருந்தாலும் அரசாங்கம் எவ்வளவு பணம் இதற்காக ஒதுக்குகிறதோ அதை வைத்து முக்கியமான பணிகளை

நேரம் எடுத்துக் கொள்கிறோம். 20 ஆண்டுகள் கோரிக்கை என்று சொல்லுகிறார்கள். 30 ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிற பணியை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் வருகிறபோது இது இன்னும் கொஞ்சம் தள்ளிப்போக வேண்டிய அவசியம் வந்து விடுகிறது. இருந்தாலும் கொஞ்சம் தனி கவனத்தைச் செலுத்தலாம்.

## குமரி மாவட்ட கடற்கரையோர இணைப்புச் சாலைகள், இணைப்புப் பாலங்கள் பணி.

47—(*வினா எண் 13169) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்ட கடற்கரையோர இணைப்புச் சாலைகள், இணைப்புப் பாலங்கள் பணி எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரை தொடர் சாலை ஒன்றினை, பன்மாநில பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு கடனுதவியுடன் அமைக்க, கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரை கடலோரச் சாலை அமைக்க வேண்டுமென்று திட்டம் உருவாக்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக திட்ட மதிப்பீடு எதுவும் தயாரிக்கப்பட்டுள்ளதா? எத்தனை இடங்களில் இணைப்புச் சாலைகள், இணைப்புப் பாலங்கள் அமைக்க வேண்டுமென்று அறிவுரை ஏதாவது தரப்பட்டுள்ளதா? அப்படியானால், தெற்கென்று தனித்திட்டம் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாநில அரசு தன்னுடைய பொறுப்பிலே செய்வது என்பது முடியாத காரியம். காரணம் மிகப் பெரிய செலவினத்



தைச் செய்ய வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இது கேரள மாநிலத்தையும் இணைக்கின்ற சாலையாக அமைகின்ற காரணத்தால், மத்திய அரசினுடைய நிதி உதவியோடுதான் நாம் செய்யவேண்டும். அதற்காகத்தான் மத்திய அரசுக்கு நாம் திட்டத்தைத் தீட்டி அனுப்பியிருக்கிறோம். எந்தெந்த இடத்திலே எந்தெந்த பாலத்தை அமைப்பது, எங்கே இணைப்புச் சாலையை ஏற்படுத்துவது என்பதற்கான விளக்கம் இப்போது என்னிடத்திலே இல்லை. ஆனால் மொத்தமாக ஏறத்தாழ ரூ. 1,520 லட்சங்கள் செலவழிக்கவேண்டும் என்ற கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அது மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதில் என்ன முடிவு ஏற்படுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் பணியைத் துவக்க முடியும்.

**திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கடற்கரை ஓரத்தில் உள்ள முட்டம்-பிள்ளைத்தோப்பு இணைப்புச் சாலை, மணவாளக்குறிச்சி பாலம், குளச்சல் சைமன் காலனிபாலம் ஆகிய அமைப்புப் பணிகள் மிகவும் மெதுவாக நடைபெற்று வருகின்றன. எனவே இதைத் துரிதப்படுத்தி இந்த ஆண்டே பணியை முடித்திட அரசு அறிவுறுத்துமா? மேலும், மேலமணக்குடி, கீழ மணக்குடி இணைப்புப் பாலம் மிக முக்கியமான பாலமாக, கடற்கரையோர இணைப்பு பாலமாக அமைய வேண்டுமென்று நீண்டகாலமாக அந்தப் பகுதியில் உள்ள கடற்கரையோர மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தத் திட்டம் உருவாக ஏதேனும் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா? இந்த ஆண்டிலாவது இந்தத் திட்டம் உருவாக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி வேறு. உறுப்பினர் இப்போது கேட்கின்ற கேள்வி வேறு. எனவே அதற்கான விளக்கம் என்னிடத்திலே தற்போது இல்லை. ஏறத்தாழ, அவருடைய தொகுதியிலே என்னென்ன வேலைகள் இருக்கின்றனவோ, அவற்றை ஒட்டுமொத்தமாக, வாய்ப்பு கிடைத்துவிட்ட காரணத்தால் சொல்லிவிட்டார்கள் என்று கருதுகிறேன். எனவே தனிக்கேள்வியாகவோ அல்லது நேரிலோ இவற்றைப் பற்றிக் கேட்கிறபோது, இவை என்ன நிலையில் இருக்கின்றன, என்ன செய்யவேண்டும் என்பதைப்

பார்த்து நடவடிக்கை எடுக்கலாம். சிலவற்றிலே தாமதமாக வேலைகள் நடக்கின்றன என்று சொன்னார்கள். அதிலே தனிக் கவனம் செலுத்துவதற்கான அறிவுரையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கலாம்.

**பி.எச்.ஈ.எல். தொழிற்சாலைக்கு உப பாகங்கள் செய்து தர சிறு தொழிற்கூடங்கள்.**

48—(*வினா எண் 13564) **திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதியில், துவாகுடி ஊராட்சி (பேரூராட்சி), கூத்தப்பார் பேரூராட்சி, திருவெறும்பூர் பேரு ராட்சி, கூண்டூர் ஊராட்சிப் பகுதிகளில் பி.எச்.ஈ.எல். தொழிற் சாலைக்கு உப பாகங்கள் செய்துதர எத்தனை சிறுதொழிற் கூடங்கள் உள்ளன?

(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கிறது?

(இ) இந்தத் தொழிற்கூடங்களில் நிரந்தரத் தொழிலாளர்கள் எத்தனை பேர் பணியாற்றுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 135 இடங்கள்.

(ஆ) தனிப்பட்ட தொழில் முனைவோரின் பராமரிப்பில் இவை இயங்கி வருகின்றன. இத்தொழிலிலிருந்து அரசாங்கத் திற்கு எந்தவிதமான வருமானமும் இல்லை.

(இ) மொத்தம் அங்கே பணியாற்றக்கூடியவர்கள் தோராய மாக 2,505 பேர்கள்.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பாய்லர் தொழிற்சாலைப் பகுதியில் 135 தனியார் சிறு தொழிற் கூடங்கள் இருப்பதாக இங்கே சொன்னார்கள். நான் இந்த நோத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது. 135 தொழிற்சாலைகளும் பெல் தொழிற்கூடத்தை நம்பி இருக் கின்றன. இந்தத் தொழிற்கூடங்கள் தமிழ்நாடு அரசின்



வங்கிகள் மூலமாகவும் தமிழ்நாடு அரசினுடைய தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாகவும் நிதி ஆதாரங்கள் பெற்று உருவாக்கப்பட்ட தொழிற்கூடங்களாகும். இந்தத் தொழிற் கூடங்களுக்கான வேலையை பெல் நிறுவனம்தான் தரவேண்டும் அதை நம்பித்தான், இந்தத் தொழிலை அவர்கள் ஆரம்பித் தார்கள். இப்போது, பெல்லிலிருந்து உபகரணங்கள் செய்யக் கூடிய, அதாவது ஓர்க்லோடுகளை அதிகமாகத் தருவதில்லை என்ற குறைபாட்டை அந்தப் பகுதியிலுள்ள சிறு தொழில் நிறுவனத்தினர் கூறுகிறார்கள். இது ஏன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறபோது, அந்த நிறுவனத்திலே உள்ள ஒருசில பேர்கள் அவர்கள் வேண்டியவர்களுக்கு ஓர்க்கைக் கொடுப்பதும், எந்தெந்தக் கம்பெனி நிறுவனத்தார் அவர்களுக்கு அதிக ஆதரவு தருகிறார்களோ, அவர்களுக்கு மட்டும், அதிக வேலையைத் தருவதும், மற்றவர்களுக்கு கொடுக்கவில்லை என்றும் சொல்லு கிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல் இந்த 135 தொழிற்கூடங்களுக்கு வேலைகள் கிடைக்காமல் இருக்கின்ற குறையை நீக்குகின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிறுவனத்திற்கு அரசு மூலமாக அறிவுரை வழங்குவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெல் நிறுவனத்தை நாம் கேட்டுக் கொள்ளலாம். ஆனால் அந்த நிறுவனம் இப்படித்தான் கொடுக்கவேண்டும் என்று சொல்வதற்கு நிச்சயமாக நமக்கு எந்த உரிமையும் இல்லை. அந்த நிறுவனத்தை நடத்தக் கூடிய வர்கள் தங்களுக்கு எது லாபகரமாக இருக்கிறதோ, தங்களுக்குக் குறைந்த விலையிலே யார் செய்து கொடுப்பார்களோ, அவர் களிடத்திலே அணுகிச் செய்வதுதான் முறையாக இருக்க முடியும். நம்முடைய அரசாங்கத்தில் இருக்கிற நிறுவனங்கள் கூட எங்கே குறைந்த விலையிலே செய்து கொடுக்கிறார்களோ, அவர்களை அணுகித்தான் வேலைகளைச் செய்வதற்கான முயற்சியை எடுக் கிறார்கள். எனவே அவர்கள் செய்வது தவறு என்று நாம் சொல்லிவிட முடியாது. ஒருவேளை அவர்கள் தவறாக அதிக விலைக்குச் செய்து கொடுப்பவர்களுக்கு கொடுத்து, எங்காவது பாரபட்சமாக செய்து கொண்டிருந்தால், அந்த நிர்வாகம்தான்

[1987 நவம்பர் 11

அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இருந்தாலும் கூட, அரசு மூலமாக கடனைப் பெற்று தொழில் நடத்தக்கூடியவர்களுக்கு ஊக்கம் தரவேண்டும் என்பதற்காக, அந்த பெரு நிறுவனத்தை நாம் கேட்டுக்கொள்ளலாம்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இந்தத் தொழிற்கூடங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வேலையில்லாத காரணத்தால் மிகவும் கஷ்டமான நிலையிலே அவதிப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தமிழ்நாடு அரசு, தொழிலாளர் நலச் சட்டத்திற்கு பல திருத்தச் சட்டங்களைக் கொண்டு வந்து, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கருதி சட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்களுக்கு உரிமையும், பாதுகாப்பும் வேண்டும் என்று கேட்டால், எங்களுக்கு தொழிலே கிட்டவில்லை என்ற நிலையிருக்கும்போது, நாங்கள் எப்படித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியும் என்ற பதிலை அங்கே இருக்கின்ற அந்த 135 தொழிற் கூடங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் கூறுகிறார்கள். ஆக இதை மனதில் கொண்டு அந்த தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமையும், பாதுகாப்பும் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலைப் பற்றி தொழிற்துறை பார்க்க வேண்டும். தொழிலாளர்களைப் பற்றி தொழிலாளர் நலத் துறை பார்க்க வேண்டும். எனவே சம்பந்தப்பட்ட தொழிலாளர் நலத் துறையிடம் அந்தக் கருத்தைச் சொல்லி அதற்கான நடவடிக்கை எடுக்கும்படி கேட்பது பொருத்தமாக இருக்கும்.

**பக்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து படகு போக்குவரத்து ஏற்படுத்துதல்.**

49—(*வினா எண் 13829) டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. யு. பி. மாதையன் மற்றும் திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பக்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து படகுப் போக்குவரத்து ஏற்படுத்த அரசு முன்வருமா?



1987 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தை 7-வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கான செயற்குறிப்பு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, கடல் அலைகளே போக்குவரத்து சாலைக்கு வந்து விட்டனவோ என்ற அளவுக்குப் போக்குவரத்து நெரிசல்கள் எல்லாம் தற்போது இருந்து கொண்டிருக்கின்றன. துர்நாற்றமோ சொல்லமுடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக தூய கடல் நீரை விட்டு இரு மருங்கிலும் சாலைகளை அமைத்து, பூங்காக்களை நிறுவி, அங்காடிகளை அமைத்து, போக்குவரத்து படகுகளையும், பறக்கும் படகுகளையும், உல்லாச படகுகளையும், படகு வீடுகளையும் விட அரசு பக்கிங்காம் கால்வாயைச் சீரமைத்து, லண்டன் மாநகரில் உள்ள தேம்ஸ் நதியைவிட, சிங்கார ஸ்ரீநகரத்தில் உள்ள சீலத்தை விட சென்னையை சிங்கார சென்னையாக மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 நிமிடத்தில் பெரிய சொர்க்கலோகத்தையே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறுவி விட்டார்கள். ஆனால் இங்கே சொல்லுவதைப் போல உடனடியாக செய்வதற்கான வாய்ப்பு, நிதி வசதி நம்மிடத்தில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் எவ்வளவு செய்தாலும், அரசு செய்கிற அந்த நல்ல காரியங்களுக்கு ஒத்துழைப்பு இன்மையின் காரணமாக பல்வேறு இடங்களில் அதைச் செய்து முடிக்க முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. குறிப்பாக இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்கு ஒரு செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறோம். அதாவது ஜெர்மன் நாட்டினுடைய நிபுணர் ஒருவரை வைத்து ஆய்வு செய்து 1986-ஆம் ஆண்டு எண்ணூரிலிருந்து சிந்தாமணி லாக்கு பகுதி வரை சரக்கு போக்குவரத்து மட்டும் ஏற்படுத்துவதற்காக 200 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தத் திட்டம் மத்திய அரசுக்கு

இப்போது ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அதே போல் எண்ணூரில் உள்ள தெற்கு லாக் என்ற பகுதியிலிருந்து யானைகவுனி என்ற பகுதி வரை 128 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அடையார் தெற்கு லாக்கிலிருந்து மாமல்லபுரம் வரை 502 லட்ச ரூபாயில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு எந்த அளவுக்கு இதை ஏற்றுக்கொண்டு நிதி உதவி செய்கிறார்களோ அந்த அளவுக்கு தான் இவற்றைச் செய்ய முடியும். இதிலே 2 பக்கமும் பாதை அமைக்கின்ற அளவுக்கு இட வசதி இருக்குமானால் அதையும் அமைப்பதற்கு—இப்போது சென்னையில் சிலயிடங்களில் அமைத்துக் கொண்டு இருக்கிறோம்—வேண்டிய ஏற்பாட்டை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் படகு போக்குவரத்து முழுமையாக எல்லா இடங்களிலும் ஏற்படுத்த முடியுமா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்று. நாம் நினைப்பது போல் கடல் நீரை அங்கே கொண்டு வந்து, படகுப் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகும் என்ற காரணத்தால் அது சாத்தியமாக இருக்குமா என்பது இன்று ஒரு பெரிய சந்தேகமாக இருக்கிறது. இருந்தாலும் சீரமைப்பதற்கான முயற்சியை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

## குற்றாலம் கோவிலைச் சார்ந்த சித்திரசபை ஓவியங்கள் மழை நீரால் பாதிக்கப்படுதல்.

50—(*வினா எண் 6048) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குற்றாலம் கோவிலைச் சார்ந்த சித்திரசபை ஓவியங்கள் மழை நீரால் பாதிக்கப்பட்டு சிதைந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே. (அ மற்றும் ஆ) குற்றாலம் அருள்மிகு குற்றாலநாத சுவாமி திருக்கோயிலைச் சார்ந்த சித்திரசபையின் மேற்கூரை





செப்பு ஓடுகளால் பதிக்கப்பட்டிருப்பினும் மழை நேரங்களில் ஏற்படும் கசிவுகளால் உட்பிரகாரத்தில் உள்ள சித்திரங்கள் சிறிது பழுதடைந்துள்ளன. சித்திரங்களை மழைநீர் கசிவுகளிலிருந்து தற்காலிகமாகப் பாதுகாக்கும் பொருட்டு, பழுது பார்க்கப்பட்டுள்ளது. மேற்படி சித்திரசபை சித்திரங்களை நிரந்தரமாகப் பாதுகாக்க செப்பேடு மேற்கூரையைப் பிரித்து, மீண்டும் செப்பேடுகளைப் பதித்து இணைந்து "நெயில் பிரசிங்" செய்ய வேண்டும். இப்பணியினை சாதாரண தொழிலாளர்களைக் கொண்டு செய்ய இயலாது. ஆகையால் தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்த திறமையான வல்லுநர்களாலும், ஸ்தபதிகளாலும் தான் இயலுமென்பதால், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு மேற்படி பணியினை செய்து முடிக்க கடிதம் எழுதப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய ஊருக்கு அருகில் உள்ள சிதம்பரம் கனகசபை, திருவாலங்காடு ரத்தின சபை, மதுரை வெள்ளி சபை, திருநெல்வேலி தாமிர சபைக்கு அடுத்தபடியாக அருள்மிகு நடராசருக்கு சிறப்பு சேர்க்கின்ற மிகப் பெரிய ஆலயமாக குற்றாலத்திலே அந்த சித்திரை சபை இருக்கிறது. அஜந்தா, எல்லோரா போன்று இதைச் சீரமைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குற்றாலத்திற்கு வந்தபோது நான் நேரில் அழைத்துச் சென்று காண்பித்தேன். இயற்கையால் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், அங்கே வந்து பார்க்கின்றவர்கள் கண்களுக்கு அந்தச் சித்திரங்களின் கண்களை தோண்ட வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுகிறது. அத்தகைய துர்ப்பாக்கியமான சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆகவே அந்தச் சித்திரங்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவண்ணம், அவற்றுக்கு முன்னால் ஒரு கண்ணாடித் தடுப்பு போட்டு, அந்தச் சித்திரங்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா? அந்த முறையில் அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் நான் அந்தச் சித்திரங்களைப் பார்த்தேன். அந்தச் சித்திரங்

களுக்குப் பழுது ஏற்பட்டிருப்பது என்பது உண்மைதான். தற்காலிகமாகப் பாதுகாக்க கண்ணாடி அல்லது வேறு பொருட்களை உபயோகப்படுத்தி, மூடுவதற்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளருக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சித்திரச் சபையிலுள்ள, மிகப் பிரபலமான தஞ்சாவூர் ஆர்ட் என்று சொல்லப்படுகின்ற வரிசையிலே வருகின்ற அந்தச் சிறப்பான சித்திரங்களை அமைச்சர் அவர்கள் சொன்னது போல் நேரிலே பார்த்து வியந்தார்கள். பல வெளிநாட்டவர்களும், இந்தியத் தலைவர்களும் எந்தப்போது அவர்களை நேரிலே அழைத்துச் சென்றிருக்கிறேன். அவர்களும் அதை ஆவலுடன் பார்த்துப் பாராட்டியிருக்கிறார்கள். சித்திர சபைக்குப் போதுமான விளம்பரம் இல்லை . கலைப் பொக்கிஷங்கள் உலகிற்குத் தெரியாமல் இருக்கின்றன. இந்து சமய அறநிலையத் துறையும் சுற்றுலாத் துறையுமாகிய இரண்டு துறைகளும் மாண்புமிகு அமைச்சரவர்களின் கீழ் இருப்பதால், இந்தச் சித்திர சபைக்கு முக்கியத்துவம் கொடுத்து, வெளி உலகிற்குத் தெரிவிக்கின்ற வகையிலே அதை வெளிக் கொணர ஆவன செய்வார்களா? அந்தச் சித்திரச் சபையில் விளக்குகள் சரியாக இல்லை. சரியான முறையில் அந்த விளக்குகளைப் போட்டு அந்தச் சித்திரங்கள் பார்ப்பவர்களுக்கு எடுப்பாகத் தெரியும் வகையில் வசதி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையிடம் சொல்லி, சுற்றாலத்திற்கு வருகின்றவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில், பெயர்ப் பலகைகள் மற்றும் 'ப்ரோச்சர்ஸ்' வெளியிடும்படி சொல்லப்பட்டிருக்கிறது

**நிலத்தின் விலை உயர்வுக்கு ஏற்ப விலைமதிப்பு நிர்ணயம் செய்யும் வழிகாட்டிக் கோட்பாடுகளை மாற்றுதல்.**

51—(*வினா எண் 6811) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்—

(அ) நிலத்தின் விலை உயர்வுக்கு ஏற்ப விலை மதிப்பு நிர்ணயம் செய்யும் வழிகாட்டிக் கோட்பாடுகளை மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் நிலத்தின் மதிப்பு அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. ஆனால் பத்திரப் பதிவு செய்யும்போது மட்டும் அந்த நிலத்திலுடைய மதிப்பு குறைத்துக் காட்டப்படுகிறது. அதைப் போக்க வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இந்த வழி காட்டும் மதிப்பீடு என்பது இறுதியான முடிவு அல்ல. அதை அடிப்படையாக வைத்து பத்திரப் பதிவு செய்பவர்களை வற்புறுத்தக் கூடாது என்றும் ஆணையிடப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** ...

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இவ்விஷயம் பற்றி புதியதாக தகவல் தயாரிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டே கூடாது. அதை தனியாக எழுதிக் கொடுங்கள். இதை நீக்குகிறேன்.

**திருமாணிக்குழி வானகுரீஸ்வரர் ஆலய ராசகோபுரம் புதுப்பித்தல்.**

52—(*வினா எண் 9351) **திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி—திருமாணிக்குழி எனும் ஊரிலுள்ள அருள்மிகு வானகுரீஸ்வரர் ஆலய ராசகோபுரம் சிதைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 நவம்பர் 11

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் வட்டம், திரு மாணிக்குழி அருள்மிகு வானசுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் வாயிலில் ஐந்து நிலைகளுடன் கூடிய இராசகோபுரம் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. இத்திருக்கோயில் திருப் பணி வேலைகளை மேற்கொள்ள இந்து சமய அறநிலைய ஆட்சி துறை, கடலூர் உதவி ஆணையரால் திருப்பணிக் குழு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அறநிலையச் சட்ட விதிகளைப் பின் பற்றி விரைவில் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## கோவில் சிலைகள் மற்றும் நகைகளை பாதுகாக்க கண்காணிப்பு குழுக்கள்.

53—(*வினா எண் 12151)—**திரு. சைதை சா. துரைசாமி மற்றும் திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில் சிலைகள் மற்றும் நகைகளை பாதுகாக்க மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோயில்களில் உள்ள சிலைகள் பாது காப்பு தொடர்பாக கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத் திலும் விழிப்புக்குழு அமைத்து பாதுகாப்பு நடவடிக்கை செய்யப் பட்டுள்ளது.

திருக்கோயில்களில் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் விலை யுயர்ந்த பொருட்களை பாதுகாக்கவும், தக்க ஆலோசனை நெரி விக்கவும், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் 6 உறுப்பினர்கள் அடங்கிய முதல்தர கமிட்டி 12—3—1986-ல் அமைக்கப்பட்டு அதன்படி இயங்கி வருவதால் மாவட்ட அளவில் இதற்கென தனியாக கண்காணிப்புக்குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.



1987 நவம்பர் 11]

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் அமைக்கப்பட்ட குழுவே போது மானது என்று சொன்னார்கள். மாவட்ட அளவில் ஒரு குழு வினை அமைப்பதால் அதிலே ஏதாவது சிரமம் ஏற்படுமா என்பது தெரியவில்லை. எனவே அந்த முயற்சியை மேற்கொண்டால் இன்னும் இந்த விழிப்புக் குழுவானது பணி புரிவதிலே மிகவும் அக்கறையோடு இருந்து செயல்படுவதன் காரணத்தைக் கொண்டும் இந்த மாவட்ட அளவிலான குழுவினை அமைப்பதற்கும், இந்த அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயங்களுக்கு மாத்திரம் இந்தக் குழு கட்டுப்பாடு கொண்டதா அல்லது தனியார் ஹெரி டிடரி டிரஸ்ட்டி என்று சொல்லுகின்ற அந்த ஆலயங்களுக்கும் இந்த விழிப்புக் குழு பொருந்துமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள கோயில்களைப் பற்றித்தான் இந்தக் குழு அதிகாரம் செலுத்தும்.

## ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு.

54—(*வினா எண் 12192) **திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் சோழ வந்தான் ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோவில் குடமுழுக்கு வேலை எப்போது துவக்கப்படும்?

(ஆ) அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் அருள்மிகு ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோயில் இராஜகோபுரம் மற்றும் விமானம் வர்ணம் பூசுதல் வேலைக்கு ரூ. 2,200-க்கு அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது திருத்திய மதிப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திருக்கோயிலுக்கு அலங்கார மண்டபம் கட்டும் வேலைக்கு ரூ. 78,000-க்கு அனுமதி வழங்கப்பட்டு, ரூ. 10,000

மதிப்புள்ள வேலைகள் துவங்கப்பட்டன. தற்போது இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதியின்மையால் வேலை பாதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டவுடன் குடமுழுக்கு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

**தமிழ்நாட்டில் அமைந்துள்ள மத்திய அரசின் மின் திட்டங்கள்.**

55—(*வினா எண் 12864) **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அமைந்துள்ள மத்திய அரசின் மின் திட்டங்கள் எத்தனை?

(ஆ) அவற்றின் மொத்த உற்பத்தி எவ்வளவு?

(இ) அவற்றிலிருந்து மாநிலத்திற்கு கிடைக்கும் பங்கு என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே,

(அ) மூன்று.

(ஆ) 1280 மெகாவாட்.

(இ) 996.5 மெகாவாட்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் இரண்டாம் அனல் மின் நிலையத்தினுடைய முதல் பிரிவின் முழு உற்பத்தியையும் நம்முடைய தமிழ் மாநிலத்திற்கே கோரியது குறித்து மத்திய அரசின் பதில் என்ன? அவற்றை உறுதியாக கோரி பெறுவதற்கு மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, நெய்வேலியில் உள்ள ஒன்றாவது சுரங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் 100 சதவிகிதம் இந்த மாநிலத்திற்கே வழங்கப்படுகிறது. இரண்டாவது சுரங்கத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தில் சுமார் 28 சதவிகிதம்தான் மத்திய அரசு வகுத்த இலக்கணப்படி தமிழ்நாட்டிற்கு கொடுக்கப்படுகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மைய மின் நிலையங்களிலிருந்து 28 சதவிகிதம் மாநிலத்திற்கு வழங்கு வதை என்பதை 50 சதவிகிதம் ஆக வழங்க வேண்டும் என்ற ஒரு



கோரிக்கையை மாநில அரசு முன் வைத்திருக்கிறதா அல்லது முன் வைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, 50 சதவிகிதம் அல்ல, 100 சதவிகிதமும் தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறையை போக்குவதற்காக கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசு இசைவு தரவில்லை.

**கோயில்களில் பாரம்பரை தர்மகர்த்தாக்கள் முறை.**

56—(*வினா எண் 13734) **திருமதி டி. யசோதா:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில்களில் பாரம்பரை தர்மகர்த்தாக்கள் முறை ஒழிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, பாரம்பரை அறங்காவலர் முறையை நீக்குவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திருமதி டி. யசோதா:** பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்களுடைய அதிகபட்சமான நிலங்களும் அதனுடைய வருவாயும் நல்ல காரியங்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் போய் சேருவதற்கு இந்த பாரம்பரை தர்மகர்த்தா முறை தடையாக இருப்பதால் அதிலே அரசாங்கம் மிக வேகமாக நடவடிக்கை எடுத்து இதனை முடிவுக்கு கொண்டுவர முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இதற்கு விரைவாக அவசரப்பட்டு மிக முக்கியமான ஒரு மசோதாவை கூட நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. இன்னும் மைய அரசுதான் குடியரசுத் தலைவர் மூலமாக இசைவு அளிக்கவில்லை. இசைவு அளித்தால் தம்பிரான் என்ற பெயரால் அறங்காவலர்களாக இருந்துக் கொண்டு பல ஆயிரக்கணக்கான நிலங்களும் மற்றும் உள்ள சொத்துக்களும் இருக்கும்போது அவர்களுடைய வாரிசுகள் யார் என்று கூட தெரியாமல் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். நிலம் இருந்தும் அவர்களால் அந்தப் பணத்தை வசூல் செய்ய முடியவில்லை. குறிப்பாக நாம் போகிறபோது கோயில்களின் விளக்கு எரியவில்லை என்று சொன்னால், பொதுமக்களுக்கு அது யாருடைய கோயில் என்று தெரியாமல்—பொதுவாக கோயில்

[1987 நவம்பர் 11

என்றாலே அறநிலையத் துறைதானே பார்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதை மாற்றுவதற்குத்தான் மசோதா ஏற்கெனவே நிறைவேறியிருக்கிறது. குடியரசுத் தலைவர் இசைவு தரவேண்டும். பல தடவை கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

**திருமதி டி. யசோதா:** பேரவைத் தலைவர் அவர்களே, குடியரசுத் தலைவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்கின்ற காரணத்தினாலும், தமிழக முதல்வருடைய பேரன்பிற்கு பாத்திரமானவர் என்கின்ற நிலையிலேயும் இதனை நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும், இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களும் அதிகமான அக்கறை எடுத்து நிறைவு செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முன் வரும்.

(முற்பகல் 11-10)

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, பரம்பரை அறங்காவலர்கள் ஒழிக்கப்படும் என்பதற்கு இடைக்காலச் சட்டங்களை உருவாக்க வேண்டும் என்று அரசு நினைத்தாலும்கூட, அறங்காவலர்களை நீக்குவதற்கு முன்பாக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மற்றவர்கள் உட்பட சேர்த்து தாங்கள் அறங்காவலர்களை அமைப்பீர்களா? மேலும் என்னுடைய திருவொற்றியூர் கோயில் நரசிம்ம பல்லவனால் கட்டப்பட்டது. மகேந்திரவர்மனாலும் கட்டப்பட்டது. அதை இடையிலே இருக்கிறவர்கள், பரம்பரை அறங்காவலர்கள் என்று சொல்லிக்கொண்டு, அந்த நிர்வாகத்தைச் சீரழிக்கின்றார்களே, அதை நீக்குவதற்கு விரைவான நடவடிக்கை ஏன் எடுக்கப்படக்கூடாது. நீதிமன்றங்களிலே சென்று அவர்கள் தடை வாங்குகிறார்களே, அந்தத் தடையை நீக்குவதற்கு— அடிப்படை உரிமை என்கின்ற ஒரு தடையினை சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு பரம்பரை அறங்காவலர் வாங்கி இருக்கிறார்— அதைப்போன்ற ஒரு நிலை வருகின்றபோது, சட்டத் திருத்தத்தை உடனடியாகச் செய்வீர்களா என்பதை இந்தப் பேரவையின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பற்றிய அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு விதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது



1987 நவம்பர் 11]

கன்கரன்ட் லிஸ்ட் என்பதனால், மைய அரசுடன் கலந்துகொண்டு அடுத்து வருகிற சட்டசபை நிகழ்ச்சியில் அவைகள் சட்டசபை முன் வைக்கப்படும்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவில் மகந்துகளை ஒழித்தது போலவும், உத்திரப் பிரதேசத்தில் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் இருக்கின்ற பரம்பரை அறங்காவலர் குழுவை தனிச் சட்டத்தின் மூலமாக நீக்கியதைப் போலவும், சற்று கடுமையான நடவடிக்கை எடுத்து, தனிப்பட்ட முறையிலே ஆயிரக்கணக்கான நிலங்களையும், விலை மதிப்பற்ற சொத்துக்களையும் அனுபவித்துக் கொண்டு இருக்கிற அறங்காவலர்கள், தர்மகர்த்தாக்களை ஒழிப்பதற்கு அரசு மிக விரைவான முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தையும் இணைத்துத்தான் அந்தத் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. வருகிற சட்டசபையில் அதுபற்றி வைக்கப்படும்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, அவர்களே, 1967-க்கு முன்பு இருந்ததைப் போல, தற்போதும் ஆலயங்களில் சட்டமன்ற உறுப்பினர்களை அறங்காவலர்களாக நியமிக்கும் குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களை அறங்காவலர்களாக நியமிக்கக் கூடாது என்ற நிலை இல்லை. ஆக்கவே, இருக்கலாம்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் நியமிக்கப்படுகிற நிர்வாக அலுவலர்களிடத்தில், பரம்பரை அறங்காவலர்கள் ஆலயத்திற்குச் சொந்தமான சொத்து விவரங்களைக் காண்பிக்க வேண்டும் என்று அரசு கட்டாய உத்தரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துக்களைப் பொறுத்தவரையில், பட்டியல்களை நிர்வாக அலுவலர்களுக்குக் காட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல கோயில்களுக்கு அறங்காவலர் குழுக்கள் இல்லை. அங்கு அறங்காவலர் குழு உடனடியாக நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, டி.சி., ஏ.சி. மற்றும் அவரல்லாமல் மாவட்ட மண்டலக் குழு அமைக்கிற எல்லா வகைக் கோயில்களுக்கும் அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

**தாட்கோ மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.**

57—(*வினா எண் 9799) திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில் தாட்கோ மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு 1986-87 ஆம் ஆண்டு தாட்கோ மூலம் வீடுகள் கட்டுவதற்கு மானியம் வழங்க செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி ஒன்றியங்களிலுள்ள கிராமங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பின் இது பற்றி ஆணை வெளியிடப்படும்.

**கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஆதிவாசிகளுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம்.**

58—(*வினா எண் 10394) திரு. கே. உச்சி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், ஆணைகட்டி பகுதியில் உள்ள ஆதிவாசி மக்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கறவை மாடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?



மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Hill Area Development Programme) நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு ரூ. 33.87 இலட்சம் புதிய திட்டங்கள் நிறைவேற்ற 50 சதவிகிதம் கடன் மற்றும் 50 சதவிகிதம் மானியமாக அ[illegible]ல் ஆணைகட்டிப் பகுதியில் உள்ள ஆ[illegible]களுக்கு கறவை மாடுகள் வழங்குவதற்காக ரூ. 1.38 இலட்சம் வழங்கப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, 31—3—1986 [illegible] கூட்டுறவுச் சங்கங்கள் ஆதிவாசிகளுக்கு [illegible]கள், 10 கறவை மாடுகள் வாங்கி அளித்துள்ளன.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் [illegible] ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதில் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டு பழங்குடியினருக்கு 430 கறவை மாடுகளும், அதேபோல் ஆதி திராவிடர்களுக்கு 13,500 கறவை மாடுகளும்—ஆக மொத்தமாக 32 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மிகவும் காட்டுப் பகுதி. அந்தப் பகுதியில் ஆதிவாசிகள் மிகவும் அதிகம். ஆகவே இன்னும் சற்று அதிக அளவில் பயன் தரும் அளவிற்கு, அந்தத் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஒரு கறவை மாடு வாங்குவதற்கு ரூ. 2,500 கொடுக்கிறோம். அந்தத் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசின் பரிசீலனைக் குறிப்பு இல்லை. மக்களுக்கு அதிகமாகக் கொடுக்கின்ற அளவில் அங்கிருக்கின்ற மலைவாசிகளுக்கு உள்ள பொருளாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அது ஆவன செய்யப்படும்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13,000 ஆதி திராவிட மக்களுக்கு கறவை மாடுகள் வழங்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான்

சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரிலே கூட ஆதி திராவிட நலத் துறை மானியத்தின்மீது பேசுகின்றபோது காஞ்சீபுரத்திலே இருக்கின்ற செம்பரம்பாக்கம் என்கின்ற பகுதியிலே கிட்டத்தட்ட 23 ஆண்டுகளாக ஒரு அரிசன கூட்டுறவுச் சங்கம் நடத்திக் கொண்டு வருகிறார்கள் அவர்களுக்கு இதுவரையிலும் அரிசன நலத் துறையின் மூலமாக ஒரு கறவை மாடு கூட கொடுக்கப்பட வில்லை என்று சுட்டிக்காட்டியும் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இனி மேலாவது அது குறித்து நட வடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட கூட்டுறவுச் சங்கம் மூலமாக அதை நடத்துவார்களானால் கறவை மாடுகள் வழங்குவதைப் பொறுத்தவரையில் பால்வளத் துறை மூலமாக அதனுடைய ஆணையர் சம்பந்தப்பட்டு கொடுக்கப்படுகிறது. ஆதி திராவிட நலத் துறையைப் பொறுத்தவரையில் மானியத் தொகை மட்டும் ஒதுக்கி, மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், அங்கே வழங்கப்படாமல் இருக்குமானால், அந்த ஆணையருக்கு உடனடியாக தாக்கீது அனுப்பி நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

**திரு. மு. ஜான் வின்சென்ட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில், ஆதிவாசி கிறித்தவர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்று புகார் வந்துள்ளது. அதுகுறித்து மறு பரிசீலனை செய்து அவர்களுக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட கிறித்தவர்களுக்கும், ஆதி வாசிகளுக்கும் கறவை மாடுகள் வழங்குவதற்கு சட்டத்திலே இட மிருக்கிறது. வழங்கிக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், எங்கேயாவது கொடுக்கப்படவில்லையென்று குறிப் பிட்டுச் சொல்வார்களானால், அங்கே கொடுக்கப்படாமல் இருக்கு மானால், அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், ஆதி திராவிட தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அதற்கு ஆதி திராவிட





நலத் துறை மூலமாக ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா? அப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால் அதனுடைய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

## தலைஞாயிறில் ஆதி திராவிட மாணவர் விடுதி.

59—(*வினா எண் 11910) **திரு. மா. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், தலைஞாயிறில் ஆதி திராவிட மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

## ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சி நிலையம்.

60—(*வினா எண் 13892) **திரு. செ. இரத்தினவேலு மற்றும் திரு. சா. ஞானசுந்தரம் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை மூலம் நடத்தப்படுகின்ற ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவ—மாணவியர்களில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக யாரும் தேர்ச்சி பெறவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பெற்ற நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

[1987 நவம்பர் 11

திரு. செ. இரத்தினவேலு: மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடு கின்றபோது, ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக கடந்த 2 ஆண்டுகளாக ஒருவர் கூட தேர்ச்சி பெறவில்லையென்று சொன் னார்கள். அப்படியென்றால், அந்தத் துறையின் மூலமாக தேர்வு பெறுவதற்கு என்னென்ன வகையிலே அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அந்தப் பயிற்சியின் மூலமாக தேர்ச்சி பெறு வதற்கு, பயிற்சியினுடைய தரத்தை உயர்த்துகின்ற வகையில், எம்.பி.எ. பட்டம் பெற்றவர்களை பணியில் அமர்த்த அரசு நட வடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சியில் சேருவதற்கு, பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாயாக குறிக்கப்பட்டு இருந் தது. அதிலே சேருகின்றவர்களுக்கு, பெரும்பாலும் கிராமத்திலே யிருந்து வருகின்றவர்களுக்கு நாம் பயிற்சி அளிக்கிறோம். பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தை 35,000 ஆக உயர்த்த வேண்டுமென்று, தற்போது மத்திய சமூக நல அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இப்போது அந்தப் பயிற்சியில் 52 மாணவர்கள் படிக்கிறார்கள். அதிலே ஒட்டுமொத்தமாக 10 பேரை தனியாகப் பிரித்து அவர்களுக்கு ஒரு பேராசிரியர் பயிற்சி அளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறோம். அதைப்போல் பேராசிரியர்கள், பகுதிநேர பேராசிரியர்கள், கௌரவர்களையும், சொற்பொழிவாளர்களையும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. அதற்காக வழங் கப்பட்ட ரூ. 30-ஐ மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ரூ. 50 ஆக உயர்த்திக் கொடுக்க ஆணையிட்டு இருக்கிறார்கள். இப்படி நாம் படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். மேலும் நூலகத்தைப் பொறுத்தவரையில், அங்குள்ள நூல்களை எடுத்து படிப்பதற்கு அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டு மென்று உத்தரவு பிறக்கப்பட்டிருக்கிறது.

(மூற்பகல் 11-20)

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் பயிற்சி அளிக் கப்பட்டாலும், ஐ.எ.எஸ்., ஐ.பி.எஸ் வகுப்புகளில் மாணவர்கள் தேறாத நிலை இருப்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு எந்தெந்த இடங்களில்



1987 நவம்பர் 11]

பயிற்சி அளிக்கப்படுகிறது? அவர்களின் நிலைமையை உயர்த்த தகுதிமிக்கப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புவதோடு, அவர்களுக்குத் தரப்படும் உதவித் தொகை யும் அதிகப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழி ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாம் சென்னையில் பயிற்சி அளிக் கிறோம். அதையும்கூட மதுரை மற்றும் திருச்சி மாவட்டங் களில் அளிப்பதற்கும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதைப் போலவே, பயிற்சி அளிக்கிற நேரத்தில் அவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20—2—1987 முதல் ரூ. 150-லிருந்து ரூ. 250 ஆக உயர்த்தி யிருக்கிறார்கள். இந்த ஆண்டு—1987-88-க்கு ரூ. 8.81,000 ஒதுக் கப்பட்டு நடைபெற்று வருகிறது. அவர்களுடைய நலனில் அக்கறை கொண்டு இந்த அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு, பேராசிரியர்களையும் நியமித்து இருக்கிறது. எனவே வருகிற ஆண்டுகளில் நல்ல ரிசல்ட் எதிர்பார்க்கிற அளவில் பயிற்சி அளிக் கப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் நடத்தப்படு கிற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் போன்ற பயிற்சி வகுப்புகளில் கடந்த 2 வருஷங்களாக யாரும் தேறவில்லை என்று சொல்லப்பட்டிருக் கிறது. இதற்குக் காரணம் கல்வியின் தரம் குறைந்திருக்கிறதா அல்லது அரசின் மொழிக் கொள்கையில் சிக்கல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே சொன் னேன். பொருளாதார அடிப்படையில் நாம் ரூ. 12,000 இன்கம் லிமிட் என்று வைத்திருக்கிறோம். அதையும் ரூ. 35,000 ஆக அதிகப்படுத்த வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் கேட்டிருக் கிறோம். அது ஒரு வகை. பிறகு நாம் மாணவர்களைப் பயிற்சிக்கு அனுப்புகிறபோது பாதியிலேயேகூட போய் விடுகிற நிலை இருக்கிறது. 52 மாணவர்களைச் சேர்த்தோம். அதில் பாதி பேர் வேலைக்குப் போய் விடுகிறார்கள். வேலை கிடைக் கிறபோது பாதியிலேயே போய் விடுகிறார்கள். ஆகவே இதை

பார்த்துத்தான், இதற்கு ஒரு முன் உரிமை கொடுக்கிற வகையில் அவர்களையெல்லாம் பத்து பத்து பேராகப் பிரித்து, ஒவ்வொரு பத்து பேருக்கும் ஒரு பேராசிரியரைப் போட்டு அவர்களுக்கும் பயிற்சி அளிக்க இருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் அதிகமாக வருகிற ஆண்டில் ரிசல்ட் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியை எடுத்துக் கொண்டால் "ராவ்'ஸ் இன்ஸ்டிடியூட்" இருக்கிறது. சென்னையில் பல இன்ஸ்டிடியூட்டுகள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மாணவர்கள் டெல்லி அல்லது சென்னை அல்லது மற்ற இடங்களில் உள்ள இன்ஸ்டிடியூட்களுக்குச் சென்று படிக்க, அரசாங்கம் ஸ்காலர்ஷிப் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984, 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டு வரை நாம் "ராவ்ஸ் பயிற்சி மையத்திற்கு" 6 பேரை அனுப்பியிருக்கிறோம். அந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் பயில அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றிய முழு விவரத்தை அறிய தனியாகக் கேள்வி கேட்டால் விளக்கமாக பதில் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### கொல்லிமலைப் பகுதியில் பால்வினை நோயைத் தடுக்க சிறப்புத் திட்டம்.

1—(*வினா எண் 226) **திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலைப் பகுதியில் பால்வினை நோய் அதிகமாக உள்ளதால் சிறப்பு கவனிப்பு மருத்துவமனை ஏற்படுத்தி பால்வினை நோயினைத் தடுக்க அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா?



விடை—

கொல்லிமலைப் பகுதியில் பால்வினை நோயை கட்டுப்படுத்த "டானிடா" ஆதரவுடன் அரசு ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், சென்னை மருத்துவக் கல்லூரி பால்வினை நோய் நிலையத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் கொல்லிமலைப் பகுதியில் ஆய்வு ஒன்று நடத்தி, அதன் தொடர் நடவடிக்கைகள் "டானிடா" திட்டத்தைச் சார்ந்த மருத்துவர்களால் மற்றும் சார்நிலை பணியாளர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது. மேலும் கொல்லிமலைப் பகுதியிலுள்ள வாழவந்த நாடு ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிக்கும், ஆய்வுக்கூட நுண் பணியாளருக்கும் சென்னை, அரசு பொது மருத்துவமனை பால்வினை நோய் நிலையத்தில் பால்வினை நோய் கட்டுப்பாடு குறித்து ஒரு மாத கால பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பென்சிலின் போன்ற முக்கிய மருந்துகளும், மற்ற நோய் தடுப்பு மருந்துகளும் டானிடாவினால் இந்நோய் தடுப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் வாழவந்த நாடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புற நோயாளிகளுக்கும் மற்றும் வெளியிடங்களிலும் இந்நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டதால் இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டு குறைந்து வருகின்றது. மேற்கூறிய காரணங்களால், சிறப்பு கவனிப்பு மருத்துவமனை ஏற்படுத்த அவசியம் ஏதும் இல்லை.

### சென்னையில் மாநகராட்சி சாலை மின் விளக்குகள் அமைத்தல்.

2—வினா 320—**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1985-86 ஆம் ஆண்டிற்கு சென்னை மாநகராட்சி சாலை மின் விளக்குகள் அமைப்பதற்கு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

விடை—

1985-86 ஆம் ஆண்டிற்கு சாலை விளக்குகள் அமைப்பதற்கு சுமார் ரூ. 80 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

[1987 நவம்பர் 11

**காடம்பாறை நீரேற்று மின் நிலையத்திலுள்ள வீடுகளை மலை சாதி மக்களுக்கு வழங்கல்.**

3—வினா 1076—**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தில் உள்ள வீடுகளை மலை ஜாதி மக்களுக்குக் கொடுக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

ஆம். இது அரசின் பரிசீலனையிலுள்ளது.

**வேடசந்தூர் அருள்மிகு நரசிங்கப்பெருமாள் கோயில் சுற்றுப்புறச் சுவர் புதுப்பிக்கும் பணி.**

4—வினா 3332—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், வேடசந்தூரில் உள்ள அருள்மிகு நரசிங்கப் பெருமாள் கோயிலின் சுற்றுப்புறச் சுவர் (Compound Wall) 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலால் இடிந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இடிந்துள்ள சுவரைப் புதுப்பிக்கும் பணிக்கு அரசு மானியத் தொகை வழங்குமா ?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) இடிந்த சுவரைப் புதுப்பிக்க அளிக்கப்பட்டுள்ள நிர்வாக அனுமதியில் அரசு மானியமாக ரூ. 12,000 அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 11]

**வடமலைப்பட்டி பகுதியைச் சேர்ந்த ஆரம்பப் பள்ளிக்கு குடிநீர் வசதி.**

5—வினா 1555—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா தெற்கு மடத்தூர் வடமலைப்பட்டி பகுதியைச் சேர்ந்த பிரைமரி பள்ளிக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரக் கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம் தெற்கு மடத்தூர் வடமலைப்பட்டி பகுதியைச் சேர்ந்த ஆரம்பப் பள்ளிக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித்தரக் கோரி மனு ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**நத்தம் தொகுதியில் திண்டுக்கல் கோட்ட கிராமிய வீட்டுவசதி சங்கத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.**

6—வினா 1934—**திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி யூனியன், கம்பளியம் பட்டி கிராமம், கஸ்பாவில், திண்டுக்கல் கோட்ட கிராமிய வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக கட்டிக்கொடுத்த வீடுகள் பழுதடைந்து உபயோகம் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை பழுது பார்த்து ஆதிதிராவிடர்களுக்கு உதவ அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1979 ஆம் ஆண்டில் திண்டுக்கல் கோட்ட கிராமிய வீட்டுவசதி சங்கத்தால் வழங்கப்பட்ட கடன் தொகையிலிருந்து கட்டப்பட்ட 19 வீடுகளில், 7 வீடுகள் மட்டும் காலப்போக்கினாலும் பராமரிப்புக் குறைவினாலும் பழுது பட்டுள்ளன. வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடனுதவி பெற்றுக் கட்டப்படும் வீடுகளில் அங்கத்தினர்கள் குடியேறிய பின்னர் ஏற்படும் பழுதுகளைச் சரிசெய்ய கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தில் வழிவகை இல்லை. அங்கத்தினர்கள் தான் சொந்த செலவில் பழுது பார்த்து வீடுகளைப் பராமரித்துக்கொள்ள வேண்டும்.

**பெண்ணாகரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுப்புறச் சுவர் கட்டும் திட்டம்.**

7—வினா 2231.—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு சுற்றுப் புறச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இப்பள்ளிக்குச் சுற்றுப்புறச் சுவர் கட்டுவது பற்றிய கருத்துக்கள் ஏதும் அரசுக்கு அனுப்பப்படவில்லை.

**திண்டுக்கல் சாலையிலிருந்து கொளக்காரன்பட்டி வரை புதிய சாலை அமைத்தல்.**

8—வினா 2246—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, திண்டுக்கல் சாலையிலிருந்து அந்தோனி முத்து கொட்டம் வழியாக கொளக்காரன்பட்டி வரைக்கும் புதிய சாலை போட அரசு முன்வருமா?





விடை—

நத்தம் தொகுதி, திண்டுக்கல் சாலையிலிருந்து அந்தோனி முத்து கொட்டம் வழியாக கொளக்காரன்பட்டி வரைக்கும் தற்போது உபயோகத்தில் உள்ள பாதையே போதுமானதாக உள்ளது. எனவே புதிய சாலை அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**லெட்சுமி நாயக்கன்பட்டியில் வானொலி அமைத்தல்.**

9—வினா 2250—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, ராஜக்காபட்டி பஞ்சாயத்து, லெட்சுமி நாயக்கன்பட்டியில் வானொலி அமைத்துத் தர அரசு முன் வருமா?

விடை—

நத்தம் தொகுதி சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ராஜக்காபட்டி ஊராட்சி, லெட்சுமி நாயக்கன்பட்டியில் வானொலிப் பெட்டியொன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

**செம்பனார் கோயிலிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.**

10—வினா 2285—திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி தாலுக்கா செம்பனார் கோயிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணிகள் எப்போது துவக்கப் படும்?

விடை—

(அ) தரங்கம்பாடி தாலுகா, செம்பனார் கோயிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு 1982 ஆம் ஆண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இதுவரை

[1987 நவம்பர் 11

கட்டிடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் கொடுக்கப்படவில்லை. இது குறித்து நில ஆர்ஜிதம் செய்து அல்லது வேறு இடத்திற்கு மாற்றுவது பற்றி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(ஆ) நில ஆர்ஜிதப் பணி முடிந்த பிறகு கட்டிடம் கட்டும் பணி அரசு நிதி நிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

### விநாயகபுரத்திலுள்ள அரசு விதைப்பண்ணை.

11—வினா 2308—திரு. க. வெ. வீராணம்பலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் மேலூர் சட்டமன்றத் தொகுதி விநாயகபுரத்தில் உள்ள அரசு விதைப்பண்ணை இலாபத்தில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், இந்தப் பண்ணையை விரிவுபடுத்த அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

விடை—

(அ) மதுரை மாவட்டம் மேலூர் சட்டமன்றத் தொகுதி விநாயகபுரத்தில் அரசு விதைப் பண்ணை இலாபத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) இப் பண்ணையை விரிவுபடுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### சென்னை நகரில் புதிதாக விளையாட்டுத் திடல்கள் அமைத்தல்.

12—வினா 2624—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் புதிதாக விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?



1987 நவம்பர் 11]

விடை—

(அ) சென்னை மாநகராட்சியில் புதிதாக விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் திட்டம் வரும் நிதி ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது.

(ஆ) அண்ணா நகர் பகுதியிலும், நகருடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளிலும் விளையாட்டுத் திடல்கள் அமைக்க, கோரிக்கைகள் மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளன.

### தீயினால் கருகிய பயிர் வகைகள்.

13—வினா 2861—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-85 ஆம் ஆண்டு வரை தீயினால் கருகிய பயிர் வகைகள் உண்டா?

(ஆ) ஆம் எனில், அவைகளின் மதிப்பு என்ன?

(இ) அவற்றில் இயல்பாய் தீப்பிடித்தது எவ்வளவு?

(ஈ) பகையால் பாழ்பட்டது எவ்வளவு?

விடை—

(அ) உண்டு.

(ஆ) 1980-85 வரை தீயினால் கருகிய பயிர் வகைகளின் மதிப்பு ரூ. 3,31,450 ஆகும்.

(இ) அவற்றில் இயல்பாய் தீப்பிடித்த பயிர் வகைகளின் மதிப்பு ரூபாய் 1,71,950 ஆகும்.

(ஈ) பகையால் பாழ்பட்ட பயிர் வகைகளின் மதிப்பு ரூ. 1,59,500 ஆகும்.

### நத்தம் தாலுக்காவில் மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை அமைத்தல்.

14—வினா 3314—மாண்புமிகு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அண்ணா மாவட்டம், நத்தம் தாலுக்காவில் அமைக்கும் உத்தேசம் அரசின் ஆய்வில் உள்ளதா?

[1987 நவம்பர் 11

விடை—

இல்லை.

### அன்னவாசல் ஒன்றிய ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல்.

15—வினா 3415—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி அன்னவாசல் ஒன்றியம் கள்ளம்பட்டி எல்லையாபட்டி ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

விடை—

குளத்தூர் தொகுதி அன்னவாசல் ஒன்றியம், கள்ளம்பட்டி எல்லையாபட்டி ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை. ஜனத்தொகை குறைவாக உள்ள இவ்விரு கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யும் பொருட்டு அடி குழாய்கள் அமைக்கப்பட்டு அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### நாங்குநேரியில் ஒன்றியப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுதல்.

16—வினா 3444—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குநேரி ஒன்றியத்தில் ஏராளமான ஒன்றியப் பள்ளிகளில் கட்டிடங்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு எத்தனை பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்?



1987 நவம்பர் 11]

விடை—

(அ) மற்றும் (ஆ): நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தில் 64 ஒன்றியப் பள்ளிகள் உள்ளன. அப்பள்ளிகளின் கட்டிட விவரங்களாவன:—

| | |
|---|---|
| **வாடகைக் கட்டிடங்கள்.** | |
| 1. கற்காரைக் (காங்கிரீட்) கட்டிடங்கள் | 8 |
| 2. கல்நார் கூரைவேய்ந்த கட்டிடம் | 1 |
| **ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள்.** | |
| 3. ஓட்டினால் மேல்கூரை வேய்ந்த கட்டிடங்கள் | 31 |
| 4. கல்நார் கூரைவேய்ந்த கட்டிடங்கள் | 23 |
| 5. ஓலைக் கட்டிடம் | 1 |
| மொத்தம் .. | 64 |

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஆண்டுதோறும் ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டு பள்ளிக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

### குமரி மாவட்டத்தில் பட்டப்படிப்புக் கல்லூரிகள் தொடங்குதல்.

17—வினா 3666—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ, சட்டக் கல்லூரியோ, சித்த மருத்துவக் கல்லூரியோ இது போன்ற பட்டப்படிப்புக் கல்லூரிகள் ஒன்று கூட இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மேற்படி கல்லூரிகளை 1985-86 ஆம் ஆண்டில் குமரி மாவட்டத்தில் தொடங்க உத்தேசம் உள்ளதா?

விடை—

(அ) தெரியும்.

(ஆ) இல்லை.

[1987 நவம்பர் 11

திருக்கோவிலூரில் பெண்ணையாற்றிலிருந்து புதிய வாய்க்கால் வெட்டி பாசன வசதி செய்யும் திட்டம்.

18—வினா 4039—திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூரில் பெண்ணையாற்றிலிருந்து புதிய வாய்க்கால் வெட்டி பாசன வசதி செய்துதரும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

வேளச்சேரியில் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கும் தொழிற் சாலை துவங்கும் திட்டம்.

19—வினா 4069—திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி வேளச்சேரி பகுதியில் கொட்டப் பட்ட குப்பைகளிலிருந்து உரம் தயாரிப்பதற்கான தொழிற்சாலை துவக்க திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

பெருந்துறைத் தொகுதியில் வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்ட ஆதி திராவிடர்கள்.

20—வினா 4189—டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறைத் தொகுதியில் எத்தனை ஆதி திராவிடர் குடும்பங்கள் உள்ளன ?



1987 நவம்பர் 11]

(ஆ) எத்தனை குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளன ?

(இ) எத்தனை குடும்பங்கள் வீட்டுமனை கேட்டு விண்ணப் பித்துள்ளன ?

விடை—

(அ) 2582.

(ஆ) 575.

(இ) 427.

மதுரையில் உள்ள முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம்.

21—வினா 4243—திரு. க. பாரமலை : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை நடத்த மதுரையில் அமைக்கப் பட்டிருக்கும் குற்றவியல் முதல் வகுப்பு நீதி மன்றம் எந்த ஆண்டி லிருந்து செயல்படுகிறது ?

(ஆ) அந்த நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது ?

(இ) எத்தனை வழக்குகளில் தண்டனை வழங்கப்பட் டுள்ளது ?

(ஈ) எத்தனை வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டுள்ளது ?

விடை—

(அ) 1982 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) 1985 நவம்பர் வரை இந்திய குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 538 வழக்குகளிலும், இந்திய தண்டனைச் சட்டத் தின் கீழ் 115 வழக்குகளிலும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளன.

(இ) மற்றும் (ஈ) : 1985 நவம்பர் வரை குடியுரிமைப் பாது காப்புச் சட்டத்தின் கீழ் விடுதலை செய்யப்பட்ட வழக்குகள் 516-ம், இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் 73 வழக்குகளும் ஆகும்.

[1987 நவம்பர் 11

**மதுரை அரசினர் மருத்துவமனையிலுள்ள எக்ஸ்ரே கருவிகள்.**

22 வினா 4245—**திரு. க. பாரமலை :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசினர் மருத்துவமனையில் மொத்தம் உள்ள எக்ஸ்ரே கருவிகள் எத்தனை ?

(ஆ) அதில் எத்தனை கருவிகள் செயல்படுகின்றன ?

**விடை—**

(அ) மதுரை அரசினர் இராசாசி மருத்துவமனையில் மொத்தம் 22 எக்ஸ்ரே கருவிகள் உள்ளன.

(ஆ) 12 கருவிகள் செயல்படுகின்றன.

**மதுரை, ராஜாஜி அரசு மருத்துவமனையில் அக்குபங்க்சர் மருத்துவ முறை ஏற்படுத்துதல்.**

23—வினா 4364—**திரு. க. வெ. வீரானம்பலம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையிலும், மேலூர் தாலுகா அரசு மருத்துவமனையிலும் "அக்குபங்க்சர்" வைத்தியமுறையைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

**(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?**

**விடை—**

**(அ) இல்லை.**

**(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.**



1987 நவம்பர் 11]

**உசிலம்பட்டி தொகுதியில் மகளிர் பல்தொழில் பயிற்சிக் கல்லூரி அமைத்தல்.**

24—வினா 4385—**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தொகுதியில் மகளிர் பல்தொழில் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

**விடை—**

**இல்லை.**

**நத்தம் தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.**

25—வினா 4429—**திரு. மெ. ஆண்டி அம்பலம் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், செல்லப்ப நாயக்கன்பட்டி, பட்டணம்பட்டி, பாதசிறுகுடி, நடுமண்டலம் ஆகிய கிராம ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், வீடுகள் எப்போது கட்டப்படும் ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) : மேற்கூறிய கிராமங்களில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் மூலம் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டித்தர கருத்துரு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

[1987 நவம்பர் 11

**கோவை மாநகரத்தில் செயல்பட்டுவரும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள்.**

26—வினா 4473—திரு. ரு. ரமணி : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தில் எத்தனை நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன ?

(ஆ) அவற்றில் சங்கனூர் பள்ளத்தின் வெள்ள அபாயத்தை தடுக்கும் திட்டம் ஏதாவது செயல்படுத்தப்படுகிறதா ?

விடை—

(அ) கோயம்புத்தூர் நகரத்தில் குறிச்சி வீட்டு வசதித் திட்டம், பேரூர் சாலையின் தெற்கு மற்றும் வடக்கு, புறங்களில் வீட்டு வசதித் திட்டம், சிங்காநல்லூர் மற்றும் குறிச்சி குடிநீர் வசதித் திட்டம், அவினாசி சாலை மற்றும் நஞ்சப்பா சாலையில் வணிக மையங்கள் அமைத்தல் ஆகிய நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் ரூ. 305.93 இலட்சங்கள் முதலீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) சங்கனூர் பள்ளத்தில் வெள்ள அபாயத்தைத் தடுக்க 1984—85 ஆம் ஆண்டில் ரூ. 69,200 மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 3,86,000 முதலீட்டில் பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

**ஜெயங்கொண்டான் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம்.**

27—வினா 4500—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985—86-ல் திருச்சி மாவட்டம், ஜெயங்கொண்டான் தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?



1987 நவம்பர் 11]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

28—

**குமரமலை முருகன் ஆலயத்திற்குச் செல்லும் சாலையின் மின் விளக்கு வசதி செய்துகொடுக்கும் திட்டம்.**

28—வினா 4606—திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குமரமலை முருகன் ஆலயத்திற்குப் போகும் சாலையில் மின் விளக்கு வசதி செய்து கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோதண்டராமபுரம் ஊராட்சி நிதியிலிருந்து 7 மின் சார தெரு விளக்குகள், புதுக்கோட்டை, மணப்பாறை சாலை விளக்கிலிருந்து அருள்மிகு குமரமலை முருகன் கோவில் வரை போடுவதற்கு 22—4—1986-ல் ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றி புதுக்கோட்டை திருவப்பூர் மின் இலாகாவிற்கு மனு செய்யப் பட்டுள்ளது.

**கடையநல்லூர் நகராட்சி குடிநீர்த்திட்ட தலைமைப் பணியிடத் திற்கு ஜெனரேட்டர் வழங்கல்.**

29—வினா 5038—திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் நகராட்சி குடிநீர்த் திட்ட தலைமைப் பணி யிடத்திற்கு ஜெனரேட்டர் வழங்கப்படுமா ?

விடை—

கடையநல்லூர் நகராட்சி குடிநீர்த் திட்ட தலைமைப் பணி யிடத்திற்கு ஜெனரேட்டர் வழங்கக்கோரி கடையநல்லூர் நகராட்சியிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. கோரிக்கை பெறப்படின் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1987 நவம்பர் 11

**கோவில்பட்டி பருத்தி, சிறுதானிய நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கல்.**

*30—வினா 5058—***திரு. கோ. வீரய்யன்** : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி பருத்தி, சிறுதானிய நிலையத்தில் பணிபுரியும் சுமார் 250 ஊழியர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நிச்சயிக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) அரசு அதைத் திருத்தி உயர்த்தித் தரும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படும் ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஊதிய விகிதம் திருத்தி அமைத்து நடவடிக்கை எடுத்தவுடன் இப் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் ஊதிய விகிதத்தைத் திருத்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுக்கும்.

(இ) திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கையின் நகல் கிடைக்கப் பெற்றவுடன் கூலி நிச்சயிக்கப்பட்டு வழங்கப்படும்.

**'கேர்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட வாகனங்கள்.**

*31—வினா 5194—***திரு. செ. செம்மலை** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) CARE நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட வாகனங்கள் எத்தனை ?

(ஆ) தற்போது அவைகள் பயன்படுத்தப்படாமல் இருந்து வருவதற்குக் காரணம் என்ன ?



1987 நவம்பர் 11]

**விடை—**

(அ) 'கேர்' நிறுவனம் வழங்கிய மொத்த ஊர்திகளின் எண்ணிக்கை 234.

(ஆ) அனைத்து ஊர்திகளும் பயன்படுத்தப்படாமல் இல்லை. பயனற்றவை என கழிக்கப்பட்ட ஊர்திகளைத் தவிர, ஓடும் நிலையிலுள்ள மற்ற ஊர்திகள் யாவும் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

**நீலகிரி மாவட்டத்தில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் வறட்சிப் பகுதி மேம்பாட்டு திட்டங்களின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை.**

*32—வினா 7656—***திரு. கே. உச்சி** : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை, கூடலூர் மற்றும் குன்னூர் வட்டங்களில் 1980-81 முதல் 1983-84 வரை சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ) : நீலகிரி மாவட்டம், உதகை, கூடலூர் மற்றும் குன்னூர் வட்டங்களில் 1980-81 முதல் 1983-84 வரை சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் அவற்றின் செலவினம் ஆகியவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு ஆகும்:—

| வருடம். | உதகமண்டலம். | |
|---|---|---|
| | ஒதுக்கீடு. | செலவு. |
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1980—81 | 10.62 | 9.49 |
| 1981—82 | 9.96 | 7.30 |
| 1982—83 | 10.50 | 8.77 |
| 1983—84 | 8.00 | 10.26 |

குன்னூர்.

| வருடம். (1) | ஒதுக்கீடு. (4) | செலவு. (5) |
| --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1980–81 | 7.15 | 5.35 |
| 1981–82 | 8.06 | 7.06 |
| 1982–83 | 10.63 | 9.33 |
| 1983–84 | 8.00 | 9.33 |

கோத்தகிரி.

| வருடம். (1) | ஒதுக்கீடு. (6) | செலவு. (7) |
| --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1980–81 | 4.68 | 2.52 |
| 1981–82 | 8.11 | 7.84 |
| 1982–83 | 8.96 | 7.85 |
| 1983–84 | 8.00 | 9.39 |

கூடலூர்.

| வருடம். (1) | ஒதுக்கீடு. (8) | செலவு. (9) |
| --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1980–81 | 4.68 | 2.10 |
| 1981–82 | 7.37 | 7.92 |
| 1982–83 | 10.66 | 7.75 |
| 1983–84 | 8.00 | 9.15 |



மேலும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் 1980 ஆம் ஆண்டில் ஏப்ரல் 1-முதல் செயல்பட்டு வந்ததெனினும், 2—10—1980 ஆம் தேதியிலிருந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தோடு சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று சேர்க்கப்பட்டதின் காரணமாக 1980-81 ஆம் ஆண்டிற்கான சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு, செலவினம் பற்றிய தகவல்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கான ஒதுக்கீடு, செலவினத்தோடு சேர்க்கப்பட்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தரப்பட்டு இருக்கிறது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படவில்லை.

**நீலகிரி மாவட்டத்தில் அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்படாமல் தனியாக இயங்கும் ஆலயங்கள்.**

33—வினா 7681—திரு. கே. உச்சி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்படாமல் தனியாக இயங்கிவரும் ஆலயங்கள் எத்தனை?

(ஆ) அதனை அறநிலைய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வர அரசு முயற்சிக்குமா?

**விடை:**

(அ) நீலகிரி மாவட்டத்தில் அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்படாமல் தனித்து இயங்கும் ஆலயங்கள் 15 ஆகும்.

(ஆ) இவற்றை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர அறநிலைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு செலவிடப்படும் தொகை.**

34—வினா 5714—திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்குச் செலவிடப்படும் மொத்தத் தொகை எவ்வளவு?

(ஆ) அவை எந்த அடிப்படையில் செலவிடப்படுகிறது?

[1987 நவம்பர் 11

விடை—

(அ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலிருந்து, 100 சதவிகிதம் மத்திய அரசின் சிறப்பு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே, இயற்கைச் சூழ்நிலைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும், மண் அரிப்பைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மலைப் பகுதியில் அதிக பரப்பளவில் புல்லை வளர்த்தலும் ஆகும். இந்நோக்கத்தை எய்துவதற்காக நீலகிரி மாவட்டத்திலுள்ள உழவர்கள் சரிவான பகுதிகளில் ஆண்டுப் பயிர் விளைவிப்பதில் ஈடுபடுவதிலிருந்து தொடர்ந்து பலனளிக்கும் பயிர்களை விளைவிப்பதில் ஈடுபடும் வகையில் அவர்களை ஊக்குவிப்பதோடு, அவர்களுடைய நிலங்களில் மண்வளப் பாதுகாப்புப் பணியை மேற்கொள்வதும் ஆகும். எப்பொழுதும் காய்க்கக்கூடிய மரக்கன்றுகளும், தேயிலையும் வழங்குவதோடு, உற்பத்தியைப் பெருக்குவதற்காக உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவையும் உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன. பண்ணைப் பொருள்களை விற்பனை செய்வதற்கான அடிப்படை வசதிகளும் அதிகரிக்கப்படுகின்றன. தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் துறையின் மூலம் 1975-76 முதல் 1984-85 ஆம் ஆண்டு வரை, நீலகிரி மாவட்ட உழவர்களுக்குச் செலவிடப்பட்ட தொகையின் விவரம் வருமாறு :—

| | ஆண்டு. (1) | செலவிடப் பட்ட தொகை. (2) |
|---|---|---|
| 1 | 1975—76 .. .. .. | 9.216 |
| 2 | 1976—77 .. .. .. | 35.300 |
| 3 | 1977—78 .. .. .. | 45.936 |
| 4 | 1978—79 .. .. .. | 62.427 |
| 5 | 1979—80 .. .. .. | 94.100 |
| 6 | 1980—81 .. .. .. | 114.380 |
| 7 | 1981—82 .. .. .. | 157.030 |
| 8 | 1982—83 .. .. .. | 178.800 |
| 9 | 1983—84 .. .. .. | 178.370 |
| 10 | 1984—85 .. .. .. | 229.900 |
| 11 | 1985—86 .. .. .. | 175.400 |
| | (அனுமதிக்கப்பட்ட தொகை மொத்தம்) .. | 1,270.859 |
| | | (அ) 12.80 கோடி. |



1987 நவம்பர் 11]

(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மத்திய அரசின் சிறப்பு உதவித் தொகை கூடுதலாக வழங்கப்படும் தொகையாகும். எனவே நீலகிரி மாவட்டத்திற்காக மாநிலத் திட்டத்தின்கீழ் இத்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்கு மத்திய திட்டக்குழு ஆண்டுதோறும் அனுமதி வழங்குகிறது. எனவே பொதுவான நோக்கங்கள், அமைப்பு ஆகியவற்றிற்குப் பொருத்தமான திட்டங்களை மட்டுமே மத்திய திட்டக்குழு கருதிப்பார்க்கிறது. எனவே, மத்திய திட்டக்குழு, ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யும் தொகையின் அடிப்படையிலேயே, நீலகிரி மாவட்ட உழவர்களுக்கென தொகை செலவிடப்படுகிறது.

பழ மரங்கள், எண்ணெய் பொருள் ஈட்டும் மரங்கள் ஆகிய வற்[illegible] நடும் தோட்டக் கலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சரிவான பகுதிகளில் ஆண்டுதோறும் பயிரிடும் பகுதியில் தேயிலை போன்ற எப்போதும் பயனளிக்கும் பயிர்களை வளர்ப்பதற்காக வி. பி. ( V.P. ) தேயிலைச் செடிகளை வழங்குதல், தேயிலை உற்பத்தியைப் பெருக்குவதற்காக, உரிய அளவிற்குத் தேயிலைச் செடிகளைப் பராமரித்தல், உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கை எடுத்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டப்பணிகளைத் தொடங்குவதற்கு முன்னர், மண்வளப் பாதுகாப்புப் பணிகளான குழிகள் வெட்டுதல், நிலவளவுக்கேற்ப கற்சுவர் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நீலகிரி மாவட்டத்திலுள்ள உழவர்கள் பயன் பெறும் வகையிலான சில முக்கியத் திட்டப்பணிகளின் திட்டச் சாதனைகளின் விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் திட்டப் பணிகளும். (1) | திட்ட இலக்கு சாதனைகள். (2) |
|---|---|
| | (ஹெக்டேரில்.) |
| 1. மாண்டரின் ஆரஞ்சு பயிரிடும் பகுதி | 245 |
| 2 மண்வளப்பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட பகுதி (உதவித் தொகை 30 முதல் 50 சதவீதம்). | 6,435 |
| 3 ஆண்டு முழுவதும் பயனளிக்கும் பயிர்களை வளர்த்தல் | 725 |

[1987 நவம்பர் 11

| தொடர் எண்ணும் திட்டப் பணிகளும். (1) | திட்ட இலக்கு சாதனைகள். (2) |
| --- | --- |
| | (ஹெக்டேரில்.) |
| 4 V.P. தேயிலைச் செடிகளை வழங்குதல் (50 முதல் 75 சதவீதம் வரை உதவித் தொகை). | 150 |
| 5 தேயிலைக்கு உரமிடுதல் புதிய முறையைப் பிரபலப்படுத்துதல். | 33,525 |
| 6 தேயிலைப் பயிரைப் பாதுகாக்கும் பயிர் பாதுகாப்பு இரசாயனங்களை முறையாகப் பயன்படுத்துவதைப் பிரபலப்படுத்துதல். | 48,[illegible]50 |
| 7 உழவர்களின் பண்ணைப் பொருள்களை சேமித்து வைப்பதற்கான கிராமப்பகுதி கிடங்குகளைக் கட்டுதல். | 10 (கிடங்குகள்) |

**தாணிப்பாறை—சதுரகிரி வரை சாலை அமைக்கும் திட்டம்.**

35—வினா 5907—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி சமீபம் தாணிப்பாறை முதல் சதுரகிரி மலை (சுந்தரமகாலிங்கம் கோவில்) வரை (Western Ghat Development Programme) ரோடு அமைக்கும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 நவம்பர் 11]

**வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி.**

36—வினா 5916—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டுதோறும் ஏற்றுமதியாகும் முட்டை எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திறந்தவெளிப் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை.**

37—வினா 5919—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எத்தனை திறந்த வெளிப் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) இந்த எண்ணிக்கை மேலும் உயர்த்தப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) 1126, கல்வி, நாள் 29—8—1984-இல் திறந்தவெளிப் பள்ளித் திட்டம் செயற்படுத்துவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

திறந்தவெளிப் பள்ளி என்பது ஒரே அமைப்பு. இது முறைசாராப் பள்ளியாகும். அஞ்சல் மூலம் போதிக்கும் பள்ளியாதலால், ஒரே ஒரு பள்ளியாகத்தான் இயங்கும்.

**திருப்பூரில் காசநோய் மருத்துவமனை நிறுவுதல்.**

38—வினா 6034—**திரு. வி. தங்கவேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் காசநோய் மருத்துவமனை நிறுவ அரசு முன்வருமா?

விடை—

திருப்பூர் அரசினர் தலைமை மருத்துவமனையில் ஒரு மாவட்ட காசநோய் மையம் இயங்கி வருகிறது. மேலும், மாவட்ட காசநோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் மேற்படி, மாவட்ட காசநோய் மையத்திற்கு வரும் காச நோயாளிகளுக்கு இலவசமாக நோய் கண்டறிந்து, இலவச வீட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் அரசினர் தலைமை மருத்துவமனை திருப்பூரில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ரூ. 10.64 இலட்சம் செலவில் 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டு கட்டத் திட்டமிட்டுள்ளது. ஆகையால் திருப்பூரில் தனியாக ஒரு காச நோய் மருத்துவமனை நிறுவும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### துறையூர் அரசு மருத்துவமனை.

39—வினா 6035—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துறையூரில் உள்ள அரசு மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(ஆ) அதனை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) தற்போது 30 படுக்கைகள் உள்ளன.

(ஆ) இல்லை.

### சுந்தரபாண்டியபுரத்திற்கு மேல்நிலை குடிநீர் திட்டம்.

40—வினா 6040—திரு. டி. ஆர். வேங்கடராமன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தாலுகா சுந்தரபாண்டியபுரத்திற்கு மேல் நிலை குடிநீர் திட்டம் அமைக்க அரசிடம் ஆய்வு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சியில் ரூ. 27.42 இலட்சம் செலவில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

### கட்டிமேடு கிராமம் மேல்நிலை குடிதண்ணீர் தொட்டியை பழுது பார்த்தல்.

41—வினா 6058—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி யூனியன் கட்டிமேடு கிராமத்தில் மேல்நிலை குடிதண்ணீர் தொட்டியை பழுது பார்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், கட்டிமேடு கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிக்கான புதிய மோட்டார் பொருத்தப்பட்டு, பழுதடைந்த குழாய்கள் நீக்கப்பட்டு, பி.வி.சி. குழாய்களும், புதிய மோட்டாரும் பொருத்தப்பட்டு, மேல்நிலைத் தொட்டி தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

### சாலை விபத்துக்களின் எண்ணிக்கை.

42—வினா 6149—திரு. எஸ். இராசகுமாரமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985 ஆம் ஆண்டு சனவரி முதல் மே வரையில் ஏற்பட்ட சாலை விபத்துக்கள் எத்தனை?

(ஆ) உயிரிழந்தோர் எத்தனை பேர்?

(இ) காயமடைந்தோர் எத்தனை பேர்?

[1987 நவம்பர் 11

விடை :—

(அ) தமிழ்நாட்டில் 1985 ஆம் ஆண்டு சனவரி முதல் மே வரையில் ஏற்பட்ட சாலை விபத்துக்கள் 10,430 ஆகும்.

(ஆ) இவ்விபத்துக்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2,109 ஆகும்.

(இ) இவ்விபத்துக்களால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 8,771 ஆகும்.

**தலைக்கவசம் அணியாமல் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் ஓட்டியவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை.**

43—வினா 6192—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'ஹெல்மெட்' அணியாமல் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள்கள் ஓட்டியவர்களிடமிருந்து கடந்த ஜூலை மாதம் வசூலிக்கப்பட்ட அபராதத் தொகை எவ்வளவு?

(ஆ) எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை :—

(அ) தலைக்கவசம் அணியாமல் ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் ஓட்டியவர்களிடமிருந்து கடந்த 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ரூபாய் 63,725 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

(ஆ) 3,824 நபர்கள் மீது வழக்கு பதியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**தொழிலாளர் நல வாரியத்தில் அங்கம் வகிப்போர்.**

44—வினா 6198—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உழைப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லேபர் வெல்பர் போர்டில் அங்கம் வகிக்கக்கூடியவர்கள் யார், யார்?

(ஆ) எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?



1987 நவம்பர் 11]

விடை :—

(அ) 1. ஐந்து தொழிலாளர்களின் பிரதிநிதிகள்.

2. ஐந்து வேலையளிப்பவர்களின் பிரதிநிதிகள்.

3. மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள்.

4. நான்கு அரசு சார்புள்ள உறுப்பினர்கள்.

5. இரண்டு அரசு சார்பற்ற உறுப்பினர்கள்.

(ஆ) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், பிரிவு 5 உடன் படித்த விதி 13-ல் உள்ள ஷரத்தின் அடிப்படையில் மேற்படி உறுப்பினர்கள் மாநில அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

பிரிவு 6-ன் கீழ் மேற்படி உறுப்பினர்களின் நியமனம் பற்றிய அறிக்கை தமிழ்நாடு அரசு கெஜட்டில் வெளியிடப்படுகிறது.

**அம்பலமூலா பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம்.**

45—வினா 6222—திரு. கே. உச்சி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் தொகுதி, அம்பலமூலா பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடம் கட்ட விரைவு நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை :—

(அ) கூடலூர் தொகுதி, அம்பலமூலா பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட 5 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்யும் பணி அம்மாவட்ட சுகாதார அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) நில ஆர்ஜிதப் பணி முடிந்த பிறகு கட்டிடம் கட்டும் பணி தொடங்கும்.

[1987 நவம்பர் 11

நாகை—தலைஞாயிறு வரை நகரப் பேருந்துப் பணி.

46—வினா 6301—திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை—ஆலங்குடி வரை வரும் நகரப் பேருந்தை தலைஞாயிறு வரை நீட்டிக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அந்தத் தடத்தில் பேருந்துகள் ஓடத் தொடங்கும்?

விடை :—

(அ) இல்லை. ஏனெனில் நாகப்பட்டினம்—தலைஞாயிறு தடத்தின் மொத்த நீளம் 34.5 கி. மீட்டர் ஆகும். நகரப் பேருந்தை இயக்க வேண்டுமென்றால், 30 கி. மீட்டருக்குள் தடத்தின் நீளம் இருக்க வேண்டும். ஆனால் மேற்படி தடம் 34.5 கி. மீட்டர் இருப்பதால் நகரப் பேருந்தாக இயங்க இயலாது.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

தலைஞாயிறு—ஆலங்குடி சாலையை மேம்படுத்தல்.

47—வினா 6310—திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைஞாயிறு—ஆலங்குடி சாலையை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை :—

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் சாலை நல்ல நிலைமையில் உள்ளதால் அதனை மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.



1987 நவம்பர் 11]

அரசிடம் கையிருப்பில் உள்ள அரிசி.

48—வினா 6402—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசிடம் 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முடிய கையிருப்பில் உள்ள அரிசி எவ்வளவு?

(ஆ) இந்த ஆண்டு நெல் உற்பத்தியில் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது எவ்வளவு?

விடை :—

(அ) 31—8—1985 அன்று 2,89,428 டன்கள் அரிசி கையிருப்பில் இருந்தது.

(ஆ) 1985 ஆம் ஆண்டு குறுவையில் உத்தேசிக்கப்பட்ட இலக்கு 3,97,500 டன் நெல் ஆகும். ஆனால் 4.25 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 1086 ஆம் ஆண்டு சம்பாவில் உத்தேசிக்கப்பட்ட இலக்கு 8 லட்சம் டன் நெல் அல்லது 6 இலட்சம் டன் அரிசி ஆகும். கொள்முதல் செய்யப்பட்டது 10,15,480 டன் நெல் அல்லது 6,76,967 டன் அரிசியாகும்.

திண்டுக்கல் நகரிலுள்ள தாகு கடைகள்.

49—வினா 6447—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், நகரின் தூய்மையைக் கூட்டவும், நகரின் பல்வேறு இடங்களில் உள்ள 200-க்கும் மேற்பட்ட தாகு கடைகளை ஒரே இடத்தில் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை :—

(அ) திண்டுக்கல் நகரின் பல்வேறு இடங்களிலுள்ள 200-க்கும் மேற்பட்ட தாகு கடைகளை ஒரே இடத்தில் அமைக்கும் செயற்குறிப்பேதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1987 நவம்பர் 11

## முத்துப்பேட்டை மேல்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி கட்டுதல்.

50—வினா 6469—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முத்துப்பேட்டை மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் விடுதி ஒன்று கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை :—**

இல்லை.

## தஞ்சை மாவட்டம் மரைக்கா கோரையாற்றில் மீன் பிடிப்பதற்கு வசதி செய்தல்.

51—வினா 6465—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தொண்டியக்காடு, இடும்பவனம், தில்லை விளாகம் பகுதியில் உள்ள மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கு வசதியாக மரைக்கா கோரையாற்றில் தொடர்ச்சியாக 3 கிலோ மீட்டர் தூரம் வெட்ட வேண்டும் என்று மனு வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை :—**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியைச் சார்ந்த தொண்டியக்காடு, இடும்பவனம், கரையங்காடு, கற்பகநாதர்குளம் ஆகிய பகுதியில் உள்ள மீனவர்களின் வசதிக்காக மரைக்கா கோரையாற்றைக் கடலில் இணைக்க வெட்டாமல் இருக்கும் இரண்டு கிலோ மீட்டர் தூரத்தை வெட்டி வசதியளிக்க வேண்டுமென கோரி பெறப்பட்ட மனு மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் பெறப்பட்டு அதன் நகல் தஞ்சாவூர் மண்டல மீன் துறை உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஆகியோரைக் கலந்து ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்காக வாய்ப்புகளைக் கண்டறியும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.



1987 நவம்பர் 11]

## தொண்டியக்காட்டில் இறால் குஞ்சு வளர்த்தல்.

52—வினா 6466—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தொண்டியக்காட்டில் இறால் குஞ்சு வளர்க்கப்படுகிறதா?

(ஆ) ஒரு ஆண்டுக்கு எவ்வளவு இறால் குஞ்சு வளர்க்கப்படுகிறது?

(இ) எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் வளர்க்கப்படுகிறது?

**விடை :—**

(அ) ஆம்.

(ஆ) தொண்டியக் காட்டில், செயல் விளக்க, மாதிரி இறால் பண்ணை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் முதல் மற்றும் இரண்டாம் அறுவடைக்கு முறையே 70,000 இறால் குஞ்சுகள் இருப்பு செய்யப்படவும், 300 கிலோ இறால்கள் பிடிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் முதல் அறுவடைக்கு 62,000 இறால் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் 50 ஹெக்டேர் இறால் பண்ணைகள் மத்திய அரசின் 50 சதவீதம் நிதியுதவியுடன் ரூ. 29.00 இலட்சம் செலவில் கட்டி, இறால் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

(இ) ஒரு ஹெக்டேரில் ஒரு முறை இறால் வளர்ப்பு செய்ய ரூ. 3,350 உத்தேசமாக செலவாகிறது.

## தஞ்சை இராஜா மிராசுதார் மருத்துவமனை.

53—வினா [illegible]—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை இராஜா மிராசுதார் மருத்துவமனை நோயாளிகளுக்குத் தேவையான வசதி, மாத்திரைகள் இல்லாத [illegible] அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நோயாளிகளுக்கு முழுமையாக மாத்திரை வசதிகள் வழங்க நடவடிக்கை எடுக்குமா?

விடை :—

(அ) மற்றும் (ஆ) எல்லாவிதமான மருந்துகளும் உயிர் காப்பு சம்பந்தமான அனைத்து மருந்துகளும் அரசு விதிமுறைக்கேற்ப கையிருப்பில் இருந்து வந்துள்ளது. இனியும் தொடர்ந்து இருப்பில் இருக்கும் வண்ணம் தக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

சிற்சில சமயங்களில் மருந்து வழங்கும் நிறுவனத்திலிருந்து மருந்துகள் வராத நிலையிலிருந்தாலும்கூட, அதற்கு இணையான மருந்துகள் கைவசம் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாய்க்கடி தடுப்பு ஊசி மருந்தும் எந்நேரமும் கிடைக்கும் வண்ணம் மாதந்தோறும் தனியாக ஆள் மூலம் நேரிடையாக அனுப்பிக் கொள்முதல் செய்து வைக்கப்பட்டுள்ளது.

54—

**நடக்கோட்டை கிராமத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுதல்.**

54—வினா 6496—திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு ஒன்றியம், நடக்கோட்டை கிராமத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை :—

(அ) மற்றும் (ஆ) நடக்கோட்டை கிராமத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணிக்கான கருத்துரு எதுவும் இல்லை.

**தலைக்கவசம் அணிந்து விபத்துக்குள்ளாகி மாண்டோர்.**

55—வினா 6514—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தலைக்கவசம் அணிந்த பின்பும் விபத்துக்குள்ளாகி மாண்டவர்கள் 1985 மார்ச் மாதத்திற்குப் பின்னால் எத்தனை பேர்?



விடை—

தமிழகத்தில் தலைக்கவசம் அணிந்த பின்பும் விபத்துக்குள்ளாகி, 1985 மார்ச் மாதத்திலிருந்து பின்னால் இறந்தவர்களின் எண்ணிக்கை மொத்தம் 31 ஆகும்.

**திருப்பூர் நகராட்சி முன்னாள் ஆணையர் மீதான புகார்கள்.**

56—வினா 6537—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சியில் முன்பு இருந்த ஆணையர் பற்றி அரசிற்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் முன்னாள் நகராட்சி ஆணையர் மீது வந்துள்ள சில புகார்கள் பற்றி விசாரித்து அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மற்றும் சில புகார்கள் பற்றி விசாரணை நடந்து வருகிறது.

**திருப்பூர் ஜம்மனைப்பள்ளம் மேம்பாலத்தில் விளக்குகள் போடுதல்.**

57—வினா 6543—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஜம்மனைப் பள்ளத்தின் மேல் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தில் விளக்குகள் போடும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

ஆம். நகராட்சியின் நடவடிக்கையில் உள்ளது.

**திருப்பூரில் குடிதண்ணீர் விநியோகம்.**

58—வினா 6552—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் குடிதண்ணீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப் பட்டு வருகிற 3 இஞ்ச் குழாய்களை மாற்றி 6 இஞ்ச் குழாய்கள் பதிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை. திருப்பூர் நகரில் குடிநீர் விநியோகத்தை மேம் படுத்த ஏற்கெனவே இருக்கும் குழாய்களை மாற்றுவதற்குப் பதிலாக இணைபகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிக்கு நகராட்சியால் ரூ. 7.10 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**திருப்பூர் இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள கீழ்ப்பாலம்.**

**59—வினா 6574—திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள (Under Bridge) -க்கு அடியிலே சாக்கடை வெள்ளம்போல் அடிக்கடி தேங்கி வழிந்தோடுவதால் மக்கள் நடமாட முடிவதில்லை என்பது அரசிற்கு தெரியுமா?

விடை—

திருப்பூர் இரயில்வே நிலையத்திற்கு மேற்குப் புறமுள்ள கீழ்ப்பாலம் இரயில்வேக்கு சொந்தமானது. மேற்படி பாலம் மழைநீர் செல்வதற்கு மட்டுமே கட்டப்பட்டது. இருப்பினும் பொதுமக்கள் சௌகரியத்தை முன்னிட்டு நடை பாதையாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இரயில்வேக்குச் சொந்தமான இடமாக இருப்பதால் நகராட்சி நிதியிலிருந்து செலவு ஏதும் செய்ய இயலாது. இருப்பினும் தண்ணீர் தேங்காவண்ணம் அவ்வப்போது நகராட்சிப் பணியாளர்களால் சரி செய்யப்பட்டு வருகிறது. கீழ்ப்பாலத்தின் இருபுறங்களிலும் நகராட்சி எல்லை வரை தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

**1984 ஆம் ஆண்டில் பொருட்காட்சி மூலம் கிடைத்த இலாபம்.**

**60—வினா 6608—திருமதி பா. வளர்மதி**: மாண்புமிகு சுற்றுலா மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984 ஆம் ஆண்டில் அரசு நடத்திய பொருட்காட்சியில் அரசுக்குக் கிடைத்த இலாபம் மாவட்ட வாரியாக எவ்வளவு?



விடை—

1984 ஆம் ஆண்டு அரசு நடத்திய பொருட்காட்சிகளில் அரசுக்குக் கிடைத்த லாபம் மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| பொருட்காட்சி நடைபெற்ற இடம் | அரசுக்குக் கிடைத்த நிகர லாபம். |
|---|---|
| (1) | (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
| வேலூர் | 0.29 |
| கோயம்புத்தூர் | 3.31. |
| மதுரை (சித்திரைப் பொருட்காட்சி) | 2.51 |
| திருச்சி | 3.73 |
| திருநெல்வேலி | 2.59 |
| சேலம் | 9.43 |

**செவிலியர் பட்டப் படிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டோர் எண்ணிக்கை.**

**61—வினா 6611—திருமதி பா. வளர்மதி**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1983-84 ஆம் ஆண்டுகளில் (Basic B.Sc. Nursing) செவிலியர் பட்டப் படிப்புக்கு எவ்வளவு பேர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்?

விடை—

| ஆண்டு. | தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1983 | 40 |
| 1984 | 30 |

**உத்திரமேரூரில் தாலுகா கட்டிடம் கட்டுதல்.**

**62—வினா 9018—திரு. க. நரசிம்மபல்லவன்**: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூரில் தாலுக்கா கட்டிடம் கட்ட அரசு உத் தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1987 நவம்பர் 11

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**உத்திரமேரூர் பகுதியில் சிறு தொழிற்பேட்டை தொடங்கும் திட்டம்.**

63—வினா 6658—திரு. கே. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தொகுதியில் சிறு தொழிற்பேட்டை தொடங்கும் திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) உத்திரமேரூர் பகுதியில் தொழிற்பேட்டை தொடங்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**சுற்றுப்புற சூழல் பற்றிய படிப்பை கட்டாய பாடமாக்குதல்.**

64—வினா 6786—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுப்புறச் சூழல் பற்றிய படிப்பை கட்டாயப் பாடமாக்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) சுற்றுப்புறச் சூழல் பற்றிய படிப்பை துவக்கக் கல்வி முதல் உயர்நிலைப் பள்ளி வரை உள்ள பாடத் திட்டத்தில் அடிப்படைப் பாடமாகவும், மேல்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி பாடத் திட்டத்தில் விருப்பப் பாடமாகவும் சேர்க்க சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறையுடன் கலந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது.



1987 நவம்பர் 11]

**மீனவர்களுக்கு முதியோர் கல்வித் திட்டம்.**

65—வினா 6793—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீனவர்களுக்கு முதியோர் கல்வித் திட்டத்தை செயல்படுத்துவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மீனவ சமுதாயத்திற்கென வயது வந்தோர் கல்வித் திட்டம் தனியாக செயல்படுத்தப்படவில்லை என்றாலும் தற்போது இத்திட்டத்தின் கீழ் 4,386 மீனவர் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தினை பே ஆப் பெங்கால் (Bay of Bengal) டானிடா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் செயல் படுத்துவது குறித்து மைய அரசு பரிசீலித்து வருகிறது. அந்நிறுவனம் இதனால் ஆகும் செலவினில் ஒரு பங்கினை ஏற்க முன் வந்துள்ளது. மீதமுள்ள செலவினத்தை மைய மற்றும் மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்திட்டம் தமிழ் நாட்டில் கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்குப் பயன் படும் வகையில் அமுல் செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**நார் மற்றும் பிரம்பு தொழில்களை கதர் வாரியத்தின் கீழ் கொண்டு வருதல்.**

66—வினா 6865—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நார், பிரம்பு தொழில்களை கதர் வாரியத்தின் கீழ் கொண்டு வருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை—

(அ) நார் மற்றும் பிரம்பு தொழில்கள் தற்போது கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) வாரியத்தின் கீழ் 54 நார் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், 26 பிரம்பு மற்றும் மூங்கில் கூடை முடைவோர் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

### கோட்டையூர் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

67—வினா 6920—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் வட்டம், கோட்டையூர் ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

### நத்தம்-சிரங்கப்பட்டி வரை மெட்டல் ரோடு போடும் பணி.

68—வினா 6924—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், நத்தம் டவுன் பஞ்சாயத்திலிருந்து அய்யாம்பட்டி வழி சிரங்கம்பட்டி வரை மெட்டல் ரோடு போட அரசு முன்வருமா?

விடை—

அண்ணா மாவட்டம், நத்தம் டவுன் பஞ்சாயத்திலிருந்து அய்யாம்பட்டி வழியாக சிரங்கம்பட்டி வரை மெட்டல் ரோடு போடும் பணி 1986-87 ஆம் வருடம் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் முன்னுரிமை அளித்து செய்யப்படும்.



### சென்னையில் நிரந்தர பொருட்காட்சி அமைக்கும் திட்டம்.

69—வினா 6931—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நிரந்தர தொழில் பொருட்காட்சியை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அதனுடைய பல அமைப்புகளைப் பற்றி மாதிரிப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நிரந்தரப் பொருட்காட்சி அமைக்க தீவுத் திடலைவிட வேறு, பொருத்தமான இடம் கிடைக்குமா என்பதும் ஆலோசனையில் இருந்து வருகிறது.

### சேலத்தில் பட்டு நூல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையம் அமைத்தல்.

70—வினா 6951—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் பட்டு நூல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு முதலீட்டில் எப்போது அது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1987 நவம்பர் 11

## தர்மபுரி கோட்டைக் கோயிலைச் சீர்படுத்தி பராமரித்தல்.

71—வினா 6957—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் உள்ள பழமைவாய்ந்த கோட்டைக் கோயிலைச் சீர்படுத்தி பராமரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தர்மபுரி கோட்டை, அருள்மிகு மல்லிகார்ஜுனசாமி மற்றும் பரவாசுதேவர் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்தல் தொடர்பாக, திருப்பணிக் குழு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. திருப்பணிகள் தோராய மதிப்பீடு ரூ. 9,60,000 ஆகும். திருப்பணிகள் செய்வதற்காக திருப்பணிக் குழுவினரிடமிருந்து செயற்குறிப்புகள் வரப்பெற்றதும் உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## வால்பாறை நகரியத்தின் வருமானம்.

72—வினா 6975—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நகரியத்தின் 1984-85 ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(ஆ) இதில் வால்பாறை நகரிய சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதார வளர்ச்சிக்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது?

விடை—

(அ) வால்பாறை நகரியத்தின் 1984-85 ஆம் ஆண்டின் சாதாரண வருமானம் ரூ. 18,35,300.

(ஆ) 1984-85-ல் சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதார வளர்ச்சிக்கு செலவிட்ட தொகை ரூ. 3,82,500.



1987 நவம்பர் 11]

## திருச்சிராப்பள்ளி தலைமை அரசு மருத்துவ மனையிலுள்ள நாய்க்கடி மருந்து.

73—வினா 7006—திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி தலைமை அரசு மருத்துவமனையில் போதிய அளவு வெறிநாய்க்கடி மருந்து இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) அதனை நிவர்த்திக்க அரசின் நடவடிக்கை யாது?

விடை—

(அ) போதிய அளவு வெறிநாய்க்கடித் தடுப்பு மருந்து திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் உள்ளது.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

## இதர மாவட்டங்களில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் திட்டம்.

74—வினா 7018—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) மற்ற மாவட்டங்களிலும் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் திட்டம் விரிவுபடுத்தும் குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை:—

(அ) ஆம். மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, வேலூர் ஆகிய மாவட்டத் தலைமையிடங்களில் நவீன இறைச்சி கூடங்கள் அமைக்கும் திட்டம் உள்ளது.

(ஆ) திட்டம் செயல்படுத்துவது பற்றிய விவரங்கள் பரிசீலனையில் உள்ளன.

### பிளஸ் 2 பள்ளி பரிசோதனைக் கூடங்களில் உதவியாளர்கள் நியமனம்.

75—வினா 7022—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிளஸ் 2 பள்ளிகளில் உள்ள பரிசோதனைக் கூடங்களில் உதவியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

விடை :—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

### புலிக்காட்டில் படகுத்துறை அமைக்கும் திட்டம்.

76—வினா 7049—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புலிக்காட்டில் சுமார் 3 இலட்சம் ரூபாய் செலவில் படகுத்துறை அமைக்க திட்டம் தயாரிக்கப்பட்டு, மைய அரசு அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.



### மஞ்சளாறு நீர்முகடு பகுதியை மேம்பாடு செய்யும் திட்டம்.

77—வினா 7065—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மஞ்சளாறு நீர்முகடு பகுதியை மேம்பாடு செய்ய திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை :—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மஞ்சளாறு நீர்முகடுப் பகுதியை மேம்பாடு செய்ய திட்டம் ஒன்றும் அரசின் ஆய்வில் இல்லை. காரணம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே செயல்முறையில் உள்ளது. மஞ்சளாறு நீர்பிரி முகடு பகுதியை மேம்பாடு செய்ய மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக இதுகாறும் ரூ. 119.24 இலட்சம் 1983-84 முதல் 1985-86 முடிய கீழ்க்கண்ட துறைகளான தோட்டக்கலை, மண்வள பணிகள், காடுகள், கால்நடை, சுற்றுலா, சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் திட்ட மேற்பார்வை ஆகியவற்றிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### 1985 ஆம் ஆண்டு பிளஸ் 2 தேர்வில் 100 சதவிகிதம் வெற்றி பெற்ற பள்ளிகள்.

78—வினா 7090—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு, விடையளிப்பாரா—

(அ) 1985 ஆம் ஆண்டு பிளஸ் 2 வகுப்புகளில் 100 சதவிகிதம் வெற்றிபெற்ற பள்ளிகள் எவை?

(ஆ) ஒருவர்கூட வெற்றி பெறாத பள்ளிகள் எத்தனை?

விடை :—

(அ) மார்ச் 1985-ல் நடைபெற்ற பிளஸ் 2 தேர்வில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகள் மொத்தம் 38 ஆகும். பள்ளிகளின் பட்டியலை கீழே காணலாம்.

(ஆ) ஒருவர்கூட வெற்றி பெறாத பள்ளிகள் எதுவும் இல்லை.

பட்டியல்.

| வரிசை எண்ணும் பள்ளியின் பெயரும். | மேல்நிலைத்தேர்வு ஏப்ரல், 1985. | | |
|---|---|---|---|
| | தேர்வு எழுதியவர்கள். | தேர்ச்சி பெற்றவர்கள். | தேர்ச்சி சதவிகிதம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1 செயின்ட் மேரீஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை-1 .. | 51 | 51 | 100.00 |
| 2 சேக்ரட் ஹார்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சென்னை-6. | 91 | 91 | 100.00 |
| 3 அரசு மேல் நிலைப் பள்ளி குரத்தியாரை (கன்னியா குமரி மாவட்டம்). | 68 | 68 | 100.00 |
| 4 சரஸ்வதி வித்யாலயா, வட பழனி .. .. .. | 46 | 46 | 100.00 |
| 5 எஸ். கே. எஸ். எஸ். டி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சௌகார்பேட்டை, சென்னை-79. | 58 | 58 | 100.00 |
| 6 டான் பாஸ்கோ மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர் (வடாற்காடு மாவட்டம்). | 74 | 74 | 100.00 |
| 7 இஸ்லாமியா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, வாணியம் பாடி (வடாற்காடு மாவட்டம்). | 20 | 20 | 100.00 |
| 8 நேரு தேசிய மேல்நிலைப் பள்ளி, வடக்கன் குளம் (திருநெலவேலி மாவட்டம்). | 21 | 21 | 100.00 |
| 9 டி. என். பி. எம். எம். நாடார் மேல்நிலைப் பள்ளி, தளவாய்புரம் (இராமநாதபுரம் மாவட்டம்). | 130 | 130 | 100.00 |
| 10 நாடார் மேல்நிலைப் பள்ளி, இராஜபாளையம் .. | 81 | 81 | 100.00 |
| 11 வி. எஸ். கே. டி. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சிவகாசி. | 5 | 5 | 100.00 |
| 12 ரோஸரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சாந்தோம், சென்னை-4. | 132 | 132 | 100.00 |
| 13 தி. யன்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சிவகாசி. | 14 | 14 | 100.00 |
| 14 சி. சி. பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கோட்டையூர் .. | 82 | 82 | 100.00 |
| 15 ஹமீதியா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கீழக்கரை .. | 14 | 14 | 100.00 |
| 16 எஸ். பி. ஏ. பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ராமேஸ் வரம். | 29 | 29 | 100.00 |
| 17 ஹமீதியா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கீழக்கரை. | 12 | 12 | 100.00 |
| 18 அரசு மேல்நிலைப் பள்ளி, சோழவந்தான் .. .. | 113 | 113 | 100.00 |
| 19 சி. எஸ். எம். ஏ. மேல்நிலைப் பள்ளி, கோவிலூர் (மதுரை மாவட்டம்). | 77 | 77 | 100.00 |
| 20 டி. வி. எஸ். லட்சுமி மேல்நிலைப் பள்ளி, கே. புதூர், மதுரை | 139 | 139 | 100.00 |
| 21 கே. வி. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, மதுரை. | 17 | 17 | 100.00 |
| 22 கேம்பியன் மேல்நிலைப் பள்ளி, திருச்சி .. .. | 76 | 76 | 100.00 |
| 23 சேக்ரட் ஹார்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, விழுப்புரம். | 47 | 47 | 100.00 |
| 24 செயின்ட் ஜோசப் மேல்நிலைப் பள்ளி, திருப்பாபுலியூர், | 82 | 82 | 100.00 |
| 25 ஜவகர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி. | 103 | 103 | 100.00 |
| 26 செயின்ட் மேரிஸ் வமட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கடலூர். | 32 | 32 | 100.00 |
| 27 செயின்ட் ஜோசப் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, குன்னூர். | 51 | 51 | 100.00 |

| வரிசை எண்ணும் பள்ளியின் பெயரும். | மேலநிலைத்தேர்வு ஏப்ரல், 1985. | | |
|---|---|---|---|
| | தேர்வு எழுதிய வர்கள். | தேர்ச்சி பெற்ற வர்கள். | தேர்ச்சி சதவிகிதம். |
| (1) | (2) | (3) | (4) |
| 28 செயின்ட் ஜோசப்ஸ் கான்வென்ட் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, குன்னூர். | 48 | 48 | 100.00 |
| 29 சென்ட்ரல் மேல்நிலைப் பள்ளி, எ. நாகூர் .. .. | 21 | 21 | 100.00 |
| 30 எஸ். ஐ. வி. மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சிறுமுகை (கோவை மாவட்டம்). | 43 | 43 | 100.00 |
| 31 எஸ். பி. கே. வி. எம். மேல்நிலைப் பள்ளி, ஆர். எஸ். புரம், கோவை. | 126 | 126 | 100.00 |
| 32 கார்மேல் கார்டன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கோவை. | 66 | 66 | 100.00 |
| 33 அவிலா கான்வென்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கோவை. | 97 | 97 | 100.00 |
| 34 ஜே. கே. கே. ரங்கம்மாள் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி (குமாரபாளையம்), சேலம் மாவட்டம். | 15 | 15 | 100.00 |
| 35 சங்கரி மேல்நிலைப் பள்ளி, சங்கரி மேற்கு .. .. | 23 | 23 | 100.00 |
| 36 சேக்ரட் ஹார்ட் பெண்கள் ஆங்கிலோ-இந்தியன் மேல்நிலைப் பள்ளி, ஏற்காடு. | 34 | 34 | 100.00 |
| 37 செயின்ட் ஜோசப் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, சேலம். | 73 | 73 | 100.00 |
| 38 லிட்டில் ப்ளவர் காதுகேளாதோர் மேல்நிலைப் பள்ளி, சென்னை-6. | 3 | 3 | 100,00 |



## சேலத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலகம் நிறுவுதல்.

79—வினா 7091—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலகம் நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்பெறும்?

**விடை :—**

(அ) தற்போது புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலகம் சென்னையில் இயங்கி வருகிறது. சேலத்தில், மாவட்ட அளவிலான அலுவலகம் ஒன்று உதவி இயக்குநர் (புவியியல்) ஒருவர் தலைமையில் இயங்கி வருகிறது. எனவே சேலத்தில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலகத்தை அமைக்க உத்தேசம் ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

## 1984-85 ஆம் ஆண்டில் ஏலம் விடப்பட்ட முந்திரிக்கொட்டை.

80—வினா 7094—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் எத்தனை டன் முந்திரிக் கொட்டை ஏலத்திற்கு விடப்பட்டது?

(ஆ) அதன் மூலம் அரசுக்குக் கிடைத்த மொத்த வருமானம் எவ்வளவு?

**விடை :—**

(அ) 18.482 மெட்ரிக் டன் (தோட்டக்கலைத் துறையில்).

(ஆ) ரூ. 1.094 இலட்சம்.

[1987 நவம்பர் 11

## ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கருப்புக் கற்கள்.

81—வினா 7099—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டிற்கு எத்தனை மெட்ரிக் டன் கருப்புக் கற்கள் அரசு ஏற்றுமதி செய்துள்ளது?

(ஆ) அதன் மூலம் அரசுக்கு வருவாய் எவ்வளவு?

விடை :—

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனம் 1984-85 ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டிற்கு 17,018 மெட்ரிக் டன் கருப்புக் கற்களை ஏற்றுமதி செய்துள்ளது.

(ஆ) தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கு அதன் மூலம் ரூ. 2.21 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

## எலி ஒழிப்புக்காக செலவிடப்படும் தொகை.

82—வினா 7135—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

எலி ஒழிப்புக்காக நடப்பு ஆண்டில் செலவிடப்படும் தொகை எவ்வளவு?

விடை :—

ரூ. 3.36 இலட்சம் எலி ஒழிப்பிற்காக நடப்பு ஆண்டில் எலிக் கொல்லி மருந்துகள் 50 சத மான்யத்தில் வழங்க ரூ. 3.36 இலட்சம் மானியமாக செலவிடப்படும். இத்திட்டம் 1.68 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப் படுகிறது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவை மத்திய மாநில அரசுகள் சம அளவில் ஏற்கின்றன.



1987 நவம்பர் 11]

## தமிழ் மருத்துவத்தை மேலும் பரவச் செய்வதற்கான நடவடிக்கைகள்.

83—வினா 7151—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் மருத்துவத்தை மேலும் பரவச் செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை :—

தமிழ் மருத்துவத்தை மேலும் பரவச் செய்யத் தமிழ் மருத்துவ மேம்பாட்டிற்காகத் தோற்றுவிக்கப் பெற்றுள்ள தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன:—

1. சித்த மருத்துவக் கல்லூரிகளை அதிகம் ஆக்க வேண்டும் எனத் தீர்மானித்து, பழனியில் 1985-ல் ஒரு கல்லூரி திறக்கப் பட்டு, இப்போது 50 மாணவர்கள் அங்கு தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாட்டில் 2-வது சித்த மருத்துவக் கல்லூரியும் இயங்கி வருகிறது.

2. சித்த மருத்துவர்களுக்கும், சித்த மருத்துவ மாணவர்களுக்கும் சித்த மருத்துவத்தில் புதிய நூல்கள் பல அச்சிட்டு வெளியிட ஆவன செய்யப்பட்டு வருகிறது.

3. வர்மம் பற்றிய நூல்களைச் சேகரித்து அக்கலை மறைந்துவிடாமல் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்று செயல்பட்டு வருகிறது.

4. மறைந்து கிடக்கும் அரிய மருந்துகளைப் பல மருத்துவர்களிடமிருந்தும் சேகரித்து, சோதனை செய்து அதனை வெளியுலகுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5. அரிய மூலிகைகளைச் சேகரிக்கும்பொருட்டு பல இடங்களிலிருந்து வரும் மூலிகைகளையும் பிரித்தறிந்து தமிழ்நாடு மூலிகைப்பண்ணை மற்றும் மூலிகை மருந்துக் கழகம் ஆய்வு செய்து வருகிறது.

6. ஓலைச் சுவடிகளிலுள்ள அரிய மருந்து முறைகளை நூல் வடிவாக்க ஆவன செய்து வருகிறது.

[1987 நவம்பர் 11

7. அன்றாடம் பயனாகும் உணவுப் பொருட்களிலுள்ள மருந்துப் பொருட்களை உணவுடன் சேர்த்துப் பயன்படுத்தக் கூடிய முறைகளைச் சிறு சிறு கையேடுகளின் வாயிலாகப் பொது மக்களின் வீடுகளுக்கே சென்று எடுத்துக் கூறுவதற்கு ஆவன செய்யப்பட்டு வருகிறது.

8. அரிய மருந்துகளைச் செய்வது பற்றி ஆராயும் பொருட்டு மருத்துவர்களை நேரில் வரவழைத்து மருந்துகளைச் செய்து காட்டுவதற்கு ஆவன செய்துள்ளது.

9. சித்த மருத்துவத்தில் பச்சிலை மற்றும் மூலப்பொருட்களுக்கு சித்தர்களால் இடம் பெற்றிருக்கும் மறைபொருள் கொண்ட பெயர்களைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் பொருட்டு அனைத்து மருத்துவ மற்றும் மூலிகை சம்பந்தப்பட்ட மறைபொருள் உள்ள சொற்களை சேகரித்து அதற்குத் தற்காலத்தில் வழங்கும் பெயர்களை விளக்கி மறைபொருள் அகராதி ஒன்று தயாரிக்கப்பெற்று வருகிறது. சித்த மருத்துவம் பொது மக்களிடையே மேலும் பரவ இந்நூல் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

10. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரிகளில் உள்ள மாணவர்களுக்குத் தமிழ் மருத்துவம் பற்றி பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தி மாணவர்களிடையே தமிழ் மருத்துவ அறிவு வளர்வதற்கான நடவடிக்கையினை சென்ற 1985 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்டுள்ளது.

11. தமிழ் மருத்துவம் உலக அளவில் மேலும் பரவச் செய்ய ஆண்டுதோறும் அனைத்துலக மரபுவழி மருத்துவ மாநாடு நடத்தவும், இம்மாநாட்டில் பல நாட்டு மருத்துவ வல்லுநர்களை வரவழைத்து தமிழ் மருத்துவ மாண்புகளைப் பரவச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

12. இவைகளுடன் மூலிகைக் கண்காட்சிகளையும், சித்த மருத்துவ நூல்கள், ஓலைச்சுவடிகள், கண்காட்சிகளையும் சென்னை, திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை, கோவை போன்ற முக்கிய நகரங்களில் பொது மக்களுக்காக நடத்தவும் கண்காட்சிகளில் தமிழ் மருத்துவம் பற்றி விளக்கிச் சொல்லவும் மருத்துவ அறிவுரைகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன.



1987 நவம்பர் 11]

**1984-85-ல் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டதில் இறந்தோர்.**

84—வினா 7194—**திரு. மா. மணிமாறன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ல் குடும்பக் கட்டுப்பாடு செய்துள்ளவர்களில் இறந்ததாக அரசிற்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**விடை :—**

(அ) ஆம்.

(ஆ) குடும்பநல அறுவை சிகிச்சைக்குப் பிறகு இறந்தவர்களுக்கு மத்திய அரசு விதி முறைகளுக்கு உட்பட்டு கருணைத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மசூரிபாஸ் உரம்.**

85—வினா 7211—**திரு. மா. மணிமாறன்** : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மசூரிபாஸ் என்ற உர விற்பனை அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா?

**விடை :—**

மசூரிபாஸ் என்ற உரம் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

**சுற்றுலா மையங்களில் தொழிலாளர் ஓய்வு இல்லங்கள் கட்டுதல்.**

86—வினா 7276—**திரு இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டி, கொடைக்கானல், இராமேஸ்வரம் போன்ற சுற்றுலா மையங்களில் தொழிலாளர் ஓய்வு இல்லங்கள் கட்ட அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது?

விடை :—

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ஏற்கெனவே நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்திலும், அண்ணா மாவட்டம், கொடைக்கானலிலும், இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்திலும் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லம் கட்ட முடிவெடுத்துள்ளது. அதற்கான தகுந்த நிலம் பெறுவதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பச்சைமலையில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.**

87—வினா 7318—திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதியில் பச்சைமலையில் பால் சொசைட்டி ஏற்படுத்த அரசு திட்டமிட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) பச்சைமலைப் பகுதியைச் சேர்ந்த, காஞ்சேரி மலைப்புதூர் கிராமத்திலிருந்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க பொதுமக்களிடமிருந்து ஒரு மனு வரப்பெற்றுள்ளது. இம்மனுவினை ஆராய்ந்து சங்கம் பதிவு செய்ய பரிந்துரை செய்ததோடல்லாமல் கால்நடை பராமரிப்புத் துறை, 48 கறவை மாடுகள் வாங்கி மலைவாழ் பழங்குடியினருக்கு வழங்கவும் முன் வந்துள்ளது. கறவை மாடுகளை நல்ல முறையில் பராமரிக்கும் பொறுப்பையும் கால்நடை பராமரிப்புத் துறை ஏற்றுக்கொள்ளும். எனவே மேற்படி சங்கம் அமைக்கக் கோரும் மனு தொடர்பாக திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திடம் உத்தேச சங்கத்தின் பிரதம அமைப்பாளர் நியமனம் செய்வது மற்றும் உற்பத்தியாகும் பாலை கொள்முதல் செய்வது சம்பந்தமாக அறிக்கை கோரப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் காஞ்சேரி மலைபுதூர் கிராமத்தில் ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





**விருத்தாசலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்.**

88—வினா 7337—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளி கீத்துக் கொட்டகையில் நடைபெறுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்குமா?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1986-87) அரசு உயர்/மேல் நிலைப் பள்ளிக் கட்டடப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டில் விருத்தாசலம் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் கட்டிடத் தேவைகளும் பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலிக்கப்படும்.

***Total number of Circulation of 'Tamil Arasu'***

89—Q. 7363 Thiru M. SUNDARA DASS: Will the Hon. the Minister for Tourism, Prohibition and Electricity be pleased to state—

(a) what is the total circulation Tamil Arasu published by the State Government as on date; and

(b) total number of subscriber and complimentary copy holders?

விடை :—

(அ) மாநில அரசால் வெளியிடப்படும் தமிழரசு இதழின் மொத்த விநியோகம்—

தமிழ் பதிப்பு (மாதம் இரு முறை)—46,000 பிரதிகள்
ஆங்கில பதிப்பு (மாதம் ஒரு முறை)—4,000 பிரதிகள்

(ஆ) மொத்த சந்தாதாரர்கள்—

| | |
|---|---|
| தமிழ் பதிப்பிற்கு—40,000<br>ஆங்கிலப் பதிப்பிற்கு—2,200 | 42,200 |

இலவச பிரதி பெறுவோர்—

| | |
|---|---|
| தமிழ் பதிப்பு—1,500<br>ஆங்கில பதிப்பு—1,700 | 3,200 |

குறவக்குளம் கண்மாயில் பாலம் அமைத்தல்.

90—வினா 7410—திரு. க. பாரமலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காமராஜர் மாவட்டம் திருச்சுழி வட்டம் குறவக்குளம் செல்லும் சாலையில் குறவக்குளம் கண்மாய்க்குள் ஒரு பாலம் அமைக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை :—

இல்லை.

கட்டனூரில் அரசு மருத்துவமனை துவங்குதல்.

91—வினா 3692—திரு. க. பாரமலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரைத் தொகுதி நரிக்குடி ஊராட்சி ஒன்றிய கட்டனூரில் அரசு மருத்துவமனை (டிஸ்பென்சரி) துவங்க செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை :—

இல்லை.

வெள்ளக்கரை அரிசன காலனி மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கல்.

92—வினா 7400—திரு. க. பாரமலை: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் திருப்புவனத்திலிருந்து காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டைக்கு செல்லும் குடிதண்ணீர் திட்டக் குழாய் செல்லும் பாதையிலுள்ள வெள்ளக்கரை அரிசன காலனி மக்களுக்கு தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை :—

திருப்புவனத்தில் இருந்து அருப்புக்கோட்டைக்குச் செல்லும் குடிநீர்த்திட்ட குழாயிலிருந்து வெள்ளக்கரை அரிசன காலனிக்கு தற்பொழுது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும்



136536

அக்காலனிக்கு அல்லி நகரம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தனியான குழாய் இணைப்பு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே தற்பொழுது வெள்ளக்கரை அரிசன காலனியில் குடிநீர் பற்றாக்குறை ஏதுமில்லை.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் புதியதாக துவக்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகளில் மதிய உணவு வழங்கல்.

93—வினா 9382—திரு. க. பாரமலை: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டில் புதியதாக துவக்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு மதிய உணவு வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மதிய உணவு வழங்கப்படும்?

விடை :—

(அ) மற்றும் (ஆ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் 1985-86 ஆம் ஆண்டில் புதியதாக துவக்கப்பட்ட 14 பள்ளிகளில் 1986 கல்வி ஆண்டு முதல் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

வழுவூர் பள்ளிக்கு சொந்தக் கட்டிடம் கட்டித்தரும் திட்டம்.

94—வினா 7944—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், வழுவூரில் உள்ள வாடகை பள்ளிக் கட்டிடத்தை மாற்றி சொந்தமான கட்டிடம் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை :—

இல்லை.

[1987 நவம்பர் 11

### இராஜகோபாலபுரம் சரஸ்வதி வித்யாலயம் ஆரம்ப பாடசாலை கட்டிடத்தை புதுப்பித்தல்.

95—வினா 10526—**திரு. பாப்பா சுப்பிரமணியன்** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், இராஜகோபாலபுரம் ஸ்ரீ சரஸ்வதி வித்யாலயம் என்ற உதவிபெறும் ஆரம்ப பாடசாலையின் கட்டிடத்தை புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை** :—

இல்லை. உதவி பெறும் பள்ளிகட்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு மட்டுமே மான்யம் வழங்கப்படுகிறது. கட்டிடங்கள் புதுப்பிப்பதற்கு மான்யம் வழங்கப்படுவதில்லை.

### குடவாசல் ஊராட்சி ஒன்றிய கிராமங்களில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் அமைத்தல்.

96—வினா 7541—**திரு. பாப்பா சுப்பிரமணியன்** : மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், தலையாலங்காடு, பத்தாளை, காமராஜ் நகர் கோனல்பத்து, செம்பியங்கூந்தலூர், குச்சிப்பாளையம், உக்கடை, வடுகர்பாளையம், புங்குடி மூசை, பூங்குடி, புதுபார் சாலை, ஆவணம் ஆகிய கிராமங்களில் புதியதாக முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**விடை** :—

இல்லை.



1987 நவம்பர் 11]

### கோவை விவசாயப் பல்கலைக் கழகம்.

97—வினா 7586—**திரு. க. பாரமலை** : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையிலுள்ள விவசாயப் பல்கலைக் கழகத்திலும் அதனுடன் இணைந்துள்ள பல்வேறு கல்லூரிகளிலும், அமைப்புகளிலும், பேராசிரியர்களாகவும், அசோசியேட் பேராசிரியர்களாகவும், உதவிப் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் மொத்தம் எத்தனை பேர் பணிபுரிகிறார்கள் ?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு நிலையிலும் எத்தனை பேர் பணி புரிகிறார்கள்?

**விடை** :—

(அ) கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகத்திலும், அதனுடன் இணைந்துள்ள பல்வேறு கல்லூரிகளிலும், அமைப்புகளிலும், பேராசிரியர்களாக 125 பேரும், இணைப் பேராசிரியர்களாக 372 பேரும், உதவிப் பேராசிரியர்களாக 625 பேரும் பணி புரிகின்றனர்.

(ஆ) தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் பேராசிரியர் ஆகவும், ஐந்து பேர் இணைப் பேராசிரியர்களாகவும், இருபது பேர் உதவிப் பேராசிரியர்களாகவும் பணி புரிந்து வருகின்றனர். மலைவாழ் மக்கள் இனத்தைச் சார்ந்தவர்கள் எவரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்படி பணிகளில் இல்லை.

### மருத்துவக் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு.

98—வினா 7594—**திரு. க. பாரமலை** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பில் (Post Graduate Course) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவருக்கு இட ஒதுக்கீடு செய்யப்படுகின்றனவா ?

(ஆ) 1980-84 ஆம் ஆண்டு காலத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவ கல்லூரிகளிலும் பட்ட மேற்படிப்புக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) ஆம். நான்கும் அதற்கு மேலும் இடங்கள் உள்ள பட்ட மேற்பட்டயப் பட்டப் படிப்புகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களுக்கு 18 சதவித இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

(ஆ)—

| வருடம். | | பட்ட மேல் பட்டப் படிப்பு. | பட்ட மேல் பட்டயப் படிப்பு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1980—81 | .. | 326 | 414 | 740 |
| 1981—82 | .. | 374 | 463 | 837 |
| 1982—83 | .. | 374 | 454 | 828 |
| 1983—84 | .. | 389 | 462 | 851 |

(இ)—

| வருடம். | | பட்ட மேல் பட்டப் படிப்பு. | பட்ட மேல் பட்டயப் படிப்பு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1980—81 | .. | 43 | 60 | 103 |
| 1981—82 | .. | 44 | 58 | 102 |
| 1982—83 | .. | 63 | 77 | 140 |
| 1983—84 | .. | 63 | 83 | 146 |





## நீலகிரி மாவட்டத்தில் விதவைப் பெண்களின் பெண் குழந்தைகள் திருமணச் செலவிற்கு வழங்கப்பட்ட தொகை.

99—வினா 7640—திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் விதவைப் பெண்களின் பெண் குழந்தைகளுக்கு திருமணச் செலவிற்காக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இதனால் பயனடைந்த பழங்குடியினர், ஆதிதிராவிடர் எத்தனை பேர்?

விடை :—

(அ) 1984-85 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் விதவைப் பெண்களின் பெண் குழந்தைகளுக்கு திருமணச் செலவிற்காக ரூ. 60,000 வழங்கப்பட்டது.

(ஆ) பழங்குடியினப் பெண்கள்—15.
ஆதிதிராவிடப் பெண்கள்—18.

## குடிசைப் பகுதிகளில் கதர் தொழிலை அபிவிருத்தி செய்தல்.

100—வினா 7659—திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களிடையே கதர் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசு முயன்றுள்ளதா?
(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை :—

(அ) மற்றும் (ஆ) குடிசைப் பகுதி வாழ் மக்களும் பயன் பெறும் பொருட்டு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இதுவரை 588 கிராமிய நூற்பு நிலையங்களையும் 81 கதர் உபகிளைகளையும் நடத்தி வருகிறது. இவைகளில் 17,640 நூற்பாளரும், 4,282 நெசவாளரும் பணிபுரிகின்றனர்.

[1987 நவம்பர் 11

**குமரி மாவட்டத்திலிருந்து சென்னைக்கு படுக்கை வசதியுடன் கூடிய பேருந்து.**

*101—வினா 4753—***திரு. மா. சுந்தரதாஸ்** : *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குமரி மாவட்டத்திலிருந்து சென்னைக்கு படுக்கை வசதி கொண்ட பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?*

**விடை :—**

*(அ) இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு பொறியியல் படிக்கச் செல்லும் மாணவர்கள்.**

*102—வினா 4780—***திரு. பி. என். இராமச்சந்திரன்** : *மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்குப் பொறியியல் கல்வி படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு அரசு உதவிகள், சலுகைகள் எவையேனும் அளித்து வருகிறதா ?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?*

**விடை :—**

*(அ) ஆம்.*

*(ஆ) ஒவ்வோராண்டும் 37 மாணவர்கட்கு மாதந்தோறும் ரூ. 125 வீதம் 12 மாதங்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.*



1987 நவம்பர் 11]

**சித்த மருத்துவத்தில் செவிலியர் பயிற்சி.**

*103—வினா 4791—***டாக்டர் தே. குமாரதாஸ்** : *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சித்த மருத்துவத்தில் செவிலியர் பயிற்சி எங்கேனும் நடத்தப்படுகிறதா ?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?*

**விடை :—**

*(அ) சித்த மருத்துவத்தில் தனியாக செவிலியர் பயிற்சி நடத்தப்படவில்லை.*

*(ஆ) இல்லை.*

**ஆரன்வாயல் கிராமத்தில், கூவம் ஆற்றில் படுக்கை அணை.**

*104—வினா 4827—***திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா** : *மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(*a*) whether Government has taken steps to repair the bed dam constructtd across Cooum river at Aranvoyal village, Thiru-vallur Ta'uk, Chengalpattu district to feed water to Thiruninravur Isa Tank ; and

(*b*) if so, the details thereof ?

**விடை :—**

*(அ) ஆம்.*

*(ஆ) அணையை நிரந்தரமாக திருப்பி கட்ட ரூ. 20.50 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் தொழில் நுட்ப ரீதியில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.*

**கோவை மாவட்டம், சின்னவாடம்பட்டி பேரூராட்சியில் புதிய ஏரி.**

*105—வினா 4848—***திரு. கு. ரமணி** : *மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*கோவை மாவட்டம், சின்னவாடம்பட்டி பேரூராட்சிப் பகுதியில் 400 ஏக்கர் பரப்பில் ஒரு ஏரியை நிர்மாணித்து சங்கனூர் பள்ளத்தை அதற்கு திருப்பி விடும் திட்டம் கைவிடப்பட்டதா ?*

[1987 நவம்பர் 11

**விடை :—**

இத்திட்டம் கைவிடப்படவில்லை. இத்திட்டத்திற்கு ஏப்ரல் 1986-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறில் கட்டபொம்மன் போக்கு

*106—வினா 4858—***திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறில் இயங்கி வந்த பயணிகள் விடுதி மூடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், பயணிகள் விடுதியை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**விடை :—**

(அ) மற்றும் (ஆ) கயத்தாறில் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த பயணிகள் விடுதி எதுவும் இல்லை.

## ஒட்டப்பிடாரம் தொகுதி, கயித்தாறில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக டெப்போ.

*107—வினா 4860—***திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறில் தற்போது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் தங்கும் இடத்தில் ஒரு டெப்போ (Depot) அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை :—**

இல்லை.



1987 நவம்பர் 11]

## திண்டுக்கல்லில் காற்றிலிருந்து மின்சாரம்.

*108—வினா 4375—***திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் உயரமான பகுதியாகிய மலைக்கோட்டையில் காற்றிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா ?

**விடை :—**

தற்போது இல்லை.

## குத்தகைப் பதிவு வழக்குகள்.

*109—வினா 4878—***திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

**Tenancy** பதிவு வழக்குகளை நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

**விடை :—**

குத்தகைப் பதிவு வழக்குகளை நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

## சேலம் மாவட்டம், எடப்பாடியில் சரபங்கா நதியிலுள்ள பாலத்தை விரிவுபடுத்தல்.

*110—வினா 4887—***திரு. ச. கோவிந்தசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் எடப்பாடியில் சரபங்கா நதியின் மீதுள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்தவும் பக்க சுவர்கள் வைக்கவும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட உள்ளதா ?

**விடை :—**

இத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1987 நவம்பர் 11

### அறநிலைய உபரி பணத்தில் தொழிற்பேட்டைகள்.

111—வினா 4917—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய அறநிலையங்களில் உபரி பணத்தில் தொழிற்பேட்டைகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஊர்களில் தொழிற்பேட்டை அமைக்கப்படும் ?

**விடை :—**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பு இல்லை.

### அரசு ஊழியர்கள் தங்கள் நிலங்களை குத்தகைதாரர்களிடமிருந்து திரும்பப் பெறல்.

112—வினா 4922—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகள் அரசு ஊழியர்கள் தங்கள் விவசாய நிலங்களை தாங்களே நேரிடையாக விவசாயம் செய்ய விரும்பும் போது குத்தகைதாரர்களிடமிருந்து சொந்த சாகுபடிக்கு நிலத்தை திரும்பப் பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசை கோரியுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**விடை :—**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



1987 நவம்பர் 11]

### காட்டாறுகளை இணைத்தல்.

113—வினா 4924—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட அளவில் உள்ள காட்டாறுகளை இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**விடை :—**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

### மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியற் கல்லூரிகளில் சேர பயிற்சி வகுப்புகள்.

114—வினா 4932எ—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியற் கல்லூரிகளில் அனுமதிக்காக நடைபெறும் நுழைவுத் தேர்வுக்கு தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மாவட்ட வாரியாக பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

**விடை :—**

இல்லை.

### தொழில் உரிமங்களை மாநிலத்திற்கு மாற்றுதல்.

115—வினா 4934—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் தொழில் தொடங்க அனைத்து தொழில் உரிமங்களையும் (Industrial licence) வழங்கும் உரிமை மாநிலத்திற்கு மாற்றப்பட வேண்டும் என மைய அரசை கோரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**விடை :—**

இல்லை.

[1987 நவம்பர் 11

*Formation of Teachers' Council.*

116—Q. 4952 Thiru V. P. BALASUBRAMANIAN: Will the Hon. the Minister for Education and Law be pleased to state:

Whether it is a fact that the Expert Committee which studied the service conditions of the Teachers in aided schools has recommended to the Government for the formation of Teachers' Council on the lines of Medical and Bar Councils?

விடை—

இல்லை.

தமிழகத்திலுள்ள சைனிக் பள்ளிகள்.

117—வினா எண் 4953—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள சைனிக் பள்ளியில் சேரும் தமிழ் நாட்டை சேர்ந்த மாணவர்களுக்கு தமிழக அரசு உதவிப் பணம் கொடுத்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்த தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) மாணவர்களின் பெற்றோர்களின் வருமானத்தின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

நெய்வேலியிலிருந்து தமிழக அரசுக்கு உரிமை ஊதியத்தொகை.

118—வினா எண் 4955—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் மைய அரசால் அமைக்கப்பட்டுள்ள நிலக்கரி சுரங்கத்தின் மூலம் தமிழக அரசுக்கு உரிமை ஊதியத் தொகை (Royalty) ஏதும் கிடைக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



1987 நவம்பர் 11]

விடை :—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

தமிழகத்தில் கிராம நத்தத்திற்கு பட்டா பாஸ் புத்தகம் வழங்கல்.

119—வினா 4970—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் கிராம நத்தத்தில் அமைந்துள்ள வீடுகளை அளந்து நிலம் இல்லாதவர்களுக்கும் பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை :—

ஆம்.

தமிழகத்தில் வேலை இல்லாத விவசாய பட்டதாரிகள்.

120—வினா 4971—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் படித்து முடித்த விவசாயப் பட்டதாரிகள் வேலை கிடைக்காமல் இருக்கிறார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) தமிழ் நாட்டில் படித்து முடித்த விவசாயப் பட்டதாரிகள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 31—10—1985 நிலவரப்படி 902 பேர் வேலை வேண்டி காத்திருக்கின்றனர் என்றும், அதில் பெண் பதிவுதாரர்கள் 57 எனவும், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் கூறியுள்ளார்.

*Introducing of new system for the quick disposal of petitions at taluk level.*

121—Q. 4973 Hon. Thiru V. P. BALASUBRAMANIAN: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to introduce a new system on an experimental basis for the quick disposal of petitions from the public at taluk level; and

(*b*) if so, the district chosen for this purpose?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**பஸ்களில் பயணிகள் விபத்தில் இறந்தால் நஷ்டஈட்டுக்கு காப்பீட்டு முறை.**

122—வினா 4997—திரு. க. வெ. வீரணம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறை பஸ்களிலும், அரசு பஸ்களிலும் பயணம் செய்யும் பயணிகள் விபத்தில் இறக்க நேரிட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க 'காப்பீட்டு (Insurance) முறை கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை :—**

(அ) இத்தகைய காப்பீட்டு (Insurance) முறை கொண்டு வருவது அவசியமில்லை என்று அரசு கருதுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.





**மேலூர் தொகுதி, மேலூரில் கோட்ட அலுவலகம்.**

123—வினா 5008—திரு. க. வெ. வீரணம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூரில் கோட்ட வருவாய் அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

**விடை :—**

(அ) மற்றும் (ஆ) மேலூரில் வருவாய்க் கோட்டம் அமைக்கத் தேவையில்லை என அரசு கருதுகிறது.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலத்தடி நீர்.**

124—வினா 5025—திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலத்தடி நீர் குறித்த ஆய்வு ஏதேனும் நடத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், திருமயம் தொகுதியிலும் ஆய்வு நடத்தப் படுகிறதா?

**விடை :—**

(அ) ஆம். 1972 ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலநீர் குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது.

(ஆ) திருமயம் தொகுதியிலும் இந்த ஆய்வு நடத்தப்படு கிறது.

**திருவள்ளுவர் மாவட்டத்திலுள்ள தாலுக்காக்கள்.**

125—வினா 5070—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் மாவட்டத்திற்குட்பட்ட தாலுக்காக்கள் எவையவை?

(ஆ) தலைநகரின் அமைப்பில் மாற்றம் உண்டா?

**விடை :—**

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இல்லை.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் மலை வாசஸ்தலம்.

126—வினா எண் 5103—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் முத்துக்குளிவயல் என்னும் மலை வாசஸ்தலம் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதனை சுற்றுலா மையமாக்க அரசு முன்வருமா?

**விடை :—**

(அ) ஆம்.

(ஆ) இத் தலத்தினைச் சுற்றுலா மையமாக்க வேண்டிய சாத்தியக்கூறுகளை விரிவாக ஆராய்ந்த பின்னர்தான் இதனைச் சுற்றுலா மையமாக்குவது பற்றி ஒரு முடிவு எடுக்க இயலும்.

## கும்பகோணத்தில் தனி மின் நிலையம்.

127—வினா எண் 5112—திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்திற்கு நெய்வேலி மின்சாரம் நேரிடையாகக் கிடைக்குமாறு செய்ய கும்பகோணத்தில் ஒரு தனி மின் நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

**விடை :—**

இல்லை.

## விசைத்தறி வாரியம்.

128—வினா எண் 5123—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'விசைத்தறி வாரியம்' அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் யாது;

**விடை :—**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.



## மோட்டார் பம்பு செட்டுகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு.

129—வினா எண் 5153—திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் மோட்டார் பம்பு செட்டுகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டத்தை பேரூராட்சி, ஊராட்சிகளுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை :—**

(அ) பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் உள்ள குடிதண்ணீர் மோட்டார் பம்பு செட்டுகளுக்கு மின்வெட்டு கிடையாது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## கிருஷ்ணா நதிநீர்த் திட்டம்.

130—வினா எண் 5156—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்குக் குடிநீர் வரும் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்துக்கு திட்டக் கமிஷன் ஒப்புதல் அளித்துள்ளதா?

(ஆ) இதுவரை இந்தத் திட்டத்துக்கு செலவான தொகை எவ்வளவு?

**விடை :—**

(அ) இல்லை.

(ஆ) இந்தத் திட்டத்துக்கு நவம்பர் 85 முடிய செலவான தொகை ரூ. 51.84 கோடி. இதில் ஆந்திர மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்ட தொகையான ரூ. 47 கோடியும் அடங்கும்.

131—Q. 5)98 Thiru J. HEMACHANDRAN: Will the Hon. *Disputes Act*, 1947.

*Q*. No. 5198 : THIRU J. HEMACHANDRAN : Will the Hon. the Minister for Food be pleased to state :

whether suitable instructions have been issued to the conciliation authorities under the Industrial Disputes Act, 1947, to forward all disputes relating to dismissal of workmen to the Government for reference in pursuance of the recent decision of Supreme Court ?

விடை :—

இல்லை.

**சேலம் மாவட்டம், மேலக்கோம்பை அருகே சிறிய நீர்த்தேக்கம் கட்டும் திட்டம்.**

132—வினா எண். 5227—**திரு. சீ. சிவப்பிரகாசம்** : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் இராசிபுரம் வட்டம் பெரப்பஞ்சோலை அருகிலுள்ள மேலக்கோம்பை அருகே பூசணிகுழி பகுதியிலிருந்து வரும் ஆற்றை தேக்கி சிறிய நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் தற்பொழுது எந்த நிலையில் உள்ளது?

**விடை** :—

தற்போதைக்கு இம்மாதிரியான திட்டம் எதும் பரிசீலனையில் இல்லை.

**தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முடிக்கப்படாத வேலைகள்.**

133—வினா எண். 5245—**திரு. சீ. சிவப்பிரகாசம்** : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காளப்பநாயக்கன்பட்டி, சேந்தமங்கலம் பேரூராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் முடிக்கப்படாத வேலைகளை முடிக்க பேரூராட்சிகள் அதிக நிதி கோரியுள்ளதா?

(ஆ) ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தில் பேரூராட்சிகளில் உள்ள **சாலைகளை தார் சாலைகளாக அமைக்க நடவடிக்கை எடுக்குமா?**





விடை—

(அ) ஆம். அவை கோரிய வண்ணம் கூடுதல் நிதி கொடுக்கப்பட்டது.

(ஆ) நடவடிக்கை எடுக்க சாத்யமில்லை.

**கல்பாக்கம் இரண்டாவது மின் நிலையத்தில் மின் உற்பத்தி.**

134—வினா எண். 5305—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்பாக்கத்தில் உள்ள இரண்டாவது மின் நிலையத்தில் மின் உற்பத்தி எப்போது தொடங்கும்?

**விடை** :—

20—9—1985 அன்றே உற்பத்தியை தொடங்கிவிட்டது

**சாமி சிலைகளை 'இன்சூர்' செய்ய திட்டம்.**

135—**வினா** எண். 5315—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலை உயர்ந்த சாமி சிலைகளை 'இன்சூர்' செய்ய அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

**விடை** :—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**சென்னையில் மீண்டும் டிராம்கள்.**

136—**வினா** எண். 5330—**திரு. இரா. தாமரைக்கனி** : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் குறிப்பாக சென்னையில் மீண்டும் டிராம்கள் அறிமுகப்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை :—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதியாகும் நிலக்கரி.**

137—வினா எண். 5332—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதியாகும் நிலக்கரியின் அளவு எவ்வளவு?

(ஆ) இந்த அளவு உயர்த்தப்படுமா?

விடை :—

(அ) 1 லட்சம் டன்.

(ஆ) இந்த அளவை உயர்த்தக்கோரும் இவ்வரசின் கோரிக்கைக்கு மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை.

**குழந்தைகள் அருங்காட்சியகம்.**

138—வினா எண். 5341—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ள அருங்காட்சியகத்தில் குழந்தைகளுக்கான அருங்காட்சியகம் எப்போது தொடங்கப்படும்?

விடை :—

சிறுவர் அருங்காட்சியகம் 1986-87 நிதியாண்டிற்குள் தொடங்கப்படும்.

**1984-ஆம் ஆண்டு வசூலான கூட்டுறவு கடன் தொகை.**

139—வினா எண். 5351—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அறிவித்த சலுகைகளின் மூலம் 1984 ஆம் ஆண்டு வசூலான கூட்டுறவு கடன் தொகை எவ்வளவு?

(ஆ) இன்னும் வரவேண்டிய பாக்கித் தொகை எவ்வளவு?



விடை :—

(அ) ரூ. 10.56 கோடி.

(ஆ) ரூ. 45.85 கோடி.

**தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு மருந்து ஏற்றுமதி.**

140—வினா எண். 5373—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு மருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) முறைப்படுத்தப்பட்ட மருந்துகள் (Formulations) அறுவை கட்டுத்துணி, வலி நிவாரணத் தைலம் மற்றும் ஆயுர்வேத மருந்துகள்.

**குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை.**

141—வினா எண். 5393—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1985-86 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

விடை :—

1985-86 ஆம் ஆண்டில் 4,75,000 குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் செய்யவேண்டுமென்று மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

[1987 நவம்பர் 11

### மூன்றடைப்பு பறவைச் சரணாலயத்தை அபிவிருத்தி செய்தல்.

142—வினா எண். 5454—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மூன்றடைப்பு பறவைச் சரணாலயத்தை அபிவிருத்தி செய்து அதைச் சரணாலயம் ஆக அறிவிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை :—

இல்லை.

### தோட்டக்கலை துறையில் உதவி இயக்குநர் பதவிகள்.

143—வினா எண். 5457—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலை துறையில் பல உதவி இயக்குநர் பதவி கள் காலியாக இருப்பது உண்மையா?

(ஆ) அவைகளை நிரப்ப அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை :—

(அ) ஆம்.

(ஆ) அவைகளை நிரப்புவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் பால் பவுடர் தயாரிக்கும் திட்டம்.

144—வினா எண். 5462—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் சென்னை நகரில் பால் பவுடர் (Baby food) தயாரிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை :—

இல்லை.



1987 நவம்பர் 11]

### சட்டக் கல்லூரிகளில் மூன்றாண்டு சட்டப் படிப்பு.

145—வினா எண். 5510—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டக் கல்லூரிகளில் மூன்றாண்டு சட்டப் படிப்பிற்கு 1985-86 ஆம் ஆண்டு வரையில்தான் மாணவர்கள் சேர்க்கப்படு வார்கள் என்பது உண்மையா?

விடை—

உண்மை இல்லை.

### கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடியில் பழையாறில் பாலம்.

146—வினா எண். 5527—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தாலூகா மணக்குடியில் பழையாறில் புதிதாக பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

### கன்னியாகுமரி நீரோடி கடற்கரை சாலை அமைக்கும் திட்டம்.

147—வினா எண். 5529—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி நீரோடி கடற்கரை சாலை அமைப்பதற்கு திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது துவங்கும்?

[1987 நவம்பர் 11

விடை—

(அ) தற்போது அத்தகைய திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**கன்னியாகுமரி மாவட்டம், ஏ.வி.எம். கால்வாயில் புதிதாக பாலம் அமைக்கும் திட்டம்.**

148—வினா எண். 5530—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்கா, தேங்காய்பட்டினத்தில் ஏ.வி.எம். கால்வாயில் புதிதாக பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

விடை—

(அ) தற்போது திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

**அரூர் தாலுக்காவில் 'சிப்காட்' மூலம் தொழிற்பேட்டை.**

149—வினா எண். 5547—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தாலுக்காவில் 'சிப்காட்' மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1987 நவம்பர் 11]

**திருப்பூர் ரயில் நிலையம் அருகிலுள்ள மேம்பாலத்தை விரிவு படுத்தல்.**

150—வினா எண் 5610—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ரயில் நிலையம் அருகிலுள்ள மேம்பாலத்தை விரிவு படுத்தவும் சுரங்கப்பாதை ஒன்று அமைக்கவும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. கவனஈர்ப்பு கோரல்.**

**(அ) இலங்கைப் பிரச்சினை குறித்து.**

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே இருக்கின்ற அங்கத்தினர்கள் அனைவரும், கட்சி பேதமின்றி ஒத்துக் கொள்கிற ஒரு கேள்வியை உங்கள் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன். அண்மையில், "சார்க் மாநாட்டில்" கலந்து கொண்டு, டில்லி திரும்பிய இலங்கையின் குடியரசுத் தலைவர் திரு. ஜெயவர்த்தனே அவர்கள் நமது முதலமைச்சரைப் பற்றி மிகக் கீழ்த்தரமான, கண்டிக்கத் தக்க வகையில், பத்திரிக்கை நிருபர்கள் மத்தியில் பேசியிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில்கூட இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டு, ஏன் இந்தியத் துணைக்கண்டம் கண்டிக்கக் கூடாது என்று கூட கேட்கப்பட்டிருப்பதை இந்த அவையின் கவனத்திற்கு நான் வைப்பதோடு, பாராளுமன்றத்தைவிட—பாராளுமன்றத்திற்கு இதில் முழு உரிமை உண்டு, நான் மறுக்கவில்லை—முதல்வரை மிகக் கீழ்த்தரமாக, தரக்குறைவாக, தான்தோன்றித் தனமாக, திமிரோடு பேசிய அந்த குடியரசுத் தலைவரைக் கண்டிக்கிற வகையில் நமது உணர்ச்சியினை எடுத்து வைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எப்படி அந்த உணர்ச்சியினை அவருக்குத் தெரிவிப்பது

அல்லது நமது உள்ளக் கொதிப்பை அவருக்குத் தெரிவிப்பது என்பதை நான் உங்களுக்கும், அவை முன்னவருக்கும், முதலமைச்சருக்கும் விட்டுவிடுகிறேன்.

இரண்டாவது நான் கேட்க விரும்புவது ஒன்று. போர் நிறுத்தம் தேவை என்பதில் பல்வேறுபட்ட கருத்துக்கள் இன்று உலவிக் கொண்டிருக்கின்றன. ஈழத் தீவில் நடைபெறுகிற அந்தப் போராட்டம்—அல்லது போர் என்று சொல்லுகிறார்கள்—அந்தப் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று பால்டிமோரிலிருந்து நியூ யார்க்கில் இருந்த நமது பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தந்தி அடித்தார்கள். அதற்குப் பிறகு இங்கே வந்ததற்குப் பிறகு திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தெரிவித்த கருத்தை நான் உங்களுடைய கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

ஒன்பதாம் தேதி அன்று பத்து மணி இருக்கும்போது, இது வரை நாங்கள் மேற்கொண்ட அத்தனை கொள்கைகளையும் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, after that what happens I do not know என்று குறிப்பிட்டிருக்கிறார். இது ஒரு பெரிய குழப்பத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேற்றைக்கு நாடாளுமன்றத்திலே இந்த விவாதம் நடைபெற்ற போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் குழுத் தலைவராகப் பணியாற்றும் அருமை நண்பர் திரு. குழந்தைவேலு அவர்கள் போர் நிறுத்தம் தேவை என்ற கருத்தை வலியுறுத்தி, மாநிலங்கள் அவையிலும் திரு. ஆலடி அருணா வலியுறுத்தி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அத்தனை பேரும் போர் நிறுத்தம் உடனடியாகத் தேவையென்று வலியுறுத்துகிற நிலையில் பேசியதற்குப் பிறகும் முழுக்க முழுக்க திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அல்லது முதல்வர் அவர்கள் என்னை ஒத்துக்கொள்கிறார், எனது கருத்தை ஒத்துக்கொள்கிறார் என்று நமது பிரதம அமைச்சர் பேசுவது எப்படி என்று எனக்கு விளங்கவில்லை. ஆக குழப்பத்திலே உள்ள எங்களை தெளிவாக வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று இந்தத் துறையிலே பழக்கப்பட்ட அவை முன்னவர் அவர்களை, நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





அது மட்டுமல்லாமல், இந்தப் போர் நிறுத்தப் பிரச்சினையைப் பற்றி அ.தி.மு.க.-விலேயே பல்வேறுபட்ட முரண்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்பதை நான சுட்டிக்காட்டி, அதைப் பாராட்டிப் பேசுபவர்களும் வரவேற்றுப் பேசுபவர்களும் இருக்கிறார்கள் என்பதை அவை முன்னவருக்குச் சுட்டிக்காட்டி—சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், அவருக்கு அது தெரியும் என்பதால் சுட்டிக்காட்டி—அதற்கு விளக்கம் தர வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோகரன் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனே, காட்மண்டுவில் நடைபெற்ற மாநாட்டை முடித்துக் கொண்டு டில்லியிலே வந்து பேசியபோது அவர்களே எடுத்துச் சொல்லியது மாதிரி உண்மைக்குப் புறம்பாக, அபாண்டமாக, இழிவான முறையில் மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் என்பதை அனைவரும் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை நாம் கண்டித்திருக்கிறோம்.

பாராளுமன்றத்தில் உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக விளங்குகிற திரு. குழந்தைவேலு, திரு. ஜெயவர்த்தனே முன்னிலையில் வேறு வகையிலே எதிர்ப்பு தெரிவித்தாலும், பாராளுமன்றத்திலே பேசுகின்றபோது திரு. ஜெயவர்த்தனே குறிப்பிட்டதை மிக வன்மையாகக் கண்டித்து அங்கே எடுத்துப் பேசியிருக்கிறார். இந்தியாவினுடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் பதிலுரை சொல்லும்போது, திரு. எம்.ஜி.ஆரைப் பொறுத்து இலங்கை அதிபர் எடுத்துக் கூறியது முற்றிலும் தவறு என்றும், திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இலங்கை-இந்தியா உடன்பாடிக்கை ஏற்படுவதற்கு முழு காரணமாக அமைந்தார் என்றும், அமைதி நிலவுவதில் முழு அக்கறை காட்டி வருகிறார் என்றும், எடுத்துச் சொல்லி, இந்த நிலைமை இலங்கை அதிபருக்குத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்றும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 11

(முற்பகல் 11-30)

ஆனாலும் இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனே அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பது பல்வேறு வகைகளிலே இந்த அவையிலேயே கண்டிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அவர் எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழகத்திலுள்ள பல்வேறு தன்மைகளைக் கொண்டிருக்கிறவர்களும் அவருடைய போக்கு, நடவடிக்கைகள், மற்றவைகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றி, தங்களுடைய உணர்ச்சிபூர்வமான கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள் என்பதையும் இந்த அவை நன்கு அறியும். ஆக பல வகைகளிலே நாவடக்கம் இல்லாமலேயேதான் அவர் பேசி இருக்கிறார் என்பதையும் டெல்லியிலே பல்வேறு அனாவசியமான கருத்துக்களை எடுத்துச் சொல்லி, பல்வேறு குழப்பங்களுக்கு இடம் அளிக்கின்ற வகையிலேதான் பேசியிருக்கிறார் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

ஆக இந்த அவையின் சார்பாகவும், ஆளுங் கட்சியின் சார்பாகவும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், அவர் எடுத்துச் சொல்லிய கருத்துக்களில் உண்மையில்லை என்பதையும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். ஆகவே விடுதலைப் புலிகளுக்கு நாம் எந்த வகையிலும் உதவி செய்யவில்லை. அவர்களை அகதிகளாக கருணை அடிப்படையிலே ஏற்று, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியத்திலேதான், நாம் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கிறோம். அந்தப் பணியைத்தான் செய்திருக்கிறோம். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை அதிபர் கிளப்பிய காலத்திலும் சரி, இலங்கையினுடைய பிரதமர் கிளப்பிய காலத்திலும் சரி, அந்த நாட்டைச் சேர்ந்த பிறர் கிளப்பிய காலத்திலும் சரி, வேறு எந்த வகையிலும் விடுதலைப் புலிகளுக்கு இந்திய அரசோ, தமிழக அரசோ எந்தவிதமான உதவிகளையும் செய்யவில்லை என்பதை அழுத்தமாக நாம் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் இப்போதும் நாம் எடுத்துச் சொல்கிறோம். ஆக திரு. ஜெயவர்த்தனே அவர்கள் கூற்றை நாம் மறுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இப்போது இலங்கையிலே ஏற்பட்டிருக்கிற மோதல்கள் தவிர்க்கப்பட்டு இலங்கை—இந்திய உடன்படிக்கை காப்பாற்றப் பட வேண்டுமென்கிற சூழ்நிலையினுடைய அடிப்படையிலேதான்



1987 நவம்பர் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். இங்கு வந்ததற்குப் பிறகும் அவர்கள் இந்தியாவினுடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு ஒரு தந்தி அனுப்பினார்கள். அந்தத தந்தியினுடைய அடிப்படையேகூட, இலங்கையிலே வாழ்கின்ற விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஏற்கெனவே யாழ்ப்பாணம் நகர ஆணையாளராக விளங்கிய திரு. சிவஞானம் அவர்கள் ஒரு கருத்து பத்திரிகையிலே தெரிவித்ததுதான். 48 மணி நேரம் இலங்கை இராணுவத்தினுடைய நடவடிக்கை, போர் நடவடிக்கை நிறுத்தப்படுகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்தை அவர்கள் எடுத்துத் தெரிவித்து இருந்தார்கள்.

அந்தக் கருத்தின் அடிப்படையிலே, விடுதலைப் புலிகள் தங்களுடைய ஆயுதங்களை ஒப்படைக்க வாய்ப்பு ஏற்படும் வகையில் 48 மணி நேரம் போர் நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, அதை நடைமுறைப்படுத்தலாமென்று தந்தி அனுப்பினார்கள். அதற்கு மத்திய அரசு பதில் அனுப்பிற்று என்றாலும், அதை நேரடியாக விளக்குகின்ற வகையிலே இந்திய அரசின் மாண்புமிகு அமைச்சர் திரு. நட்வர் சிங் அவர்களை அனுப்பிவைத்து, பல்வேறு விவரங்களை மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு முதலமைச்சரவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்களுள் ஒருவராக இருந்து வருகிற திரு. கிட்டு அவர்களையும் இரு முறை அழைத்துப் பேசி இருக்கிறார்கள். ஆனால் திரு. நட்வர் சிங் அவர்களிடம் எந்தவிதமான பதிலை சொல்லி அனுப்பினார்கள், அவர்கள் என்ன கருத்தைத் தெரிவித்தார்கள் என்றும், அந்தக் கருத்தின் அடிப்படையிலே எந்த வகையிலே கிட்டு அவர்களிடத்திலே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்றும், அந்தக் கருத்துக்களைப் பொறுத்து இன்றைய நிலையிலே, இன்றைய அளவிலே எந்த அளவுக்குக் கருத்துக்களை வெளியிடலாம் அல்லது வெளியிடக்கூடாது என்றும் முழுவதும் முடிவு செய்ய வேண்டியது மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பொறுப்பாக இருக்கிற காரணத்தால், இந்த உணர்வுகளை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 நவம்பர் 11

அவர்கள் கருத்து தெரிவித்த பிறகு, அதற்குப் பிறகு ஏற்படுகிற சூழ்நிலைகளைப் பொறுத்து இந்த அவைக்கு அறிவிப்பேன். நானாக எதுவும் சொல்வதற்கில்லை என்பதையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தும், அரசைப் பொறுத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கிற கொள்கைதான் அந்தக் கட்சியின் கொள்கை, ஆட்சியினுடைய கொள்கையே தவிர மற்றவர்கள் சொல்வதெல்லாம் அல்ல என்பதையும், ஆக இதிலே கருத்து வேறுபாடோ அல்லது வேறு எந்த வேறுபாடோ இல்லை என்பதையும், எனக்கும் அவருக்கும் ஏதோ கருத்து வேறுபாடு என்பது கூட அல்ல என்பதையும், இதிலே விரிவான விளக்கங்கள் வரும்போது தெளிவாக விளக்குவேன் என்பதையும், ஆனால் இப்போது இதில் எந்தவித கருத்து வேறுபாடும் யாருக்கும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக இதிலே கடைசியாக எடுக்க வேண்டிய முடிவு, கட்சியினுடைய பொதுச் செயலாளர் என்ற முறையிலும், ஆட்சியினுடைய தலைவர் என்ற முறையிலும் புரட்சித் தலைவர் அவர்கள் எடுக்கிற முடிவுதான், சொல்கிற முடிவுதான் என்று சொல்லி, இதோடு இந்தப் பிரச்சினையை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

**(ஆ) ஜவஹர்லால் நேரு அவர்களின் நூற்றாண்டு விழா.**

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமரும் மனித குல மாணிக்கமுமான திரு. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை வருகின்ற 14 ஆம் தேதி நாம் கொண்டாட இருக்கிறோம். ஆண்டுதோறும் தமிழ்நாடு சமூக நலத் துறை வாரியம் இந்த குழந்தைகள் தினத்தைக் கொண்டாடி வருவது வழக்கம். இன்றைக்குக் கொண்டாடுகிறார்கள் வள்ளுவர் கோட்டத்திலே. துறை அமைச்சர் அவர்கள் ஆண்டுதோறும் கலந்து கொள்வது வழக்கம். இப்போது வந்த அழைப்பிதழில் இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளவில்லைபோல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஊரிலே இல்லை என்றாலும் பரவாயில்லை. உள்ளூரிலேயே இருக்கின்றார்கள். அந்த நிகழ்ச்சிக்குச் செல்லாததன் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.



1987 நவம்பர் 11]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழாவினை இன்றையதினம் துவக்கியிருக்கிறோம். விழாவினுடைய முத்தாய்ப்பான நிகழ்ச்சி 14-ஆம் தேதி நடைபெற இருக்கிறது. ஆகவே தொடர்ந்து நடைபெறுகின்ற விழாக்களிலே அமைச்சர்கள் பங்கு ஏற்கலாம். நானும் பங்கு ஏற்கிறேன். எந்தவிதமான சந்தேகமும் அம்மையாருக்கு ஏற்படத் தேவையில்லை.

**(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கைகள் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

(உறுப்பினர்கள் திருவாளர்கள் கு. ரமணி, எ.எஸ்.ஏ. ஆறுமுகம் மற்றும் பொ. உததிராபதி ஆகியோர் எழுந்தனர்).

**திரு. கு. ரமணி :** ஒரு பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன என்று முன்னாலேயே சொல்லவில்லையே. பெர்மிஷன் வாங்கவில்லையே. திரு. நாஞ்சிலார் என்ன என்று சொன்னார்கள். அதனாலே 'ஐ ஹேவ் அலவ்ட் இம்.'

**திரு. கு. ரமணி :** நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன என்று சொன்னீர்கள் ?

**திரு. கு. ரமணி :** 'ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்'.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக் கேட்கவில்லையே. என்னிடம் வந்து அனுமதி வாங்கவேண்டும். முன் அனுமதி பெறவில்லையே. இப்போது என்ன கிளப்பப் போகிறீர்கள் என்று தெரியாது. திரு. நாஞ்சிலார் அவர்கள் கேட்டார்கள், அனுமதி கொடுத்தேன். நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள் என்று தெரிந்தால்தானே நான் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம்

சொல்லி, அவர் பதில் சொல்வதாக இருந்தால், அவர் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முன்னவர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதுபற்றி விவரமாகவே பேசியாகிவிட்டது.

**திரு. கு. ரமணி :** நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு கேட்கவில்லை.

**திரு. கு. ரமணி :** நான் மாறுபட்ட கருத்தைச் சொல்லவில்லை. ஏற்கெனவே உங்களிடம் கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு முறையைப் பின்பற்ற வேண்டும். நீங்கள் வந்து அறையிலே சொல்லுங்கள். நாளைக்கு பார்க்கலாம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'என்ன ஆயிற்று' என்பதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள். ஒத்தி வைப்புத் தீர்மானம் என்றால், அறையிலே கேளுங்கள்.

### 3. அறிவிப்புகள்.

#### (அ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு 1987.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஒரு அறிவிப்பு : 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 4. அரசினர் சட்ட முன்வடிவு.

#### தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

. . . . . . . . . .





**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய பெயரைச் சூட்டுவது குறித்து எந்த எதிர்ப்பும் நான் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் ஏற்கனவே இந்த அரசாங்கத்தாலே ஒரு உத்தரவு போடப்பட்டிருப்பது, உயிரோடு வாழ்பவர்களுடைய பெயர்களை அரசு நிறுவனங்களுக்கோ அல்லது கட்டிடங்களுக்கோ சூட்டக்கூடாது என்று அரசாங்கத்தினுடைய கொள்கை இருக்கிறது.

(உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்கள் உட்காருவது நல்லது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** 'டிரீட்மெண்டே' சரியாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன மாதிரி 'டிரீட்மெண்ட்' வேண்டுமென்று கேளுங்கள், நான் மாற்றிக்கொள்கிறேன். (குறுக்கீடு) **What sort of treatment do you want?** ஒரு விதி இருக்கிறது அல்லவா? உட்காருங்கள். ஒரு உறுப்பினர் பேசும்போது இன்னொருத்தர் உட்காரவேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெயர் சூட்டப்பட இருப்பது குறித்து இங்கே ஒரு அவசரச் சட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னுடைய டெக்னிக்கல் அப்ஜக்ஷன் என்ன என்று முதலிலே கேட்டால், ஏற்கெனவே அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருப்பதை அவர்கள் அறிவார்கள், உயிரோடு வாழ்பவர்கள் பெயரை அரசு நிறுவனங்களுக்கோ, கட்டிடங்களுக்கோ சூட்டக்கூடாது என்று. அரசாங்கத்தினுடைய டெசிசன், கொள்கை என்றுகூட சொல்லப்பட்டு, ஏற்கெனவே அண்ணாவினுடைய துணைவியார், அண்ணியார் திருமதி இராணி அம்மையார் பெயரிலே இருந்த கல்யாண மண்டபத்திலே இருந்து அவர் பெயர் எடுக்கப்பட்டு, மறைந்த அண்ணா அவர்களுடைய பெயர் வைக்கப் பெற்றது. கலைஞர் அவர்களுடைய பெயர் எடுக்கப்பெற்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு வார்த்தை. உங்களுடைய 'வியூ'-வை சொல்லிவிட்டீர்கள். அப்ஜக்ஷன் தானே.

ரொம்ப பேச ஆரம்பித்தால், விவாதம் பெரிதாக ஆகிவிடும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் கருத்து சொல்லி விடலாம்.

**திரு. அ. ரகுமான்கான்**: ஒரு அப்ஜக்ஷன்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, இதிலே அவ்வளவு பேசவேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் நான் குறுக்கிடுகிறேன். பொதுத் துறையில் இதைப் பார்க்கிற காரணத்தால் நான் அதைப் பற்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு உத்தரவு போடப்பட்டது உண்மை அது பற்றி அமைச்சரவைக் கூட்டத்திலே முடிவெடுக்கப்பட்டு ஒரு உத்தரவு போடப்பட்

(முற்பகல் 11-40)

டிருக்கிறது. ஆனால் அதற்குப் பின்னாலே அந்த உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே பல பெயர்கள் வைக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டதால், அரசின் அனுமதியோடு எந்தெந்தப் பெயரை எங்கே வைக்க வேண்டுமென்று யாராவது கேட்டால் அதற்கு அனுமதிக்கலாம் என்கிற வகையில் உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே போட்ட உத்தரவு ஜி.ஓ. ஆக வந்திருக்கிறது. இது ஆர்டினன்ஸ் ஆக வந்தது. இப்போது பில் ஆக வரும்போது அது தானாக காலாவதியாகிவிடும். அது இதனைக் கட்டுப்படுத்தாது. இருந்தாலும் முன்னெச்சரிக்கையாக, முன்னாலே பல பெயர்களை வைக்க வேண்டுமென்று வந்தபோது, அதை மாற்றிவிட வேண்டுமென்று முடிவு செய்து, அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்து அரசின் அனுமதியோடு பெயரை வைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

### (இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கைகள் குறித்து—தொடர்ச்சி.

**திரு. கு. ரமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு வார்த்தை மட்டும் கூற அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: We have passed that stage of the Agenda அதைக் கடந்தாகிவிட்டது.

**திரு. கு. ரமணி**: ஒரே ஒரு சப்மிசன்தான் செய்ய வேண்டும். I want to make a submission.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: விதிகளைக் கொஞ்சம் பாலோ செய்யுங்கள். என்னுடைய அறைக்கு வாருங்கள். பேசலாம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** * * * நான்தான் முதலில் எழுந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: * * * அந்த வார்த்தையைச் சொல்லக்கூடாது. இப்பொழுது திரு. டி. ஆர். வேங்கடரமணன் பேசுவார்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

## 5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1986-87 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள மின்வாரிய நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்ட புத்தகத்தில் 15-வது பக்கத்திலிருந்து

---

*மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 நவம்பர் 11

முதற்கண் என்னுடைய கருத்துக்களைத் தொடங்க முன்வருகிறேன். 15-வது பக்கத்தில் 210 லட்சம் ரூபாய் பற்றாக்குறை ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். "வருவாய்க்கும், வருவாய் செலவுக்கும் உள்ள மிகப் பெரிய இடைவெளிக்கான காரணங்கள், நிலக்கரி, எண்ணெய் போன்ற எரிபொருள்கள் விலையேற்றம், சரக்கு கட்டணம் மற்றும் அது தொடர்பான கட்டண உயர்வு, மைய அரசு மின் நிலையங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலையேற்றம், அதிகப்படியான பயனீட்டாளர்களுக்கு சலுகை விலையில் மின்சாரம் வழங்கல் போன்றவையாகும்" என்று காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிக்கைகள் குறித்து.—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரமணி, நீங்கள் திடீரென்று ஏதாவது எழுப்பினால் அமைச்சர்கள் எப்படிப் பதில் சொல்ல முடியும்? நாம் ஒரு நடைமுறையைக் கடைப்பிடித்து வருகிறோம். அவைத் தலைமைக்குத் தகவல் கொடுத்தால்தானே அமைச்சரிடம் சொல்லி தகவல் பெற்றுத் தர முடியும்? திரு. நாஞ்சிலார் ஏற்கெனவே சொல்லிவிட்டு எழுப்பினார்.

**திரு. கு. ரமணி:** இது ஏற்கெனவே பேசப்பட்டிருக்கிறது. அவைக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர்கள் தயாராக இருக்க வேண்டாமா? திடீரென்று எழுந்து சப்மிசன் என்று சொன்னால் என்ன செய்வது? இதுபற்றி மாண்புமிகு அவைத் தலைவர் ஏற்கெனவே உங்களிடம்கூடச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) ஏற்கெனவே அவையின் தலைமையினுடைய அனுமதியைப் பெறாமல் நீங்கள் எப்படி எழுப்ப முடியும்? நீங்கள் என்ன எழுப்பப் போகிறீர்கள் என்பது எப்படி முன்கூட்டியே தெரியும்?



1987 நவம்பர் 11]

**திரு. கு. ரமணி:** ஒரு சப்மிசன்கூடச் சொல்ல முடியாதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது எவ்வாறு முடியும்? இப்போது முன்கூட்டியே தகவல் கொடுங்கள், நாளைக்கு அனுமதிக்கிறோம்.

**திரு. கு. ரமணி:** அனுமதிக்கிறீர்களோ இல்லையோ என்பதே தெரியவில்லையே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முன்கூட்டியே தகவல் தராததால் இன்றைக்கு உங்களை அனுமதிக்கவில்லை.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1986-87 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மைய அரசு மின் நிலையங்களிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலையேற்றமும் ஒரு காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே அரசால் உறுப்பினர்களுக்குத் தரப்படுகின்ற அறிக்கை, பேலன்ஸ்ஷீட் என்பது நேர்மையாக, நியாயமாகத் தரப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி நான் வேதனையோடு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோல, 16-வது பக்கத்தில் மின்வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு 246.32 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பது பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். சிறிய விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதாலும், மற்ற விவசாயிகளுக்குச் சலுகை விலையில் மின்சாரம் வழங்குவதாலும், 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின்கீழ் குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதாலும் மின்வாரியத்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 246.32 கோடி இழப்பு ஏற்படுகிறது என்று அறிக்கையில் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் பேலன்ஸ் ஷீட் என்பது ட்ரு அண்ட் பேர் அக்கவுண்டைக் காட்ட வேண்டும். ஆகவே இங்கே வருமானத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, 15-வது பக்கத்திலே அதுபற்றிக் காண்பிக்கிறபோது, 692.65 லட்சம் ரூபாய் மானியம் நீங்கலாக என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்துகிறபோது மின்சார வாரியத்துக்கு ஏற்படும் இழப்புகளை நாங்கள்

மானியமாகத் திருப்பிச் செலுத்துவோம் என்று அரசு ஏற்றுக் கொண்டுதான் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது. ஆகவே இழப்பு விகிதத்தில் கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய் மானியத்தை மின்சார இலாக்காவிற்கு உரிய காலத்தில் அதனை ஏற்றுக்கொண்டு செலுத்தியிருந்தால் சென்ற ஆண்டிலே மின்சார வாரியம் கிட்டத்தட்ட ரூ. 50 கோடி இலாபம் சம்பாதித்து இருக்கும். அந்தத் தகவலைத் தராமல் மானியம் நீங்கலாக என்று 15-வது பக்கத்திலே செய்திகளை இந்த மன்றத்திற்குத் தந்திருப்பது இந்த மன்றத்தையும், மன்ற உறுப்பினர்களையும் திசை திருப்புவதோடு மட்டுமல்லாமல் ஏதோ தமிழகத்தில் மின்சார வாரியம் நஷ்டத்தில் இயங்குவதைப் போல ஒரு பொய்யான பிரமையை நீங்கள் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். இந்த மன்றத்தினுடைய கௌரவத்தைக் காப்பாற்றுகின்ற வகையில் உண்மையான தகவலை இந்த மன்றத்திற்கு நீங்கள் தரவில்லை என்பதை மிக்க வேதனையோடு நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கணியாரிடத்திலே இருந்து மின்சார வாரியத்திற்கு இத்தனை கோடி ரூபாய் பாக்கி இருக்கிறது. இத்தனை இலட்சம் ரூபாய் தனியார் கம்பெனிகள் தரவில்லை என்றெல்லாம் சொல்கிறீர்கள். ஆனால் 'Charity begins at home' என்ற ஆங்கிலப் பழமொழிக்கு ஈடாக இன்றைக்கு மின்சார வாரியத்திற்கு இந்த அரசு தரவேண்டிய கோடிக்கணக்கான ரூபாயைத் தராத காரணத்தால்தான் மின்சார வாரியம் நஷ்டத்தில் இருப்பதுபோல் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது என்ற சரித்திர உண்மையை இங்கே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். பல கோடிக்கணக்கான ரூபாயை அரசிடமிருந்து மின்சார வாரியம் கடனாகப் பெற்றதாகக் கூறி அதற்கு வட்டி செலுத்திக்கொண்டிருக்கிற நிலைமையில் மின்சார வாரியத்திற்குக் கொடுக்கவேண்டிய பணத்தை ஏன் கொடுக்கவில்லை என்பதை இங்கே முதலில் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தமிழகத்தில் மின்வெட்டு அமலில் இல்லை என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தில்கூட கடுமையான வறட்சி இருந்தாலும்கூட நாங்கள் இந்த ஆண்டு மின்வெட்டு இல்லாமல் ஒருமாதிரி



சமாளித்துவிட்டோம் என்று அவையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறை என்ன? வறட்சியின் காரணமாக கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க முடியாமல் இலட்சக்கணக்கான மோட்டார்கள் செயல்படாததால்தான், அதனால் ஏற்பட்ட மின்சார மிச்சத்தின் காரணமாகத்தான் ஏனைய டொமஸ்டிக் கன்சம்ஷன் போன்றவற்றிற்கு எல்லாம் மின்சாரம் கிடைத்தது என்பது உண்மை. அந்த உண்மை இங்கே குறிப்பிடப்படவில்லை. அதுமட்டுமல்ல.

மின்சார வெட்டு இல்லை என்று சொன்னாலும்கூட தினந்தோறும் நேரம் கெட்ட நேரத்தில் எல்லாம், எதிர்பாராத நேரத்தில் எல்லாம் 'பவர் ஷட் டவுன்' மற்றும் 'மெய்ன்டனென்ஸ்' என்றெல்லாம் சொல்லி மின்சாரம் நிறுத்தப்படுகிறது. கன்ஸ்யூமர் என்ற முறையில் நாங்கள் எல்லாம் அவதிப்படுகிறோம். இது பற்றிய தகவல் எங்களுக்கு முன்பே தெரிவிக்கப்படுவதில்லை. நேற்றுக்கூட நான் சிந்தித்தேன். இந்த மின்சார வாரியத்தின் விவாதம் இங்கே நேற்றும், இன்றுமாக நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தில்கூட மின்தடை ஏற்படலாம். நேற்றைக்கு நான் மைலாப்பூரிலிருந்து திருவான்மியூர் வரையில் சென்றிருந்தேன். அங்கெல்லாம் மின் அழுத்தம் குறைந்து இருந்தது. இரவில் மின்சார வெட்டு ஏற்பட்டது. நேற்று நான் மைலாப்பூரில் இருந்தேன். பிறகு சாஸ்திரி நகர் சென்றேன். திருவான்மியூர் வரையில் சென்றிருந்தேன். எல்லா இடங்களிலும் தொடர்ச்சியாக மின்வெட்டும், மின்சாரப் பற்றாக்குறையும் இருந்தது. கேட்டால் மெய்ன்டனென்ஸ் செய்கிறோம் என்று சொல்கிறார்கள்.

மின் வெட்டு என்பது வளர்ச்சியின் அறிகுறி. வளர்ந்து வருகிற ஒரு சமுதாயத்தில் மின் தேவை அதிகமாக இருப்பதையும் அதனால் பற்றாக்குறை ஏற்படுவதையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் நான் மின்சார வாரியத்தை ஒரே ஒரு கேள்வி கேட்க ஆசைப்படுகிறேன். மின்வெட்டு வருகிற போது என்ன செய்யவேண்டும்? காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எந்த நேரத்தில் மக்களுக்கு மின்சாரம் கிடைக்காது என்று சொன்னீர்கள். கொடுத்து மின்சாரத்தை நிறுத்தினார்கள். ஆனால் இப்போது

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 நவம்பர் 11

எதற்கெடுத்தாலும் மெய்ன்டெனன்ஸ் என்று சொல்லி மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிற இரவு நேரத்திலே மின்சாரத்தை நிறுத்துகிறார்கள். எப்போதாவது டி.வி.யிலே நல்ல ப்ரோகிராம் இருந்தால் அப்போது மின்சாரம் இருக்காது. அதேபோல் குடும்பத்தலைவி தன்னுடைய கணவனுக்கும், குழந்தைகளுக்கும் உணவு தயாரித்துக் கொண்டிருக்கும்போது, மிக்ஸியிலே அரைத்துக்கொண்டிருக்கும்போது அது அம்போ என்று நின்று விடுகிற சூழ்நிலை இருக்கிறது. எல்லா நேரத்திலும் இந்த நிலைமை ஏற்படுகிறது காலையிலும், மாலையிலும், இரவிலும், நடுப்பகலிலும் என்று ஒரு வரையறை இல்லாமல் மின் தட்டுப்பாடு ஏற்படுகிறது. நான் பல முறை திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்கூட இதுபற்றிச் சொல்லியிருக்கிறேன். மின்தடை என்பது சாதாரணமாக ஏற்படக்கூடியது. அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் வரப்போகிற மின்தடையைப் பற்றி குறைந்தபட்சம் 24 மணி நேரத்திற்கு முன்னாலேயே நீங்கள் சொல்லிவிட்டு தடையை ஏற்படுத்தினால் பொதுமக்கள் வரப்போகிற மின்தடையை ஒட்டி தங்கள் வாழ்க்கையில் உள்ள காரியங்களைக் கவனித்துக் கொள்ள முடியும். ஆனால் நீங்கள் காலையில் 6 மணிக்கு மின்சாரத்தை நிறுத்துகிறீர்கள். அன்றைக்கு மோட்டார் போட்டு தண்ணீர் இறைக்க முடியாது. மறுநாள் பார்த்தால் அன்றைக்கு பூராவும் மின்சாரம் இருக்கும். அல்லது மாலையிலே தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும்போது மின்சாரம் நிறுத்தப்பட்டு விடுகிறது. எனவே தயவுசெய்து, கருணை கூர்ந்து, உபயோகிப்பாளர்களுடைய கஷ்டங்களை எல்லாம் கருத்தில் கொண்டு இந்த மின் தடை போன்றவற்றை எல்லாம் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்தபடியாக இன்றைக்கு மின்சாரம் வாழ்க்கையோடு இணைந்து இருக்கிறது. (குறுக்கீடு)

I refuse to be interrupted.

அடுத்து என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற பிரச்சினைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே கிராமங்களிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன.



1987 நவம்பர் 11] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

படிப்பு அறிவு இல்லாத கிராம மக்கள் மின்சாரத்திற்காக அப்ளை செய்கிற போது . . . (குறுக்கீடு) தப்பாக பேசினால் பின்னால் சொல்லுங்கள் சார்.

I seek your protection. This is not the way to interrupt. If he has got a point, he can answer at the end of my speech. He cannot interrupt me like this. I request your protection. You have to protect me.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது எல்லோருக்கும் பொருந்தும். நீங்கள் குறுக்கிடும்போதும் பொருந்தும். பேசுங்கள்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவை யினுடைய துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே சொல்ல விரும்புவது எல்லாம், தென்காசி தொகுதியிலேயும் திருநெல் வேலி மாவட்டத்திலேயும் 5 ஹார்ஸ் பவர் என்று சிலர் விண்ணப் பத்திலே கையெழுத்துப் போட்டு விட்டு, பல நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக 3 ஹார்ஸ் பவர் மோட்டார்களை வைத்தி ருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னவென்று சொல்லுங்கள் டாக்டர் கே. பி. இராமலிங்கம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் தடையை ஏற்படுத்தும்போது 24 மணி நேரத்திற்கு முன்னாலே சொல்லிவிட்டு மின் தடையை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறார். திடீர் என்று டிரான்ஸ்பார்மர் அல்லது ஒரு சப்-சென்டரிலே உள்ள டிரான்ஸ் பார்மர் எரிகிறபோது, 24 மணி நேரத்திற்கு முன்னால் அதிகாரி களுக்குச் சொல்லிவிட்டு எரியாது. ஆகவே நடைமுறைக்கு ஒப்ப எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார்த்துப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டரிலே வராது. பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்தான். திரு. வேங்கடரமணன் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு)

**திருமதி டி. யசோதா :** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினரைப் பார்த்து உட்கார்ந்துகொண்டே பேசாமல் தங்களிடத்திலே கேட்டு நேரத்தை ஒதுக்கிப் பேசுவார்களேயானால் அது முறையாக இருக்கும். ஏனென்றால் அவர்கள் பேசுகிற பாணியிலேயே அடுத்தவர்கள் பேசினால் அது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட இருந்த முக்கியமான கருத்து, 5 ஹார்ஸ் பவர் மோட்டாருக்காக அப்ளிகேஷன்கள் கொடுக்கிறபோது, பச்சை, நீலம், சிவப்பு, வெள்ளை என்றெல்லாம் பேப்பர்களில் கையெழுத்து வாங்குகிறார்கள். நான்கூட சொந்த உபயோகத்திற்காக அப்ளிகேஷன் கொடுக்கிறபோது, மின்வாரியம் மானோபலி கன்சர்ன் ஆக இருக்கிற காரணத்தாலே, அந்த ஒப்பந்தங்களிலே மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதனால் கையெழுத்துப் போடுகிறோம். ஏனென்றால் மின்சாரம் நமக்கு அவ்வளவு தேவையாக இருக்கிறது. மின்சாரம் எப்படியாவது வந்தால் போதும் என்ற நிலையிலே கையெழுத்துப் போட்டு விடுகிறோம். ஆனால் படிப்பு அறிவு இல்லாத மக்களிடத்திலே அப்ளிகேஷனிலே கையெழுத்து வாங்குகிறபோது, அந்த காண்டிராக்டிலே 5 ஹார்ஸ் பவர் என்று போட்டு விடுகிறார்கள். ஆனால் தேவையைக் கருதி இவர்கள் 3 ஹார்ஸ் பவரிலே மோட்டாரை வைக்கிறார்கள். நான் சொல்வது நான்-அக்ரிகல்சுரல் யூசேஜ் பற்றி. ஆனால் இந்த நிலையிலே 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் கழித்து நீங்கள் காண்டிராக்டிலே 5 ஹார்ஸ் பவர் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறீர்கள், ஆனால் 3 ஹார்ஸ் பவர் தான் வைத்திருக்கிறீர்கள், மின்சார வாரியத்தோடு நீங்கள் செய்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே 2 ஹார்ஸ் பவரை நீங்கள் யூஸ் செய்யாத காரணத்தாலே மின்சார வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது, அதனால் 2 ஆயிரத்திலே இருந்து 5 ஆயிரம் ரூபாய் வரையில் கட்டுங்கள் என்று சொல்லி எங்களுடைய பகுதியிலே நோட்டீஸ் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.



நான் கேட்கிறேன். இது நியாயமா? நேர்மையா? காண்டிராக்ட் என்று வைத்துக் கொண்டால், அது காண்டிராக்ட்தான். மறுக்கவில்லை. ஆனால் 24 மணி நேரம் மின்சாரம் தர வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலே மின்சார இலாகா இயங்கிக் கொண்டிருக்கிறதே, நீங்கள் 24 மணி நேரமும் மின்சாரம் தந்து கொண்டிருக்கிறீர்களா? அது மட்டும் அல்லாமல் பயனீட்டாளர்களுக்குச் சம்பந்தம் இல்லாமல், தெரியாமல் ஏதோ ஒரு காண்டிராக்டிலே 5 ஹார்ஸ் பவர் என்று சுயலாபத்திற்காகப் போட்டதை வைத்துக் கொண்டு படிப்பு அறிவு இல்லாத கிராம மக்களிடத்திலே, நீங்கள் காண்டிராக்டை மீறி விட்டீர்கள், ஆகவே நீங்கள் உபயோகித்தாலும் உபயோகிக்காவிட்டாலும் அந்த மின்சாரத்திற்குப் பணம் தரவேண்டும் என்று கேட்பது எந்த வகையிலே நியாயம்? தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். Is it a proper business standard? தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். உடனடியாக ஆவன செய்து சரி செய்ய வேண்டும்.

நம்மிடத்திலே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. தேவையான மின்சாரம் இல்லை. ஏதோ மின்சார இலாகா கோடிக்கணக்கான யூனிட்டுகளை உற்பத்தி செய்து விட்டு, அவைகளை எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லிவிட்டு பின்னால் எடுத்துக் கொள்ளாததினால் இழப்பு ஏற்பட்டிருப்பதாக சரித்திரமே கிடையாது. ஏனென்று சொன்னால் தேவைக்கும் குறைவாகத்தான் நாம் உற்பத்தியே செய்து கொண்டிருக்கிறோம்.

ஆகவே படிப்பு அறிவு இல்லாத கிராம மக்களுக்கு அவர்களின் காண்டிராக்டை மாற்றி அமைத்து ஆவன செய்ய வேண்டும். இதை ஒரு சாதாரண மனிதனுடைய நியாயமான பிரச்சினையாகக் கருதி அமைச்சர் அவர்கள் அதை நிவர்த்திக்க முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்று சொன்னால் இந்த இலாகாவிலேதான் இங்கே சொல்லப்படுகிற கருத்துக்களுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, எந்த ஒரு இலாகாவும் செய்யாத வகையில், உறுப்பினர்கள் சொல்லுகிற கருத்துக்களுக்குப் பதிலை அச்சடித்துத் தருகிற ஒரு இலாகாவாக இருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்படி தவறுகளை

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 நவம்பர் 11

நாங்கள் சுட்டிக் காட்டுகிறோமோ அதுபோல நியாயமானவற்றையும், சிறப்பானவற்றையும் பாராட்டுவது எங்களுடைய கடமை. ஆகவே சாதாரண மக்களை பாதிக்கக்கூடிய இந்த விவகாரத்தை கவனித்து உடனடியாக ஆக்சுவல் யூசேஜுக்கு தேவையான பணத்தை மட்டும் வாங்கவேண்டும், காண்டிராக்டிலே தவறாக இருந்தாலும் அதை மாற்றித் தரவேண்டும் என்று சொல்லி, இதுவரையில் வசூலித்திருக்கிற பணத்தை திருப்பித் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல 20 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் தொழில் துறையை வளர்க்க வேண்டுமென்று, இந்த நாட்டினுடைய வேலை வாய்ப்புத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று, வங்கிகள் மூலமாக சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் உதவி செய்கிறார்கள். தங்களின் வாழ்க்கைக்கு பிறருடைய கையை எதிர்பார்க்காமல் ஒரு டைப்ரைட்டர் அல்லது இரண்டு டைப்ரைட்டர்கள் வாங்கி தங்கள் வீட்டு வாசலில் அமர்ந்து டைப் செய்து அதிலிருந்து வருகிற 10 ரூபாய் அல்லது 20 ரூபாய் வருமானத்தில் குடும்பத்தை நடத்துகிற எண்ணற்ற இளைஞர்களும், பெண்களும் இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிறார்கள். மின்வாரியம் என்ன சொல்கிறது என்றால், வீட்டு வாசலில் டைப் செய்தாலும்கூட அது ஒரு கமர்ஷியல் ஆக்டிவிட்டி, ஆகவே அதற்கு தனியாக மீட்டர் போட வேண்டுமென்றும், கமர்ஷியல் கனக்ஷனாக மாற்ற வேண்டுமென்றும் சொல்கிறது. நான் இந்த மின்வாரியத்தை அன்போடு ஒன்று கேட்க ஆசைப்படுகிறேன். ஒரு டைப்ரைட்டரை வைத்துக் கொண்டு வீட்டு வாசலில் இருந்து சுயமாக சம்பாதிக்கிற ஒரு ஆண் அல்லது பெண்ணிற்கு வருகிற மாத வருமானம் ரூ. 500-லிருந்து ரூ. 1,000 வரையில் இருக்கும். அவர்கள் வேறு யாரிடமும் தங்கள் வேலைக்காக அலையாமல் தன்னுடைய சுயவேலையின் மூலம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள். இந்த நாட்டில் இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தை அரசாங்கத்தின் உதவியோடு தீர்த்து வருகிறார்கள். எனவே வீட்டு வாசலிலிருந்து டைப் செய்பவர்களுக்கு அந்தமாதிரி செய்யாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.



1987 நவம்பர் 11] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

இன்றைக்கு ஹைகோர்ட் எதிரில் 10 டைப்ரைட்டர், 15 டைப்ரைட்டர் வைத்து, ஜெராக்ஸ் மெஷினை வைத்து தொழில் செய்பவர்களைச் சொல்லலாம். நான் அவர்களைப் பற்றி சொல்லவில்லை. அவர்களுக்கு நீங்கள் கமர்ஷியல் கனெக்ஷன் என்று போடலாம். ஆனால் தங்களுடைய வீட்டிலிருந்துகொண்டு டைப் செய்து வரும் அந்த சாதாரண மக்களுக்கு நீங்கள் உதவுகிற வகையில் டொமஸ்டிக் கனெக்ஷனாக அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை உள்ளாட்சி அமைப்புகளும் நிதிப் பற்றாக்குறையினால் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு போதிய நிதியாதாரம் இல்லாமல் தங்களுடைய தேவைகளைச் சந்திப்பதற்கு இயலாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்கள் வந்தபிறகுதான் தமிழ் நாட்டில் அத்தனை வீதிகளிலும் ஒழுங்காக தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இரவைக்கூட பகலாக்குகிற அளவிற்கு மிகச்சிறப்பாக தெரு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக அந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு மின்வாரியத்தின் பில் தொகை அதிகமாக வருகிறது. தயவு செய்து இதனைச் சமுதாய சேவை என்ற அடிப்படையில் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு உதவிடவேண்டும். நீங்கள் உற்பத்தி செய்கிற மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 40 பைசா அல்லது 45 பைசாதான் செலவாகிறது. டொமஸ்டிக் கனெக்ஷனுக்கு 53 பைசாவிற்கு தருகிறீர்கள். இந்த டாரிஃபை உள்ளாட்சி மன்றங்களுக்கும் டொமஸ்டிக் கனெக்ஷன் என்ற அளவிற்கு மாற்றுவீர்களானால் அவைகளின் நிதிநிலைமை ஓரளவிற்கு சீரடையும் என்று தெரிவித்து, இந்த கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பரிசீலனைக்கு வைக்கிறேன்.

அதைப்போல மற்றொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்து அறநிலையத் துறைக்கும் அமைச்சராக இருக்கிறார்கள். இறைவன் இருக்கும் கோவில் அவன் குடியிருக்கும் வீடு அல்ல என்று நீதிமன்றம் வரைக்கும் வழக்கு சென்று தீர்ப்பு வந்திருக்கிறது. அது எனக்கும் தெரியும். அதை நான் மறுக்கவில்லை.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 நவம்பர் 11

இன்றைக்குத் தமிழகத்தில் பல கோவில்கள் போதிய நிதியாதாரம் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கோவில்களில் விலை உயர்ந்த விக்கிரகங்கள் இருக்கின்றன. பல பக்தர்கள் விலை உயர்ந்த நகைகளை அணிந்துகொண்டு கோவிலுக்கு வருகிறார்கள். எனவே கோவில்களில் போதிய அளவிற்கு விளக்குகள் இருக்கவேண்டியது அவசியமாகும். கோவில்களின் நிதியாதாரத்தை எடுத்துக்கொண்டு அவைகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. கோவில்களுக்கு வழங்குகிற மின்சாரத்தை டொமஸ்டிக் மின்சாரமாக நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்று அன்போடு வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனை உரிய வகையில் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தென்காசி தொகுதியில் பல கிராமங்களில் வோல்டேஜ் ட்ராப் என்பது இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினை தமிழகம் முழுவதும் இருக்கிற பிரச்சினையாகும். நேற்றைக்கு திருவான்மியூரிலும் இருந்தது. இதனைப் போக்குவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும். இதைப்பற்றி நான் விசாரிக்கிறபோது தமிழகத்தில் 30 கி.மீ. தூரத்திற்கு ஒரு சப்-ஸ்டேஷன் வைத்திருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இதையே 15 கி.மீ. தூரத்திற்கு ஒரு சப்-ஸ்டேஷன் என்று மாற்றுவதனால் செலவு அதிகமாகும், நான் மறுக்கவில்லை. ஆனாலுங்கூட அப்படி செய்வதால் பெரிய அளவில் வோல்டேஜ் ட்ராப்பை குறைக்கலாம், மிகப்பெரிய அளவில் ட்ரான்ஸ்மிஷன் லாஸ் குறையும் என்று சொல்கிறார்கள். அதை வாரியம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) குறுக்கீடுகள் இருந்த நேரத்தைக் கணக்கில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின்சார மீட்டர்களை வாங்க வேண்டுமென்றால் மின்வாரியத்தில் மீட்டர்கள் இல்லையென்று சொல்கிறார்கள். தனியார் கடையில் வாங்குவதென்றால் 3 மடங்கு, 4 மடங்கு விலை அதிகமாகச் சொல்கிறார்கள். எனவே இந்த நிலையில் ஏன் மின்வாரியமே மானோபோலி ப்ரொக்யூர்மெண்டாக மீட்டர்களை வாங்கி அத்தனை மின் பயனீட்டாளர்களுக்கும் தரக்கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன்.



1987 நவம்பர் 11] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

அடுத்து நாகப்பட்டினம், வடசென்னை, கடலூர், குன்ச்சல் ஆகிய இடங்களில் புதிய அனல் மின்நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

அதேபோல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளம் அணு மின் நிலையத்தினுடைய பணிகள் ஆய்வில் இருக்கின்றன என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். புதிய இடத்திலே நீங்கள் மின் நிலையத்தைத் துவங்குவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனாலும் ஏற்கெனவே இருக்கிற இடத்திலே உள்ள மின் நிலையத்தை நீங்கள் விஸ்தரிப்பு செய்தீர்களானால், அங்கே இருக்கின்ற அந்த இன்ஃப்ராஸ்ட்ரக்சர், அந்த குறிப்பிட்ட ஸ்டாஃப்பினுடைய தேவைகள், ஸ்டாஃப்பினுடைய வீட்டுத் தேவைகள் ஆகியவைகளைக் கவனிப்பதோடு அவர்களுடைய அன்றாட நடைமுறைச் சிக்கல்களை எல்லாம் தவிர்க்கவும் முடியும். எனவே இதற்காக புதிய இன்வெஸ்ட்மெண்டுகளை புதிய இடத்திலே செய்யாமல் சென்னை போன்ற இடத்திலேயோ அல்லது தூத்துக்குடியிலேயோ அல்லது அல்லது மேட்டூரிலேயோ அல்லது இன்னும் பிற இடங்களிலே உள்ள அனல் மின் நிலையங்களிலேயோ உற்பத்தித் திறனை நீங்கள் அதிகப்படுத்தினீர்களானால், அதன் மூலமாக மின்சார இலாகாவிற்கு அதிகமான பலன், மின்சார இலாக்கா சேமிப்பு கிடைக்கும். எனவே இந்த நேரத்திலே இதை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று நான் இந்த மன்றத்தின் மூலமாகத் என்னுடைய ஆலோசனையாக தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல் மின்சார இணைப்பைப் பற்றி அமைச்சர் அவர்கள் அளித்த அந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. நாமே சில தவறுகளைச் செய்கிறோம். விளக்குகள் தேவையில்லை என்றால் அதை நாம் நிறுத்துவதில்லை. அதேபோல் மின் விசிறி தேவையில்லை என்றால் அதை நிறுத்துவதில்லை.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1987 நவம்பர் 11

எனவே இதன் மூலமாக தேவையில்லாமல் மின்சாரம் வீணாகிறது. லெனின் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்,

"Give me electricity and men, I will give you a revolution"

என்று. அந்த அளவிற்கு மின்சாரத்தினுடைய தேவை மனித வாழ்க்கையோடு ஒன்றிய மிக முக்கியமான தேவையாக இருக்கிறது. இதை விளம்பரப்படுத்துகிறோம் என்று சொல்கிறார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தமிழக அரசினுடைய தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்தோடு மின்சார வாரியம் இணைந்து சுமாராக எட்டாவது வகுப்பு படிக்கின்ற மாணவனுக்கு மின்சாரத்தினுடைய அவசியத்தைப் பற்றியும்; மின்சாரத்தினுடைய தேவையைப் பற்றியும், அதனுடைய பலனைப் பற்றியும், மின்சாரத்தை மிச்சப்படுத்த வேண்டிய அவசியத்தைப் பற்றியும் ஆண்டுதோறும் தொடர்ந்து பாடத்திட்டத்திலே சொல்லிக் கொடுப்போமேயானால், மின்சாரத்தை மிச்சப்படுத்தவேண்டும் என்ற அந்த உணர்வை அவனுடைய உள்ளத்திலே ஏற்படுத்துவோமேயானால், அவன் பெரியவனாக வருகிறபோது அவனும் பின்னாலே வருகின்ற தலைமுறையினரும் இதன் மூலமாக நல்லமுறையில் செயல்பட முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தியாவிலே இருக்கிற 69 அனல் மின் நிலையங்களிலே தமிழகத்திலே இருக்கிற தூத்துக்குடி 76 சதவீதம் பயன்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். இருந்தாலும் கூட, அண்மையிலே இருக்கிற நெய்வேலியில் அது 100 சதவீதத்திலே இயங்கிக் கொண்டு இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த 76 சதவீதம் என்பது மற்றவற்றை விட உயர்வாக இருந்தாலும், இந்த மின் நிலையம் 100 சதவீதத்தை எட்ட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். தமிழகம் முழுவதும் மின்சார இணைப்புக்காக கிணறுகளை வெட்டுகிறபோது, அதற்கு ஒரு மினிமம் டிஸ்டன்ஸ்



1987 நவம்பர் 11] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

என்று வைத்திருந்தாலும்கூட, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக பாலாறு சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களிலேயே வட ஆற்காடு மாவட்டத்தில்தான் விவசாயம் கிணற்றுப் பாசனமாக இருக்கிற காரணத்தால், அன்டர்கிரவுன்ட் வாட்டரை நம்பி இருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிர்வேலு அவர்களுடைய வேண்டுகோளை நான் இந்த மன்றத்திலே தெரிவிக்க விரும்புவது, பாலாறு பேசினுக்கு மட்டுமாவது நீங்கள் ரிலாக்சேசன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீது நான் என்னுடைய உணர்வுகளை இந்த மன்றத்திலே பகிர்ந்து கொள்வதிலே பெருமைப்படுகிறேன். மின்சாரம் என்பது உடலிலே மயிர் இருப்பதைப் போல நாட்டுக்கு மின்சாரம். உயிரற்ற உடல் பிணம் என்று சொல்வார்கள். அதுபோல் மின்சாரமற்ற ஒரு நாடு, இருளாக, கட்டையாக, இயங்க முடியாததாக இருக்க முடியும். ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை, பல்வேறு வகையிலே தேவையானதாக மின்சாரம் இருக்கின்றது என்பதையும், ஒரு நாட்டின் பலம், சக்தி, ஒளி, ஒலி, வளர்ச்சியாவும் மின்சாரமாக இருக்கின்றது. என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது. அதே நேரத்திலே சுதந்திர நாட்டிலே பல்வேறு ஆட்சிகள் நடைபெற்று இருக்கின்றன. சாதாரணமாக ஆண்டுதோறும் எத்தனை முறை மின் வெட்டுகள் வந்து மக்களை அலைக்கழித்து இருக்கின்றன என்ற பட்டியல் ஏராளமாக நம்மிடத்திலே இருக்கிறது.

தமிழ்நாட்டிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சி செய்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டது.

அணையில் தண்ணீர் இல்லை, விவசாயம் பாதிப்பு, கால்நடைத் தீவனம் கிடைப்பதில்லை. அது வேறு நாட்டுக்குப் போகிறது. மாடு மற்ற மாநிலங்களுக்குச் செல்கிறது; மக்களே வேறு மாநிலங்களுக்கு வேலைத் தேடிச் சென்று கொண்டிருக்கிறார்கள். குடிக்கவே தண்ணீர் இல்லை. தண்ணீரை லாரிகளிலே கொண்டு வந்து இங்கே சப்ளை செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், குடிநீருக்காக கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கக்கூடிய சூழ்நிலையில் எவ்வளவோ நேரத்தையும், கோடிக்கணக்கில் ரூபாயையும் அதற்காக செலவழித்துக்கொண்டு இருக்கிறோம் என்று சொல்லக்கூடிய குற்றச்சாட்டுகளுக்கு இடையில் அ.இ.அ.தி.மு.க. அரசில் குடிசைகளுக்கு மின் ஒளி வழங்கி, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி, பல்வேறுவகையில் தமிழ்நாட்டு மாந்தர்களுக்கு சலுகைகளையும், உதவியையும் கொடுத்து, கிராமந்தோறும் இந்திய துணைக் கண்டத்திலேயே மின்சாரத்தை கொடுத்த ஒரு நாடு தமிழ்நாடு என்ற பெருமையைப் பெற்று, இன்றையதினம் அகில இந்தியாவிற்கே ஒரு முன்னோடியாக, பவர் கட் அத்தியாவசிய பொருட்களுக்கு இல்லை என்று சொல்லக்கூடிய வகையில் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வாரியம் அந்த வகையில் பணி புரிந்து தமிழ்நாட்டில் இருக்கின்ற மற்ற வாரியங்களுக்கு மட்டும் அல்லாமல், இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களில் இருக்கின்ற வாரியங்களுக்கு எல்லாம் வழி காட்டியாக, முன்னோடியாக தமிழ்நாட்டு மின்சார வாரியம் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, இங்கே பவர் கட் இல்லை என்பதால் தொழிலுக்கு தடை இல்லை, விவசாயத்திற்கு பாதிப்பு இல்லை, மக்களை புழுக்கத்தில் விடவில்லை, விழாக்களை தடுக்கவில்லை, ஆக்கப்பூர்வமான பணிகளை தடுக்கவில்லை. அப்படிப்பட்ட நிலையில் தேவையான மின்சாரத்தை வழங்கி மிகப்பெரிய ஒரு மறுமலர்ச்சியை அ.இ.அ.தி.மு.க. அரசு நாட்டில் உருவாக்கியிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள நான் பெருமைப்படுகிறேன்.



அது மட்டும் அல்ல, தமிழ்நாட்டிலே இருக்கின்ற மின்சார வாரியம்தான் அதனுடைய நடைமுறைக்காக, அதனுடைய செய்கைகளுக்காக, அதனுடைய சேவைக்காக, அதனுடைய உற்பத்திக்காக உலக அரங்கிலே இன்றையதினம் பெரும் பெயரைப் பெற்று இந்திய துணைக்கண்டத்திலே மத்திய அரசின் பரிசைப் பெற்று இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எண்ணூர் அனல் மின் நிலையத்தின் நல்லசேவைக்காக 1985 ஆம் ஆண்டு 3.6 இலட்சம் ரூபாயும், 1986 ஆம் ஆண்டு 5.4 இலட்ச ரூபாயும் இந்திய அரசால் பரிசு அளிக்கப்பட்டது. இந்த தமிழ்நாடு மின்சார வாரியம் அதை பெற்று இருக்கிறது என்பதை இங்கே வைப்பதிலே நான் பெருமைப்படுகிறேன்.

அது மட்டும் அல்ல, தூத்துக்குடி அனல் மின் நிலையம் 1984 ஆம் ஆண்டில் 6 இலட்ச ரூபாயையும், ஒரு கேடயத்தையும் பெற்று இருக்கிறது. 1986 ஆம் ஆண்டு 10 லட்ச ரூபாயை மின் உற்பத்தி திறனுக்காக பரிசாக மத்திய அரசிடமிருந்து பெற்று இருக்கிறது என்று சொன்னால் இதன் சேவையை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அது மட்டும் அல்ல, இவ்வளவு பெரிய கடுமையான, வரலாறு காணாத வறட்சி இந்த நாட்டில் இருந்து கொண்டிருக்கிறபோது இந்தியப் பிரதமரே விமானத்தில் பறந்து வந்து, பகுதி, பகுதியாகச் சுற்றிப் பார்த்து இந்த அளவுக்கு வறட்சி இருக்கிறது என்று எண்ணி, தேவையான அளவுக்கு உதவி செய்யக்கூடிய அளவுக்கு மன வலிமை பெற்றிருக்கக்கூடிய அந்த நேரத்தில், பவர் என்று வருகிறபோது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதிலே வாரியம் தன்னுடைய கடமையை மிகச் சிறப்பாக நடத்தி வந்திருக்கிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

1977—1987-லே மாநில பொருளாதார முன்னேற்றத்தில் மின்சார வாரியம் பெரும் பங்கு புரிந்து இருக்கிறது இதுவரையில். அதற்குப் பிறகு, அந்த காலத்திலே 1120 மெகா வாட் மின்

உற்பத்தி சேர்க்கப்பட்டது. 1986-87-ல் மொத்தம் மின் உற்பத்தி 3987 மெகோ வாட் ஆகும். அது மட்டும் அல்ல 10 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு 8,023 மில்லியன் யூனிட்டாக இருந்தது. இப்போது அது 14,852 மில்லியன் யூனிட்டாக அதிகரித்து இருக்கிறது. இவ்வாறு பொதுமக்களுக்கு சேவை அதிகமாக கிடைத்துள்ளது. இந்த வளர்ச்சி பல்வேறு வகையில் நாம் செய்கின்ற புதுமையான மாற்றம் காரணமாக ஏற்பட்டிருக்கிறது.

1976-77-ல் 46 சதவீதமாக இருந்தது. 1986-87-ல் 64.61 சதவீதமாக பிளான்ட் லோடு பேக்ட்டர் உயர்ந்து இருக்கிறது. இந்த மின் நிலையத்தினுடைய பிளான்ட் லோடு பேக்ட்டர் உயர்ந்து இருக்கிறது. இது இந்திய நாட்டில் உள்ள மற்ற மின்சார வாரியங்களுடன் ஒப்பிடுகையில் நமது வாரியம் 3-வது இடத்தைப் பெறுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்ல, இந்தியாவிலேயே மிக நல்ல முறையில் இயங்கக்கூடிய வாரியமாக நம்முடைய மின்சார வாரியம் இருக்கிறது. 1976-77-ல் 2.85 லட்சம் கிலோ மீட்டராக மின்சார பாதை இருந்தது. 1986-ல் மார்ச் மாதம் முடிய அது 3.72 கிலோ மீட்டராக கொடுத்து இருக்கின்றவகையில் விரிவாக்கப்பட்டிருக்கிறது, நாம் இதுவரையில் உற்பத்தியை பெருக்கி இருக்கிறோம். தேவையை பூர்த்தி செய்து இருக்கிறோம், மின் வெட்டை குறைத்து இருக்கிறோம், பரிசைப் பெற்று இருக்கிறோம். பல்வேறு வகையில் புதிய புதிய தேவையை பெருக்கியது மட்டும் அல்லாமல், தேவைக்கு கொடுத்தது மட்டும் அல்லாமல், இகிலே வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கக்கூடியவர்களுக்கு மின்சாரம் இலவசமாக கொடுத்து இருக்கிறோம்.

(பிற்பகல் 12-10)

அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் மிகப் பெரிய அளவிலே, 1976-77-ல் 304 சிறு நிலையங்கள் இருந்தன என்று சொன்னால், அது இப்போது 472 ஆக உயர்ந்து உள்ளன. மின்சாரம் உபயோகிப்பவர்களின் எண்ணிக்கை 1976-77-ல்





32.23 இலட்சம் என்று சொன்னால், 31—3—1987 வரை 67 இலட்சமாக உயர்ந்திருக்கிறது. இவையெல்லாம் தனி மனிதன் வருமானமல்ல. ஒரு நாட்டினுடைய வளம், தமிழகத்திலே ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளவர்களின் குறிக்கோள்களை வைத்து, இலட்சியங்களை வைத்து, எண்ணங்களை வைத்து, விருப்பு வெறுப்பின்றி நிறைவேற்றுவதற்கு எந்தெந்த வகையில் செய்ய முடியுமோ, அந்த வகையிலே முயற்சி எடுத்து, அதிலே இந்தியாவில் நாம் முதலிடம் பெற்றிருக்கிறோம் என்று சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

கிராம மக்களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் தமிழக மின் வாரியம் முதலிடம் வகிக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள மாநிலங்களிலே இருக்கின்ற கிராமங்களுக்கு இந்த மின் இணைப்பு கொடுப்பதிலே, முன்னுரிமை பெற்று முன்னணியில் இருக்கின்ற பெருமையைப் பெற்றிருப்பது நம்முடைய மாநிலம் தான். மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருப்பது தமிழ்நாடுதான்.

ஆதிதிராவிடர்களுக்கு, கிராமங்களிலே உள்ள மக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் தமிழக அரசு மிக அதிக அளவிலே கொடுத்தும், இந்த நாட்டிலே எல்லா விவசாயிகளுக்கும் தேவையான அளவிற்கு, இங்கே இருக்கின்ற சிறு விவசாயிகளுக்கு எல்லாம் பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்தும் தமிழக அரசு பெருமையைப் பெற்றிருக்கிறது. எல்லா தெரு விளக்குகளுக்கும் ட்யூப் லைட் போட்டிருக்கிறோம். குண்டு பல்ப் என்று இருப்பதை மாற்றி, ட்யூப் லைட், அதாவது குழல் விளக்காக மாற்றி எப்போதும் நல்லமுறையில் அந்த கிராமப்புற மக்கள் இன்பத்தை அடைய வேண்டுமென்ற வகையில் ஏற்பாடு செய்திருப்பது தமிழக அரசுதான். 67 இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு இந்திய துணைக்கண்டத்திலே மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்திய துணைக் கண்டத்திலே, ஆறில் ஒரு பங்குக்கு மேலாக தமிழகத்திலே மட்டும் கொடுத்திருக்கிறது என்கின்ற பெருமையை நாம் சேர்த்திருக்கிறோம் என்பதனை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிசைகளுக்கு மின் இணைப்பு 7.49 இலட்சம் கொடுத்திருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இன்றைய நிலைமையில், இந்தியாவிலே, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக பல்வேறு புதிய புதிய வகைகளிலே காற்றாலை மூலமாக, 'Photo Voltaic Street Light Systems' என்ற முறையின் மூலமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. குக்கிராமங்களுக்கும், கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து, அதிலேயும் நாம் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதனை நான் இங்கே சொல்வதிலே பெருமைப்படுகிறேன்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், இன்ன பிற பிரச்சினைகளை இங்கே இருக்கின்ற நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்த அடிப்படையில் இந்த மின் வாரியம் தமிழக அரசிற்கு அத்தாட்சியாக, அடையாளமாக, நல்ல அரசுக்கு இது ஒரு இலக்கணமாக இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது மேலும் பல்வேறு வகையிலே உயர் மட்டத்திலே மின் துறையிலே அவர்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இப்போது இருக்கின்ற சேர்மன் அவர்கள் மிக நல்ல முறையில் அதனை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். பக்தி என்று சொன்னால் யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. பரிகாசம் செய்வார்கள். இதையே சக்தி என்று சொன்னால் சந்தடி இல்லாமல் காரியத்தை செய்கிறார்கள். இந்தக் காரியத்தை யாரிடத்தில் ஒப்படைத்து, இந்த வேலையை வாங்கி, நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி உண்மையான ஒரு நல்ல நிலைமைக்குக் கொண்டு வரமுடியுமோ அதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்திலே கிராமிய மட்டத்தில் இன்னும் சில 'டிசிப்ளினரி ஆக்ஷன்' என்று சொல்லக்கூடிய வகையில், சில வழிமுறைகளைக் கையாளவேண்டும். இந்த வாரியத்திலே இருந்தாலும் சரி அல்லது அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் தவறான பாதையில், தவறான முறையில் செல்கின்றபோது, உடனே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய





வகையில் நிலைமை அமைய வேண்டும். மது அருந்தி ஒருவன் பணி புரிகிறான் என்று சொன்னால், அவனை வேலை நீக்கம் செய்யவேண்டும் என்ற நிலைமை வரவேண்டும். கிராமப்புறத்திலே கீழ் மட்டத்திலே இருக்கக்கூடிய பலர் பொறுப்புகளிலேயிருந்து தவறக்கூடிய வகையில் நடைமுறையில் செயல்படுகிறார்கள். அதனை உயர்மட்டத்திற்குத் தெரிவிப்பதற்குக்கூட வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. அப்படிப்பட்ட நிலைமையிலே அதைக் களைந்தெறியக்கூடிய வகையில் பணிபுரிய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், தனியார் தொழிற்சாலைகளிலே அவர்களுக்கு எல்லாம் அவ்வப்போது தேவையான மின்சாரத்தை அவர்களே தயாரிப்பதற்கான வழிவகைகளை நாம் செய்தாக வேண்டும். புதிய புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து, அதற்குண்டான பரிசை நாம் கொடுத்தாகவேண்டும். அப்படிக் கொடுத்தாலொழிய அவை நல்ல முறையில் செயல்பட வாய்ப்பாக அமையாது. அதற்கு புதிய சிந்தனை தேவை. சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தை குறைந்த செலவிலே இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அதை மேலும் முறையாக, குறைந்த செலவிலே தயாரிப்பது எப்படி என்பதற்கான சிந்தனை வளரவேண்டும். அப்படிப்பட்ட நிலைமைக்கு நாம் வந்தாலொழிய, இவை நல்லமுறையிலே மேலும் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையிலே இருக்காது என்று இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு திட்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். இங்கே பல்வேறு திட்டங்களைப் போட்டு டெல்லிக்கு அனுப்பி வைத்து இன்னும் வராமல் இருக்கிறது என்ற குறையைச் சொன்னபோது நம்முடைய காங்கிரஸ் நண்பர்கள் கூட இதை அனுப்பினீர்களா, மீண்டும் போய் கேட்டீர்களா, அவர்களைப் பார்த்தீர்களா என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். நாம் இருவருமே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். ஏன் மத்திய

[டாக்டர் கே. சமரசம்] [1987 நவம்பர் 11

அரசே இந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான். இரண்டு பேருக்குமே ஓட்டு போட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த மக்களைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு, உதவி செய்ய வேண்டிய பொறுப்பு, காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இரண்டு அரசுக்குமே இருக்கிறது என்பதை மனதிலே வைத்து இங்கே நாம் சொல்கிறோம் என்று சொன்னால், கேட்கிறோம் என்று சொன்னால் அது ஆண்டான் நாம் அடிமை என்ற நிலையிலே அல்ல. நாம் கேட்பதெல்லாம் நம்முடைய உரிமையை கேட்கிறோம். நாம் எதற்கும் இச்சைப் படவும் இல்லை; பிச்சை கேட்கவும் இல்லை. வரி இரண்டு அரசுமே வாங்குகிறது. வாங்குகின்ற வரியிலிருந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதிலேதான் நாம் பேசிக்கொண்டு இருக்கிறோமே தவிர, மாநில அரசுக்கு எவ்வளவு அதிகாரம் கிடைக்கின்றதோ அவ்வளவு அதிகாரத்தின் அடிப்படையிலேதான் இங்கே இருக்கின்ற மற்ற கட்சிகள சிறப்பாக இருக்க முடியும்; தேர்தலிலே தொடர்ந்து நிற்க முடியும்; வெற்றி பெற முடியும; மக்களைச் சந்திக்க முடியும். அந்த அடிப்படையில் நம்முடைய மனம் பரவலாக்கப்படவேண்டும். அந்த வகையில் நாம கை கோர்த்து இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் இருந்தால் ஒழிய நாடு சுபிட்சம் அடையாது. ஆகவே ஆத்திரப்படுவதற்கு முன்பாக, அந்த வகையிலே இருக்க வேண்டும் என்று நான் அதிலே சில நண்பர்கள் இருக்கக்கூடியவர்களைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒகேனக்கல் மின் திட்டம் என்பது கைவிடப்பட்டதாக இல்லை. அதே நேரத்தில் நிறைவேற்றக்கூடியதாக இன்னும் இல்லாமல் இருப்பது மிக மிக சங்கடமான ஒன்று. காவேரிப் பிரச்சினை வேறு. அதை கவனத்தில் வைக்காது இந்த ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதிலே கவனம் செலுத்த வேண்டும். இது வந்தால், இதிலே பல்வேறுவிதமான ராஜ தந்திரத்தோடு தமிழ்நாடு வளர்ச்சி பெறுவதற்கும் அதே நேரத்தில் கர்நாடக அரசுகூட மீண்டும் ஒளியை பெறுவதற்கும் வாய்ப்பு உண்டு. இதை பொறுத்தவரையில் கிராமத்திலே ஒன்று சொல்வார்கள். 'கடலை கொல்லையிலே களை எடுத்ததாகவும்



1987 நவம்பர் 11] [டாக்டர் கே. சமரசம்]

இருக்க வேண்டும்; கன்றுக்குட்டிக்கு புல் எடுத்ததாகவும் இருக்க வேண்டும்' என்று சொல்வார்கள். இந்த பாலிசிதான் ஒகேனக்கல் திட்டத்திற்கு உதவும். அந்த வகையிலே இருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியிலே முதல் சுரங்கம் முழுவதும் நேரு கால ஒப்பந்தப்படி நமக்கு கிடைக்கிறது. இரண்டாவது சுரங்கத்தில் வெட்டி எடுப்பதில் 28 சதவிகிதம் கிடைக்கிறது. ஆனால் அதில் கிடைக்கிற உபரியை மற்ற மாநிலங்களுக்கு பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மாறுபட வேண்டும். மூன்றாவது சுரங்கம் முழுவதுமாக நமக்குக் கிடைக்க வேண்டும் என்று சொல்வது நாம் இனாமாக அல்ல—நிலக்கரியை வாங்குவது மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக. மின் திட்டத்தை நமது பொறுப்பிலே, நமது செலவிலே வாரியமே நடத்தும். தேவையான நிலக்கரியை மட்டும் கொடுத்து உதவுவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும். இங்கே இருக்கின்ற இரக்கம் உள்ள காங்கிரஸ் நண்பர்களும் நேரம் வரும்போது அங்கேயே பேச வேண்டும். அப்படிப் பேசி வருகின்ற நல்ல பலன் நம் எல்லோருக்கும், பொதுவாக நாட்டு மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

கண்டினியுயஸ் பிராசஸ் என்று சொல்லக்கூடிய முறையில் வேலை செய்யும் மில்களான பேப்பர் மில், இரும்பு வார்ப்பு ஆலைகள், இப்படிப்பட்டவைகளுக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டும் பவர் கட் இருக்கக்கூடாது. அது இல்லாமல் பார்த்துக்கொள்வது மிக மிகத் தேவை. இல்லாவிட்டால் லட்சக்கணக்கான ரூபாய்கள் அவர்களுக்கும் நஷ்டம்; உற்பத்தியில் இந்த நாட்டுக்கும் நஷ்டம். ஆகவே அதனை வரையறுத்து எப்படிக் கொடுக்க முடியுமோ அந்த வகையிலே கொடுத்து உதவ வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வணங்கி, விரும்பி கேட்டு, மேலும் பல நல்ல கருத்துக்கள் இருக்கின்றன; மற்றவர்கள் சொல்ல இருக்கின்ற காரணத்தினால், இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். ரெத்தினராஜ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1986-87 ஆம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை குறித்து சட்டப்பேரவை விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். புனல் மின் நிலையம் மூலமாகவும், அனல் மின் நிலையம் மூலமாகவும், அணு மின் நிலையம் மூலமாகவும் தற்போது தமிழ் நாட்டின் தேவை முழுவதுமாக பூர்த்தி செய்துகொள்ளுகின்ற அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படாமல், தமிழ்நாட்டின் தேவைக்கு கிட்டத்தட்ட பாதி அளவிற்குத்தான் உற்பத்தி யாகிறது என்ற நிலைமை தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு 40 சதவிகிதம் மின் வெட்டு என்ற நிலைமையும், அதே நேரத்தில், கிராமப் பகுதிகளில் மணிக் கணக்கில், நாள் கணக்கில் மின் வெட்டுக்கள் என்ற நிலைமையும் தமிழகத்தில் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்பதை மிக்க வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வதாக அரசு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனுமதியைத் தரவில்லை என்ற குறிப்பை நான் காண்கிறேன். குறிப்பாக, பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டத்திற்கும், பரளையாறு புனல் மின் திட்டத்திற்கும், சாத்தனூர் புனல் மின் திட்டத்திற்கும், கீழ்பவானி அணை வலது கரைக் கால்வாய் புனல் மின் திட்டத்திற்கும், பவானி கட்டளை அணை புனல் மின் திட்டத்திற்கும். அத்துடன் கடலூர் அனல் மின் நிலையத்திற்கும், கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கும், இந்த சர்க்காரால் அனுப்பி வைத்த திட்டங்கள் மத்திய அரசின் அனுமதிக்காக, பல மாதங்களாக அனுமதி கிடைக்காமல் மத்தியிலே இருந்து கொண்டு இருப்பதை அமைச்சரவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். மத்திய சர்க்காரை வலியுறுத்தி, அந்த அனுமதிகளை விரைவில்





பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும், மத்திய சர்க்கார் இத்தகைய காலதாமதத்தைச் செய்யக்கூடாது என்றும் நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாதான் இருந்தாலும், மத்திய சர்க்கார் அனுமதி பெற்ற பிறகுங்கூட, சில திட்டங்களை நிறைவேற்றுவதில் நம்முடைய அரசு காலம் கடத்துவது, காலம் தாழ்த்துவது மிகுந்த ஏமாற்றம் தருவதாக இருக்கிறது.

1986 ஆம் ஆண்டு சென்னையை அடுத்த புலிக்காட்டில் வடசென்னை தெர்மல் நிலையம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. அதோடு மட்டுமல்லாமல், 150 கோடி ரூபாய் உலக வங்கிக் கடனும் அனுமதிக்கப்பட்டு இன்றைக்கு நாம் அந்தக் கடனுக்கான வட்டியைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம். ஓராண்டுக் காலமாக, அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்குக் கூட முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அரசு நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில் இத்தனை காலச் சுணக்கத்திற்கு என்ன காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் . . .

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பிற்பாடு எனது உரையில் பதில் சொல்ல இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்கிறேன். வடசென்னை அனல் மின் நிலையம், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் துவக்கப் படுவதில் கால தாமதம் இருப்பதற்குக் காரணம் சென்னை உயர்நீதிமன்றத்தில் சிலர் வழக்குத் தொடுத்ததினால்தான். இரண்டு தரப்பிலும் ஆர்க்யூமெண்ட்ஸ் முடிந்து விட்டன. தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாராயணசாமி நாயுடு அவர்கள் அனுமதி பெறாமல் ஒரு கட்டிடத்தைக் கட்டினார் என்பதற்காக, கட்டிடத்தை அரசு தகர்த்து எறிந்தது. அதேநேரத்தில் இது ஒரு ஊராட்சிப்

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 நவம்பர் 11

பகுதியில் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டி ஒரு வியாபார ஸ்தலமாக அதை நடத்தி வருகிறார்களே, அதற்கு எந்த வகையில் அரசு அனுமதி கொடுத்தது அல்லது அந்த ஊராட்சி மன்றம் அனுமதி கொடுத்தது? அந்த ஊராட்சியின் அனுமதி பெறாமல் கட்ட அனுமதித்தது நியாயம்தானா என்று இந்த நேரத்தில் கேட்டு, வழக்கை விரைவில் நடத்தி, அந்த மின் நிலையத்தை உடனே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில், ஒரு குதிரை வேகத்திற்கு ரூபாய் 75 என்ற வகையில் மின்சாரத்தைத் தருகிறோம் என்று அரசு விளம்பரம் செய்கிறது. அரசு விளம்பரத்திற்காக மட்டும் இந்தக் காரியத்தைச் செய்கிறதே தவிர, நிச்சயமாக விவசாயிகளின் நலனுக்காகச் செய்யவில்லை என்பதை இந்தச் சபைக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

5 குதிரை சக்தி கொண்ட ஒரு மோட்டாரை வைத்திருக்கிற ஒரு விவசாயி, 6 மாதத்திற்கு ஒரு முறை ரூபாய் 375 கட்டவேண்டும். அவன் பயன்படுத்தினாலும், பயன்படுத்தாவிட்டாலும், அவனுடைய கிணற்றில் தண்ணீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மின்சாரத் தடை காரணமாக மோட்டார் ரிப்பேர் ஆகியிருந்தாலும், அவன் அந்த ரூ. 375-ஐக் கட்ட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறான் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பல்வேறு பகுதிகளில் விவசாயிகள், ஒரு மாதம், இரண்டு மாதம் தங்களுடைய விவசாயத் தேவைகளுக்காக மட்டும் மோட்டார்களைப் பயன்படுத்துகிற நிலைமை இன்றைக்கு இருக்கின்றது. ஆனால், அவன் மாதாமாதம் பயன்படுத்துவதாக வைத்துக்கொண்டு, மீட்டர் இல்லாமல், அவன் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்துகிறான் என்று அளந்து பார்க்காமல், ஒட்டு மொத்தமாக ஒரு குதிரை வேகத்திற்கு 75 ரூபாய் என்று வசூல் செய்வது நியாயமல்ல. எனவே மீட்டர் முறையை உடனடியாக அமல்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1987 நவம்பர் 11] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

அதைப்போல ஜூன் மாதத்தில் ஒருவன் மின் இணைப்பு பெறுவானேயானால், இந்த ஒரு மாத காலத்தில் அவன் 6 மாத காலத்திற்கான ரூ. 375-ஐ கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதையும் ஜூன் மாதத்திலே, ஜூலை மாதத்திலே மின் இணைப்பு பெற்றவர்கள் பலர் இங்கே தகவல்களைத் தந்திருக்கிறார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், குமரி மாவட்டத்தில், கடந்த வறட்சி நேரத்தில் குடிநீருக்காக விவசாயக் கிணறுகளிலிருந்து தண்ணீரைப் பெற்றோம். நகராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் குடிநீரை விநியோகம் செய்வதற்கு விவசாயக் கிணறுகளைப் பயன்படுத்தினார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, விவசாயக் கிணறுகள் வைத்திருந்த விவசாயிகள், விவசாயத்திற்காகப் பயன்படுத்திய தண்ணீரை, குடிநீருக்காகக் கொடுத்தார்கள். அவர்கள் குடிநீருக்காகக் கொடுத்த காரணத்தால் அது கமர்ஷியல் டாரிப்பில் வரவேண்டுமென்றும், அதற்காக கமர்ஷியல் டாரிப் பிளஸ் ஃபைன் என்ற வகையில் ஒவ்வொரு விவசாயிக்கும் 20,000 ரூபாய், 40,000 ரூபாய் என்று, தண்ணீரைத் தாராளமாக குடிநீருக்காக வழங்கியவர்களுக்கு ஃபைன் போடப்பட்டு, வசூல் செய்வதற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே குடிநீருக்காக தண்ணீரைத் தந்தவர்களுக்கு ஃபைன் போடாமல், அவர்களுக்கு அதிகப்படியான 'டாக்ஸ்' போடாமல், அவர்கள் விவசாயக் கிணற்று நீரை நமக்கு தந்த காரணத்தினால் அவர்களுக்கு அபராதம் விதிக்காமல் இருக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் நான் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சில விவசாயிகள் ஒரு கிணற்றை வைத்திருப்பார்கள். அந்த விவசாயி தனக்குப் பக்கத்திலே இருக்கிற தன்னுடைய பங்காளிக்கு அல்லது இன்னொருவருக்கு, பாசனத்திற்காக வறட்சி நேரத்தில், அவனுடைய பயிர் பட்டுப்போகக்கூடாது என்று கருதி, கருணையுள்ளத்தோடு, தண்ணீர் கொடுக்கிறபோது, அதை கமர்ஷியல் டாரிப்பில் கொண்டு வருகிற ஒரு நிலைமையும், அந்த விவசாயி அப்படிக் கொடுத்துவிட்ட காரணத்தினால் அவனுடைய மின் இணைப்புக்கு கண்டிப்பு எடுக்கிற நிலைமையும், அவனுக்குக் கொடுக்கப்பட்ட மின்

இணைப்பை எடுத்து விடுகிற ஒரு நிலைமையும் இன்றைக்கு இருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டும். ஏனென்று சொன்னால், இன்றைக்கு, கிரௌண்ட் வாட்டர் டைரக்டரேட், கிட்டத்தட்ட 700, 800 மீட்டர்களுக்கு இடையில் கிணறுகளை அமைக்கக் கூடாது என்கின்ற ஒரு கட்டுப்பாட்டை வைத்திருக்கிறது. அந்தக் கட்டுப்பாட்டை வைத்திருக்கின்ற காரணத்தினால் ஒரு விவசாயி ஒரு கிணற்றைப் போட்டுவிட்ட பிறகு, பக்கத்திலே இருக்கிற விவசாயிக்கு கிணறு போடுவதற்கு, நிலவள வங்கிகளிடமிருந்து கடன் அனுமதி கிடைப்பதில்லை. இந்த நிலைமையில் பக்கத்து நிலக்காரர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதைக் கட்டுப்படுத்துகிற ஒரு நிலைமையை இங்கே ஏற்படுத்தக் கூடாது என்பதையும், இதையெல்லாம் போக்குவதற்கு மீட்டர் சிஸ்டத்தை கொண்டுவந்தால்தான் முழுமையாக விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இப்போது விவசாயத்தைப் பொறுத்தவரையில், விவசாயத்திற்கு மின் இணைப்பு கொடுப்பதாக இருந்தால் 3 ஹார்ஸ் பவர்-க்கு மேல், 5 ஹார்ஸ் பவர், 10 ஹார்ஸ் பவர் என்று எத்தனை ஹார்ஸ் பவரை வைத்துக்கொண்டாலும், அவர்களுக்கு 3-ஃபேஸ் லைனிலிருந்துதான் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. சிறிய தோட்டத்தை வைத்திருக்கிற ஒரு விவசாயிக்கு அல்லது சில மணி நேரமே அவனுடைய கிணற்றிலிருந்து தண்ணீரைப் பயன்படுத்த முடியும் என்ற நிலைமையில் இருக்கிற ஒரு சிறு விவசாயிக்கு, சாதாரண விவசாயிக்கு சிங்கிள் ஃபேஸ் லைனிலிருந்து ஒரு குதிரை சக்தி கொண்ட அல்லது இரண்டு குதிரை சக்தி கொண்ட மோட்டாரைப் பொருத்துவதற்கு நிச்சயமாக மின் [illegible] வசதி கொடுத்து, மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டு, விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் காலதாமதம் கூடாது. அதை தவிர்க்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையில், வறட்சி ஏற்பட்டபோது தஞ்சை மாவட்டத்தில் காவிரி தண்ணீர் வருவதற்கு இல்லாத நிலைமையில், அங்கேயிருந்த ஆழ்குழாய் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்காத



காரணத்தால் பல விவசாயிகளின் பயிர் பட்டுப்போய் பல நஷ்டங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் மின் இணைப்பு பெறுவதற்கு யாராவது மனு போட்டால், உனக்கு மின் இணைப்பு தருகிறோம், நீ தயார் நிலையில் இருக்கிறாயா என்று எழுத்துமூலம் கேட்கிறார்கள். ரெடினெஸ் சர்டிபிகேட் வேண்டுமென்கிறார்கள். மூன்று மாத காலத்திற்குள் அல்லது 90 நாட்கள் என்று, ஏதாவது ஒரு கால கட்டத்தைக் குறிப்பிட்டு, இத்தனை நாட்களுக்குள் அந்த சர்டிபிகேட்டைத் தராவிட்டால், தயார் நிலையில் இல்லாவிட்டால் உன்னுடைய மனு தள்ளுபடி செய்யப்படும் (Application will be rejected என்ற வகையில் அவர்களுக்குப் பதில் தரப்படுகிறது. ஒரு விவசாயி, வறட்சியான நிலையில், 5 ஆயிரம், 6 ஆயிரம் ரூபாய் அல்லது 7 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு மோட்டாரைத் திடீரென்று வாங்கிவிட முடியாத நிலைமையில், கடன் பெற்றாகிலும் வாங்கலாம் என்று அவன் இருந்தாலும், முடியாத நிலைமை இருக்கிறபோது, அவன் காலக்கெடு கேட்டால், அவனுக்கு அந்தக் காலக்கெடுவினை அளிக்க வேண்டும். அவனுடைய மனுவை மீண்டும் பரிசீலனை செய்வதற்கு, அவன் தயார் நிலையில் வைத்திருக்கிறபோது, உடனடியாக மின் இணைப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் வகை செய்யவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் தரப்படுகிறது என்று கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருந்தாலும், இதனால் பயன்பெறுகிறவர்கள் மிகச் சொற்பமே. சொல்லப் போனால் கிராமப் பகுதிகளில் இருக்கிற குடிசைகளுக்கு இன்னும் இலவச மின் இணைப்பு தரப்படாத நிலை இருக்கிறது. மேலும் இங்கே உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தில் வேஸ்டேஜ் நிரம்ப இருக்கிறது என்பதையும் குறிப்பில் பார்க்க முடிகிறது. இத்தகைய வேஸ்டேஜ்களைத் தவிர்க்கும் வகையில், கிராமப் பகுதிகளில் நிரம்ப டிரான்ஸ்பார்மர்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 நவம்பர் 11

கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தில் 75 சதவீதமும், அதைப் போலவே நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்தில் 28 சதவீதம் மட்டுமே தமிழகத்திற்குத் தரப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி மத்திய சர்க்காரிடம் கேட்டு முழுமையாக அந்த இடங்களில் உற்பத்தியாகிற மின்சாரம் தமிழ்நாட்டிற்கே கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் போலவே இயற்கை எரி வாயு மூலமாக நரிமணம், கோயில் களப்பால், புவனகிரி ஆகிய இடங்களில் உடனடியாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் சாதாரண ஏழை மக்கள், கிராமப்பகுதிகளில் இருக்கிற மக்கள் கஷ்டத்திற்கு ஆளாகாமல், மாதாமாதம் தங்களின் மின்சார கட்டணத்தைச் செலுத்துவதற்கு வகை செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 25,000 தொழிலாளர்கள் காண்ட்ராக்ட் லேபராக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் காண்ட்ராக்ட் லேபர் என்ற வகையில் வைக்காமல், நிரந்தரப் பணியாளர்களாக அவர்கள் ஆக்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

1984 ஆம் ஆண்டில் ஊதிய உயர்வுக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டும் 3 ஆண்டு காலமாக அந்த ஒப்பந்தம் அமுல்படுத்தப்படாத நிலையில் அவர்களுக்கு லீவ்-டிராவல் கன்செஷன், மெடிகல் கன்செஷன் போன்ற சலுகைகள் உரிய காலத்தில் கிடைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே மின்வாரியத்தில் பணி புரிகிறவர்கள், பணி புரியும்போது உயிர் இழப்பு ஏற்பட்டால் அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று ஆணை இருக்கிறது. இருந்தாலும் அப்படிப்பட்ட குடும்பத்தில் ஒரு கறவை மாடு வைத்திருந்தாலோ அல்லது சாதாரணமாக ஒரு சிறிய இட்டிலி கடை வைத்திருந்தாலோ வேலைவாய்ப்பு கொடுக்க மறுக்கப்படு



1987 நவம்பர் 11] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

கிறது. அதைப் போலவே கல்வித் தகுதி இல்லை என்ற காரணத்தால் சில குடும்பங்களில் வேலை கிடைக்காமல் பலர் கஷ்டப்படுகிறார்கள். 3,000 பேருக்கு மேல் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டாலும் கூட இன்னும் பலர் வேலை வாய்ப்பு கேட்டு மனு செய்திருக்கிறார்கள். அவர்களின் மனுவைப் பரிசீலனை செய்து அவர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, தொழில் துறையில் பின்தங்கியிருக்கிற பல்வேறு பகுதிகளிலும் பவர் ஸ்டேஷன்களை அமைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில் விளாத்திகுளம், கொளத்தூர் போன்ற பகுதிகளிலும், எட்டையாபுரம் பகுதியிலும் பவர் ஸ்டேஷன்களைத் தொடங்கி தொழில்களுக்கு மின்சாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பலர் 'டிக்' போன்ற நிறுவனங்களில் கடன் பெற்று, தொழிற்சாலையைக் கட்டி முடித்து விட்டு, இயந்திரங்களையும் வாங்கி வைத்த பிறகும், நீண்ட நெடுங்காலமாக மின் இணைப்பு கிடைக்காத நிலையில் இருக்கிற காரணத்தால் அவர்கள் எல்லாம் நிரம்ப நஷ்டம் அடைகிறார்கள். எனவே கடன் நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று தொழில் தொடங்கியிருப்பவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்வாரியம் சிறப்பாகச் செயல்பட்டாலும்கூட மத்திய அரசு நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கு பங்கு இருக்கிறது என்ற நிலையை உருவாக்கியிருப்பதைப் போல், மின் வாரியத்திலும் தொழிலாளர்களுக்கும் பங்கு என்ற நிலையை உருவாக்கி, பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களையும் அதில் இயக்குநர்களாக நியமிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் இந்தத் துறை இன்னும் சிறப்பான துறையாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லி, இன்றையதினம் இந்த மின் வாரியத்தில் 21 சீப் எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள்—அதாவது பெரிய அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1987 நவம்பர் 11

கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 6 சீப் என்சினியர்கள் அந்த வாரியத்தில் இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி தங்களுக்கு வேண்டியவர்களை நியமிக்க வேண்டும் என்பதால் 5 சீப் என்சினியர்களை நியமித்திருக்கிறார் என்று குறை சொல்லப்பட்டது. ஆனால் இன்றைய தினம் மின் வாரியத்தில் 21 சீப் என்சினீயர்கள் இருக்கிறார்கள். அதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. நிர்வாக வசதிக்காகவும், தேவைக்காகவும் சீப் என்சினியர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் அடிமட்டத்தில் இருக்கிற காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் 25,000 பேர்களையும் நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த சட்டமன்றத்தில், ஐந்தாயிரம் தொழிலாளர்களுக்கு இந்த ஆண்டு வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். வீடு கட்ட கடன்தான் வழங்கியிருக்கிறார்கள். அந்த வீடு கட்டும் திட்டம் எந்த நிலையிலே இருக்கிறது என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டு, இந்தத் துறை திறமையாகச் செயல்பட மின் உற்பத்தியைப் பெருக்க சர்க்கார் முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

* **திரு. மு. ஆறுமுகம்:** பேரவையினுடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரிய 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீதும், 1986-87 ஆம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் எனது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே ஒட்டுமொத்தமாக பேசிய உறுப்பினர்கள் போகின்ற போக்கில் புழுதி வாரி இறைத்துவிட்டுப் போவதைப் போல தமிழ்நாடு மின் வாரியம் தன்னுடைய மின் உற்பத்தி திறனை பெருக்க முடியாமல் இருக்கின்றது என்றும், அதே நேரத்தில் மற்ற மாநிலங்களைவிட மின் உற்பத்தி இங்கே மிகக் குறைவாக இருப்பதாகவும், அதே நேரத்தில் அதிகாரிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதாகவும் பேசினார்கள். தவறான புள்ளி விவரம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அவையை திசை



1987 நவம்பர் 11] [திரு. மு. ஆறுமுகம்]

திருப்பப் பார்க்கிறார்கள் என்று ஆரம்பத்திலே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். எந்தவொரு நிர்வாகத் திட்டமும் முழுமையாக வெற்றி அடைய வேண்டுமானால் அதிலே பணி புரியும் பணியாளர்களின் முழுமையான ஒத்துழைப்பு இருந்தால் தான் வெற்றி பெற முடியும் என்பதை உணர்ந்து, அங்கே உள்ள பணியாளர்களுக்கு—246.32 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்ட போதிலும்—இந்த ஆண்டு தகுதி பெற்ற பணியாளர்கள் அனைவருக்கும் 8.33 சதவீதம் போனஸ் ஆகவும், ரூபாய் 400 கருணை கொடையாகவும் வழங்கி, இந்தியாவிலேயே நஷ்டத்திலே செயல்படக்கூடிய எந்த நிறுவனமும் செய்ய முடியாத மிகப் பெரிய சாதனையைச் செய்திருக்கிறது என்றால் உண்மையிலேயே இது வரவேற்கக் கூடிய ஒன்றுதான்.

இங்கே பேசிய உறுப்பினர்கள், நாம் மின் உற்பத்தியில் பின் தங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அது மட்டுமல்லாமல் மைய அரசின் அமைச்சர்கள்கூட சில நேரங்களில் சொல்லுகிறார்கள். இந்த ஆண்டு எண்ணூர் அனல்மின் நிலையத்தில் மின் உற்பத்தி குறைந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். அதற்கெல்லாம் என்ன காரணம் என்பதைப் பற்றி நிந்திப்பவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நம்முடைய மின் உற்பத்தி குறைவுக்கே காரணம் மைய அரசு தான் என்பதை மீண்டும் வலியுறுத்திச் சொல்ல முடியும். காரணம், நம்முடைய மின் நிறுவனங்கள் பழுது ஏற்படக்கூடிய நேரத்தில் அதற்குத் தேவையான பாகங்களை செய்து கொடுக்கக்கூடிய பொறுப்பு மத்திய அரசின் நிறுவனமான பி.எச்.ஈ.எல். என்ற நிறுவனத்திடம்தான் ஒப்படைக்கப்படுகிறது. அவர்களிடம் ஆர்டர் கொடுத்தால் பத்து மாதங்கள், ஒரு வருடம், ஒன்றரை வருடம் என்று அவர்கள் காலம் கடத்துவதன் மூலம் நம்முடைய உற்பத்தியை பாதிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துகிறார்கள். எல்லோரும் திரும்பத் திரும்ப கீறல் விழுந்த கிராமஃபோன் ரிகார்டு போன்று பேசுகின்ற ஒரே காரணம் சுரமற்ற நிலக்கரியைக் கொடுக்கிறார்கள் என்பதுதான். இதன் காரணமாக நாம் நம்முடைய மின் உற்பத்தி குறியீட்டை எய்த முடியவில்லை, மின் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. மைய அரசால்

தரமுள்ள நிலக்கரியை கொடுக்க முடியவில்லையென்றால், வெளியே வாங்கிக்கொள்கிறோம் என்றாலும் விடமாட்டேன் என்கிறார்கள். கடவுள் மனிதனாகப்பிறந்து வந்து வேதனைப் பட வேண்டும் என்று பாடுவதைப் போல, இதிலேயே இருந்து கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று தரமற்ற நிலக்கரியை வாங்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இப்படி ஒரு தடை.

அது மட்டுமல்ல. சொன்னாலும் கோபித்துக்கொள் கிறார்கள். மத்திய அரசினுடைய அனுமதிக்காக பல்வேறு திட்டங்கள் போயிருக்கின்றன. அவை நீண்ட நெடிய தூக்கத்திலே இருப்பதால், தூக்க நிலையிலே இருப்பதால் தமிழக அரசின் பல ஆக்கத் திட்டங்கள் தேக்க நிலை அடைந்து கொண்டிருக்கின்றன என்பதை. எக்கத்துடன் கூறுவதைத் தவிர வேறு என்ன என்னால் சொல்ல முடியும்?

(பிற்பகல் 12-40)

தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற எல்லா நிறுவனங் களிலும் தலையாய நிறுவனம் இந்த தமிழ்நாடு மின் வாரியம்தான் என்பதை நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்தத் துறையிலும் இல்லாத முக்கியத்துவம் இந்தத் துறைக்கு உள்ளது. இன்றைக்கு ஆலைகளாக இருந்தாலும் சரி, தொழிற் சாலைகளாக இருந்தாலும் சரி; காடாக இருந்தாலும் சரி, வீடாக இருந்தாலும் சரி; தெரு விளக்கானாலும் சரி, ஒரு விளக்கானா லும் சரி, . . . (குறுக்கீடு)

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். எந்தத் திட்டம் பெண்டிங்காக இருக்கிறது . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் மின் துறையை குறித்த அறிக்கையிலேயே இருக்கிறது. எது எது எவ்வளவு ஆண்டுகளாக பெண்டிங்காக இருக்கிறது என்று அறிக்கையிலே இருக்கிறது. அதெல்லாம் பாயிண்ட் ஆஃப் ஆர்டரிலே வராது. (குறுக்கீடு)





**திரு. மு. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எந்தத் திட்டங்கள் என்று கேட்கிறார்கள். ஒகேனக்கல் திட்டம் 1964-ஆம் ஆண்டு மத்திய அரசின் இசைவிற்காக அனுப்பப்பட்டது. இன்னும் அது அசையவே இல்லை. 23 ஆண்டுகள் ஆகின்றது. (குறுக்கீடு) என்ன குறை? வேண்டாத மனைவி கால் பட்டால் குற்றம், கை பட்டால் குற்றம். (குறுக்கீடு) சண்முகா நதித் திட்டம் 1972-ல் அனுப்பப்பட்டிருக்கிறது. நெல்லித் துறைத் திட்டம் 1974-ல் அனுப்பப்பட்டிருக்கிறது. அமராவதித் திட்டம் 1979-ல் அனுப்பப்பட்டிருக்கிறது. பவானி—கட்டளை திட்டம் 1984-ல் மத்திய அரசினுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, அங்கேயே தூங்குகிறது. அப்படி தூங்கிக் கிடக்கக்கூடிய நிலையிலே, தொழிற்சாலைகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கிடைக்குமா என்று முதலீடு செய்தவர்கள் ஏங்கிக் கிடக் கிறார்கள். இந்த நிலைக்குக் காரணம் மத்திய அரசின் தூக்க நிலை என்றால் ஏன் கோபம் வருகிறது? இந்தத் திட்டங்கள் காவிரி நதி நீர்ப் பங்கீடு காரணமாகவும் தடைபட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். மத்திய அரசு ஏன் காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் உடனடி தீர்வு காணவில்லை? (குறுக்கீடு) பேரவைத் துணைத் தலைவரவர்களே, கடந்த 10 ஆண்டுகளில் . . . .

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களே கேள்வியை யும் எழுப்பி, பதிலையும் சொல்லிவிட்டார்கள். ஏன் திட்டங் களுக்கு இசைவளிக்க காலதாமதம் ஆகிறதென்றால் காவிரி நதி நீர்ப் பிரச்சினை சம்பந்தப்பட்டிருப்பதால், முடியவில்லை என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. விளக்கத்தில் வருகிறது. பேசும்போது சொல்லுங்கள்.

**திரு. மு. ஆறுமுகம்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அப்படி ஒரு காரணம் காட்டி காலத்தை நீட்டிக்கிறார்கள் என்றால் ஏன் மத்திய அரசு நதிகளை தேசிய மயமாக்கவில்லை

[திரு. மு. ஆறுமுகம்] [1987 நவம்பர் 11

என்று கேட்க விரும்புகிறேன். 10 ஆண்டுகளில் தமிழக மின் வாரியம் 1120 மெகாவாட் அளவுக்கு மின் நிறுவுத் திறனை அதிகரித்துள்ளது. இதை பெரிய சாதனை என்று சொல்ல வேண்டும். குறிப்பாக மாண்புமிகு அமைச்சரவர்கள் பொறுப் பேற்ற சென்ற ஆண்டு 325 மெகாவாட் அதிகமாக மின் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டம் 1979-ல் எடுத்துக்கொண்டோம். அதன்மூலம் 7 லட்சத்து 50 ஆயிரம் குடிசைகளுக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி ஒளி தந்துள்ளது என்றால் இந்திய வரலாற்றிலேயே வேறு எங்கும் கண்டிராத சாதனையாகும். அதுமட்டுமல்ல, ஒரு லட்சம் சிறு விவசாயிகளுக்கு 1984 ஆம் ஆண்டு, அதாவது பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான 15—9—1984 முதல் பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. அதே 15—9—1984-ல் 7-1/2 இலட்சம் குடிசை களுக்கும் இலவச ஒரு விளக்குத் திட்டத்தையும் தமிழ்நாடு அரசு, புரட்சித் தலைவர்களின் அரசு அறிவித்தது.

அதுமட்டுமல்ல, கடந்த 10 ஆண்டுகளில் நம்முடைய மின் வாரியத்தினுடைய உற்பத்தித் திறனைப் பார்க்கும்போது, 30 இலட்சம் பயனீட்டாளர்கள் பயனடைந்திருக்கிறார்கள். முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் சொன்னார். மின் வெட்டைத் தவிர்த்திருக்கலாம் என்று. மின் வெட்டு என்னும் போது, இயற்கைச் சூழலால் புனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி குறையும்போது ஏற்படுகிறது; தரமற்ற நிலக்கரியால் அனல் மின் நிலையங்களில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலை நாட்டில் இருக்கும்போது எப்படி மின் வெட்டு இல்லாமல் இருக்கும்? காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மின் வெட்டு இல்லையா? அன்றைக்கு 10 இலட்சம் பயனீட்டாளர்கள் தானே இருந்தார்கள். இவ்வளவு தொழிற் சாலைகள் இல்லையே; இவ்வளவு மின் உற்பத்தி இல்லையே; அன்றைக்கும் நாட்டிலே மின் வெட்டு இருந்துதான் வந்தது. அகில இந்திய அளவிலே இன்றைக்கு எடுத்துக்கொள்ளுங்கள். மின்சார உற்பத்தியிலே தன்னிறைவு பெற்ற கேரளா, கர்நாடகா



1987 நவம்பர் 11] [திரு. மு. ஆறுமுகம்]

மாநிலங்களிலேகூட மின்வெட்டு இருக்கின்றது. இராஜஸ்தான் மாநிலம் நம்முடைய அருமை நண்பரின் கம்யூனிஸ்ட் கட்சி ஆளக்கூடிய மேற்குவங்காளத்திலேகூட மின் வெட்டு இருக் கின்றது. மின்வெட்டு என்பது தவிர்க்கமுடியாதது. அது காலத்தின் கட்டாயம். அது யாருடைய தலையிலேயும திணிக்கப்படகூடியது அல்ல. இயற்கையினுடைய சூழ்நிலை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இவ்வளவு கஷ்டமான சூழ்நிலையில் ஒரு தரமில்லாத நிலக்கரியை கொண்டு மின் உற்பத்தி பண்ணக் கூடிய சூழ்நிலையிலே இன்றைக்கு தூத்துக்குடி அனல் மின் நிலையமும், எண்ணூர் அனல் மின் நிலையமும் சிறந்தமுறையிலே அதிகமான உற்பத்தியை பெருக்கியதற்கு மத்திய அரசினுடைய பரிசை இரு முறைகள் பெற்றிருக்கின்றது. ஒருமுறை அல்ல, இருமுறை பெற்று இருக்கிறது. இப்போது உற்பத்தி மிக குறைவு. நெய்வேலியிலே நாங்கள் 100 சதவிகிதம் வந்திருக்கிறோம் என்று காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நிலக்கரி இருக்கிறது. வேண்டும் என்பதை நீங்கள் எரித்துக்கொண்டு இருக்கின்றீர்கள். எங்களுக்கு கரியைக் கொடுக்கமாட்டேன் என்கின்றீர்கள். வரிப்பணத்தை பூராவாக தரம் இல்லாத கரிக்கே கொட்டிக் கொண்டிருக்கிறோம். அங்கே போய் குறை சொல்லி என்ன பிரயோசனம்? மிகப் பெரிய சாதனை. இவ்வாண்டு இறுதியில் மார்ச் 1987-ல் நம்முடைய தமிழ்நாட்டினுடைய மின்சார தேவை 3,600 மெகாவாட் இருக்கும் என்று இன்றைக்கு கணக்கிடப் பட்டுள்ளது. ஆனால் நம்முடைய மின்சார உற்பத்தி இது வரைக்கும் நமக்குக் கிடைக்கக்கூடிய அளவு 2700 மெகாவாட் என்பதை நாம் இன்றைக்கு கணக்கிட்டு இருக்கிறோம். ஆக தேவை 3600 மெகாவாட், நாம் உற்பத்தி செய்வது 2700 மெகா வாட். நம்முடைய நிரந்தர பற்றாக்குறை 900 மெகாவாட், இருந்தும்கூட இந்த மின் பற்றாக்குறை ஏழாவது ஐந்தாண்டு திட்ட முடிவிலே நீடிக்கும் என்று கருதப்படுகிறது. ஏழாவது ஐந்தாண்டு திட்டம் முடிவிற்குள் 1416 மெகாவாட் அளவுக்கு மின் நிறுவுத் திறனை அதிகரிப்பதற்கான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறோம். அப்படி நடைமுறைப்படுத்தி வருகின்ற நிலையிலே இம்மாநிலம் தொடர்ந்து பற்றாக்குறை மாநிலமாகவே இருந்து வரும். காரணம் இப்பற்றாக்குறை

[திரு. மு. ஆறுமுகம்] [1987 நவம்பர் 11

அடுத்து வரும் ஐந்தாவது ஆண்டு திட்ட காலங்களிலே வளர்ந்து வரும் அந்த தேவையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது அது அதிகரித்துக்கொண்டு போகுமே ஒழிய குறையவே வாய்ப்பு இல்லை என்பதை சொல்லாமல் இருக்கமுடியாது.

எனவே மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் புதிய புதிய திட்டங்களைத் தீட்டவேண்டிய கட்டாயமாகி விட்டது. தமிழக மின் வாரியம் சிறந்த முறையில் செயல்பட்டு கொண்டு வந்தும் மின் பற்றாக்குறை இருந்துகொண்டே வருவதற்குக் காரணம், நம் மின் தேவையை ஈடுகட்டும் அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்க இயலவில்லை. இதற்கு முக்கிய காரணம், இயங்கிவரும் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான அளவுக்கு தரம் இல்லாத நிலக்கரியைக் கொடுத்ததுதான காரணம். அதுவும் கிடைக்கக்கூடிய நிலக்கரியும அதிக தூரத்திலே இருந்து வருவதனால் அதிக செலவிலே வருகிறது. வெளி மாநிலங்களிலிருந்து கொண்டு வருகிறார்கள். இதனால் உற்பத்தி ஆகும் மின்சாரத்தின் விலை கூடுதலாக ஆகிவிடுகிறது. அதுபோய் பயனீட்டாளர்கள் தலையிலே விழுகிறது.

இதையெல்லாம் தவிர்க்கவேண்டுமானால் மாநில திட்டத்தின் கீழ் நாம் மிகப்பெரிய 'சூப்பர் தெர்மல் ஸ்டேஷன்' இராட்சத அனல் மின் நிலையம் ஒன்றை நெய்வேலியில் ஏற்படுத்த வேண்டும். இந்த அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரிக்கு நாமே ஒரு சுரங்கத்தை வெட்ட வேண்டும். அதற்கு நெய்வேலியிலே ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்காக மத்திய அரசினுடைய அனுமதியை இப்போது இங்கே இருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு மிக விரைவிலே பெறவேண்டும். இன்றைக்குத் தேவையான நிலக்கரி பெற தமிழக அரசே சுரங்கமும் வெட்டவேண்டும். இன்றைக்கு நெய்வேலியில் இருக்கக்கூடிய நிலக்கரியினுடைய மொத்த அளவு, மொத்த ரிசர்வ் 3000 மில்லியன் டன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நம் அனல் மின் நிலையங்களுக்கு தேவையானது சுமார் 1900 மில்லியன் டன் என்று நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய அந்த சுரங்கத்திலே இருந்து எடுக்கக்கூடிய பழுப்பு நிலக்கரி மூன்றையும் சேர்த்துப் பார்த்தால் அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 40 மில்லியன் டன்தான் தேவைப்படுகிறது. இருப்பது 3 ஆயிரம் மில்லியன் டன் என்று நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே, நெய்வேலியில் மாநில அரசின் சொந்தப் பொறுப்பில் ஒரு மின் உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 நவம்பர் 11] [திரு. மு. ஆறுமுகம்]

(பிற்பகல் 12-50)

தமிழகத்தில் மின் உற்பத்தியை அதிகரிக்க பல திட்டங்களை பல வருடங்களுக்கு முன்பே மத்திய அரசுக்கு அனுமதி வேண்டி அனுப்பியும் இதுவரை மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். மத்திய அரசு மேலும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக அவைகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல பாண்டியாறு—புன்னம் புழா, சோழாக்கி புழா போன்ற திட்டங்களுக்கு எல்லாம் கேரள அரசின் கன்கரன்ஸ் கிடைக்காததால் காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. இப்பிரச்சினைகளிலும் மத்திய அரசு தலையிட்டு தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றினாலே நமக்கு குறைந்தபட்சம் 200 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். முன்பு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கேரளா அரசோடு பேசி இடுக்கி மின் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இடுக்கி மின் திட்டத்திற்கு கிடுக்கிப்பிடி போட்டிருந்தால் நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைத்திருக்கும். இன்றைக்குள்ள மின்பற்றாக்குறையை ஓரளவுக்கு நாம் தவிர்த்திருக்கலாம். அன்றைக்கு அதையும் செய்ய தவறிவிட்டார்கள்.

இன்றைக்கு நம்மிடத்திலுள்ள மின் நிலையங்கள் அனைத்திலிருந்தும் அதிக அளவில் மின் உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்துகொண்டு வருகிறோம். அதேநேரத்தில் நான் ஒன்றை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது ஆஸ்திரேலியாவில் தரமான நிலக்கரி கிடைக்கிறது. நாம் ஒருபுறம் கப்பல் வாங்கி வைத்திருக்கிறோம். அந்தக் கப்பல்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். மத்திய அரசும் நாங்களும் நெருக்கமாக இருக்கிறோம் என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே நம்முடைய கழுத்தை நெரிக்கிறார்கள்.

[திரு. மு. ஆறுமுகம்] [1987 நவம்பர் 11

இப்படிப்பட்ட நிலையை விட்டுவிட்டு உடனடியாக மத்திய அரசு ஆஸ்திரேலியாவிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்ய அனுமதியளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து அண்ணா மாவட்டம் ஒன்று உருவாகியிருக்கிறது. மதுரையில் இருக்கக்கூடிய மதுரை மின் திட்டத்தை தேனியை தலைமையிடமாகக் கொண்டு எற்படுத்துவதற்கான செயற் குறிப்பு ஆய்வில் தேங்கிக் கிடக்கிறது. அதனையும் விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு வறட்சியின் காரணமாக கிணற்று நீர் 100, 150 அடிக்குக்கீழ் இருக்கிறது. போர்வெல்களில் 300, 400, 500 அடிக்குக் கீழே தண்ணீர் கிடைப்பதால் விவசாயிகள் மாடுகட்டி தண்ணீர் இறைக்க முடியவில்லை. டீசலும் விலை அதிகம். இப்படிப்பட்ட நிலையில் 40 ஆயிரம், 50 ஆயிரம் பம்ப்செட்டுகளுக்கு இணைப்பு வழங்கப்படும் என்று குறியீட்டை வைத்திருப்பது சரியல்ல. விவசாயிகள் எந்தவகையிலும் தங்களுடைய கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் தயவுசெய்து குறைந்தபட்சம் 1 லட்சம் பம்ப்செட்டுகளுக்காவது மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களிலுள்ள புறம்போக்கு நிலத்தில் ஒரு குறிப்பிட்ட வருஷத்திற்கு மேல் ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அவர்கள் பெயரில் பீ மெமோ பெற்றிருந்து, புறம்போக்கு நிலத்திற்கு தீர்வை கட்டியிருந்து அந்த நிலத்தில் சொந்தமாகக் கிணறு வெட்டியிருந்தால் அவர்கள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து காட்டை திருத்தி நிலமாக்க மின் இணைப்பு வேண்டுமென்று கேட்கிற நேரத்தில் பட்டா இருக்கிறதா என்று கேட்டு சான்றிதழ் வாங்கி தர சொல்கிறார்கள். பீ மெமோ, தீர்வை கட்டிய ரசீது, கிணறு வெட்டியிருப்பது போன்றவற்றை எல்லாம் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. வருவாய்த் துறையினரிடம் சான்றிதழ் கேட்டால் அவர்கள் தர முடியாது என்று மறுக்கிறார்கள். 20 வருடமாக நிலத்தை அனுபவித்து, அதனைத் திருத்தி நல்ல நிலம் ஆக்கி, பீ மெமோ, தீர்வை ரசீது போன்றவற்றை எல்லாம் வைத்திருந்தால்



1987 நவம்பர் 11] [திரு. மு. ஆறுமுகம்]

அப்படிப்பட்டவர்களுக்கு வருவாய்த் துறையின் சான்றிதழ் இல்லாமலே அவர்களுடைய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு மின்துறை அமைச்சரை கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக மின் வாரியம் எவ்வளவோ சோதனைகளுக்கு இடையிலும் மக்களுடைய தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்யும் அளவுக்கு சாதனை புரிந்துகொண்டு ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனமாக, திறமையாக அகில இந்தியாவிலேயே சிறப்பாகச் செயலாற்றிக்கொண்டு வருகிறது. அதற்குக் காரணமாக இருந்து வருகிற மின் வாரியத்தின் தலைவரையும், அவரோடு இணைந்து செயலாற்றுகின்ற பொறியாளர்களையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. நெருக்கடியான நிலையிலும், இவ்வளவு பெரிய மாநிலத்திற்குத் தேவையான மின்சாரத்தை பகிர்ந்தளித்து, வரலாறு காணாத வறட்சியின் காரணமாக ஏற்பட்ட சோதனைகளையும் பயனீட்டாளர்களுக்கு ஏற்பட்ட வேதனைகளையும் போக்கி சாதனைப் புரிந்து விவசாயம், குடிநீர்த் திட்டங்கள் போன்ற அத்தியாவசியத் திட்டங்களின் வெற்றிக்கு முனைப்போடு செயல்படும் மின்வாரிய நிர்வாகத்தைப் பாராட்டி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் மிகத் திறமையாகச் செயலாற்றி, விஷயங்களை எல்லாம் நல்லமுறையில் முடித்துக் கொண்டு வருகிறது என்று அமைச்சர் அவர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நான் ஒன்றைத் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலே கருத்து வேறுபாடுகூட இருக்க முடியாது என்று நினைக்கிறேன்.

சென்ற 1986—87 ஆம் ஆண்டில் மின்சார சப்ளையைப் பொறுத்த மட்டில் 'ஸ்டெபிலிட்டி' இருந்ததில்லை என்பது உண்மை. அறிவிக்கப்பட்டதைவிட அதிகமாக மின்சார வெட்டு இருந்தது. இந்தப் பேரவையில்கூட மின் வெட்டு ஏற்பட்டு, சபை நடவடிக்கையை நிறுத்தி வைத்தது நம்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 11

எல்லோருக்கும் தெரியும். மின்வெட்டின் காரணமாக 'லே ஆஃப்' ஏற்பட்டு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள். வீடுகளில் மின் அழுத்தம் குறைவாக இருந்ததால் மாணவர்களுக்குப் பாடம் படிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது என்று பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் புகார் சொன்னார்கள்.

அது மட்டுமல்ல. விவசாயிகளுக்கு 20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் எந்த நேரம் மின்சாரம் வரும், எந்த நேரம் போகும் என்ற 'காரண்டி' இல்லாத காரணத்தால் விவசாயிகள் அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை; சரியான பலனை விவசாயிகள் அனுபவிக்க முடியவில்லை. பத்தாண்டு காலத்தில் ஏற்பட்டிருக்கும் மின்சார வளர்ச்சியைப் பார்த்தால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1976-ல் 2,424 மெகாவாட், 1986-ல் 3,809 மெகாவாட். அப்படி என்றால் பத்தாண்டு காலத்தில் அதிகமாகப் பெற்றிருக்கக்கூடிய உற்பத்தி 1,385 மெகாவாட்தான். இதற்குக் காரணம் என்னவென்றால் மத்திய சர்க்கார் கையாண்ட கொள்கை, அவர்களுடைய நடவடிக்கையாகும் என்று நாங்கள் சொல்வது மட்டுமல்ல; அமைச்சரவர்களே இன்று கொடுத்திருக்கிற குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள்.

"......the poor quality of coal, poor quality of equipments, galloping prices of fuel and equipments and escalations in freight have resulted in neutralising to a great extent the efforts taken by the Board in improving its efficiency."

அவர்கள் நடைமுறைப் படுத்தக்கூடிய இப்படிப்பட்ட கொள்கையினால் இந்த ஆபத்து நீடிக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே ஒன்றை நான் சுட்டிக்காட்டுவது தவறாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் இந்த நாட்டினுடைய மின்சார வளர்ச்சியை எந்த இடத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறது என்று பார்க்க வேண்டும். மின்சார வளர்ச்சிக்கான திட்டங்களைப் பார்க்கின்ற போது 2001-ல் 1,39,700 மெகாவாட் எதிர்பார்க்கப்பட்டு அதிலும் 25,000 மெகாவாட் பற்றாக்குறை இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்



1987 நவம்பர் 11] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

தொடக்கத்தில் 29,000 மெகாவாட் உற்பத்திக்குத் திட்டமிட்டார்கள். அதையும் பின்னர் 22,245 மெகாவாட்டாகக் குறைத்துக்கொண்டார்கள். இந்த இலக்கினை நிறைவேற்ற 34,273 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள். ஆனால் நடப்பு விலைவாசி அடிப்படையில் ஒரு மெகாவாட் உற்பத்தி செய்ய சுமார் 2 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அப்படியானால் 22,000 மெகாவாட் உற்பத்தியை எட்ட 44,000 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆனால் ஒதுக்கியுள்ள தொகையோ 34,000 கோடி ரூபாய்தான் என்று அறிகிறோம். இதிலே பற்றாக்குறை 10,000 கோடி ரூபாய் திட்டம் நிறைவேறும் காலத்தில், இந்த விலைவாசியின் அடிப்படையில் பார்த்தால், பற்றாக்குறை 25,000 கோடி ரூபாயாக அதிகரிக்கும். அதற்கு ஏற்ற வகையில் திட்டத்தின் அளவு குறைய இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஏலக்ட்ரிசிட்டி போர்டு போட்ட திட்டத்தில், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சராசரி 40 சதவீதம் விடுபட்டதுபோல இப்போதும் விடப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. அதன்படி பார்த்தால் 2001-ல் 40,000 மெகாவாட் பற்றாக்குறை இருக்கும்.

(பிற்பகல் 1-00)

இந்தியா சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகள் ஆகியும் இன்னும் 82 சதவீதம் வீடுகளுக்கு மின்சார வசதி கொடுக்கப்படவில்லை. மின்சார ஒளி என்றால் என்ன என்றே தெரியாமல் பல இடங்கள் இருக்கின்றன என்பது உண்மை. இந்தியாவின் இயற்கை வளமாக உள்ள நீரிலேயிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்பதில் இன்னும் 88 சதவீதம் பயன்படுத்தப்படாமல் வீணாக்கப்பட்டு வருகிறது என்பதை நாம் அறிவோம்.

அடுத்து அனல் மின்சக்தி போன்றவற்றில் கவனம் செலுத்துவதாகக் கூறி வெளிநாடுகளில் ஒப்பந்தம் செய்து கமிஷன் பெறுவதிலேயே நாட்டம் செலுத்தப்படுகிறது. காண்ட்ராக்டர்களிடம் விட்டு காலதாமதம் செய்கின்ற வகையில் கூடுதல் பணத்திற்குக் காண்ட்ராக்ட் கொடுத்து கொள்ளை அடிக்கக் கதவுகள் திறந்துவிடப்பட்டு இருக்கின்றன.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 11

சேர்வலாறு திட்டத்தில் கான்ட்ராக்டருடைய கோளாறு காரணமாக 2 கோடி ரூபாய் நஷ்டம் நம்முடைய வாரியத்துக்கு ஏற்பட்டது. எஸ்டிமேட் தயாரிக்கக்கூடிய நேரத்திலேயே எஸ்கெலேஷன் எப்படி ஏற்படும் என்பதைப் பற்றி ஒரு முன் பார்வை இல்லாமல் எஸ்டிமேட் தயார் செய்து அதனை நடைமுறைப்படுத்துகிறபோது, நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு எஸ்கெலேஷனுக்காக மீண்டும் அரசை அணுகி அனுமதி பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணமாக திட்டங்களில் மிகப்பெரிய காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆகவே எஸ்டிமேட் தயாரிக்கிற நேரத்திலேயே எஸ்கெலேஷன் எப்படி வரும் எந்த அளவுக்கு விலைவாசி உயரும் என்ற அந்தப் பின்னணியை எல்லாம் எண்ணிப்பார்த்து தயாரிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஆனால் இன்றைக்கு அப்படியில்லை.

அடுத்து புனல் மின்சக்தி முழுவதையும் பயன்படுத்துவது, ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தித் திறனை தற்போதைய சராசரி 52 சதவீதமாக இருப்பதிலிருந்து 70 சதவீதம் வரையில் உயர்த்துவது. கம்பி மூலம் ஏற்படும் இழப்பைத் தற்போதைய 20 சதவிதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைப்பது, மின் திருட்டைத் தடுப்பது, நிலக்கரியின் தரத்தை உயர்த்துவது, அல்லது நம் நாட்டின் தற்போதைய தேவைக்கேற்ப உற்பத்தி இயந்திரங்களை நாம் உருவாக்குவது, அனல் மின் சக்தியை அதிகரிக்க முயல்வது, இந்திய தொழில் நுட்ப அறிவை அதிகரித்து அபிவிருத்தி செய்ய ஊக்கமும் ஆக்கமும் தருவது. தேவையான சட்டதிட்டங்களைச் செய்து தொழிலாளர் பிரதிநிதிகளை இரகசியத் தேர்வு மூலம், நிர்வாகத்தில் சம நிலையில் முழு அதிகாரம் உள்ளவர்களாக நியமனம் செய்வது. இவைகளின் மூலம், வரும் பத்தாண்டுகளில் இப்போதுள்ள 48,000 மெகாவாட் மின் உற்பத்தியை ஒரு இலட்சம் மெகாவாட்டாக உயர்த்துவது என்கின்ற இவை அனைத்தையும் செய்ய வேண்டுமென்பது எங்களுடைய கருத்து, இந்த மாற்று ஆலோசனைகளை மத்திய அரசும், தமிழக அரசும் ஏற்றுக் கொள்வதற்கு இன்றைக்கு மறுக்கிறது. ஆகவே நாம் இன்றைக்கு



1987 நவம்பர் 11] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

என்ன பார்க்கிறோம்? மத்திய அரசு மாநிலங்களில் உள்ள மொத்த உற்பத்தியில் 80 சதவீதத்தைத் தானே எடுத்துக் கொள்ளப் போவதாக அறிவித்திருப்பது ஒரு ஆபத்தான சூழ்நிலை வர இருக்கிறது என்பதை உணர்த்துகிறது.

மைய அரசு மேற்கொண்ட திட்டங்களின் கோளாறுகளின் காரணமாக இந்தியாவில் பல மாநிலங்களில் மின்சாரப் பற்றாக்குறை நிலவி அதனால் மின்வெட்டு திணிக்கப்படுகிறது. மேற்கு வங்காளத்தைப் பற்றிச் சொன்னார்கள். நாங்கள் ஒத்துக் கொள்கின்றோம். காரணம் என்ன? மத்திய அரசினுடைய கொள்கை, மத்திய அரசினுடைய நடவடிக்கை போன்றவற்றின் காரணமாக இன்றைக்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு தமிழகம் விதிவிலக்கல்ல. ஒருவகையில் சொல்லப் போனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. அதை நான் மறுக்கவில்லை. ஆகவே இன்றைக்கு பல இலட்சம் விவசாயிகளும், வியாபாரிகளும், பொதுமக்களும் பாதிக்கப்படுவதோடு சிறு தொழில்களும் பெருந்தொழில்களும் பாதிக்கப்படுகின்றன. லே ஆஃப் செய்து ஆலைகள் மூடப்பட்டு இலட்சக்கணக்கில் தொழிலாளர்கள் இன்றைக்கு பட்டினிக்கு ஆளாக்கப்படுகிறார்கள். மின்வெட்டை சிலசமயம் குறைப்பதும், நீக்குவதும் என்ற வகையில் அரசு அறிவிப்பது காரணமாக நடைமுறையில் மின்சாரப் பற்றாக்குறை, மின்சார வெட்டு போன்றவற்றின் தீய பலனை பொதுமக்கள் நேரடியாக அனுபவித்து வருகிறார்கள் என்பதைக் காண்கிறபோது இதற்கெல்லாம் காரணங்கள் உண்டு; அவற்றைப் போக்குவதற்குரிய வகையில் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க மின் வாரியம் முன்வரவேண்டும்.

மாநிலங்களில் நதிநீர்ப் பிரச்சினை என்பதைப் பொறுத்த வரையில் அதற்குத் தீர்வு காணக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க மைய அரசு மறுக்கிறது. இன்றைக்கு அதுசம்பந்தமாக கூட்டப்பட்ட கூட்டங்களிலே எல்லாம் மத்திய அரசு மாநிலங்களுக்குள்ளேயே பேசி முடித்துக்கொள்ளுங்கள் என்று கையைக் காட்டிவிடுகிறது. இதன்காரணமாக இன்றைக்கு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படவில்லை. மத்திய அரசிடம் கொடுக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதிலே காலதாமதம் ஏற்பட்டுள்ளது. அதைத் துரிதப்படுத்துவதற்கு மாநில அரசு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். எனக்குத் தெரிந்த

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 11

அளவில் எங்களுடைய மாவட்டத்திலே பரலியாறு என்று ஒரு திட்டம் மத்திய அரசினுடைய அனுமதிக்கு அனுப்பப் பட்டு 10 ஆண்டுகளாக அங்கே தேங்கிக் கிடக்கிறது. இது ஒரு தனிப் பட்ட நிகழ்ச்சி அல்ல.

உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற எலக்ட்ரிசிட்டி போர்டினுடைய புத்தகத்திலே, எவ்வளவு திட்டங்கள் இன்றைக்கு மத்திய அரசினுடைய அனுமதிக்காக தேங்கிக் கிடக்கின்றன என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே என்ன பார்க்கிறோம் என்றால், இப்படிப்பட்ட நிலைமைக்கு ஒரு மாறுதலை ஏற்படுத்தாமல் நிச்சயமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின்சாரத்தில் அபிவிருத்தி ஏற்படுத்த முடியாது என்பது என்னுடைய கருத்து.

1982-ல் கார்டு பில்லிங் என்று ஒரு சிஸ்டத்தை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். இதிலே ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு முன் 25 லட்சம் நுகர்வோர்கள் இருந்தனர். அதைப் பராமரிக்க 1 லட்சத்து 10 ஆயிரம் தொழிலாளர்கள் இருந்தனர். இப்போது 56 லட்சம் நுகர்வோர்கள் இருக்கின்றனர். ஆனால் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதற்கு ஏற்ப கூடுவதற்குப் பதிலாக் 85 ஆயிரமாகக் குறைந்து விட்டது. அதனால் மின்சார விநியோகம் மற்றும் பராமரிப்பு பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. 1982-ல் கார்டு பில்லிங் சிஸ்டத்தை அமல் நடத்தியதைப் போல இப்போது இரண்டு மாத பில் முறையை திணிப்பதன் மூலம் வேலைப் பளு உயர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வேலைப் பளு உயர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பது மட்டும் அல்ல ஆட் குறைப்பும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டு மாத பில் முறையை அமலுக்கு கொண்டு வருவதன் மூலம் 5,500 ஊழியர்கள் உபரியாக இருக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே 1980-ல் 10 ஆயிரம் களப் பிரிவுத் தொழிலாளர்கள் பதவி பறிக்கப் பட்டது. பின்னர் கார்டுபில்லிங் மூலம் சுமார் 7 ஆயிரம் தொழிலாளர் எண்ணிக்கை குறைந்தது. 1984-ல் 23 ஆயிரம் பதவிகளுக்கு விநியோகப் பிரிவிலும், 7 ஆயிரம் தொழிலாளர்களுக்கு பிற பகுதிகளிலேயும் வேலை வாய்ப்பு பறிக்கப் பட்டது. இதன் காரணமாக மின்சார வாரியத்தில் வேலை வாய்ப்பு குறைந்து கொண்டே வருகிறது.



1987 நவம்பர் 11] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

பொதுத்துறை எந்த நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டதோ அதன் நோக்கத்திற்கு மாறுபட்ட முறையிலே மின்சார வாரியம் செயலாற்றிக் கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பப்ளிக் செக்டார் நோக்கத்தைப் பொறுத்த அளவிலே ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இங்கே அவை உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த விவரப் பட்டியலிலே தோழர் திரு. ரமணி அவர்கள் கொடுத்திருக்கிற கருத்துக்கு—எக்காரணத்தைக் கொண்டும் மின் உற்பத்தி தனியார் துறைக்கு அளிக்கப்படக் கூடாது என்று கூறினார்—என்ன பதில் அந்த துறையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நேற்றே மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கேட்டு, அமைச்சர் பதில் சொல்லி விட்டார்கள். திரும்ப அதையே பேசினால் உங்களுடைய நேரம்தான் வீணாகும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்; அதைத்தான் சொல்லுகிறேன். ரமணி அவர்களின் கருத்துக்கு பதிலாக, அதிலே இன்னும் ஒரு முடிவு எடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நேற்று அமைச்சர் அவர்கள் சொன்ன போது, தனியார் துறைக்கு விட்டு விட வேண்டும் என்பதே இன்றைக்கு இருக்கிற கொள்கையாக எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படியானால் மத்திய அரசுக்கும் உங்களுக்கும் என்ன இதிலே மாறுபாடு என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

மத்திய அரசு இன்றைக்கு பொதுத்துறைகளை மூடி தனியார் துறைக்கு அளிக்க வேண்டும் என்ற கொள்கை கையாண்டு கொண்டிருக்கிறது. அது பொதுத்துறை நசுக்குகிற முறையிலே சென்று கொண்டிருக்கிறது. அந்த கொள்கையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா என்று நான் கேட் விரும்புகிறேன். அந்தக் கொள்கையை நீங்கள் ஏற்று கொள்கிறீர்கள் என்றால் தெளிவாகச் சொல்லி விடுங்கள். "பப்ளி செக்டார் என்ற துறையை மூடுவது அல்லது அதை மூடமாக்குவ

என்ற மத்திய அரசின் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்." என்று சொல்லிவிடுங்கள். மத்திய அரசின் அந்தக் கொள்கையை நீங்கள் பின்பற்றுவதன் காரணமாகத்தான் தமிழகத்திலே மின் வெட்டும் மின் பற்றாக்குறையும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது எங்களுடைய வாதம். அந்தப் பாதைக்கு நீங்கள் வேகமாகச் செல்லாதீர்கள் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு இன்றைக்கு உருவாக்கியிருக்கிற தொழிலாளர் பாதையில் நீங்கள் செல்வது சரியல்ல என்றும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு தொழிலைப் பொறுத்தவரையில் Contented workers are the assets of the industry. என்று சொல்வார்கள். ஆனால் மின்வாரியம் அதைப் புறக்கணிக்கிறது. Anti-labour Policy and unfair trade-practices. இவைகளை இன்றைக்கு மின்வாரியம் கையாண்டு வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்னணி ஊழியர்களை நீண்ட தூரம் இடம் மாற்றி பழி வாங்குகிறது. குறிப்பாக சி.ஐ.டி.யு இயக்கத்தை முடமாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்கு மின்வாரியம் செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பது எங்களுடைய குற்றச்சாட்டு. மலர் விளம்பரம் சேகரித்ததற்காக 41 முன்னணி ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்ற பிடிவாதமான நிலையில் இன்றைக்கு வாரியம் இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு எனக்குத் தெரிந்த வரையில் போஸ்டல் அண்ட் டெலிகிராப் எம்பிளாயிஸ் யூனியன், வங்கி ஊழியர்கள், அரசு ஊழியர்கள் பல நிலைகளில் இருப்பவர்களால் இப்படிப்பட்ட சாவனிர்கள் வெளியிடப்படுகின்றன. அதற்காக அவர்கள் விளம்பரங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி விளம்பரங்கள் வாங்கிவிட்டார்கள் என்பது மரண தண்டனைக்கு ஒப்பான அளவில் தண்டனை வழங்குகிற நிகழ்ச்சியா என்று கேட்க விரும்புகிறேன். அதனுடைய உள்நோக்கம் என்னவென்றால் சி.ஐ.டி.யு இயக்கத்தை முடமாக்க வேண்டுமென்பது மின் வாரியத்தினுடைய எண்ணம் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல கான்ட்ராக்ட் லேபர்களைப் பொறுத்தவரையில் 15 ஆயிரம் ஊழியர்கள் அந்தத் துறையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று சட்டப் பேரவையில் அமைச்சர்



அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். எங்களுடைய கணக்கு 25 ஆயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பதாகும். சட்டப்படி இன்றைக்கு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பாதுகாப்புக் கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் கடுமையாகச் சுரண்டப்படுகிறார்கள். 480 நாட்கள் வேலை செய்தால் நிரந்தரம் ஆக்க வேண்டுமென்று இந்த அவையிலே சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆனால் மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் அந்தச் சட்டம் காற்றிலே பறக்க விடப்பட்டிருக்கிறது.

இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விஜிலன்ஸ் பிரிவு ஒன்றை மின்வாரியம் வைத்திருக்கிறது. இதற்காக ஒரு ஐ.ஜி.யின் தலைமையில் ஒரு பெரிய படையை வைத்துச் செயல்படுகிறது. லஞ்ச லாவண்யம் வாரியத்தில் குறையவும், மின் திருட்டைக் கண்டுபிடிக்கவும் இது வாரியத்தில் அமைக்கப்பட்டது. ஆனால் என்ன பார்க்கிறோம் என்றால்

** *

அதுபற்றி விசாரணை நடத்துவதற்குத் தயாராக இருந்தால் நான் ஆதாரம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளை இன்றைக்கு இந்த விஜிலன்ஸ் பிரிவு பார்ப்பதில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், தொழிற்சங்க நடவடிக்கைகளை முடமாக்க இந்தப் பிரிவைச் செயல்படுத்துகிறார்கள். கேட் கூட்டங்கள் நடத்துவதைக் கூட அவர்கள் தடுக்கிறார்கள்.

அடுத்தபடியாக நான் ஒன்றை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாகப்பட்டினம் அனல் மின் நிலையம் சம்பந்தமாக ஆய்வு நடக்கிறது. அதற்காக உருவாக்கப்பட்டிருக்கிற சைட் பெயர் காமேஸ்வரம். அதன் ஆபீஸ் எங்கே வைத்திருக்கிறார்கள் என்றால் மேலப்படாவி என்ற இடத்தில் 24 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. அந்த அதிகாரிகள் தங்குவது நாகப்பட்டினத்தில்தான். ஏன் சைட்டிலிருந்து 24 கி.மீ. தூரத்தில் அலுவலகத்தை வைத்திருக்கிறார்கள் என்றால் அவர்கள் டி.ஏ.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1987 நவம்பர் 11

வாங்குவதற்காகத்தான். இதனாலே நஷ்டம் ஏற்படவில்லையா? விஜிலன்ஸ் இதைக் கண்டு பிடித்தார்களா, ஆராய்ச்சி நடத்தினார்களா? ஆகவே விஜிலன்ஸ் பிரிவுக்கு இதில் எல்லாம் அக்கறை இல்லை. இதனை தொழிற்சங்க இயக்கத்தை முடமாக்குவதற்குப் பயன்படுத்துகிற போக்கு சரியல்ல. இன்றைக்கு இருக்கிற லஞ்ச லாவண்யத்தை ஒழியுங்கள். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பாகச் சொல்வீர்களானால் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கும், துறை நடவடிக்கை எடுப்பதற்கும் வசதியாக இருக்கும். ஒட்டுமொத்தமாக லஞ்சம் என்று சொல்வதால், வாங்காமல் இருக்கிற நல்ல அதிகாரிகளும் கெட்டுப் போகக் கூடாது. ஸ்பெசிக்காகச் சொல்லுங்கள். அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். துறை நடவடிக்கை எடுக்கும். ஸ்பெசிபிக்காகச் சொல்வதுதான் ரெக்கார்டிலே இருக்கும். ஸ்வீபிங் அலிகேஷனை எக்ஸ்பன்ச் பண்ணி விடுகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் ஏற்கனவே சொன்னேன், நான் சொல்வதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஸ்பெசிபிக்காகச் சொன்னால் துறைக்கும் பிரயோஜனம், நாட்டிற்கும் பிரயோஜனம், ஒட்டுமொத்தமாகச் சொல்வதென்றால் எல்லா அதிகாரிகளையும் சேர்த்துச் சொல்வதாகும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், நான் ஒரு தகவலைக் கொடுத்தால் அதனால் சம்பந்தப்பட்டவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பார்கள் என்பதற்கு எனக்கு உறுதி அளிக்கப்படுமானால் நான் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அதிகாரியின் பெயரைக் கொடுப்பார்களானால், இது சம்பந்தப்பட்டவர்கள் பழிவாங்கப்படமாட்டார்கள் என்ற உறுதியை நான் அளிக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1987 நவம்பர் 11]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அமைச்சர் அவர்களிடம் அந்த விவரங்களை நான் எழுதி கொடுக்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாகர்கோவிலில் யார் என்று சொன்னால்தானே நடவடிக்கை எடுக்க முடியும்? இல்லை என்றால் நாகர்கோவிலிலே வேலை செய்கிற நல்ல அதிகாரிகளையும் சேர்த்து அல்லவா சொல்கிற மாதிரி இருக்கும்? ஸ்பெசிபிக்காகச் சொன்னால் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முடியும்.

**திரு. கு. ரமணி:** துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்திலே உள்ள பூரா பேர்களும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று அவர் சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொல்லி விடுகிறேன். ** என்பதுதான் குற்றச்சாட்டு. நீங்கள் ரெக்கார்டைப் படித்துப் பாருங்கள். நாட்டினுடைய நன்மைக்காகச் சொல்லவேண்டும். (குறுக்கீடு) அப்படியானால் நல்ல அதிகாரியாக இருப்பவர்களுக்கும் இந்த அபிப்பிராயம் வந்து விடும். நீங்கள் ஸ்பெசிபிக்காகச் சொல்லவேண்டும். அமைச்சர் அவர்கள் அஷ்யூரன்ஸ் கொடுத்துவிட்டார்கள் பழிவாங்கும் நடவடிக்கை இருக்காது என்று. நடவடிக்கை எடுத்தால் நாட்டுக்கு நல்லது. அவர் ஸ்பெசிபிக்காகச் சொல்ல வருகிறார். அவர் சொல்லட்டும்.

**திரு. கு. ரமணி:** மின் வாரியத்திலே லஞ்சம் இருக்கிறது என்று சொல்லும்போது, மின் வாரியத்தில் உள்ள அத்தனை பேர்களும் லஞ்சம் பெறுகிறார்கள் என்று அர்த்தம் அல்ல. அதிலே குறிப்பிட்ட லஞ்சத்தைச் சொல்கிறோம் என்று சொன்னால், அதற்குப் பாதுகாப்பு வேண்டும். அதுதான் அவர் சொல்லக் கூடியதே தவிர, மின் வாரியம் முழுவதிலுமே லஞ்சம் இருக்கிறது என்று கூறியிருந்தால் அது தப்பு. அப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடு). அப்படியானால் அதை ஸ்பெல் அவுட் பண்ண வேண்டும். இப்போது நீங்கள் சொன்ன மாதிரி மின் வாரியத்திலே முழுவதும் லஞ்சம் இருக்கிறது என்று சொன்னால், அப்படி எல்லோரும் இல்லை என்றால் [illegible]

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் சொன்னது, * * இது சரியா? அப்படித்தான் சொன்னார். You may kindly go through the records அதனால்தான் அதை நான் நீக்கிவிட்டேன். (குறுக்கீடு). அதற்காகத்தான் சொல்கிறேன். இப்போதும் அமைச்சரிடம் ஸ்பெசிபிக்காக எழுதித் தருகிறேன் என்று சொல்கிறார். சபையிலே சொன்னால், நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்கிறார் அமைச்சர்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** நான் அமைச்சர் அவர்களுக்கு எழுதிக் கொடுக்கிறேன் என்று சொல்கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்றால் இன்றைக்கு சேர்மன் லஞ்சம் வாங்குவதாக நான் சொல்லவில்லை. அல்லது வேறு அதிகாரிகள் என்று சொல்லவில்லை. ** (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எங்கே, எந்த ஊரிலே எந்த அதிகாரி என்று சொன்னால்தானே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பாக இருக்கும். ஒரு ஆண்டிலே 10 ஆயிரம் கனெக்சன் கொடுக்கலாம். அந்த 10 ஆயிரம் கனெக்சன் தொடர்பாக இருக்கிற அதிகாரிகள் . . . (குறுக்கீடு)

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, நீங்களே ஒரு லாயர். உங்களுக்குத் தெரியும், விஷயம் எப்படி என்று. ஒரு ஹவுஸ் கனெக்சன் என்பது, இந்த இடத்திலே பூரா ஹவுஸ் கனெக்சன் என்பதல்ல. ஹவுஸ் கனெக்சன் என்பது ஒரு குறிப்பிட்ட வேலையினுடைய பெயர். இந்த நிர்வாகம் முழுவதிலும் இருக்கக்கூடிய ஹவுஸ் கனெக்சன் என்று அர்த்தம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஹவுஸ் கனெக்சனைத் தமிழ்நாடு முழுவதும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். வீட்டுக்கு மின் இணைப்பு என்பது தமிழ்நாடு முழுவதும் உள்ள எல்லா நகரங்களிலே ஒவ்வொரு மாதமும் கொடுக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கிற அதிகாரிகள் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். அது சரியாக வராது. (குறுக்கீடு). ஸ்பெசிபிக்காக ஒரு அதிகாரி மீது சொல்லட்டும். நாகர் கோவிலில் பல அதிகாரிகள் இருக்கிறார்கள். ஸ்பெசிபிக்காக

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இருந்தால் சொல்லிவிடுங்கள். அவர்களுக்குத் தெரியும் என்றால் அதைச் சொல்வதில் என்ன தயக்கம் என்று நான் கேட்கிறேன். அதிகாரிகள் பெயர் தெரியும். அமைச்சர் நடவடிக்கை எடுக்கிறேன் என்கிறார். பிறகு சபையிலே சொல்வதில் என்ன தயக்கம்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** உதாரணம் சொல்கிறேன். இன்டஸ்ட்ரியல் கனெக்சன் கொடுப்பது என்றால், ஒரு மாவட்டத்திலே அதைக் கொடுப்பதற்கு ஒன்றிரண்டு அதிகாரிகள்தான் அதற்குப் பொறுப்பு. எல்லா அதிகாரிகளும் பொறுப்பல்ல. அதனால் எல்லா அதிகாரிகளும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. பொறுப்பிலே இருக்கக்கூடிய, அதற்குப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய அதிகாரிகள் வாங்குகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைச் சொல்வதில் உங்களுக்கு என்ன கஷ்டம்? அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்ன பிறகும் கூட, இந்த இடத்திலே இருக்கிற இந்த டி.இ., இந்த ஏ.இ. என்று சொல்லி, நாட்டுக்கு நல்லது செய்தால் என்ன? நான் சொல்லமாட்டேன் என்றால் எப்படி? ** என்று "லேக்" காக சொன்னால் எப்படி சரியாகும்? "லேக்"காக நீங்கள் சொல்வதை நான் அனுமதிக்க மாட்டேன். அதையெல்லாம் நீக்கிவிடுகிறேன். நீங்கள் ஸ்பெசிபிக்காக சொல்லுங்கள். அனுமதிக்கவில்லை என்றால் கேளுங்கள். அமைச்சர் அவர்களே அஷ்யூரன்ஸ் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** நாகர்கோவிலிலே இண்டஸ்ட்ரியல் கனக்சன் கொடுப்பதற்கு, பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரி—எனக்குப் பெயர் தெரியாது. அவர்களும்—லஞ்சம் கேட்டிருப்பதாகவும், கொடுத்ததாகவும் தகவல் இருக்கிறது. இந்த விவரங்களை வேண்டுமானால், புள்ளி விவரங்களோடு எழுதிக் கொடுக்கிறேன் என்று எற்கனவே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று அவர் சொல்லிவிட்டார்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 நவம்பர் 11

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, அடுத்து குடிசைகளுக்கு விளக்கு கொடுப்பது என்று ஒரு திட்டம் இருக்கிறது. ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி எ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் கேட்ட ஒரு கருத்துக்கு, மின்சார வாரியம் கல் சுவர் இருந்தால் கொடுக்க முடியாது என்று பதில் கொடுத்திருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், கல் சுவர் இருந்தால் கொடுக்க முடியாது என்று சொல்கிற கிரைட்டிரியா இருக்கக்கூடாது. இன்றைக்கு இந்த அரசைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சரைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் கொண்டு வந்ததினுடைய நோக்கம் என்ன என்று நாங்கள் நம்பிக்கொண்டு இருப்பது, குடிசைகளிலே தங்கியிருக்கக்கூடிய ஏழை எளியவர்களுக்கு இலவசமாக மின்சாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான்.

(பிற்பகல் 1-20)

ஆகவே அந்த வீடுகளில் தங்கி இருக்கக்கூடியவர்கள் ஏழைகளா என்பதைப் பார்த்துக் கொடுக்க வேண்டும். ஒருவேளை இன்றைக்குக் காற்றும், மழையும் இருக்கக்கூடிய காலத்தில் ஒரு பாதுகாப்பு வேண்டி ஒரு அரை சுவர் வைத்து இருப்பார்கள் அல்லது ஒரு சுவர் கட்டியிருப்பார்கள். ஆனால் அதன் காரணமாக அவர்களுக்கு மறுப்பது என்பது சரியல்ல. எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தப் பலன் கிடைக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்து இருக்கிறதோ அந்தப் பலன் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். உதாரணமாக ஆர். எல். இ. ஜி.பி., என்.ஆர்.இ.பி., தாட்கோ மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட வீடுகளுக்கு இன்றைக்கு இந்த இலவச மின்சாரம் கிடைப்பதா.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தகவலுக்காகவும், அவையின் தகவலுக்காகவும் நான் இதைச் சொல்லுகிறேன். ஆர்.எல்.இ.ஜி.பி., என். ஆர். இ. பி. திட்டத்தில் கட்டிக் கொடுக்கிற வீடுகளுக்கு இலவசமாக ஒரு விளக்கு கொடுக்க வேண்டும் என்று ஏற்கனவே மாண்புமிகு



முதலமைச்சர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறையில் அது இருந்து வருகிறது. (குறுக்கீடு) ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, எனது தொகுதியில் விளக்கு போடப்பட்டிருக்கிறது. நானும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அந்த விளக்கைத் தருகிறபோது பார்த்து இருக்கிறேன். சில வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியாததன் காரணம், அதற்கு வேண்டிய சாமான்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அதைத் தவிர ஆணை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தாட்கோவில் கட்டப்படுகிற வீடுகளுக்கு மின்சாரம் கொடுப்பது சம்பந்தமாக அது ஆய்வில் இருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்ன தகவலுக்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இன்னும் அவ்வாறு போடப்படவில்லை. இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன விவரங்களின் அடிப்படையில் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறோம்.

அதேபோல் சிறு விவசாயிகளுக்கு மின்சாரம் என்று சொல்லும்போது 2½ ஏக்கர் நிலம் வைத்து இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் 10 தென்னை மரம் அவன் வைத்து இருந்தால் அல்லது ஒரு கறவை மாடு வைத்து இருந்தால், வண்டி மாடு வைத்து இருந்தால் அவனுக்கு அந்த மின்சாரம் கிடைப்பதற்குத் தகுதி இல்லை என்று மின்சார வாரியம் இன்றைக்கு ஒரு ஆணை பிறப்பித்து இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, இந்தத் திட்டங்களை எல்லாம் என்ன நோக்கத்தோடு தமிழக அரசு அமல் செய்யவேண்டும் என்று எண்ணுகிறதோ அதற்குப் பாதகமான நிலை இருக்கிறது. இந்த நிலைகளை எல்லாம் அரசும், மின்சார வாரியமும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 தென்னை மரம் இருந்து, வண்டி மாடு வைத்து இருந்தால் கூட நிச்சயமாக அவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு மின்சாரம் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவர் பேசுவதைப் பார்த்தால் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

குடிசைகளுக்கு விளக்கு கொடுப்பது சம்பந்தமாகப் பேசும் போதும் இதுபோல்தான் சொன்னார். என்.ஆர்.இ.பி, ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலம் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு எல்லாம் எங்கள் ஏரியாவில் மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பம்பு செட்டுகளுக்கு ரீ-கனெக்ஷன் என்பதைப் பொறுத்தவரையில் ஏற்கனவே வறட்சிக் காலத்தில் டிஸ்கனெக்ஷன் செய்யப்பட்டு உள்ள பம்பு செட்டுகளுக்கு இன்றைக்கு கனெக்ஷன் கொடுக்க வேண்டும் என்றால் தாசில்தாருடைய சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிலை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இது விவசாயிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகிறது, கஷ்டத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே ஏற்கெனவே கனெக்ஷன் இருந்தவர்களுக்கு ரீ-கனெக்ஷன் கொடுப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

விவசாயிகளைப் பொறுத்தவரையில் அபராத வட்டி என்ற முறையில் 31—3—1979-க்கு முன்னாலே அவர்கள் கட்ட வேண்டிய பாக்கியைக் கட்டக்கூடியவர்களுக்கு, அபராத வட்டி இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்குப் பிறகு ஜி.ஓ. போட்டு வரக்கூடிய நேரத்தில் 1-4-1980-க்குப் பிறகு கட்டக்கூடியவர்களுக்கு வட்டி செலுத்த வேண்டும் என்ற நிலை வந்து இப்போது வட்டி, அபராத வட்டி எல்லாம சேர்ந்து ஒரு விவசாயி 30 ஆயிரம் ரூபாய் வரை கட்டவேண்டிய நிலை ஏற்படுகிறது. இப்படி ஒரு லட்சத்திற்கு அதிகமான விவசாயிகள் இன்றைக்குத் தமிழகத்தில் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் எந்த நோக்கத்தோடு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை





அறிவித்தார்களோ, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொன்னார்களோ அந்த முறையில். இதை அமல் செய்வதற்கு மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

* **திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய மின்வாரியம், வெறும் ஒரு எலக்ட்ரிசிட்டி ஜெனரேஷன் ஸ்தாபனம் என்று இல்லாமல், தமிழகத்தினுடைய பொருளாதார, சமூக மாறுதலுக்குரிய சாதனமாக (Social and Economic Reforming Media வாகப் பயன்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நாட்டினுடைய முதல்வராக மக்களுடைய அன்போடு பொறுப் பேற்றுக் கொண்ட பின்னர், குறை கூறுகிற சிலர்கூட தமிழக மின் வாரியத்தினுடைய மகத்தான சாதனைகளை இந்த நேரத்திலே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவினுடைய மின் பற்றாக்குறை 19 பில்லியன் யூனிட் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தினுடைய மின் வாரியத்தினுடைய உற்பத்தியும் தேவைக்கு ஏற்றதாக இல்லை என்பதை உள்ளபடியே நாம் ஒப்புக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தில் இருக்கின்ற 'ரிசோர்சஸ்'-ஸை, நமக்கு இருக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தி மிக அதிக அளவிலான மின் உற்பத்திக்கான முயற்சிகளைக் கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொண்டு வருகிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்று நம்முடைய 'இன்ஸ்டால்ட் கெபாசிட்டி, 1986-87-ல் 2000 மெகாவாட். 1976—77-ல் 1764 மெகாவாட் என்று இருந்ததை இன்று 2000 மெகாவாட்டாக உயர்த்தி, 10 ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 15 சதவீதம் உயர்வை நாம் இன்று கண்டுகொண்டிருக்கிறோம். அத்தோடு மின் உற்பத்திக்கான

[திரு. மா. சின்னராசு] [1987 நவம்பர் 11

வெற்றியின் ஒரு அளவுகோல் இந்த 'இன்ஸ்டால்ட் கெபாசிட்டி' தான். அது தமிழகத்தில் மிக உயரிய நிலையை இந்த 10 ஆண்டுகளில் அடைந்திருக்கிறது என்பதையும், இது அகில இந்திய அளவில், இருக்கிற எல்லா மாநிலங்களையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோதும் மிக உயர்ந்த அளவில் இருக்கிறது என்பதனையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆக 'இன்ஸ்டால்ட் கெபாசிட்டி' ஆனாலும், 'ஜெனரேட்டிங் ப்ரொடக்டிவிட்டி' என்று சொன்னாலும், அதிலும் நாம்தான் இந்தியாவிலேயே மிஞ்சி இருக்கின்ற ஒரு சில மாநிலங்களில் முன் வரிசையில் இருக்கிறோம்.

இன்று நம்முடைய தூத்துக்குடி அனல் மின் நிலையமும், எண்ணூர் அனல் மின் நிலையமும், மத்திய அரசாங்கத்தினுடைய பரிசுகளைப் பெற்று, ரூ. 10, ரூ. 5 இலட்சம் பெற்று, அது ஊழியர்களுக்குப் பரிசாக வழங்கப்பட்டிருப்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதிலே பங்கு பெற்றிருக்கின்ற அனைத்து அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்வது தலையாய கடமை என்று கருதுகிறேன்.

நெய்வேலியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய உற்பத்தித் திறன் குறைவுதான் என்று ஒரு உறுப்பினர் சுட்டிக்காட்டினார். நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியினுடைய தரம் நல்லமுறையில் இருக்கிறது. ஆனால் நமக்கு, தூத்துக்குடி, எண்ணூர் மின் நிலையங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நிலக்கரியில் தரம் இல்லை என்பதை இந்த மன்றத்தில் பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதை நான் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன். ஆக நம்முடைய 'ப்ரொடக்டிவிட்டி' 100 சதவீதம் ஆகவேண்டுமென்றால், நாம் நமக்கு நல்ல தரமான நிலக்கரி நமக்கு வழங்கப்படுமாயின், நிச்சயமாக நாமும் 100 சத வீதம் உற்பத்தித் திறனை எய்த முடியும். அதற்கான எல்லா வாய்ப்புகளையும் பெற்றிருக்கிறோம். அதற்குரிய திறமை நம்முடைய மின் வாரிய ஊழியர்களிடமும், அதிகாரிகளிடமும் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1987 நவம்பர் 11] [திரு. மா. சின்னராசு]

நிலக்கரியைப் பொறுத்தவரையில் இன்று பலரும் சுட்டிக் காட்டினார்கள். பெட்ரோலை பெறுவதைப்போன்று, நிலக்கரியும் நாடு முழுவதும் ஓரே விலைக்குக் கிடைக்கப் பெற்றால்தான், 'இம்பேலன்சை' சரிப்படுத்த முடியும். அப்போதுதான் தொழில் வளர்ச்சியில் இருக்கிற குறைபாடுகளையும் நீக்கமுடியும். அந்த வரையிலே பெட்ரோல் எப்படி காஷ்மீரிலும், கன்னியா குமரியிலும் 'லோக்கல் டாக்சஸ்' தவிர, ஓரே விலையில் வழங்கப்படுகிறதோ, அது எங்கே உற்பத்தியானாலும, எல்லா இடங்களிலேயும், இந்தியாவிலே ஓரே விலைக்குக் கிடைக்கிறதோ, அதுபோன்று தமிழகத்திற்கும் மற்ற மாநிலங்களுக்கும் ஓரே விலையில் நிலக்கரி கிடைக்கிற ஒரு கொள்கையை மத்திய அரசாங்கம் எடுப்பதுதான் எலக்ட்ரிசிட்டி ப்ரொடக்ஷனுக்கு மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கும் ஏற்ற ஒரு வாய்ப்பாக அமையும் என்பதை நாம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நிலக்கரி மட்டுமல்லாமல் நீர் மின்சார உற்பத்திக்கும் பல்வேறு தடைகளை உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். நீர் மின்சார உற்பத்திக்கு என்று போடப்பட்ட திட்டங்கள் ஒரு சிலவற்றில் இன்னும்கூட கூடுதலான முயற்சிகளை நாம் மேற்கொண்டால் நிறைவேற்றமுடியும்.

உதாரணத்திற்கு பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தைச் சில ஆண்டுகளுக்கு முன்னால் நிறைவேற்றுவதற்கு டிவிஷன் போட்டு, திட்டத்திற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அதிலிருந்து பெறக் கூடிய நீரை நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தவேண்டுமென்று கோவை மாவட்டத்து மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தத் திட்டம் ஒத்திவைக்கப் பட்டது. ஆக இதைக் கூடிய விரைவிலே பேசி, இரண்டு மாநிலங் களுக்கான அளவிலேகூட பேசி, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். அது அல்லாமல் இருக்கின்ற ஆதாரங்களை இன்னும் கூட நாம் விரைவாக முயற்சி எடுத்துக்கொண்டு, நீர் மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் எல்லா ஆதாரங்களையும் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்துவதற்கு விரைவான திட்டங்கள் வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன்.

[திரு. மா. சின்னராசு] [1987 நவம்பர் 11

இன்று நம்முடைய கோவை மாவட்டத்தில் அத்திக்கடவில் ஒரு சிறிய மின் திட்டத்தை நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டோம். அந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்ற நிலை வந்தபோது வன இலாக்காவினுடைய ஆட்சேபணை காரணமாக கைவிடப்படும் என்ற நிலை இருக்கிறது. அந்த மின் திட்டம் மட்டும் அல்ல. சுமார் 430 கிராமங்களுக்குக் கொடுக்கப் படுகின்ற குடிநீர்த் திட்டமும் இதனால் கைவிடப்படுமோ என்ற அச்சம் கூட நம்மிடையே இருக்கிறது.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. மா. சின்னராசு:** துணைத் தலைவர் அவர்களே, ஆகவே அந்த நிலையை மாற்றி 6 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் மரங்கள் வனப் பகுதியில் அழிக்கப்படுவதன் காரணமாக மின்சார உற்பத்தியும் அதே நேரத்தில் 400-க்கு மேற்பட்ட கிராமங்களுக்குக் குடிநீரும் கிடைக்கும் என்றால் நிச்சயமாக அந்த 10 ஏக்கர் வனத்தை நாம் 20 ஏக்கர் அல்ல 200 ஏக்கருக்கு உற்பத்தி செய்துவிட முடியும். பயன்பாட்டைக் கருதி தயவு செய்து அந்தத் தடையை—நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—அவரே வன இலாக்காவிற்கு அமைச்சராக இருப்பதால்—அரசு அளவிலே பேசி—நீக்கி, குடிநீர் திட்டம், மின் உற்பத்தித் திட்டம் இரண்டும் உடனடியாக நிறைவேற்ற வழி வகுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே, நெல்லித்துறை மின் திட்டம், மேட்டுப் பாளையத்தின் அருகிலே அமைய இருக்கின்ற அந்தத் திட்டம், பல மாநிலங்களிலே ஓடுகின்ற நீரை வைத்துக்கொண்டு உருவாக்கப் படுகின்ற திட்டம்தான். இதிலே பவானி ஆற்று நீரைத்தான் நாம் பயன்படுத்த இருக்கிறோம். ஆகவே அதற்கும், கேரள மாநிலத்தினுடைய உரிமைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை உடனடியாக எடுத்துச் சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வழியை வகுத்துத்தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1987 நவம்பர் 11] [திரு. மா. சின்னராசு]

நம்முடைய மின்சார வாரியம் எடுத்திருக்கின்ற பல்வேறு முயற்சிகள் காரணமாக மின் உற்பத்தியும், நம்முடைய தேவையும் நிறைவேறுகின்ற அதே நேரத்தில் இன்று மின்சார வாரியத் தினுடைய நிதி நிலை நம்முடைய கவனத்தை எல்லாம் ஈர்க்கின்ற வகையிலே இருக்கிறது. 391 கோடி ரூபாய் அரசாங்கத்தினுடைய நிதியை எதிர்பார்த்து இருக்கின்ற வாரியம். அது இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக பல்வேறு சூழ்நிலையின் காரணமாக 553 கோடி அளவில் அரசாங்கத் தினுடைய நிதி உதவியைப் பெற வேண்டியிருக்கும் என்கிற நிலையை நாம் இன்று பார்க்கிறோம். ஆக இதைத்தான் நாம் இன்று ஆழ்ந்து பரிசீலித்துப் பார்க்க வேண்டும். ஆண்டுக்கு 553 கோடி ரூபாய் அரசாங்கத்தினுடைய நிதி உதவியைப் பெற்று ஒரு மின் வாரியம் தன்னுடைய பணிகளை ஆற்ற வேண்டும் என்று இருந்தால், அடுத்துவரும் ஆண்டுகளில் 500 என்பது 700 ஆகி சில ஆண்டுகளிலே ஆயிரம் கோடியைப் போய் அடையக்கூடும். ஆக மின் வாரியம் தன்னுடைய தேவைக்கு ஏற்ற மின் உற்பத்திக்கும் விநியோகத்திற்கும் தன் னுடைய நிர்வாகத்திற்கும் ஏற்ற வருமானத்தைத் தேடிக்கொள் வதற்கு வேறு வகையான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வில்லையென்றால் நிச்சயமாக அரசாங்கம் தன்னுடைய நிதி நிலை யிலிருந்து மற்ற பணிகளுக்குச் செய்ய வேண்டிய செலவுகளும் மற்ற திட்டங்களுக்கு ஆற்ற வேண்டிய செலவுகளும் பாதிக்கப் படும் என்பதை நாம் இந்த நேரத்திலே கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் இருக்கின்ற மின் உற்பத்தியை அதிகரித்துத் தான், மின்சார இலாக்காவை வலுப்படுத்தித்தான் நம்முடைய நாட்டினுடைய பொருளாதாரம் வளர வேண்டி இருக்கிறது என்பதையும், மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற விவசாயி களுக்கும், குடிசைவாழ் மக்களுக்கும், நாம் கொடுக்கின்ற சலுகையை, ஒரு சமுதாயக் கொள்கையாக அரசு ஏற்றுக் கொள்கின்ற கொள்கை என்ற காரணத்தினாலும், இந்த உதவியை நாம் நியாயப்படுத்தினாலும் தொடர்ந்து இது ஆண்டாண்டுக் காலமாக அரசாங்கத்தினுடைய உதவியை எதிர்பார்க்கும் நிறுவனமாக இருக்கக்கூடாது. தன்னுடைய சுய தேவையை நிறைவேற்றிக்கொள்கின்ற அளவிற்கு, எப்படி அட்டானமஸ், கார்ப்பரேஷன் என்று அதிகாரங்கள் பெற்று தன்னிச்சையாக

— [திரு. மா. சின்னராசு] [1987 நவம்பர் 11

செயல்படுகிற அளவிற்கு அதற்கு இருக்கிறதோ அதைப்போலவே அதனுடைய தேவைக்கேற்ற நிதி நிலையைப் பெருக்கிக்கொள் வதற்கும் அது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு 408 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலே மின்சார வாரியம் எடுத்துக்கொள்கின்ற பல்வேறு முயற்சிகளுக்கு இந்த நேரத்திலே பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆக மின்சார உற்பத்தி என்கின்ற வகையில் தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்ற மின்சார இலாக்கா தமிழகத்தில் இருக்கின்ற தொழில் நிறுவனங்கள் சிலவற்றினுடைய குறைபாடுகளையும், தொழில் வளர்ந்தால்தான் தமிழகத்தினுடைய பொருளாதாரத்தில் உயர்வு ஏற்படும், வேலைவாய்ப்பும் கூடுதலாகக் கிடைக்கும் என்பதை மனதிலே கொண்டு அவர்கள் நியாயமாக எழுப்புகின்ற சில பிரச்சினைகளை, நம்முடைய தொழிற்சாலைகள் அந்தத் தொழிலினுடைய தன்மையைக் கருதி கனிவோடு பார்க்க வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

அதிலே ஒன்றாக பேப்பர் இன்டஸ்ட்ரீஸ் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகளை நாம் கன்ட்டினிவஸ் ப்ராசஸ் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்கிறோம். அந்தத் தொழிற்சாலைகள் 24 மணி நேரமும் மின்சாரம் இல்லையென்றால் ஓட முடியாது அப்படி நம்முடைய தமிழகத்தில் 27 மில்கள் இருக்கின்றன. வெகு விரைவிலே அந்த மில்கள் எல்லாம் மூடப்பட்டுவிடும் என்ற அபாயகரமான நிலைமை இருக்கிறது கூடுதல் சேல்ஸ் டாக்ஸ் நம் நாட்டில் இருக்கிற காரணத்தினாலும், மற்ற மாநிலங்களுடைய விற்பனையோடு போட்டி போட முடியாது இருக்கிற காரணத்தினாலும் அந்தத் தொழிற்சாலைகள் இனிமேல் இந்த நாட்டில் இருக்க வேண்டுமென்றால் கன்ட்டினிவஸ் ப்ராசஸ் இன்டஸ்ட்ரீஸ் லிஸ்ட்டில் அதையும் கொண்டு வந்து, கட்டுப்பாடு இல்லாத மின்சாரத்தை அவர்களுக்கு வழங்குவது நம்முடைய தலையாய கடமை என்று நான் கருதுகிறேன்.

ஆகவே, தவிர்க்கமுடியாத ஒரு விதிவிலக்கை நாம் அளித்தாக வேண்டும். எந்தத் தொழிலையும் நசித்துவிடாமல் பார்த்துக் கொள்வதற்கு—இந்தச் சலுகையைக் கொடுப்பதன் மூலம் யாரும் இன்டஸ்டிரியலிஸ்ட்ஸ்-க்கு உதவுவதாக ஆகாது; அந்தத்



1987 நவம்பர் 11] [திரு. மா. சின்னராசு]

தொழிலைச் செய்து கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கும், அந்தத் தொழிலைச் செய்வதன் மூலமாக, உற்பத்தியின் காரணமாக நாம் பெறுகிற வருமானத்தையும் கருத்தில்கொண்டு— அந்தச் சலுகையையும் அவர்களுக்கு அளிக்க வேண்டும். 24 மணி நேரமும், மின்சாரத்தைத் தடையின்றி பேப்பர் தொழிற் சாலைகளுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத்தான், கோவையிலே நலிந்த நூற்பாலைகள். நாம் என்.டி.சி.யிலே எடுத்துக்கொண்டாலும் சரி, தமிழ்நாடு நூற்பாலைக் கழகத்திலே எடுத்துக்கொண்டிருக்கிற சில நூற் பாலைகளானாலும் சரி, பேச்சுவார்த்தையின் மூலம் திறக்கிற போது, அந்த நூற்பாலைகளுக்கு மின்சாரம் கட்டுப்பாடு இல்லாமல் கொடுப்பதற்கும் மின்சார வெட்டிலிருந்து அவர் களுக்கு விதிவிலக்கு அளிப்பதற்கும் உறுதி கொடுத்திருக் கிறோம். அப்படிக் கொடுத்திருந்தும்கூட, உதாரணத்திற்கு ஜோதி மில்லிலும் ராதாகிருஷ்ணா மில்லிலும் பவானி மில்லிலும் நான் பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொண்டபடி, மின்சார வெட்டிலிருந்து விலக்கு அளிக்காத காரணத்தால் இன்று அந்த ஆலைகள் மீண்டும் மூடப்படுகிற ஒரு அபாயகரமான சூழ்நிலை இருக்கிறது. எவ்வளவோ இன்னல்பட்டு. தொழிலாளர்களுடைய துயரத்தைத் துடைப்பதற்காக மீண்டும் அரசாங்கத்தினுடைய முழு உதவியோடு. அரசாங்கத்தினுடைய கேரன்டியோடு திறக்கப் பட்ட அந்த நூற்பாலைகளை மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக மூடிவிடுகிற ஒரு நிலையை நாம் நிச்சயமாக அனுமதிக்கக்கூடாது.

இன்று மழை பெய்திருக்கிறது. ஹைட்ரோ ஜெனரேஷன் அளவு இன்று இம்ப்ரூவ் ஆகியிருக்கிறது, வளர்ந்திருக்கிறது. ஆகவே, அதைக் கருத்தில்கொண்டு, அரசாங்கம் எடுத்து நடத்து கிற அந்த நூற்பாலைகளுக்கு சலுகைகளை வழங்கி, அந்தத் தொழிலாளர் குடும்பங்கள் மேலும் நூற்பாலைகள் மூடி அல்லல் படுவதிலிருந்து தவிர்க்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்று மின்சார வாரியத்தில் பல கோடி ரூபாய்கள், நீதிமன்றத்தில் வழக்குகள் இருக்கின்ற காரணத்தால், வசூலிக்க முடியாமல் நிலுவையில் இருக்கின்றன என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு

[திரு. மா. சின்னராசு] [1987 நவம்பர் 11

முக்கிய காரணம், ஏதோ மின்சார பயனீட்டாளர்கள், பயன் பெறுபவர்கள், மின்சார இலாகாவை எதிர்த்து வழக்குமன்றத்திற்குச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அமைந்தது அல்ல. மின்சார இலாகாவினர் சில நேரங்களில் தவறு செய்கிறவர்களைத் தண்டிக்கவேண்டும் என்ற முறையிலே பெனால்ட்டி போடுகிறார்கள். யாராவது ஒருவர் மின்சாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள் என்றால் ஒரு விவசாயியானாலும் சரி, தொழிற்சாலையானாலும் சரி—போடுகிற பெனால்ட்டி, எவ்வளவு நாள் உபயோகப்படுத்தினார்கள் என்று விசாரிக்காமல், எவ்வளவு மின்சாரத்தை அவர்கள் பயன்படுத்தியிருக்க முடியும் என்ற ஒரு கணக்கையும் எடுக்காமல், அந்த ஸ்குவாட் வந்து பார்த்தவுடனேயே உடனடியாக ஒரு ஆண்டுக்கான மின்சாரக் கட்டணத்தை—அதற்கென்று 100 சதவிகித பெனால்ட்டியையும் சேர்த்து விதிக்கிறார்கள்.

ஆகவே, ஒரு விவசாயிக்குக்கூட, 10 ஆயிரம், 15 ஆயிரம் ரூபாய் என்று பெனால்ட்டி, தண்டம் வருவதும், அதேபோன்று ஒரு தொழிற்சாலைக்கு 2 இலட்சம், 3 இலட்சம் ரூபாய் என்று விசாரிக்காமலேயே அவர்களுக்கு ஒரு தண்டனையை வழங்கி, அவர்கள் மேல் முறையீடு செய்ய மேல் அதிகாரிகளிடம் செல்ல வேண்டும் என்றால். அவர்கள் அதைக்கட்டி விட்டுத்தான் செல்ல வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிற காரணத்தால் வேறு வழியில்லாமல் சிறிய விவசாயிகள்கூட, எங்களிடம் வருகிறவர்கள்கூட, நியாயத்திற்கு எங்கும் போகமுடியாமல், வழக்குமன்றத்திற்குத்தான் போகிறார்கள். ஆகவே, அந்த அளவிற்கு உள்ள நிலையை மாற்றி, பெனால்ட்டி விதிப்பதற்கு முன்னால் ஒரு விசாரணை இருக்கவேண்டும். ஒரு இ.இ. பார்த்தார் என்றால், எஸ். இ. யிடம் போய் முறையீடு செய்ய அவர்களுக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்து, உண்மையிலேயே அவர்கள் மின்சாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தினார்களா என்பதை விளக்குவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பை கொடுத்தகான் பெனால்ட்டி விதிக்கவேண்டும். அது இருந்தால், இன்று கோர்ட்டிலே போய் ஸ்டே ஆகியிருக்கிற ஆயிரக்கணக்கான வழக்குகள் தவிர்க்கப்பட்டிருக்கும். ஆகவே, அந்த வகையிலே மின்சார இலாகா நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 நவம்பர் 11] [திரு. மா. சின்னராசு]

இறுதியாக ஒன்றே ஒன்று. மின்சார இலாகா ஆயிரக்கணக்கான ஊழியர்களை அந்தப் பணிக்கென்று எடுத்துக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் நம்முடைய மாண்புமிகு திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், இருக்கிற காண்ட்ராக்ட் லேபர்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும் என்று கேட்டாலும், அது முழுமையும் கொடுக்கப்படுகிற அளவுக்கு மின்சார இலாகாவினுடைய நிதிநிலைமை இல்லை என்பது நமக்குத் தெரியும். ரூ. 530 கோடிக்கு அரசாங்கத்தின் உதவியை நாம் நாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், எடுக்கிற மின் ஊழியர்களை என்ன தகுதியின் அடிப்படையில் எடுக்கிறோம்? மின் வாரியத்திற்காக மட்டும் இதை நான் சொல்லவில்லை. எங்கே வேலைவாய்ப்பிற்காக ஆட்களை எடுத்தாலும், அரசு நிறுவனங்களில் வெறும் மார்க்குகளை மட்டும்தான் வைத்து நாம் எடுக்கிறோம் என்றால் ஒரே மாதிரி பள்ளிக்கூடம் இந்த நாட்டிலே பூராவும் வேண்டும்.

மீட்டர் ரீடிங்கை எடுப்பதற்கு எஸ்.எஸ்.எல்.சி. யிலே அதிக மார்க்குகளைப் பெற்றவரைத் தான் எடுக்க வேண்டும் என்றால், எங்கே நாம் சமூக நீதியை அவர்களுக்கு வழங்குகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள். வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற கொள்கையை அறிவித்து இருக்கிறார்கள். வீட்டிலே 5 பேர் படித்து விட்டு யாரும் வேலைவாய்ப்பு பெறவில்லை என்றால், ஒருவருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்கிறோம். கிராமத்திலே படிக்கிற பள்ளி மாணவன் 300 மார்க்கு வாங்குவது அரிது. நகரத்திலே இருக்கிற பள்ளி மாணவன் 100-க்கு 100 மதிப்பெண்கள், பர்சன்டேஜ் வாங்குகிற பள்ளியில் படிக்கிறவன், 180 மார்க்குகள் வாங்குகிற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, படிப்பிற்கு ஒரே நிலையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமல் மார்க்கை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, இந்த போர்டிலே ரெக்ரூட்மெண்ட் செய்வதை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது. அதற்கென்று ஒரு கொள்கையை மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசின் மூலம் வகுத்து, ரெக்ரூட்மெண்ட்டிற்கென்று, தகுதியானவர்கள் மட்டும் அல்ல, இந்த நாட்டிலே வாய்ப்பைப் பெறவேண்டியவர்கள் அதைப்

பெறவேண்டும் என்கின்ற அளவிற்கு, கொள்கை மாறுதலைச் செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

நம்முடைய தெர்மல் பவர்-க்கான முயற்சிகளை ஒரு பக்கம் எடுத்துக் கொண்டிருக்கிறபோது நெய்வேலியிலே கூடுதலாக அடுத்த ஒரு மின் உற்பத்தி நிலையத்தை துவக்குவதற்கு, தமிழக அரசுக்கு மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டுமென்பது நம்முடைய மிக முக்கியமான கோரிக்கை. நம்முடைய மாநிலத்திலே இருக்கிற நிலக்கரியைப் பயன்படுத்தி நாமாகவே ஒரு தெர்மல் நிலையத்தை அமைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்குவதன் மூலம் நம்முடைய மின் தேவையை நாம் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சார கனெக்ஷன்களுக்கு நாம் ஷிப்டிங் கேட்கிறோம். ஒரே நிலத்தில் இருக்கிற பம்ப்செட்டை அதே நிலத்தில் இருக்கிற இன்னொரு கிணற்றுக்கும், ஒரு நிலத்தில் இருக்கிற மின்சார இணைப்பை, அதே சர்வீஸ் ஹோல்டர் இன்னொரு நிலத்திற்கு மாற்றிக்கொள்வதற்கும், மாவட்ட அளவிலே எங்கேயும் மாற்றிக்கொள்வதற்கும் அவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சிவப்பிரகாசம், கொல்லிமலை பகுதியில், மலைவாழ் மக்களுக்கு சோலார் எனர்ஜி கொடுக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார். 29 இலட்சம் ரூபாய் செலவிலே சோலார் எனர்ஜி சிஸ்டத்தின் மூலம் அவர்களுக்கு மின்சாரம் வழங்கி, அது பயன்படவில்லை என்ற கருத்தையும் அவர் தெரிவித்து இருக்கிறார். அது பயன்படாததற்குக் காரணம், அதில் இரண்டு மணி நேரம்தான் மின்சாரம் கிடைக்கிறது என்ற நிலை இருக்கிறது. ஆகவே எல்லோருக்கும் கொடுப்பதைப்போல, மற்ற சிஸ்டத்தில் இருந்தே அவர்களுக்கு மின்சாரம் வழங்கி, அந்த ஆதிவாசி மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதைப்போல், ஆதிவாசி மக்களுக்கு மின்சாரத்தை வரிசை முறையிலே வாங்க வேண்டுமென்ற நிலையை மாற்றி அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து,



எந்த ஆதிவாசி தன்னுடைய நிலத்திற்கு மின்சார இணைப்பு கேட்டாலும் அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமசசந்திரன் அவர்கள் சுட்டிக்காட்டிய ஒரு கருத்தை நான் மறுக்க விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் பொதுவாக, பொது நிறுவனங்களை நசுக்கி, தனியார் நிறுவனங்களை ஆதரிக்க வேண்டுமென்ற கொள்கையை ஆதரிக்கிறதே, அதை நீங்களும் ஆதரிக்கிறீர்களா என்று கேட்டார்கள். மத்திய அரசாங்கத்திற்கு இப்படி ஒரு கொள்கை இருப்பதாக நம்முடைய பிரதமரும் மத்திய அரசாங்கமும் சொன்னது கிடையாது. இன்னும் சொல்லப்போனால், அடிக்கடி நம்முடைய பிரதம அமைச்சர் அவர்கள், எந்தப் பொது நிறுவனமானாலும், அதனுடைய எபீஷியன்சி, புரடக்டிவிடி இவைகளையெல்லாம் அபிவிருத்தி செய்து அது தன்னுடைய சுயகாலிலே நிற்கிற அளவிற்கு அதை வலிமைபடையச் செய்ய வேண்டுமென்று இன்று, எல்லோரையும்விட அதிகமாக வலியுறுத்தி பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே இப்படி நசுக்குவதை அவர் கொள்கையாகக் கொண்டு இருக்கிறார் என்பது அவர்கள் சொன்ன பல முரண்பட்ட கருத்துக்களைப் போல் இதுவும் ஒரு கருத்தாக அமைந்திருக்கிறது. ஆக, மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையும் அதுவல்ல. நம்முடைய மாநில அரசாங்கத்தினுடைய கொள்கையும், பொது நிறுவனமான இதுபோன்ற நிறுவனங்கள் வளரவேண்டுமென்பதுதான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1987—88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீதும், அதை அவைக்கு அளித்து, அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைக்குறிப்பின்மீதும் ஒருசில கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்களுடைய உரைக் குறிப்பை நான் ஒரு முறைக்கு இரண்டு முறை படித்துப் பார்த்தேன். பல இடங்களில் பெருமிதமும், மகிழ்ச்சியும் மனநிறைவும் கொண்ட உணர்வோடு இந்த அறிக்கையை அவைக்கு அளித்து இருக்கிறார்,

அமைச்சர் அவர்கள் பெருமிதத்தோடும், மகிழ்ச்சியோடும், மன நிறைவோடும் இந்த அறிக்கையை அளித்திருக்கிற அளவுக்கு, படித்துப் பார்க்கிறபோது நமக்கு மகிழ்ச்சியோ, மன நிறைவோ, பெருமிதமோ ஏற்படவில்லை என்பதைத்தான் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்த அமைச்சருடைய குறிப்பில் சொல்லியிருக்கிறார், ஒன்பதாவது ஐந்தாண்டு திட்ட முடிவில்கூட, அதாவது கி.பி. 2,000 முடிந்தாலும்கூட தமிழ்நாடு மின்சாரத் துறையில் பற்றாக்குறையாகத்தான் இருக்குமாம். இந்த விஷயத்தைக் குறிப்பிட்டு சொல்லிவிட்டு, மகிழ்ச்சி அடைவதற்கும், பெருமிதம் கொள்வதற்கும் என்ன அர்த்தம் இருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

21 ஆவது நூற்றாண்டுக்கு இந்தியா ஆரவாரமாக நுழைவதாக சிலர் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலும் 21 ஆவது நூற்றாண்டிலும் மின்சாரத் துறையில் பற்றாக்குறையாகத்தான் இருக்கும் என்பது, வெட்கப்பட வேண்டிய, வேதனைப்பட வேண்டிய ஒரு விஷயமாகும். இந்த நிதிநிலை அறிக்கையும் சரி, அமைச்சருடைய உரைக் குறிப்பும் சரி, அவயங்களே இல்லாத ஒரு சதைத் துண்டு பிறந்ததுபோல, தீர்வுகளே இல்லாமல் பிறந்திருக்கிறதே தவிர, உள்ள நிலைமைகளை, நெருக்கடிகளை தனியாக மதிப்பீடு செய்து, அந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு உரிய பொருத்தமான மாற்று ஆலோசனைகளைக் கொண்ட ஒன்றாக இல்லை என்பதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மின்சார நெருக்கடிக்கு முழுமுதற் காரணம் மாநில அரசுதான் என்று நான் குற்றம் சாட்ட வரவில்லை. இந்திய நாட்டினுடைய ஒட்டுமொத்த பொருளாதார நிலை, மத்திய அரசாங்கம் மின்சாரத் துறையிலே கடைபிடிக்கக்கூடிய கொள்கை நிலை ஆகியவை இந்தியாவினுடைய எல்லா மாநிலங்களையும் வெகுவாகப் பாதித்து இருக்கிறது என்றாலும், இந்த பாதிப்பு களுக்கு, அண்ணனுக்கு தவறாத தம்பி என்பது போல உங்களுடைய பங்கும் இருக்கிறது என்பதை நிச்சயமாக மறந்துவிடுவதற்கில்லை.





நான் இங்கே குறிப்பாகக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் பூர்வ பீடிகையாக, தொடங்குகிறபோதே குறிப்பிட்டு விட்டார். பின்னால் ஒரு மிகப் பெரிய தீங்கை, தமிழ்நாட்டுக்குச் செய்யத் துணிந்து விட்டதற்கு ஒரு முன் அறிவிப்பாக, முன்னோசையாக "வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு யார் காரணம் என்பதையெல்லாம் பின்னாலே பட்ஜெட் வரும்போது பேசலாம். ஆனால் இந்த வரலாறு காணாத வறட்சியின் பாதிப்பு மாநில அரசுக்கு மட்டும்தானா? இந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிற மக்களுக்கு அந்த வறட்சி பாதிப்பில்லையா? அந்த வறட்சியின் நெருக்கடி உங்களை மட்டும்தானா பாதிக்கிறது? அந்த வறட்சியின் நெருக்கடியிலிருந்து நீங்கள் உங்களைத் தற்காத்துக் கொள்வதற்கு, குற்றவாளிகளை விட்டுவிட்டு, அப்பாவி மக்களின்மீது கைவைக்கத் துணிந்து இருக்கிறீர்கள் என்பதுதான் இந்த அறிக்கையின் மூலம் எங்களுக்குப் புலனாகிறது. என்ன சொல்கிறீர்கள்? 1988-ஆம் ஆண்டு பிப்ரவரி வரை, விவசாயிகள் பழைய பாக்கியோடு கட்டுவதற்குச் சலுகை வழங்கியிருக்கிறீர்கள். ஆகா எவ்வளவு பெரிய தர்ம உணர்வோடு நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். 1988-ஆம் ஆண்டு பிப்ரவரியோடு வறட்சி பாதிப்பு முடிந்துவிடுகிறது என்கிறீர்களா? 1988 ஆம் ஆண்டு பிப்ரவரிக்குள் மின்கட்டணத்தை தொடர்ந்து பல வருஷங்களாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த விவசாயிகள் எப்படிக் கட்டுவார்கள் என்பதைப்பற்றி ஏதாவது குறைந்தபட்ச பரிவு உணர்ச்சியாவது உங்களுக்கு இருக்கிறதா? இல்லை. ஆனால், உங்களை நெருக்கடியிலிருந்து தற்காத்துக் கொள்வதில் நீங்கள் காட்டுகிற வேகத்தை, பிரஜைகள்பால் காட்ட வேண்டுமல்லவா? பிரஜைகள்பால் காட்டுவதில் நீங்கள் அக்கறை செலுத்தியிருக்கிறீர்களா? இல்லை என்பதுதான் நான் இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புவதாகும்.

இதைப் போலவே புனல் உற்பத்தி குறைந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோது எனக்கேகூட ரத்தம் கொதித்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆளும் கட்சி உறுப்பினர்கள் மிக அழுத்தம் திருத்தமாக, ஆவேசத்தோடு மத்திய அரசுக்கு எதிராக,

துணிச்சலாகவே சொன்னார்கள். பாராட்ட வேண்டிய விஷயம்தான். ஆனால் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, இந்த நெருக்கடியைத் தோற்றுவித்துள்ள கொள்கைகளைக் குறி வைக்கிறீர்களா அல்லது ஆளுகிற உங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இந்த நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மத்திய அரசின்மீது குற்றத்தைச் சாட்டிவிட்டு தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறீர்களா என்பதுதான் என் கேள்வி. இந்த நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமே மத்திய அரசு கடைப்பிடிக்கிற மின்சாரக் கொள்கைதான். இந்த மின்சாரக் கொள்கையை மாற்றுவதற்கு, கொள்கை பூர்வமான எதிர்ப்பை நீங்கள் தெரிவிக்க வேண்டுமே தவிர வெறும் சட்டமன்றத்தில் பேசிவிடுவதால் நடக்கப் போவது ஒன்று மில்லை.

இந்தத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் இருக்கிறார் அல்லவா? வரலாறு காணாத வறட்சியைப் போல, வரலாறு காணாத வகையில் இந்திரா காங்கிரஸ் கட்சி—அகில இந்திய அண்ணா தி.மு.க. உறவு வலிவோடும் பொலிவோடும் தொடர்ந்து கொண்டிருக்கிறது அல்லவா? அந்தச் செல்வாக்கை ஏன் நீங்கள் இதற்கு செலுத்தக்கூடாது? அந்தச் செல்வாக்கை உரியபடி செலுத்தி இவற்றிற்குத் தீர்வு காண முயற்சிக்கக் கூடாதா? இன்றைக்கும் சொல்லுகிறோம். ஒகேனக்கல் திட்டம் நடைமுறைக்கு வருகிற வரை, அதற்கு ஒரு தீர்வு காணப்படுகிறவரை, நிச்சயமாக தமிழ்நாட்டில் இந்த நெருக்கடிக்கு ஒரு குறைந்தபட்ச தீர்வுகூடக் கிடைக்காது. 1964 ஆம் ஆண்டிலிருந்து இன்றைக்கு வரை அது கிடப்பிலேயே இருக்கிறது. அது என்ன காரணத்தால் கிடப்பில் இருக்கிறது என்பதைப் பற்றி காங்கிரஸ் நண்பர்களேகூட நியாயப்படுத்திச் சொல்லக் கூடும். ஆனால், கிடப்பில் இருக்கிற திட்டங்கள் எத்தனை என்று பட்டியல் போட்டுக் காட்டுவதற்கு ஒரு அமைச்சரவையா? அதை வலியுறுத்தி நாங்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிக் கொண்டேயிருக்கிறோம் என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறீர்கள்? முன்னாலே ஒரு அமைச்சர் இருந்தார் அவர் பலமுறை சொன்னார். அவருக்குப் பின்னால் புதிய அமைச்சர் வந்தார். அவரும் சொல்லுகிறார். உங்களுக்குக் கடிதம்





எழுதுகிற வேலை மட்டும்தானா? கடிதம் எழுதுவதோடு உங்கள் காரியம் முடிந்துவிடுகிறதா? உங்களை மக்கள் ஆட்சியில் அமர்த்தியது, இந்த நெருக்கடிகளைத் தீர்க்க. மத்திய அரசாங்கத்தைப் பொருத்தமுள்ள வகையில் நெருக்க வேண்டும் என்பதற்குத் தான் பொருத்தமுள்ள வடிவத்தில் நெருக்கி, நிர்ப்பந்தித்து, இவற்றை நிறைவேற்றி வைக்க வேண்டிய பொறுப்பை மறந்து நடைமுறையில் நிறைவேற்றுவதற்கு, தகுதியற்ற வழிமுறைகளை நீங்கள் மேற்கொண்டு வருவதால் தான் இந்த நெருக்கடி நீடிக்கிறது.

கர்நாடகாவோடு பேசி காவிரி பிரச்சினைக்கு தீர்வு காண வில்லை. காங்கிரஸ் நண்பர்கள் கூட ஏதேதோ சொன்னார்கள். காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மத்திய அரசு ஏன் கண்டும் காணாத போக்கை கடைப்பிடிக்கிறது? இந்த வகையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதைப் பொறுப்போடு எதிர்க்கிறதா? இல்லை. "நான் அடிப்பதைப் போல் அடிக்கிறேன், நீ அழுவதைப் போல் அழு" என்கிற பாவனை நடக்கிறதே தவிர, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதில் மத்திய அரசாங்கத்தை உரியபடி நெருக்குவதில் நீங்கள் வெற்றிபெறவில்லை. ஏனென்றால் அதற்குப் பொருத்தமான வழிமுறைகளை நீங்கள் கடைப் பிடிக்கவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டாகும்.

மேட்டூர் நீர் வரத்து பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டிருக் கிறீர்கள். இப்படியெல்லாம் குறிப்பிடுவதால் மட்டும் தீர்வு கண்டுவிட முடியாது. அடிப்படையில் விடை காணப்பட வேண்டியது இதுதான். "தமிழ்நாடு மின்சாரப் பற்றாக்குறை மாநிலம்" என்பதிலிருந்து எப்போது தீர்வு பெறும் என்பதுதான் கேள்வி. நீண்ட நெடுங்காலமாக இருக்கிற மின் பற்றாக்குறைக்கு தீர்வு எப்போது? நாம் இங்கே விவாதித்து தீர்வு காண வேண்டியது இதுதான். அந்தத் தீர்வுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ன வழிமுறைகளைச் சொல்லுகிறது?

(பிற்பகல் 1-50)

கிடப்பில் உள்ள திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்ற வில்லையென்றால் இந்தப் பேரவையிலேயே ஒரு தீர்மானத்தைப் போடுங்கள். எதிர்புறத்தில் நாங்கள் இருக்கிறோம். தமிழ்

நாட்டில் உள்ள பல்வேறு சக்திகளைத் திரட்டுங்கள். தமிழ்நாட்டின் நலனைப் பாதிக்கக் கூடிய வகையில் மத்திய அரசு நடப்பதற்கு எதிராக பலதரப்பினரையும் திரட்டி வலுவான போராட்டத்தை நடத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தயாராக இருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, தற்போதுள்ள மின் நிலைமை என்னவென்று சொல்லியிருக்கிறார்கள். நம்பிக்கையோடு சொல்லியிருக்கிறார்கள். நம்பிக்கைகூட லிமிட்டெட்டாகத்தான் வந்திருக்கிறது. தற்போதுள்ள 40 சதவிகிதம் மின்வெட்டை அதிகரிக்காமலேயே 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இறுதிவரை தற்போதுள்ள மின் நிலைமையைத் தொடர முடியும் என்று நம்பப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். பரவலாக நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கை 1988 ஜூனில் முடிகிறது. அதற்குப் பிறகு என்ன கதி? ஜூனுக்குப் பின்னால் இந்த நிலை நீடிக்காது என்கிறார்கள். ஆனால் ஜூனுக்குப் பிறகும் இது தொடர்ந்து நீடிக்க வழி என்ன சொல்லுகிறார்கள். அதைப் பற்றித் தெளிவாக இல்லை.

அதே மாதிரி 210 மெகாவாட் திறன் கொண்ட நாடு முழுவதும் உள்ள 69 மின் நிலையங்களில் தமிழ்நாட்டின் செயல்திறன்தான் மிகச் சிறப்பாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது கூட இங்கிலீஷ் காப்பியில் 59.6 சதவிகிதம் என்றும், தமிழில் 69.6 சதவிகிதம் என்றும் போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மொழிக்கு ஒரு சதவிகிதமா என்று தெரியவில்லை. ஆனாலும் தூத்துக்குடி அனல் மின் நிலையம் எல்லா மின் நிலையங்களைக் காட்டிலும் செயல் திறனைக் காட்டுவதில் 76.1 சதவிகிதம் முன்னேறியிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இதற்கு அமைச்சரவை திட்டம் மட்டுமல்ல பொறுப்பு. அமைச்சரவை அல்ல அதற்குப் பொறுப்பு. அந்தத் துறையிலே பணியாற்றிய தொழிலாளர்கள்தான் அதற்குப் பொறுப்பு. மத்திய அரசாங்கம் 10 இலட்சம் ரூபாய் பரிசை அதன் செயல் திறனுக்காக அளித்தது. அதன் செயல் திறனுக்காக நீங்கள் என்ன அளித்தீர்கள்? மத்திய அரசு கௌரவித்தாக பரிசு கொடுத்து விட்டார்கள். இந்த மாநில அரசு செயல் திறனை ஊக்குவிக்க வேண்டாமா?



மாநில அரசு தன் பங்கைச் செலுத்தியிருக்க வேண்டாமா? அப்படிச் செலுத்தவில்லை. அதைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனல் மின் நிலைய செயல் திறனை வெளிப்படுத்துவதில் அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலே வருகிறது என்று அமைச்சரவை ரொம்பவும் பெருமைப்படுகிறது. வெறும் டெக்னிக்கலாக சொல்லுகிற கணக்கிலே பெருமைப் பட்டுப் பயன் இல்லை. இந்தியாவில் உள்ள பிற மாநில வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் வளர்ச்சியையும், பிற மாநில தோற்றத்தையும், தமிழ்நாட்டின் தோற்றத்தையும் ஆக எல்லா விபரங்களையும் வைத்து பரிசீலிக்க வேண்டும். இப்போது நான் அதற்குள் போக விரும்பவில்லை. மூன்றாவது இடமாக இருப்பது பெருமையில்லை. வருகிற மின்சாரத் தேவைகளைக் கணக்கிடுவதிலேயும், மின்சாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடுவதிலேயும், திட்டமிட்டதை காலத்திலே நிறைவேற்றுவதையும் பொறுத்துத்தான் பெருமை பட்டுக்கொள்ளும் தார்மீக தகுதி உங்களுக்கு கிடைக்கும். வெறும் மூன்றாவது இடத்திலே என்றால் பெருமை வந்து விடாது என்பதை நான் இங்கே சொல்லவிரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

பலரும் 15 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். எல்லோரும் பேசியதைப் பார்த்திருக்கிறேன். தொடர்ந்து எனக்கு மட்டும் குறி வைக்கக் கூடாது.

அடுத்து நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது நிலக்கரியின் தரம் பற்றி. நிலக்கரியின் தரம் பற்றி சொன்னார்கள். அதற்காக அண்ணா தி.மு.க. வருத்தப்பட வேண்டியதில்லை. மத்தியிலே இருந்து வருகிற நிலக்கரியின் தரம் மத்திய அரசின் செயலாக்க உள்ளடக்கத்தைக் காட்டுகிறது. அதிலே அதிகமாக களிமண், சிறு கல், சாம்பல் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எப்போதும் வளர வளர வளர்ச்சி வர வேண்டும். ஆனால் வந்துள்ள விவரங்களைப் பார்த்தால் நிலக்கரியின் எரியும் தன்மை கடந்த எட்டாண்டுக் காலத்தில் 5,750 கிலோ கலோரியிலிருந்து 3,060 கிலோ கலோரியாக குறைந்திருக்கிறது. ஆனால்

[திரு. கே. சுப்பராயன்] [1987 நவம்பர் 11

நிலக்கரியில் உள்ள சாம்பலின் அளவு 29.25 சதவிகிதத்திலிருந்து 48.2 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. சாம்பல் அளவு உயர்ந்திருக்கிறது, அனல் ஆற்றல் குறைந்திருக்கிறது. இது இந்தியாவை ஆளுகிற மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கையில் ஏற்பட்டுள்ள பலவீனங்களின் அடையாளமாகத்தான் இருக்கிறது. அவ்வளவு பலவீனங்கள் மத்திய அரசின் கொள்கையிலும் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமை ஏன் மாற்றப்படவில்லை? இதை மாற்றுவதற்கு அறிக்கை விட்டால் மட்டும் போதாது. அறிக்கைக்கு மத்திய அரசு அசராது. அறிக்கைக்கு மத்திய அரசாங்கம் பணியாது. அதற்கு வேறு வழிகளை பொருத்தமான வழிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அனல் மின் நிலையங்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் தீர்வுகாணப் பழைய காரணங்களை விட்டுவிட்டு உரிய பொருத்தமான வழிமுறைகளைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக சில முக்கியமான பிரச்சினைகளில், அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல அரசு பொறுப்பை உணர்ந்திருப்பது உண்மையானால் நல்லது. ஆனால், என்ன நீங்கள் சொல்லுகிறீர்கள்? வருகிற ஆண்டில் மின் கட்டணம் உயர்த்தப்படுமென்று சொல்கிறீர்கள். ஜனநாயகத்தில் அதிக நம்பிக்கை உள்ளவர்கள் என்று நீங்கள் சொல்லுகிறீர்களே, இந்தப் பேரவையில் என்ன கட்டண உயர்வு என்பது பற்றிச் சொல்ல வேண்டாமா? சட்டமன்றம் நடக்கும்போது மொத்தமாக உயர்த்தப்படும் என்று மொட்டையாகச் சொல்லுகிறீர்களே, எவ்வளவு உயர்த்தப்படும் என்பது இந்தச் சட்டமன்றப் பேரவைக்குத் தெரிய வேண்டும். இந்தப் பேரவை நடக்கும்போது இவ்வளவு உயர்த்தப்படுமென்று சொல்லாமல், வெளியிலே போய் எக்கச்சக்கமாக தேவைக்குத் தக்கபடி உயர்த்திக்கொள்கிற நடைமுறையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கைவிட வேண்டும்; எவ்வளவு உயர்வு என்பதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 நவம்பர் 11] [திரு. கே. சுப்பராயன்]

அடுத்து, வட சென்னைக்கு ஏஷியன் வங்கி வழங்கும் 150 கோடி டாலர் பற்றிச் சொன்னார்கள். அந்த 150 கோடி டாலர் வழங்கியிருக்கிற அந்த ஏஷியன் வங்கி கட்டணத்தை உயர்த்தச் சொல்லியிருக்கிறது. நீங்கள் சலுகை விலையில் விவசாயிகளுக்கு வழங்குகிற மின்சாரத்தை அல்லது இலவச மின்சாரத்தை அல்லது 'குடிசைக்கு ஒரு விளக்கு' போன்ற சலுகைத் திட்டங்களை எல்லாம் கைவிட வேண்டும்; மானியங்களை எல்லாம் கைவிட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். அந்த நிர்ப்பந்தங்களுக்கு அடி பணிந்துதான் முதற்கட்டமாக இன்றைக்கு ஆட்சி கட்டண உயர்வைச் செய்திருக்கிறது. அதை ஒரு போதும் தமிழகம் ஒத்துக் கொள்ளாது. அந்த நடைமுறை, ஜனநாயக மரபுகளையே காயப்படுத்துவதாகும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இறுதியாக, இங்கே அறிவிக்கப்பட்டிருப்பதிலே ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, எண்ணூர் அனல் மின்நிலையத்தில் தொழிலாளர் கூட்டுறவுப் பணிச்சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே எண்ணூர் மட்டும்தான் இருக்கிறதா? பிற பகுதிகள் இல்லையா? பிற பகுதிகளுக்கும் இதை விரிவுபடுத்துவதில் என் ஆட்சி அக்கறை செலுத்தவில்லை என்று கேட்க விரும்புகிறேன். 16,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதே பேரவையில் முன்னால் இருந்த தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சட்டம் கொண்டு வந்தார். 480 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தால் பெர்மனன்ட் செய்யப்பட வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தார். சட்டத்தை அரசாங்கம் கொண்டு வருவது என்பது பிரஜைகளைக் கவுரவிக்க, தனியார் துறையைக் கவுரவிக்க. அந்தச் சட்டத்தை இயற்றிய அரசாங்கமே தன்னுடைய துறையில் கவுரவிக்கவில்லை என்றால், பிரஜைகளைப் போய் கவுரவியுங்கள் என்று கேட்கும் தார்மீக உரிமை அரசுக்கு உண்டா? நீங்கள் தானே 480 நாட்கள் வேலை செய்தால் தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்கலாமென்று சொன்னீர்கள். சொன்ன நீங்களே, உங்கள் செல்வாக்குக்குக்

[திரு. கே. சுப்பராயன்] [1987 நவம்பர் 11

கட்டுப்பட்டுள்ள துறையில் தொழிலாளர்களை நிரந்தரமாக்கவில்லை என்றால் என்ன நியாயம் என்று கேட்கிறேன். அது சரியில்லை. அந்தத் தொழிலாளர்களை முறைப்படி பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு மஸ்டர்ரோல் பராமரிக்கப்பட வேண்டும். அவர்களைக் காலப்போக்கில் நிரந்தரம் செய்ய இந்த ஆட்சி முயற்சி எடுக்க வேண்டுமென்று குறிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 350 பேர் கொண்ட விஜிலன்ஸ் போட்டிருக்கிறார்கள். விஜிலன்ஸ் போட்டு எவ்வளவு வந்திருக்கிறது? 2.96 கோடி ரூபாய் உபரி வருமானம் வந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். இது எப்படி இருக்கிறது தெரியுமா? மாண்புமிகு அமைச்சரவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லுகிறேன். ஒரு ஆட்டுக்குட்டி திருடு போய்விட்டால், அதை விட்டுவிடுவது நல்லது. அந்த ஆட்டுக் குட்டியைப் பிடிக்க இரண்டு ஆட்டுக்குட்டி விற்று செலவு செய்யக்கூடாது. இன்றைக்கு விஜிலன்ஸ் அப்படித்தான் நடக்கிறது. நான் அமைச்சரவர்களைக் கேட்கிறேன். அவர்களுடைய முடிவுரையில் முடிந்தால் பதில் சொல்லட்டும். விஜிலென்ஸ் விங்கில் 350 பேரைப் போட்டு 2.96 கோடி ரூபாய் கண்டுபிடிக்க நீங்கள் செலவு செய்த தொகை எவ்வளவு என்பதை இந்தப் பேரவையில் அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அறிவிப்பார்களேயானால், கண்டு பிடித்ததற்கு மேலே செலவு செய்யப்பட்டிருக்கும். இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒவ்வொரு துறையிலும் எந்த அளவுக்குச் சிந்தனையின்றி செயல்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு அழிக்க முடியாத அடையாளமாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இறுதியாக நீதிக்குத் தலை வணங்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். 7,000 தொழிலாளர்கள் ரிடையர் ஆனவர்கள், அவர்களுக்குத் துறை முன்பு ஒப்புக்கொண்டபடி பணம் தர வேண்டுமென்று உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. உச்ச நீதி மன்றத் தீர்ப்பு வழங்கிய அந்தத் தொழிலாளர்களுக்கு இன்றையவரை நீங்கள் கொடுத்திருக்கிறீர்களா? நீதி மன்றத் தீர்ப்பை மதிக்க வேண்டாமா? 1,500 பேர் குறித்த பைல்களை



1987 நவம்பர் 11] [திரு. கே. சுப்பராயன்]

இப்போதுதான் பார்த்திருக்கிறீர்கள். அதிலே 600 பேருக்கு தீர்வு சொல்லப்பட்டிருக்கிறது. அந்த 7,000 பேருக்கும் 6 சத விகிதம் வட்டியோடு பணம் கொடுக்க வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் சொல்லிற்றே, நீங்கள் அதனை நிறைவேற்ற வேண்டும். அதனை நிறைவேற்றுவீர்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-00)

இறுதியாக ஒன்றே ஒன்று. கடலூரைப் பொறுத்தவரையில் என்னவென்று விவரம் சொன்னால்தான் புரியும் என்பதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பழைய மின் துறை அமைச்சர் அவர்கள் போய் விட்டார்கள். அவர்கள் 3 வருடகாலமாகக் கிடப்பில் இருக்கின்றது என்றார்கள். கடலூரில் தியாகவல்லி, குடிகாடு அனல் மின் நிலையத்தைப் பற்றி தொடர்ந்து மூன்று வருடமாக சொல்லி வந்தார்கள். நீங்கள் சொல்கிறீர்கள். மத்திய அரசாங்கம் பல திட்டங்களைக் கிடப்பில் போட்டுவிட்டது என்று. ஆனால் நீங்கள் என்ன செய்து இருக்கிறீர்கள்? 3 வருடகாலமாக சொல்லப்பட்டு வருகின்ற கடலூர் அனல் மின் நிலையத்திற்கு 1987 பிரப்வரியில் தான் முன்மொழிவையே அனுப்பி இருக்கிறீர்கள். முன்மொழிவை அனுப்புவதற்கே மூன்று வருடமா? ஒரு ஆலோசனை அனுப்பு வதற்கே 3 வருடத்தைச் செலவழித்த அரசாங்கம், மத்திய அரசாங்கத்தைப் பற்றிப் பேசுவதற்கு குறைந்தபட்ச செயல் தகுதியாவது இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்த்தால், அவர்களுக்குப் பொருத்தமான தம்பிகள்தான் நீங்கள் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி சம்பந்தமாக மாத்திரம், நேரத்தை உத்தேசித்து சுருக்கமாகப் பேச விரும்பு கிறேன். தலைவர் அவர்களே, எங்கள் ஒட்டபிடாரம் தொகுதி எல்லா வகையிலும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத் துறையும் அப்படித்தான் இருக்கிறது. நாங்கள் கிராமத்திற்குச் சென்றால் குடிக்கத் தண்ணீர் இல்லை. விளக்க எரியவில்லை என்று மக்கள் சொல்வார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அருள் கூர்ந்து குடிக்கத் தண்ணீர் இல்லை என்ற

குறையை நீக்க ஆற்றுத் தண்ணீர் கொண்டு வந்து தருகிறேன் என்று வாக்களித்ததன் மூலம் அந்த ஆய்வு வேலை நடந்து கொண்டிருக்கின்றது. அதைப் பார்த்து மக்கள் திருப்தி அடைகிறார்கள். இப்போது மழையும் பெய்து குளங்கள் நிரம்பியிருக்கின்றன. அந்தத் தண்ணீரை அருந்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது கிராமங்களுக்குப் போனால் மகிழ்ச்சியும் இருக்கிறது.

ஆனால் சென்ற இடங்களிலே லைட் எரியவில்லையே என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த குறைகளை நீங்கள் நிவர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல கிராமங்களில் விளக்கு எரியவில்லை. எரிகின்ற விளக்கும் பழைய லாந்தர் விளக்கு மாதிரி வெளிச்சம் தெரிகிறது. டியூப்-ல் லைட் தெரியவில்லை. கழுகுமலையில் ஒரு ஏ.ஈ. ஆபீஸ் இருக்கின்றது. அங்கே போய் கேட்டால் ஒரு காலத்திலே போட்ட பழைய டிரான்ஸ்பார்மர்கள், நாங்கள் என்ன செய்வது, பணம் இல்லையே என்கின்றார்கள். நான் முன்னமே நடந்த சட்ட மன்றக் கூட்டத்திலே இதைப் பற்றி சுட்டிக்காட்டியிருக்கிறேன். கட்டாலங்குளம், சங்கரலிங்கபுரம், கும்மரெட்டியார்புரம் போன்ற பல கிராமங்களிலே, விட்டில் பூச்சி மாதிரி விளக்கு வெளிச்சம் தெரிகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அன்போடும் பணிவோடும் தெரிவித்துக்கொள்கிறேன். பல கிராமங்கள் அப்படித்தான் இருக்கின்றன. அதைப் பார்த்து விளக்கு இல்லாத கிராமங்களுக்கு விளக்குகள் வரவேண்டும் என்றும் பழைய டிரான்ஸ்பார்மர்கள் உள்ள எல்லா இடங்களிலும் மாற்றி நல்ல முறையில் வெளிச்சம் கொடுக்கக்கூடிய விளக்குகளை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அரசைப் பாராட்டி பேசினதை நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். நலிந்த பிரிவினருக்கு எல்லாம் 7,48,816 வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கின்றார்கள். நான் புத்தகத்திலும் படித்தேன். நான் தொகுதியெல்லாம் சுற்றி வருகிறேன். அது நடந்ததாக தெரியவில்லை. நலிந்தவர்கள் அதிகமாக அங்கு இருக்கின்றார்கள். வீடுகட்டிய தாழ்த்தப்பட்டவர்களுக்கு இலவசமாக மின்சாரம் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுவரையில் எந்த ஊரிலேயாவது அந்த வீடுகளுக்கு



இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதையும் நீங்கள் தான் செய்து தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதுமாத்திரமல்லாமல் புதிதாக காலனிகள் அமைக்கிறார்கள், அப்படி அமைக்கின்றபோது பல காலனிகளில் லைட் வசதி, தெரு விளக்கு வசதி கிடையாது.

ஒட்டப்பிடாரம் தொகுதி முழுவதும் வாய்க்கால் மூலம் நீர்ப் பாசன வசதி கிடையாது. முழுக்க முழுக்க கிணற்று நீர்ப் பாசனம்தான் நடைபெறுகிறது. அங்கேயுள்ள எல்லா சமூகத்தவர்கள் ஏழைகளும், பிற்பட்டவர்களும்தான் கிணற்று நீரை நம்பித் தான் அனைவரும் வாழ்கிறார்கள். அங்கேயுள்ளவர்கள் பம்ப் செட்டுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று மனு செய்தால் அவர்களுக்கு மின் இணைப்பு கிடைப்பதில்லை. அவர்கள் அதற்காகவே அலைகிறார்கள். கஷ்டப்படுகிறார்கள். அங்கே மின்சாரம் சரியாக இல்லாததால் ஒரு பெரிய தொழிற்சாலை கூட கிடையாது. 20 பேருக்கு மேல் வேலை செய்யக் கூடிய தொழிற்சாலைகளே கூட சரியான மின்சாரம் இல்லாததால் அவை சரியாக இயங்க முடியவில்லை.

கயத்தாறு பக்கத்திலேயுள்ள தெற்கு இலந்தைக்குளம் என்ற ஒரு கிராமத்திலே 15 காற்றாலை அமைத்துத் தருவதற்கு ஏற்பாடு செய்துள்ளமைக்கு அரசுக்கு என்னுடைய அன்பான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். காற்றுக்கு மட்டும் அங்கே சிறிதும் பஞ்சம் இல்லை, அதனால் அங்கே வேண்டிய ஆலைகள் வைக்கலாம். தூத்துக்குடி அனல் மின் உற்பத்தி நிலையமும், அதுபோல் பாபநாசம் நீர்மின் உற்பத்தி நிலையமும் இருந்தும் கூட இந்த மாதிரி நாங்கள் மின்சாரத்திற்கு கஷ்டப்படும் நிலை இருக்கிறது. இந்நிலையை எப்படியாவது மாற்றியமைத்து எங்களுக்கு நல்ல முறையில் மின்சாரம் வழங்க வழிவகை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டு, இத்துடன் என்னுடைய உரையை முடித்து அமர்கிறேன், வணக்கம்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) 1987—88 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987—88 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1987 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமையை குறித்திருக்கிறார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 12—11—1987 காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

82. 1984—85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள்-மூலிகை மருந்துக் கழகத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).]

83. 1984—85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்பு கிட்டங்கு நிறுவனத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [1962 ஆம் ஆண்டு சேமிப்பு கிடங்கு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).]

84. 1986—87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).]



ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

9. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1986-87 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையை குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதத்தை தொடங்கி வைத்து சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

10. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கிய கருத்துரைகளும் அக்கருத்துரைகள் மீதான குறிப்புரைகளும் அடங்கிய விவர அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

11. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 50 வரை).

12. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும். (எண்கள் 1 முதல் 100 வரை).

ஆவணக்காப்பக
சென்னை-600 008.
136536